شرح الأصول الثلاثة- تاميلي

# மூன்று அடிப்படைகள்

## -ஒரு விளக்கம்



جمعية الدعوة بالزلفي

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

133

هاتف: ٤٢٣٤٤٦٦ ٠١٦ ـ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠١٦

# மூன்று அடிப்படைகள்-ஒரு விளக்கம்

# شرح الأصول الثلاثة

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات في الزلفي
Tel: 966 164234466 - Fax: 966 164234477

**شرح الأصول الثلاثة**

**ترجمه إلـــى اللغة التاميلية:**

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

**الطبعة الثانية: ١٤٤٢/٨ هـــ.**


ح **شعبة توعية الجاليات بالزلفي، ١٤٢٥هـ**

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

شعبة توعية الجاليات بالزلفي
شرح الأصول الثلاثة – الزلفي ، ١٤٢٥ هـ
٢٤٠ ص؛ ١٢ × ١٧ سم
ردمك : ٩-٤٩- ٨٦٤-٩٩٦٠
(النص باللغة التاميلية )
١-العقيدة الإسلامية أ. العنوان
ديوي ٢٤٠ ١٤٢٥/٧١٦

**رقم الإيداع : ١٤٢٥/٧١٦**

**ردمك : ٩-٤٩ - ٨٦٤-٩٩٦٠**

# شرح الأصول الثلاثة

## மூன்று அடிப்படைகள் - ஒரு விளக்கம்

---

**பிஸ்மில்லாஹி[1] ரஹ்மானிர் ரஹீம் அல்லாஹ் உனக்குஅருள் புரிவானாக!**[2] **நான்கு விஷயங்களை[3] அறிவது நம்மீது கடமையாகும் என்பதை நீ அறிந்து கொள்.**[4]

***1.*அல்லாஹ்வையும்[5]அவனது தூதரையும்[6] இஸ்லாமிய மார்க்கத்தையும்[7] ஆதாரங்களுடன்[8] அறிவது**

---

(1)இந்நூலை அதன் ஆசிரியர் அல்லாஹ்வின் வேதத்தையும், நபி(ஸல்)அவர்களின் வழிமுறையையும் பின்பற்றி பிஸ்மில்லாஹ்வைக் கொண்டு துவக்கியுள்ளார். ஏனெனில் அல்லாஹ்வின்வேதம் பிஸ்மில்லாஹ்வைக் கொண்டுதான் துவக்கப்பட்டுள்ளது. பிஸ்மில்லாஹ்கூறி ஆரம்பிக்கப்படாத அனைத்து நற்காரியங்களும் பரகத் அற்றதாகும் என்பது நபிமொழி.

அல்லாஹ் என்பது படைத்துப் பரிபாலிப்பவனுக்குரிய பெயர். அரபு இலக்கணப்படி அல்லாஹ்வினுடைய ஏனைய திருப்பெயர்கள் அனைத்தும் இப்பெயருக்கு வர்ணணையாகவே வரும். ஆனால் இப்பெயர் வர்ணணையாகவராது. அர்ரஹ்மான் என்பது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தான திருப்பெயர்களில் ஒன்று. இதை அவனைத் தவிர்த்து வேறுயாருக்கும் கூறக்கூடாது. இதன் பொருள் அளவற்ற அருளாளன். அர்ரஹீம்: இச்சொல் அல்லாஹ்வுக்கும் அவனல்லாதவருக்கும் சொல்லப்படும். இதன் பொருள் தனது அடியார்களில் தான் விரும்புபவருக்கு மட்டும் அருள்புரிபவன் என்பதாகும். "தான் நாடுபவர்களைத் தண்டிப்பான். தான் நாடுவோருக்கு கருணை புரிவான். அவன் பக்கம்தான் நீங்கள் திரும்பக்கொண்டு வரப்படுவீர்கள்"(29:21) என்று அல்லாஹ் கூறுவதைப்போல.

**(2)**அதாவது அல்லாஹ் உம்மீது தனது அருள் மழையைப் பொழிவானாக! அந்த அருளால்தான் உனது நாட்டங்களை அடைந்து கொள்கிறாய். நீ அஞ்சுவதிலிருந்தும் தப்பித்து கொள்கிறாய். அல்லாஹ் உனக்கு அருள் புரிவானாக என்று மட்டும் கூறப்பட்டால், நீ முன் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்து, வருங்காலத்தில் நீ நன்மை செய்வதற்கு உதவி செய்து பாவங்களிலிருந்து உன்னைக் காப்பானாக என்று பொருள். அல்லாஹ் உனக்கு அருள்புரிவானாக!. என்பதுடன் உன்னை மன்னிப்பானாக! என்பதையும் சேர்த்துக் கூறப்பட்டால் முன்செய்த பாவங்களை அல்லாஹ் உனக்கு மன்னித்து வருங்காலத்தில் நீ நன்மை செய்வதற்கும் பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் உதவி செய்து, அருள் புரிவானாக என்று பொருளாகும்.

**(3)**ஆசிரியர் கூறியிருக்கும் இவ்விஷயங்கள் மார்க்கம் முழுவதையும் உள்ளடக்கி நிற்கின்றன. இவற்றுக்கு மகத்தான பலன் உள்ளதால் இவை முக்கியத்துவம் கொடுப்பதற்குறியவையாகும்.

**(4)**அறிதல் என்பது ஒரு பொருளுக்குரிய உண்மையான நிலையை முழுமையாக, உறுதியாக, அறிந்து கொள்வதாகும். இதற்கு ஆறு நிலைகள் உள்ளன.

**1.**ஒரு பொருளுக்குரிய உண்மையான நிலையை முழுமையாக உறுதியாக அறிவது.

**2.**முழுமையாக அல்லாமல் சிறிதளவு அறிவது.

**3.**உண்மைக்குப் புறம்பாக அறிவது.

**4.**மாற்றுக்கருத்துக்கு பலமான சாத்தியக்கூறு இருப்பதுடன் அறிவது.

**5.**இரு கருத்துக்களுக்கும் சமமான சாத்தியக்கூறு இருப்பதுடன் அறிவது.

**6.**மாற்றுக்கருத்துக்கு பலவீனமான சாத்தியக்கூறு இருப்பதுடன் அறிவது.

**அறிதல் என்பது ழரூரி, நழ்ரி என இரு வகைப்படும்.**

ழரூரி என்பது அடிப்படை அறிவாகும்.அதாவது, ஒரு பொருளை ஆராய்ச்சி மற்றும் ஆதாரத்தின் அவசியமில்லாமலேயே அறிவதாகும். உதாரணமாக"நெருப்பு சுடும்" என்பதை அறிந்து கொள்வதைப் போன்று. நழ்ரி என்பது ஆராய்ச்சி மற்றும் ஆதாரத்துடன் அறிவதாகும். உதாரணமாக உளூவுக்கு நிய்யத் அவசியமென அறிவதாகும்.

**(5)**அல்லாஹ்வை அறிவது: அல்லாஹ் மார்க்கமாக்கி இருப்பவற்றை ஏற்று அதற்குக் கட்டுப்படுவதும் வாழ்வின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அதனையே தீர்வாகக் கொள்வதும் அவசியமாகும். இம்மார்க்கத்தைத்தான் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது(ஸல்)அவர்கள் கொண்டு வந்தார்கள். மேலும் அடியான் அல்லாஹ்வின் வேதத்திலும் அவன் தூதரின் வழிமுறையிலும் உள்ள சான்றுகளையும் இவ்வுலகிலுள்ள அவனுடைய படைப்புகளான உலகியல் அத்தாட்சிகளையும் சிந்தித்துப் பார்ப்பதன் மூலம் தன் இறைவனை அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஒருவன் இந்த அத்தாட்சிளை சிந்தித்துப் பார்க்கும்போதெல்லாம் தன்னைப் படைத்தவனைப் பற்றிய தனது இறைவனைப் பற்றிய அறிவு அவனுக்கு அதிகரிக்கவே செய்யும்.

அல்லாஹ் கூறுகிறான்: உறுதியாக நம்புபவர்களுக்கு பூமியில் பல சான்றுகள் இருக்கின்றன. ஏன், உங்களிலும் கூட!உங்களுக்குப் புலப்படுவதில்லையா என்ன?(51:20,21)

**(6)**அவனது தூதரை அறிவது**:** அதாவது அவனுடைய தூதர் முஹம்மத்**(**ஸல்**)**அவர்களை அறிவது**.** அவர்களை அறிவது அவர்கள் கொண்டு வந்த நேர்வழி மற்றும் சத்திய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுதல்**,** அவர்கள் சொன்னவற்றை நம்புதல்**,** அவர்களுடைய ஏவவல்களை எடுத்து நடத்தல்**,** அவர்கள் விலக்கியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல்**,** இன்னும் வாழ்வின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தையே தீர்வாகக்கொள்ளுதல்**,** அவர்களின் தீர்ப்பை பொருந்திக் கொள்ளுதல் அகிய அனைத்தையும் அவசியமாக்குகிறது**.**

அல்லாஹ் கூறுகிறான்**: (**முஹம்மதே**!)**உம் இறைவன் மீது சத்தியமாக**!** அவர்கள் தங்களிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்றுக்கொண்டு பின்னர் நீர் அளிக்கின்ற தீர்ப்பு குறித்து தம் உள்ளங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாமல் முற்றிலும் அதற்கு அடிபணியாதவரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்**.**(4:65)

இறைநம்பிக்கை கொண்டவர்கள் தங்களுக்கிடையில் உள்ள வழக்குகளில் இறைத்தூதர் தீர்ப்பு வழங்கவேண்டும் என்பதற்காக அல்லாஹ்வின் பக்கமும் அவனுடைய தூதரின் பக்கமும் வருமாறு அழைக்கப்படும்போது**"**நாங்கள் செவியேற்றோம்**,** கீழ்ப்படிந்தோம்**"** என்று கூறுவதே அவர்களின் தன்மையாகும்**.** இத்தகையோர் தாம் வெற்றி பெறக்கூடியவர்கள்**.**(24:51)

நம்பிக்கை கொண்டவர்களே**!** அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள்**.** அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்**.** மேலும் உங்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் **(**கீழ்ப்படியுங்கள்**)** பின்னர் ஏதேனும் விவகாரத்தில் கருத்துவேறுபாடு கொண்டால் அதனை அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் திருப்பிவிடுங்கள்**.** நீங்கள் அல்லாஹவின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை

கொண்டோராயின் இதுதான் சரியான வழிமுறையாகும். சிறந்த முடிவாகும். (4:59)

(எனவே) இறைத்தூதரின் கட்டளைக்கு மாறுசெய்பவர் கள் தங்களுக்கு ஏதேனும் கடும்சோதனை நேர்ந்துவிடுமோ, தம்மீது துன்புறுத்தும் வேதனை வந்துவிடுமோ என்று அஞ்சட்டும். (24:63)

இமாம் அஹ்மத்(ரஹ்) அவர்கள் சோதனை என்றால் என்னவென்று தெரியுமா? எனக்கேட்டு விட்டு அது ஷிர்க் தான். ஒருவன் நபி(ஸல்)அவர்கள் கூறியவற்றில் ஒன்றை மறுத்து விட்டால் அவனது உள்ளத்தில் வழிகேடு நுழைந்து அவன் அழிந்துபோகவும் கூடும் எனக்கூறினார்கள்.

(7)இஸ்லாமிய மார்க்கத்தை அறிவது: இஸ்லாம் என்பதற்கு பொதுவான அர்த்தம் என்னவெனில், அல்லாஹ் இறைத்தூதர்களை அனுப்பிய காலத்திலிருந்து இறுதிநாள்வரை அவன் எதை மார்க்கமாக ஆக்கியிருக்கின்றானோ அவற்றைச் செய்வதன் மூலம் அவனை வழிபடுவதாகும். இதை அல்லாஹ் பல்வேறு வசனங்களில் கூறியுள்ளான். அவ்வசனங்கள், முன்சென்ற இறைமார்க்கங்கள் அனைத்தும் இஸ்லாம்- அல்லாஹ்வுக்கு வழிப்படுவது- தான் என்றே அறிவிக்கின்றன.

இப்றாஹீம்(அலை) அவர்கள் கூறியதை அல்லாஹ் கூறுகிறான்: எங்கள் இறைவா! எங்கள் இருவரையும் உனக்கு முற்றிலும் கீழப்படிந்தவர்களாய்-முஸ்லிம்களாய் ஆக்கிவைப்பாயாக! மேலும் எங்கள் வழித்தோன்றலிருந்து முற்றிலும் உனக்குக்கீழ்ப்படிந்து வாழும் ஒரு சமூகத்தைத் தோற்றுவிப்பாயாக! (2:128)

முஹம்மது(ஸல்)அவர்கள் அனுப்பப்பட்ட பிறகு, குறிப்பாக அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்திற்கு மட்டும் இஸ்லாம் என்று சொல்லப்படும். இது இஸ்லாம் என்பதற்குரிய தனிப்பட்ட

அர்த்தமாகும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கொண்டுவந்த மார்க்கம் முந்தைய மார்க்கங்கள் அனைத்தையும் மாற்றிவிட்டது. ஆகவே நபி(ஸல்)அவர்களைப் பின்பற்றுபவரே முஸ்லிம். அவர்களப் பின்பற்றாதவர் முஸ்லிமாக மாட்டார்.

ஒவ்வொரு நபியின் காலத்திலும் அந்தந்த நபியைப்பின் பற்றியவர்கள் முஸ்லிம்களாவர். மூஸா (அலை)அவர்களின் காலத்தில் அவர்களைப் பின்பற்றிய யூதர்களும் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் அவர்களைப் பின்பற்றிய கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களாவர். எனினும் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைத்தூதராக அனுப்பப்பட்டபோது யூத, கிறிஸ்தவர்கள் அனைவரும் அவர்களை ஏற்க மறுத்துவிட்டனர். எனவே அவர்கள் முஸ்லிம்களல்லர்.

இந்த இஸ்லாமிய மார்க்கம்தான் அல்லாஹ்விடம் ஒப்புக் கொள்ளப்பட்ட மார்க்கமாகும். அதைப்பின்பற்று பவருக்கு பயனளிக்கக்கூடிய மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக இஸ்லாம் மட்டுமே அல்லாஹ்விடம் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும். (3:19)

இஸ்லாத்தை விடுத்து வேறொரு மார்க்கத்தை யாரேனும் மேற்கொள்ள விரும்பினால் அவனிடமிருந்து ஒருபோதும் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் மறுமை நாளில் அவன் நஷ்டமடைந்தவரில் ஒருவனாக இருப்பான்.(3:85)

இந்த இஸ்லாம் தான் முஹம்மது(ஸல்)அவர்களுக்கும் அவர்களின் சமுதாயத்தினருக்கும் பேருபகாரமாக இறைவன் வழங்கிய மார்க்கமாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: இன்றைய தினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்காக முழுமையாக்கி விட்டேன். என்அருட்கொடையையும் உங்கள் மீது நிறைவு செய்துவிட்டேன்.

இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை(உங்கள்) வாழ்க்கை நெறியாக ஏற்றுக்கொண்டு விட்டேன்.(5:3)

(8)ஆதாரம் என்பது நோக்கத்தின் பால் வழிகாட்டக் கூடியதாகும். மேற்கூறப்பட்ட விஷயங்களை அறிவதற்கு மார்க்க ஆதாரங்கள், அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் என இரண்டு வகை ஆதாரங்கள் உள்ளன.

மார்க்கஆதாரங்கள் என்பது வஹி மூலம் அறிவிக்கப்பட்டவையாகும். அவை அல்லாஹ்வின் வேதமும் நபி(ஸல்) அவர்களின் வழிமுறையும் ஆகும். அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் என்பது சிந்திப்பதன் மூலம் உறுதி செய்யப்படுபவையாகும். இவ்வகை ஆதாரங்களை அல்லாஹ் தனது வேதத்தில் அதிகமாகவே கூறியுள்ளான். அவனுடைய அத்தாட்சிகளில் இதுவும் ஒன்றாகும் என்று கூறக்கூடிய வசனங்கள் எத்தனையோ உள்ளன. அவையெல்லாம் அல்லாஹ்வைப் பற்றி அறிவிக்கக்கூடிய அறிவுப்பூர்வமான ஆதாரங்களாகும்.

மார்க்க ஆதாரங்கள் மூலம் நபி(ஸல்)அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதாயின்"முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார்." (48:29) "முஹம்மத் ஒரு தூதரே அன்றி வேறல்லர். அவருக்கு முன்பும் தூதர்கள் பலர் சென்றுள்ளனர்." (3:144) போன்ற வசனங்கள்கள் மூலம் அறியலாம்.

அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் மூலம் அறிவதாயின் அவர்கள் கொண்டுவந்த தெளிவான அத்தாட்சிகளை சிந்திப்பதன் மூலம் அறியலாம். அவற்றில் மிகப்பெரியது அல்லாஹ்வின் வேதமாகும். அது பயனுள்ள உண்மைச் செய்திகளையும், சீர்திருத்தக்கூடிய நோர்மையான சட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் அவர்களால் ஏற்பட்ட அற்புதங்கள், அவர்கள் கூறிய மறைவான உண்மைகள் ஆகியவற்றைச் சிந்திப்பதன் மூலமும்

அறியலாம். மறைவான அவ்வுண்மைகள் வஹியின் மூலமேயன்றி வெளிப்பட முடியாததாகும். மேலும் பிற்காலத்தில் நடந்த பல நிகழ்வுகள் இவற்றை மெய்ப்படுத்தியும் இருக்கின்றன.

---

**2.அறிந்ததின் படி செயல்படுவது[1] 3.மக்களை அதன்பால் அழைப்பது.[2] 4.அவ்வாறு அழைக்கும் போது ஏற்படக்கூடிய சிரமங்களைப் பொறுத்துக் கொள்வது**

---

**(1)**அறிந்ததன்படி செயல்படுவது என்றால் நாம் எதை அறிந்தோமோ அதன் தேட்டத்தின் பிரகாரம் செயல்படுவது. அதாவது அல்லாஹ்வை நம்பி அவனது ஏவல்களை எடுத்து நடந்து அவனது விலக்கல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலம் அவனுக்கு வழிப்படுவது. இவ்வழிபாட்டில் தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் போன்ற ஒவ்வொரு மனிதனும் தனது நன்மைக்காகச்செய்ய வேண்டிய வழிபாடுகளும், நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிதல் போன்ற தனது நன்மைக்காகவும் பிறரது நன்மைக்காகவும் செய்ய வேண்டிய வழிபாடுகளும் உள்ளன. உண்மையில் செயல்படுதல் என்பது அறிவின் பிரதிபலிப்பாகும். அறிவின்றி செயல்படுபவன் கிறிஸ்தவர்களுக்கும் அறிந்தபடி செயல்படாதவன் யூதர்களுக்கும் ஒப்பாவான்.

**(2)**அதாவது நபி(ஸல்)அவர்கள் கொண்டுவந்த இறை மார்க்கத்தின் பால்- அழைப்புப் பணிக்குரிய மூன்று அல்லது நான்கு முறைகளில்-அழைப்பது. இவற்றை அல்லாஹ் தனது திருமறைக் குர்ஆனில் கூறியுள்ளான்.

(நபியே!) விவேகத்துடனும், அழகிய அறிவுரைகள் மூலமாகவும் உம் இறைவனின் மார்க்கத்தின பக்கம் அழைப்பீராக! மேலும் மிகச்சிறந்த முறையில் மக்களிடம் விவாதம் புரிவீராக! (16:215)

இவ்வசனத்தில் மூன்று முறைகள் கூறப்பட்டுள்ளன. நான்காம் முறை: மேலும் நீங்கள் வேதம் வழங்கப்பட்டவதர்களிடம் அழகிய முறையில் அன்றி தர்க்கம் செய்யவேண்டாம். ஆனால் அவர்களுள் கொடுமையாளர்களிடம் தவிர! (29:46)

அழைப்புப்பணி ஆதாரத்துடனும் முழுத்தெளிவுடனும் அமைய வேண்டும் என்பதற்காக இறைமார்க்கத்தைப் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:(நபியே!) நீர் கூறுவீராக: இதுவே என்னுடைய வழி. நான் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றேன். நானும், என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஞானத்துடன் (எங்கள்பாதை எதுஎன்பதை அறிந்து) இருக்கின்றோம். மேலும் அல்லாஹ் தூய்மையானவன். அவனுக்கு இணை கற்பிப்பவர்களுடன் எனக்கு எத்தகைய தொடர்பும் இல்லை. (12:108)

தெளிவான ஞானமென்பது அழைப்பாளன் மார்க்கச் சட்டங்களையும், அழைப்புப்பணியின் முறைகளையும், அழைக்கப்படுபவனின் நிலையையும் தெரிந்திருப்பதாகும்.

அழைப்புப்பணிக்கு பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. உறையாடல், சொற்பொழிவாற்றுதல், கட்டுரைகள் எழுதுதல், மஜ்லிஸ்களுக்கு ஏற்பாடுசெய்து அவற்றின் மூலம் பிரச்சாரம் செய்தல், நூல்களைத் தயார்செய்து அதன் மூலம் மார்க்கத்தைப் பரப்புதல் ஆகியவை அனைத்தும் அல்லாஹ்வின் பால் அழைப்பதற்குரிய வழிமுறைகளாகும்.

அதுபோல தனிப்பட்ட சில மஜ்லிஸ்களை ஏற்படுத்தி அழைப்புப் பணி செய்யலாம். உதாரணமாக விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்து இந்தமஜ்லிஸை ஏற்படுத்தலாம். இது எப்படியெனில் அழைப்பாளர் அங்கு அமர்ந்திருப்பவர்களிடம் ஒரு மார்க்க

விஷயத்தை எடுத்துக்கூறி அது குறித்த சர்ச்சையைத் துவக்கிவிட வேண்டும். காரணம் இவ்வாறு ஒரு விஷயத்தைக் குறித்து சர்ச்சை செய்து, அது சம்பந்தமாக கேள்விகளை எழுப்பி பதில்களைத்தரக்கூடிய இம்முறைக்கு மார்க்கத்தை விளங்குவதிலும் விளக்கிவைப்பதிலும் பெரும்பங்கு உண்டு. ஆயினும் இம்முறை மக்களுக்கு சோர்வையும் பாரத்தையும் ஏற்படுத்தாதவிதத்தில் அமையவேண்டும். மேலும் இதுபோன்ற முறைமேடைப் பிரசங்கத்தைவிடவும் அதிக பலனுடையதாகும்.

அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்ற இப்பணி நபிமார்கள் மற்றும் அவர்களை நேர்மையோடு பின்பற்றியவர்களின் பணியாகும். ஒருவன் தன்னுடைய இறைவனையும், தன்னுடைய நபியையும் இன்னும் தன்னுடைய மார்க்கத்தையும் அறிந்து கொண்டால்- இதற்காக அல்லாஹ் அவனுக்கு நல்லுதவி புரிந்துவிட்டால்- அவன் தனது சகோதரர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதன் மூலம் நரகிலிருந்து அவர்களைக்காக்க முயற்சிப்பது கடமையாகும். இதற்காக நன்மை இருக்கிறது என்பது குறித்து அவன் மகிழ்ச்சி கொண்டாடட்டும்.

கைபர் போரின்போது நபி(ஸல்) அவர்கள் அலி(ரலி) அவர் களிடம் கூறினார்கள்: (அலியே!) அவர்களின் பகுதிக்குச் சென்று இறங்கும் வரை அமைதியாகச் செல்வீராக. பின்னர் அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பீராக. மட்டுமல்ல, அல்லாஹ்வுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் அவர்களுக்குத் தெரிவிப்பீராக. அல்லாஹ்வின் மீது ஆணையாக உம் மூலம் அல்லாஹ் ஒரே ஒரு மனிதருக்கு நேர்வழிகாட்டுவது செந்நிற ஒட்டகங்களை விட உங்களுக்குச் சிறந்ததாகும்.(சுருக்கம்) அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஅத்(ரலி), நூல்: புகாரி,முஸ்லிம்

மேலும் முஸ்லிமுடைய ஒரு அறிவிப்பில் நபி(ஸல்)அவர்கள் கூறியதாவது: யாரேனும் நேர்வழியின் பக்கம் அழைத்தால் அதைப் பின்பற்றியவர்களுக்குக் கிடைக்கும் கூலியைப் போன்று

அழைத்தவருக்கும் உண்டு. பின்பற்றியவர்களின் கூலியில் எதுவும் இதன் காரணமாகக் குறையாது. யாரேனும் வழிகேட்டின் பால் அழைத்தால் அதைப் பின்பற்றியவர்களுக்குரிய பாவம் போல் அழைத்தவருக்கும் உண்டு, பின்பற்றியவர்களின் பாவங்களில் எதுவும் இதனால் குறையாது.அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்

யாரேனும் ஒரு நன்மையின் வழிகாட்டினால் அதைச் செய்தவருக்கு கிடைக்கும் கூலி போன்று அவருக்கும் உண்டு. (நபிமொழி) அறிவிப்பவர்: அபூமஸ்ஊத்(ரலி), நூல்: முஸ்லிம்

**(3)**பொறுமை என்பது அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்வதும், அல்லாஹ்வுக்கு மாறுசெய்வதை விட்டும் மனதைத் தடுத்துக்கொள்வதும், அல்லாஹ் நிர்ணயித்த விதிகள் குறித்து அதிருப்தி கொள்வதை விட்டும் உள்ளத்தைக் காத்துக்கொள்வதும் ஆகும். அந்த வகையில் அழைப்பாளன் அதிருப்தி, பொறுமையின்மை மற்றும் சோர்வை விட்டும் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். எப்போதும் அல்லாஹ்வின் மார்க்கத்தின் பால் மக்களை அழைப்பதில் உற்சாகத்தோடு இருக்க வேண்டும். துன்பம் இழைக்கப்பட்டாலும் சரியே. ஏனெனில் நன்மையின் பக்கம் அழைக்கின்றவர்களுக்கு தொல்லைகள் தருவதென்பது மனித இயல்பே. ஆயினும் எவர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டினானோ அவர்களைத் தவிர. (அவர்கள் இத்தகைய செயலைச் செய்ய மாட்டார்கள்.) அல்லாஹ் தனது நபியை நோக்கி இவ்வாறு கூறுகிறான் :

உமக்கு முன்னரும் தூதர்கள் பலர் பொய்யரென்று தூற்றப் பட்டுள்ளார்கள். ஆனால் நம்முடைய உதவி அவர்களிடம் வரும் வரை, பொய்யர்கள் என்று தாம் தூற்றப்பட்டதையும் தங்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்களையும் பொறுமையுடன் அவர்கள் சகித்துக் கொண்டனர் (6:34)

தொல்லைகள் கடுமையாகும் போதெல்லாம் வெற்றி அண்மித்து விடும். வெற்றி என்பது அழைப்பாளனுக்கு அவன் வாழ்கின்ற காலத்திலேயே கிடைத்தாக வேண்டும் என்பதல்ல. பிரச்சாரத்தின் பலனை அவன் கண்டாக வேண்டும் என்பதல்ல. மாறாக அவன் மரணித்த பின்னரும் கூட வெற்றி கிடைக்கலாம். எவ்வாறெனில் அல்லாஹ் மக்களுடைய உள்ளங்களில் அவனுடைய பிரச்சாரத்தை ஏற்றுக்கொள்கின்ற இயல்பையும் அதனைப் பற்றிப் பிடிக்கும் தன்மையையும் வழங்கிவிடுவான். இது அந்த அழைப்பாளனுக்குக் கிடைத்த வெற்றியாகக் கணிக்கப்படுகின்றது.

எனவே அழைப்புப் பணியில் ஈடுபடுபவர் பொறுமையுடன் தொடர்ந்து அதில் ஈடுபட வேண்டும். மேலும் எந்த மார்க்கத் தின் பக்கம் மக்களை அழைக்கின்றாரோ அந்த மார்க்கத்தில் அவர் நிலை குலையாமல் இருக்க வேண்டும். மேலும் அவர் மேற்கொள்கின்ற பிரச்சாரத்திற்கும் அவருக்கும் ஏற்படுகின்ற இடைஞ்சல்களையும் தொல்லைகளையும் பொறுத்துக் கொள்ளவேண்டும். இதோ இறைத்தூதர்கள் சொல்லாலும் செயலாலும் துன்பம் இழைக்கப்பட்டதை அல்லாஹ் கூறுகிறான்:

இவ்வாறே இவர்களுக்கு முன்னிருந்த சமூகத்தாரிடம் எந்த ஓர் இறைத்தூதர் வந்தாலும் அவரை அம்மக்கள் இவர் ஒரு சூனியக்காரர் அல்லது பைத்தியக்காரர்" என்று தான் கூறினார்கள்.(51:52)

(நபியே!) இவ்வாறே நாம் குற்றவாளிகளை இறைத்தூதர் ஒவ்வொருவருக்கும் பகைவர்களாக்கினோம்.(25:31)

எனினும் அழைப்பாளன் இதையெல்லாம் பொறுமையுடன் எதிர்கொள்ள வேண்டும். அல்லாஹ் தன்னுடைய தூதரிடம் கூறியதைப் பாரீர்:

(நபியே!) நாம் தாம் உம்மீது இந்தக் குர்ஆனை சிறிது சிறிதாக இறக்கியிருக்கின்றோம்.(76:23)

எனவே உமது இறைவனின் அருட்கொடைக்கு நன்றி செலுத்து" என்றல்லவா இதற்கடுத்து கூறப்பட்டிருக்க வேண்டும்! ஆனால் அல்லாஹ்,"எனவே நீர் உம் இறைவனின் கட்டளைக்கு பொறுமையை மேற்கொள்ளும்" (76:24) என்றே கூறியுள்ளான்.

ஆகவே இந்த திருமறைக்குர்ஆனின் கட்டளைகளை நிலைநாட்டுகின்ற ஒவ்வொருவரும் பொறுமையை மேற்கொள்ள வேண்டிய அவசியங்களை அடைந்தேதீருவார். நபி(ஸல்)அவர்களை அவர்களுடைய மக்கள் கற்களால் அடித்து, இரத்தம் சிந்த வைத்தபோது அவர்களின் நிலை எப்படி இருந்தது? அவர்கள் தமது முகத்தில் வழிந்த இரத்தத்தைத் தடவிக்கொண்டு இவ்வாறு கூறினார்கள்:"இறைவா! எனது கூட்டத்தினரை மன்னித்து விடுவாயாக! இவர்கள் அறியாதவர்கள்!" எனவே அழைப்புப்பணியில் ஈடுபடுபவர் பொறுமையுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் இருப்பது அவசியமாகும்.

**பொறுமை மூன்று வகைப்படும்:**

**1.**அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் பொறுமை.
**2.**விலக்கப்பட்டவைகளை தவிர்ந்து கொள்வதில் பொறுமை.
**3.**அல்லாஹ் நிகழ்த்துகின்ற விதிகளைப் பொறுத்துக் கொள்ளுதல். அவற்றுள் சிலவற்றில் அடியார்களுக்கு எந்தப் பங்கும் இருக்காது. இன்னும் சிலவற்றை அல்லாஹ் அடியார்களின் கரங்களாலேயே நிகழ்த்துகின்றான். உதாரணம்: துன்பங்கள், வரம்பு மீறல்கள்.

---

**இதற்கு ஆதாரம் அல்லாஹ் கூறுகிறான் காலத்தின் மீது சத்தியமாக! உண்மையில் மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். ஆனால் எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் புரிந்து, மேலும் ஒருவருக்கொருவர் சத்தியத்தை**

**எடுத்துரைத்து, பொறுமையைக் கடைபிடிக்குமாறு அறிவுரை கூறினார்களோ அவர்களைத் தவிர *(103: 1-3)*[1]**

---

**(1)**மேற்கூறப்பட்ட நான்கு விஷயங்களுக்கும் இதுவே ஆதாரமாகும்.இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் காலத்தைக் கொண்டு சத்தியம் செய்துள்ளான். காலம் தான் நன்மை, தீமைகள் நடைபெறும் களமாகும்.இதைக் கொண்டு அவன் சத்தியம் செய்து கூறியிருப்பதாவது: மனிதர்கள் அனைவரும் நஷ்டத்தில் இருக்கின்றார்கள். இறைநம்பிக்கை கொள்ளுதல், நற்செயல்கள் புரிதல், ஒருவருக்கொருவர் சத்தியத்தை எடுத்துரைத்தல், பொறுமையை அறிவுறுத்துதல் ஆகிய நான்கு பண்புகளை ஒருங்கே பெற்றவர்களைத் தவிர.

இப்னுல் கய்யூம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: மனதுடன் போராடுவதற்கு நான்கு நிலைகள் உள்ளன.

**1.**நேர்வழியையும், சத்திய மார்க்த்தையும் அறிந்து கொள்வதில் போராடுவது. இதனை அறிந்து கொள்வதன் மூலம் தான் அதற்கு இம்மையிலும், மறுமையிலும் வெற்றியும், பாக்கி யமும் கிடைக்கின்றது.

**2.**அறிந்ததன்படி செயல்படுவதில் போராடுது.

**3.**அதன்பால் பிறரை அழைப்பதிலும்,அறியாதவர்களுக்கு அதைக் கற்றுக் கொடுப்பதிலும் போராடுவது.

**4.**அழைப்புப் பணியின் சிரமங்களையும் மக்களிடமிருந்து ஏற்படக்கூடிய தொல்லைகளையும் பொறுத்துக் கொள்வதில் போராடுவது. இவ்வனைத்தையும் அவன் அல்லாஹ்வுக்காகப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நான்கு நிலைகளையும் முழுமைப்படுத்தி விட்டால் அவன் இறைவனுக்கே முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவனாக ஆகிவிடுவான் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே தான் அல்லாஹ் இந்த அத்தியாயத்தில் காலத்தைக் கொண்டு சத்தியம் செய்து இப்படிக்கூறியுள்ளான். அதாவது மனிதர்கள் அனைவரும், என்னதான் அவர்களுக்கு அதிகமான செல்வங்கள், குழந்தைகள் இருந்தாலும், எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தும், சிறப்பும் இருந்தாலும் அவர்கள் நஷ்டத்திலும் பேரிழப்பிலும் தான் இருக்கின்றார்கள். ஆனால் நான்கு பண்புகளை ஒருங்கே பெற்றவர்களைத் தவிர.

அவையாவன:

**1.**ஈமான் எனும் இறைநம்பிக்கை: இது, அல்லாஹ்வின் பக்கம் நெருக்கி வைக்கக்கூடிய சரியான நம்பிக்கை மற்றும் பயனுள்ள கல்வி ஆகிய அனைத்தையும் உள்ளடக்குகிறது.

**2.**நற்செயல்: இது, அல்லாஹ்விடத்தில் நெருக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒவ்வொரு சொல், செயலுக்கும் சொல்லப்படும். இதைச் செய்பவன் அல்லாஹ்வுக்காக என தூயஎண்ணத்துடனும் நபி(ஸல்)அவர்களைப் பின்பற்றியும் செய்ய வேண்டும்.

**3.**ஒருவருக்கொருவர் சத்தியத்தை எடுத்துரைத்தல்: இது, நன்மையைச் செய்யுமாறு ஒருவருக்கொருவர் அறிவுறுத்துவதும், அதற்குத் தூண்டுவதும், ஆர்வமூட்டுவதும் ஆகும்.

**4.**ஒருவருக்கொருவர் பொறுமையை அறிவுறுத்துதல்: அதாவது அல்லாஹ்வின் ஏவல்களைச் செய்வதிலும், அவன் விலக்கிய விலக்கல்களை விடுவதிலும், அவன் விதித்த விதிகளைப் சகித்துக் கொள்வதிலும் பொறுமையுடன் இருக்குமாறு ஒருவருக்கொருவர் அறிவுறுத்துவதாகும்.

சத்தியத்தை எடுத்துரைத்தல், பொறுமையை அறிவுறுத்துதல் ஆகிய இவ்விரண்டிலும் நன்மையை ஏவுதலும், தீமையைத் தடுத்தலும் அடங்கியுள்ளது. நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல் ஆகிய இவ்விரண்டைக் கொண்டுதான் சமுதாயம் நிலைபெற முடியும். இன்னும் சமுதாயம் சீரும் சிறப்பும் பெற்று வெற்றியடைவதும் அவ்விரண்டின் மூலமாகத்தான்.

அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களுக்காகத் தோற்றுவிக் கப்பட்டிருக்கும் சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள், தீமையைத் தடுக்கின்றீர்கள். இன்னும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றீர்கள்.(3:110)

---

**இமாம் ஷாஃபி(ரஹ்)[1] கூறினார்கள் - அல்லாஹ் மனித சமுதாயத்திற்கு இந்த அத்தியாயத்தைத் தவிர வேறு எதையும் இறக்கிவைக்காமலிருந்தால் இதுவே அவர்களுக்குப் போதுமாகும்.[2]**

**இமாம் புகாரி(ரஹ்),[3] சொல்வதற்கும் செயல்படுவதற்கும் முன்னால் அறிந்து கொள்ளுதல் என்று தலைப்பிட்டு ஆதாரமாக,(நபியே) நன்கு அறிந்து கொள்ளும் - வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை .(47:19) என்ற வசனத்தைக்கூறி இங்கு அல்லாஹ்வை அறிந்து கொள்வதைப் பற்றி முதலில் சொல்லியிருக்கிறான் என்று கூறியுள்ளார்கள்.[4]**

---

(1)இமாம் ஷாஃபி(ரஹ்) அவர்கள் குறைஷிக் குலத்தில், ஹாஷிம் குடும்பத்தில் கஸ்ஸா என்னுமிடத்தில் ஹிஜ்ரி 150 ஆம் ஆண்டு பிறந்தார்கள். அவர்களின் இயற்பெயர் முஹம்மத். துணைப் பெயர் அபூஅப்தில்லாஹ். அவர்களின் தந்தையின் பெயர் இத்ரீஸ். பாட்டனார் பெயர் அப்பாஸ். முப்பாட்டனார் பெயர் உஸ்மான் பின் ஷாஃபி. ஹிஜ்ரி 204 ஆம் ஆண்டில் மிஸ்ரில் மரணமடைந்தார்கள். இவர்கள் நான்கு இமாம்களில் ஒருவராவார்கள்.

**(2)**இமாமவர்களது இக்கூற்றின் கருத்து என்னவெனில், இறைநம்பிக்கை, நற்செயல், இறைவனின் பக்கம் மக்களை அழைத்தல், அதனால் ஏற்படக்கூடிய சிரமங்களையும் துன் பங்களையும் பொறுத்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் இறைமார்க்கத்தைப் பற்றிப்பிடித்துக் கொள்ள மனிதர்களுக்கு ஆர்வமூட்டுவதற்கு இந்த ஒரு அத்தியாயமே போதுமானதாகும் என்பதுதானே தவிர முழு ஷரீஅத்திற்கும் இந்த ஒரு அத்தியாயமே போதுமானது என்பதல்ல.

ஆம்!"மனித சமுதாயத்திற்கு அல்லாஹ் இந்த அத்தியாயத்தைத் தவிர வேறு எதையும் இறக்கி வைக்காமலிருந்திருந்தால் இதுவே அவர்களுக்குப் போதுமானதாகும்" என்று அவர்கள் கூறியிருப்பதற்குக் காரணம், ஒரு புத்திசாலி இந்த அத்தியாயத்தை செவியுற்றால் அல்லது படித்தால் அதில் கூறப்படுகின்ற இறைநம்பிக்கை கொள்ளுதல், நற்செயல்கள் புரிதல், ஒருவருக்கொருவர் சத்தியத்தை எடுத்துரைத்தல், பொறுமையை அறிவுறுத்துதல் ஆகிய நான்கு பண்புகளை மேற்கொள்வதன் மூலம் தன்னை நஷ்டத்திலிருந்து விடுவிப்பதற்கு அவசியம் முயற்சிப்பான்.

**(3)**இமாம் புகாரியின் பெயர் முஹம்மது.அபூஅப்தில்லாஹ் என்ற துணைப் பெயரும் உண்டு. அவர்களின் தந்தையின் பெயர் இஸ்மாயீல். பாட்டனார் பெயர் இப்றாஹீம் பின் முஃகீரா. ஹிஜ்ரி 194 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் புகாரா எனும் ஊரில் பிறந்தார்கள். தமது தந்தையை இழந்து- அநாதையாக தாயின் மடியில் அவர்கள் வளர்ந்தார்கள். ஹிஜ்ரி 256 ஆம் ஆண்டில் சமர்கன்ந் என்ற ஊருக்கு அருகே கர்தன்க் எனும் ஊரில் நோன்பு பெருநாள் இரவில் மரணமடைந்தார்கள்.

**(4)**புகாரி இமாம் அவர்கள் சொல்வதற்கும், செயல்படு வதற்கும் முன்னால் முதலில் அறிந்து கொள்வது அவசியம் என்பதற்கு இந்த வசனத்தை (47:19) ஆதாரமாக ஆக்கியுள்ளார்கள்.ஆக

மனிதன் முதலில் அறிந்து கொள்ள வேண்டும் பின்னர் செயல்பட வேண்டும் என்பதற்கு இது மார்க்க ஆதார மாகும். இதற்கு அறிவுப்பூர்வமான ஒரு ஆதாரமும் உள்ளது. எவ்வாறெனில், ஒரு மனிதனின் சொல் அல்லது செயல் சரியாக, இறைவனிடம் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதாக இருக்கவேண்டும் எனில் அது ஷரீஅத்திற்கு ஒத்ததாக இருக்க வேண்டும். ஷரீஅத்திற்கு ஒத்ததாக இருக்க வேண்டுமென்றால் ஷரீஅத்தைப் பற்றி அறிந்து கொள்ளாமல் சாத்தியமாகாது.

எனினும் மனிதன் இயற்கையாகவே தெரிந்து கொள்கின்ற சில விஷயங்களும் உள்ளன. உதாரணமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என அறிதல். ஏனெனில் மனிதன் இதை ஏற்றுக்கொள்ளும் இயல்புடையவனாகவே படைக்கப் பட்டுள்ளான். இதனால் இதைக் கற்றுக்கொள்ளவதற்கு அவன் பெரியஅளவில் சிரமப்படத்தேவையில்லை. ஆனால் பரவலாக உள்ள சிறு, சிறு சட்டங்களைக் கற்றுக் கொள்வதற்கு மிகுந்த சிரமத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

---

**அல்லாஹ் உமக்கருள் புரிவானாக! அறிந்துகொள் - பின்வரும் மூன்று விடயங்களை அறிந்து அதன் பிரகாரம் செயல்படுவது முஸ்லிமான ஆண்,பெண் அனைவர் மீதும் கடமையாகும்.**

1. **அல்லாஹ் தான் நம்மைப் படைத்தான்.[1] அவன் தான் நமக்கு வாழ்வாதாரம் அளித்தன்.[2]**

---

**(1)**அல்லாஹ்தான் நம்மைப் படைத்தான் என்பதற்கு மார்க்க ஆதாரமும் அறிவுப்பூர்வமான ஆதாரமும் உள்ளன. மார்க்க ஆதாரங்கள் ஏராளமாகவே உள்ளன. அவற்றுள் சில: அல்லாஹ் கூறுகிறான்: அவன் தான் உங்களைக் களி மண்ணிலிருந்து படைத்தான். பிறகு (உங்களுக்காக ஒரு வாழ்க்கைத்)தவணையை நிர்ணயித்தான். மேலும் அவனிடத்தில் முடிவு செய்யப்பட்ட மற்றொரு தவணையும் உண்டு. ஆனால் நீங்களோ சந்தேகத்தில் உழல்கின்றீர்கள்.(6:2)

நாம் உங்களைப் படைத்து, பிறகு உங்களுக்கு உருவம் கொடுத்தோம்.(7:11) பேதகமடைந்த சுண்டினால் ஓசைவரக்கூடிய காய்ந்த களிமண்ணிலிருந்து நாம் மனிதனைப் படைத்தோம்.(15:26)

அவனுடைய சான்றுகளில் ஒன்று அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதாகும்.பின்னர் நீங்கள் மனிதர்களாக(பூமியின் பல பாகங்களிலும்)பரவிச்சென்று கொண்டிருக்கிறீர்கள். (30:20)

சுட்ட மண்பாண்டங்களைப் போல் தட்டினால் ஓசை வரக் கூடிய, களிமண்ணிலிருந்து அவன் மனிதனைப் படைத்தான்.(55:14)

அல்லாஹ் அனைத்துப்பொருட்களையும் படைத்தவனாவான். (39:62)

அல்லாஹ்தான் உங்களையும் படைத்தான். நீங்கள் உருவாக்கிய அப்பொருட்களையும் படைத்தான்.(37:96)

நான் ஜின்களையும்,மனிதர்களையும் என்னை வணங்குவதற்காக வேயன்றி வேறு எதற்காகவும் படைக்கவில்லை. (51:56) இன்னும் பல வசனங்கள் உள்ளன.

அல்லாஹ் நம்மைப் படைத்தான் என்பதற்கு அறிவுப்பூர்வமான ஆதாரம்:

பின்வரும் வசனத்தில் இதற்கான சமிஞ்ஞை உள்ளது.

படைப்பாளன் யாருமின்றி தாமாகவே இவர்கள் படைக்கப் பெற்றர்களா? அல்லது இவர்கள் தங்களுக்குத் தாங்களே படைப்பாளர்களாய் இருக்கின்றார்களா?(52:35)

ஏனெனில் மனிதன் தன்னைத்தானே படைத்துக் கொள்ளவில்லை. காரணம் அவன் முன்பு எப்பொருளாயும் இல்லாமலிருந்தான். இல்லாமை என்பது படைக்கும் ஆற்றலுடையதாக எப்படி ஆகமுடியும்? மேலும் அவனுடைய தாய் அவனைப் படைக்கவில்லை. அவனுடைய தந்தை அவனைப் படைக்கவில்லை. படைப்பினங்களில் வேறு எவரும் அவனை படைக்கவில்லை. படைப்பாளன் இன்றி தற்செயலாக அவன் உருவாவதற்கும் சாத்தியமில்லை.

ஏனெனில் உண்டாகும் ஒவ்வொரு பொருளுக்கும் உண்டாக்கும் மூலகர்த்தா இருப்பது அவசியம். அது மட்டுமல்ல, இந்தப் படைப்பினங்கள் இந்தப் புதுமையான அமைப்பில் அமைந்திருப்பதும் ஒருங்கிணைந்த ஒரு கட்டுக்கோப்பான நிலையில் இருப்பதும் அவை தற்செயலாகத் தோன்றி விட்டன என்பதை உறுதியாக மறுக்கின்றன. ஏனெனில் திடீரெனத் தோன்றக்கூடிய ஒரு பொருள் அது அசலில் உருவாகும் போதே ஓர் ஒழுங்கமைப்புடன் இருப்பதில்லை. பிறகு நீடித்து நிற்கும் நிலையிலும் பரிணாம நிலையிலும் எப்படி அது ஒழுங்கமைப்புடன் திகழ முடியும்?

ஆக, இந்தப் படைப்பினங்கள் தம்மைத்தாமே உண்டாக்கிக் கொள்ளவுமில்லை, தற்செயலாகத் தோன்றவுமில்லை எனும்போது இவற்றைப் படைத்த ஒருவன் இருக்கவேண்டும் என்பது உறுதியாகிவிட்டது. அவன்தான் அல்லாஹ். படைப்பவனும் கட்டளை பிறப்பிப்பவனும் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை.

அல்லாஹ் கூறுகிறான்: அறிந்து கொள்ளுங்கள்: படைக்கும் ஆற்றலும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்குரியவையே! (7:54)

படைப்பினங்களில் எவரும் படைத்தவனை ஆணவத்தின் அடைப்படையிலே தவிர மறுத்ததாகத் தெரியவில்லை. ஃபிர்அவ்ன் மறுத்ததைப் போல.

இணைவைப்பவராக இருந்த ஜுபைர் இப்னு முத்இம்(ரலி) அவர்கள், படைப்பாளன் யாருமின்றி தாமாகவே இவர்கள் படைக்கப்பெற்றர்களா? அல்லது இவர்கள் தங்களுக்குத் தாங்களே படைப்பாளர்களாய் இருக்கின்றார்களா? அல்லது வானங்களையும் பூமியையும் இவர்கள் படைத்துள்ளார்களா? உண்மை யாதெனில் இவர்கள் உறுதியான நம்பிக்கை கொள்வதில்லை. அல்லது உம் இறைவனின் கருவூலங்கள் இவர்களின் பிடியில் இருக்கின்றனவா? அல்லது அவற்றின் மீது இவர்களின் ஆதிக்கம்தான் நடைபெறுகின்றதா?"(52:35-37) எனும் அத்தூர் அத்தியாயத்தின் வசனங்களை நபி(ஸல்) அவர்கள் ஓதிடக் கேட்டபோது, எனது இதயம் சிறகடிக்கத் தொடங்கியது, என் உள்ளத்தில் ஈமான் இடம் பிடித்ததன் ஆரம்பம் இதுதான்" (புகாரி)

(2)இதற்கு திருக்குர்ஆனிலும், நபிமொழியிலும் மற்றும் அறிவிப்பூர்வமாகவும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக அல்லாஹ்வே உணவளிப்பவனாகவும், பெரும் ஆற்றல் உடையவனாகவும், வலிமை மிக்கவனாகவும் இருக்கின்றான்.(51:58)

(நபியே! இவர்களிடம்) கேளும்: வானங்கள் மற்றும் பூமியிலிருந்து உங்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பவன் யார்?" கூறும்: அல்லாஹ்தானே"(34:24)

(நபியே! இவர்களிடம்)கேளும்: வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? மேலும் உங்களிடமுள்ள கேட்கும் மற்றும் பார்க்கும் ஆற்றல்கள் யாருடைய அதிகாரத்தில் உள்ளன? மேலும் உயிரற்றதிலிருந்து

உயிருள்ளதையும், உயிருள்ளதிலிருந்து உயிரற்றதையும் தோற்றுவிப்பவன் யார்? மேலும் அகிலத்தின் ஒழுங்கமைப்பை நிர்வகிப்பவன் யார்? அதற்கவர்கள், அல்லாஹ் தான்" என்று பதில் கூறுவார்கள், அவ்வாறாயின் நீங்கள்(உண்மைக்கு மாறாக நடப்பதை)தவிர்ந்து கொள்ளக் கூடாதா?" என்று கேளும். (10:31)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தாயின் வயிற்றிலிருக்கும் கருவிடம் (அது ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்ததும்) ஒருமலக்கு அனுப்பப்பட்டு நான்கு விஷயங்களை எழுதுமாறு கட்டளையிடப்படுவார். அதன்படி அதனுடைய வாழ்வாதாரம் வாழ்நாள், செயல்பாடு, நற்பாக்கியசாலியா அல்லது துர்ப்பாக்கியசாலியா என்ற விபரம் ஆகிய நான்கு விஷயங்களை அந்த வானவர் பதிவு செய்கிறார் என நபி(ஸல்)கூறுவதாக புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அல்லாஹ்தான் நமக்கு வாழ்வாதாரம் அளித்தான் என்பதற்குறிய அறிவுப்பூர்வமான ஆதாரம் வருமாறு: உணவும், தண்ணீரும் இன்றி நிச்சயம் நாம் ஜீவிக்க முடியாது, உணவையும், தண்ணீரையும் அல்லாஹ்தான் படைத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

(பூமியில்) நீங்கள் விதைக்கின்ற இந்த விதையைப் பற்றி எப்போதாவது சிந்தித்ததுண்டா? இதன் மூலம் பயிர்களை நீங்கள் விளைவிக்கின்றீர்களா? அல்லது நாம் விளைவிக்கின்றோமா? நாம் நாடினால் இவற்றைப்பதர்களாக ஆக்கிவிட்டிருப்போம். அப்போது நீங்கள் பலவாறு புலம்பிக்கொண்டிருப்பீர்கள்- அனைத்தும் தண்டமாகிவிட்டதே, நாம் துர்ப்பாக்கியவான்களாய் ஆகிவிட்டோமே என்று! இன்னும் நீங்கள் பருகும் இந்த நீரைக்கவனித்தீர்களா? மேகத்திலிருந்து இதனை நீங்கள் பொழியச் செய்தீர்களா? அல்லது நாம் பொழியச் செய்தோமா? நாம் நாடினால் இதனை உவர்ப்பு நீராக்கி விட்டிருப்போம். அப்படி இருக்க நீங்கள் ஏன் நன்றி செலுத்துவதில்லை?(56:63-70)

இந்த வசனங்களில் நம்முடைய வாழ்வாதாரமான உணவும், தண்ணீரும் அல்லாஹ்விடமிருந்தே நமக்குக் கிடைக் கின்றன என விளக்கப்பட்டுள்ளது.

---

**அவன் நம்மை வீணாக விட்டுவிடவில்லை.[1] மாறாக நமக்கு ஒரு தூதரை அனுப்பி வைத்தான்.[2]**

---

(1)இதுதான் உண்மை. இதனையே இறைமார்க்கத்தின் ஆதாரங்களும், அறிவிப்பூர்வமான ஆதாரங்களும் அறிவிக்கின்றன. இறைமார்க்கத்தின் ஆதாரமாவது, அல்லாஹ் கூறுகிறான்: நாம் உங்களை வீணாகவே படைத்துள்ளோம் என்றும் நம்மிடம் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படவேமாட்டீர்கள் என்றும் எண்ணிக்கொண்டீர்களா, என்ன? உண்மையான அரசனாகிய அல்லாஹ் மிக உயர்ந்தவன்! வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர வேறு இல்லை. (23:115)

மனிதன் வெறுமனே விட்டுவிடப்படுவான் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றானா? (கருவறையில்) செலுத்தப்படும் ஒரு விந்துத் துளியாய் அவன் இருக்கவில்லையா? பின்னர் அவன் கருவறைச் சுவற்றில் ஒட்டிக் கொண்டிருக்கும் பொருளாக ஆனான். பின்னர் அல்லாஹ் அவனை(அவனுடைய உடலை)ப் படைத்தான். (அவனுடைய உறுப்புகளைப்) பொறுத்தமாக அமைத்தான். பிறகு அவனிலிருந்து ஆண்-பெண் என இரு இனங்களை உருவாக்கினான். இத்தகைய இறைவன் இறந்தவர்களை மீண்டும் உயிர்ப்பித்திட ஆற்றலுடையவன் இல்லையா? (75:36-40)

அறிவுப்பூர்வமான ஆதாரம்: இந்த மனிதசமுதாயம் மண்ணில் தோன்றி வாழ்வதும் பின்னர் கால்நடைகளைப் போல உலகில் சுகமனுபவித்து விட்டு மரணித்துவிடுவதும் அதன்பின் கேள்விகணக்கிற்காக எழுப்பப்படாமல் இருப்பதென்பது

அல்லாஹ்வின் நுட்பத்திற்கு உகந்ததல்ல. இன்னும் சொல்வதானால் அது அப்பட்டமான கேலிக் கூத்தாகும்.

அல்லாஹ் மனிதர்களைப் படைத்து அவர்களுக்கு தூதர்களை அனுப்பி, அத்தூதர்களுக்கு மாறு செய்பவர்களுடன் ஜிஹாத் எனும் புனிதப் போர் செய்வதை நமக்கு அனுமதி வழங்கி (அது குர்ஆன், ஹதீஸ் கூறும் நெறிமுறைப்படி ஆனதாகும்) பின்னர் பலன் ஒன்றுமே இல்லை என்றால் அது சாத்தியமில்லாததாகும். அல்லாஹ்வின் நுட்பம் மற்றும் விவேகத்தின் தேட்டத்திற்கு இது அசாத்தியமானதாகும்.

(2)நமக்கு முன்னுள்ள சமுதாயத்திற்கு அல்லாஹ் தூதர்களை அனுப்பியது போலவே முஹம்மத்(ஸல்)அவர்களது சமுதாயமான நமக்கும்- இறைவனின் வசனங்களை நமக்கு ஓதிக்காட்டி, நம்மைப் பண்படுத்தி, வேதத்தையும், ஞானத்தையும் நமக்கு கற்றுக் கொடுக்கக்கூடிய-ஒரு தூதரை அனுப்பினான். அல்லாஹ் கூறுகிறான்: அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் எவரும் வருகைதராமல் எந்தச் சமுதாயமும் இருந்ததில்லை.(35:24)

ஆம்! அல்லாஹ் மனிதர்களுக்கு தூதர்களை அவசியம் அனுப்ப வேண்டியிருந்தது. காரணம் அவனுக்கு எதிராக மக்களுக்கு எந்த ஆதாரமும் கிடைக்கக் கூடாது என்பதற்காகவும் அவன் விரும்பிய முறையில் அவர்கள் அவனை வணங்க வேண்டும் என்பதற்காகவும் தான்.

இதோ அல்லாஹ் கூறுகிறான்:(நபியே!)நூஹுக்கும் அவருக்குப் பின்னால் வந்த நபிமார்களுக்கும் நாம் வஹீ அறி வித்ததுபோல திண்ணமாக நாம் உமக்கும் வஹீ அறிவித்துள்ளோம். மேலும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோருக்கும் மற்றும் யஃகூபின் வழித்தோன்றல்களுக்கும் ஈஸா, அய்யூப், யூனுஸ், ஹாரூன் மற்றும் சுலைமான் அகியோருக்கும் நாம் வஹீ அறிவித்திருக்கின்றோம். தாவூதுக்கு ஸபூரை வழங்கினோம்.

மேலும் முன்னரே உம்மிடம் நாம் எந்த இறைத்தூதர்கள் பற்றி எடுத்துரைத்துள்ளோமோ அந்த இறைத்தூதர்களுக்கும் உம்மிடம் எடுத்துரைக்கப்படாத இறைத்தூதர்களுக்கும் (வஹீ அறிவித்திருக்கின்றோம்). அல்லாஹ் மூஸாவிடம் நேரடியாகப் பேசியும் இருக்கின்றான். இறைத்தூதர்கள் அனைவரும் நற்செய்தி அறிவிப்பவர்களாகவும் எச்சரிப்பவர்களாகவும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஏனெனில் அத்தூதர்கள் அனுப்பப்பட்ட பிறகு அல்லாஹ்விடம் முறையிட மக்களுக்கு ஆதாரம் ஏதும் இருக்கக் கூடாது என்பதற்காக. (4:165)

மட்டுமல்ல அல்லாஹ்வை அவன் விரும்பும் முறையில் நாம் வணங்குவதென்பது இறைத்தூதர்கள் காட்டிய வழியில் தான் முடியும். ஏனெனில் அவர்கள்தான் அல்லாஹ்வின் விருப்பங்களையும் அவன்பால் நம்மை நெருக்கி வைக்கக்கூடிய வழிமுறைகளையும் நமக்கு விளக்கிச் சென்றுள்ளார்கள். எனவே இந்த அடிப்படையில் மனிதர்களுக்கு நற்செய்தி அறிவிப்பவர்களாகவும் எச்சரிப் பவர்களாகவும் தூதர்களை அனுப்பிவைப்பது அல்லாஹ்வின் நுட்பம் மற்றும் விவேகத்தின் தேட்டமாகும். (இதே அடிப்படையில் தான் நம் சமுதாயத்திற்கும் அல்லாஹ் ஒரு தூதரை முஹம்மத்(ஸல்) அவர்களை அனுப்பி வைத்தான். இதற்கு) ஆதாரம்:திண்ணமாக நாம் உங்களிடம் உங்களுக்கு சான்று பகரக்கூடிய ஒரு தூதரை அனுப்பினோம்- ஃபிர்அவ்னிடம் நாம் ஒரு தூதரை அனுப்பியது போன்று. எனினும் ஃபிர்அவ்ன் அத்தூதருக்கு மாறுசெய்தான். எனவே நாம் அவனை மிகவும் கடுமையாகப் பிடித்தோம்.(73:15,16) (இவ்வசனத்தை மூலாசிரியரும் ஆதாரமாகக் குறிப்பிட்டுள்ளார்.)

---

**யார் அத்தூதருக்குக் கட்டுப்படுகிறாரோ அவர் சுவர்கம் செல்வார்.[1] யார் மாறு செய்கிறாரோ அவர் நரகம் செல்வார்.[2] ஆதாரம்:**

**திண்ணமாக நாம் உங்களிடம் உங்களுக்குச் சான்று பகரக்கூடிய ஒரு தூதரை அனுப்பினோம்- ஃபிர்அவ்னிடம் நாம் ஒரு தூதரை அனுப்பியது போன்று.**

**எனினும் ஃபிர்அவ்ன் அத்தூதருக்கு மாறு செய்தான். எனவே நாம் அவனை மிகவும் கடுமையாகப் பிடித்தோம். (73:15-16)**

--------------------------------------------------------------------------------

**(1)**இது, பின்வரும் வசனங்களிலிருந்து பெறப்பட்ட உண்மையாகும். அல்லாஹ் கூறுகிறான்:
அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். (அதனால்) நீங்கள் கருணை காட்டப்படுவீர்கள். உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும், சுவனத்தின் பக்கமும் விரைந்து செல்லுங்கள். அது வானங்கள் மற்றும் பூமியின் அளவுக்கு விரிவானது. மேலும் அது இறையச்சமுடையோருக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.(3:133)

எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கீழ்ப்படிகின்றார்களோ அவர்களை - கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனப்பூங்காக்களில் அவன் நுழையவைப்பான். அவற்றில் அவர்கள் நிலையாகத்தங்கி வாழ்வார்கள். இதுவே மகத்தான வெற்றியாகும்.(4:13)

எவர்கள் அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்ப்படிந்து, அல்லாஹ்வுக்கு அஞ்சி, அவனுக்கு மாறு செய்வதைத் தவிர்த்துக் கொள்கின்றார்களோ அவர்கள் தாம் வெற்றியாளர்களாவர்.(24:52)

எவர்கள் அல்லாஹ்வுக்கும் (அவன்)தூதருக்கும் கீழ்ப்படிகின்றார்களோ அவர்கள் அல்லாஹ் அருள் புரிந்துள்ள நபிமார்கள், உண்மையாளர்கள், (இறைவழியில்) உயிர்தியாகம் செய்தவர்கள், உத்தமர்கள் ஆகியோருடன் இருப்பார்கள். இவர்கள் எத்துணை சிறந்ததோழர்கள்! (4:69)

எவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கீழ்ப்படிகின்றாரோ அவர் மகத்தான வெற்றி அடைந்துவிட்டார். (33:71)

இது விஷயத்தில் இன்னும் ஏராளமான வசனங்கள் இருக்கின்றன. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: எனது சமுதாயத்தவர் அனைவரும் சுவனம் செல்வர். நிராகரித்தவர்களைத் தவிர! அப்போது, அல்லாஹ்வின் தூதரே! நிராகரித்தவர்கள் என்றால் யார்? எனத் தோழர்கள் கேட்டதும், எவர்கள் எனக்கு கீழ்ப்படிகின்றார்களோ அவர்கள் சுவனம் செல்வர். எவர்கள் எனக்கு மாறு செய்கின்றார்களோ அவர்களே நிராகரித்தவர்கள் என நபி(ஸல்)பதிலளித்தார்கள்.(புகாரி)

(2)இதுவும் பின்வரும் வசனங்களிலிருந்து பெறப்பட்ட உண்மையாகும். அல்லாஹ் கூறுகிறான்:

எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கீழ்ப்படிய மறுத்து அவனுடைய வரம்புகளை மீறுகின்றார்களோ அவர்களை அல்லாஹ் நரகத்தில் தள்ளுவான். அதில் அவர்கள் நிலையாக வீழ்ந்துகிடப்பார்கள். அவர்களுக்கு இழிவுபடுத்தும் தண்டனையும் (அங்கு)இருக்கிறது.(4:14)

எவன் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மாறுசெய்கின்றானோ அவன் வெளிப்படையான வழிகேட்டில் வீழ்ந்து விட்டான்.(33:36)

எவன் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மாறுசெய்கின்றானோ நிச்சயமாக அவனுக்கு நரகநெருப்பு இருக்கின்றது. அதில் அவன் என்றென்றும் வீழ்ந்துகிடப்பான்.(72:23)
முன்னர் கூறப்பட்ட ஹதீஸில் '... எவர்கள் எனக்கு மாறு செய்கின்றார்களோ அவர்களே நிராகரித்தவர்கள்'' என நபி (ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள்.(புகாரி) (அப்படியாயின் அவர்கள் நரகமே செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.)

---

***2.திண்ணமாக[1] அல்லாஹ், அவனுக்குரிய வணக்க வழிபாடுகளில் அவனுக்கு நெருக்கமான வானவரையோ அவனால் அனுப்பபட்ட நபியையோ எவரையும் அவனுக்கு இணையாக ஆக்குவதை விரும்பமாட்டான்.***

**ஆதாரம் - பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். எனவே அங்கு அல்லாஹ்வுடன் வேறுயாரையும் அழைக்காதீர்கள்** (72:18)

---

**(1)**அதாவது நாம் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களில் இரண்டாவது: திண்ணமாக அல்லாஹ் அவனுக்குரிய வணக்க வழிபாடுகளில் அவனுக்கு நெருக்கமான மலக்கையோ அவனால் அனுப்பப்பட்ட நபியையோ எவரையும் அவனுக்கு இணையாக ஆக்குவதை விரும்பமாட்டான். மாறாக அவன் மட்டுமே வணக்கத்திற்கு உரித்தானவன். இதற்கு ஆதாரம் மூலஆசிரியர் குறிப்பிட்ட பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். எனவே அங்கு அல்லாஹ்வுடன் வேறு யாரையும் அழைக்காதீர்கள்.(72:18)" என்ற வசனம் தரும் கருத்தாகும்.

இவ்வசனத்தில், மனிதன் அல்லாஹ்வுடன் வேறு எவரையும் அழைக்கக்கூடாது என அல்லாஹ் தடைசெய்துள்ளான். தனக்கு விருப்பமில்லாத எதையும் அல்லாஹ் தடைசெய்யமாட்டான்.

மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் நிராகரிப்பீர்களாயின் திண்ணமாக அல்லாஹ் உங்களிடம் தேவையற்றவன். ஆனால் அவன் தன் அடியார்களிடம் நிராகரிப்பை விரும்புவதில்லை. மேலும் நீங்கள் நன்றி செலுத்துவீர்களாயின் அதை அவன் உங்களுக்காக விரும்புகின்றான். (39:7)

நீங்கள் அவர்கள் மீது திருப்தி கொண்டாலும் திண்ணமாக அல்லாஹ் பாவிகளான இத்தகைய மக்கள் மீது ஒரு போதும் திருப்தி கொள்ளமாட்டான்.(9:96)

எனவே நிராகரிப்பையும் இணைவைத்தலையும் ஒருபோதும் அல்லாஹ் விரும்புவதில்லை. இன்னும் சொல்வதானால் அல்லாஹ் தூதர்களை அனுப்பி வைத்ததும் வேதங்களை இறக்கி வைத்ததும்

நிராகரிப்பு மற்றும் இணைவைத்தலுக் கெதிராகப் போராடி அவற்றை அழித்து ஒழிப்பதற்குத்தான்.

அல்லாஹ் கூறுகிறான்: குழப்பம் இல்லாதொழிந்து மார்க்கம் முற்றிலும் அல்லாஹ்வுக்கே உரித்தாகும் வரையில் நீங்கள் இந்நிராகரிப்பாளர்களுடன் போர் புரியுங்கள்.(8:39)

நிராகரிப்பையும் இணைவைத்தலையும் அல்லாஹ் விரும்பவில்லை எனும் போது ஒரு முஃமினின் கடமை அவ்விரண்டையும் அவனும் விரும்பக் கூடாது. ஏனெனில் ஒரு முஃமினின் விருப்பும் வெறுப்பும் அல்லாஹ்வினுடைய விருப்பு, வெறுப்பிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அல்லாஹ் விரும்புவதையே முஃமினும் விரும்ப வேண்டும். அல்லாஹ் வெறுப்பதை முஃமினும் வெறுக்க வேண்டும்.

அதுபோலவே நிராகரிப்பையும் இணைவைத்தலையும் அல்லாஹ் விரும்பமாட்டான் எனும் போது அந்த நிராகரிப்பையும் இணைவைத்தலையும் ஒரு முஃமின் விரும்புவது ஏற்ற செயலல்ல. ஷிர்க்கைப் பொருத்தவரை அது ஆபத்தானதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

நிச்சயமாக அல்லாஹ் தனுக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். இதைத்தவிர ஏனைய பாவங்களை தான் நாடுகின்றவர்களுக்கு மன்னித்து விடுகிறான். (4:48)

எவன் அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கின்றானோ அவனுக்குத் திண்ணமாக அல்லாஹ் சுவர்க்த்தைத் தடைசெய்திருக்கின்றான். மேலும் அவனுடைய இருப்பிடம் நரகமாகும். மேலும் இத்தகைய அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் யாருமில்லை.(5:72)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் யார் அல்லாஹ்வைச் சந்திக்கின்றாரோ அவர்

சுவர்க்கம் புகுவார். அல்லாஹ்வுக்கு இணை வைத்தவராக யார் அல்லாஹ்வைச் சந்திக்கின்றாரோ அவர் நரகம் புகுவார். (முஸ்லிம்)

---

**3.அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவனுடைய தூதருக்கு கீழ்ப்படிகின்றவர் அல்லாஹ்வையும் அவன்தூதரையும் எதிர்ப்பவரை நேசிப்பது கூடாது.1 அவர் மிக நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரி.**

**ஆதாரம் - அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கும் மக்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்ப்பவர்கள் மீது அன்பு செலுத்துவதை (நபியே!) நீர் காணமாட்டீர். அத்தகையோர் அவர்களுடைய தந்தையரானாலும் அல்லது அவர்களுயைட சகோதரர்களாயினும் அல்லது அவர்களுடைய குடும்பத்தினராயினும் சரியே!**

**அவர்களின் இதயங்களில் (அல்லாஹ்) ஈமானை பதித்து வைத்துவிட்டான். மேலும் தன் சார்பிலிருந்து ரூஹை (உதவி) வழங்கி அவர்களைப் பலப்படுத்தினான். மேலும் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனங்களில் அவர்களைப் புகச்செய்வான். அங்கே அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டனர். அவர்கள் அல்லாஹ்வின் கட்சியினராவர்.அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் கட்சியினர்கள் தாம் வெற்றி பெறக்கூடியவர்கள்.**(58:22)

---

**(1)**அதாவது நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய மூன்றாவது விஷயம், நட்பு கொள்வதும் பகைமை பாராட்டுவதும் ஆகும்.இவ்விரண்டும் மிகப்பெரும் அடிப்படை விஷயங்களாகும். இது குறித்து ஏராளமான வசனங்கள் வந்துள்ளன. அல்லாஹ் கூறுகிறான்:

இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்களைச் சார்ந்தவர்களைத் தவிர மற்றவர்களை உங்கள் அந்தரங்க நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். உங்களுடைய பலவீனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் எந்த ஒரு வாய்ப்பையும் அவர்கள் நழுவவிடுவதில்லை. (3:118)

இறைநம்பிக்கை கொண்டவர்களே! யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் உங்கள் உற்ற நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். அவர்களில் சிலர் சிலருக்கு நெருங்கிய நண்பர்களாய் இருக்கின்றனர். மேலும் உங்களில் எவரேனும் அவர்களைத் தம் உற்ற நண்பர்களாய் ஆக்கிக் கொண்டால் அவரும் அவர்களைச் சார்ந்தவர்களாகவே கணிக்கப்படுவார். திண்ணமாக அல்லாஹ் அக்கிரமக்காரார்களுக்கு நோர்வழி காட்டுவதில்லை.(5:51)

இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன் வேதம் வழங்கப்பட்டவர்களில் எவர்கள் உங்களுடைய தீனை (நெறியை) கேலிக்கும் விளையாட்டுக்கும் உரித்தாக்கிக் கொண்டார்களோ அவர்களையும் மற்ற நிராகரிப்பாளர்களையும் உங்களின் உற்ற நண்பர்களாய் நீங்கள் எடுத்துக்கொள்ளாதீர்கள், நீங்கள் இறைநம்பிக்கையாளர்களாய் இருந்தால் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.(5:57)

இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களின் தந்தையரும், உங்களின் சகேதரர்களும் இறைநம்பிக்கையைக் கைவிட்டு நிராகரிப்புக்கு முன்னுரிமை தந்தால் நீங்கள் அவர்களை உற்ற நண்பர்களாக்காதீர்கள். உங்களில் யார் அவர்களை உற்ற நண்பர்களாக்குகிறார்களோ அவர்கள் தாம் அக்கிரமக்காரர்கள்.

(நபியே!) நீர் கூறிவிடுவீராக! உங்கள் தந்தையர், உங்கள் பிள்ளைகள், உங்கள் சகோதரர்கள், உங்களின் மனைவியர், உங்களின் உறவினர்கள், நீங்கள் சம்பாதித்த செல்வம், தேக்கநிலை ஏற்பட்டுவிடுமோ என நீங்கள் அஞ்சுகின்ற உங்களுடைய வாணிபம் மற்றும் உங்களுக்கு விருப்பமான இல்லங்கள் ஆகியவை அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும்விட அவன் வழியில் போராடுவதை விட உங்களுக்கு நேசமானவையாய் இருந்தால் அல்லாஹ் தன்னுடைய கட்டளையை (வேதனையை) கொண்டு வருவதை

எதிர்பார்த்திருங்கள். அல்லாஹ் தீயசமுதாயத்துக்கு நேர் வழிகாட்டுவதில்லை.**(9:23-24)**

உங்களுக்கு இப்றாஹீமிடத்திலும் அவருடன் இருந்தவர் களிடத்திலும் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது. அவர்கள் தம் சமூகத்தாரிடம்(தெளிவாகக்) கூறிவிட்டார்கள்: உங்களை விட்டும் அல்லாஹ்வை விடுத்து நீங்கள் வணங்குகின்ற கடவுளரை விட்டும் நாங்கள் திண்ணமாக விலகிவிட்டோம். நாங்கள் உங்களை நிராகரித்து விட்டோம். மேலும் உங்களுக்கும் எங்களுக்குமிடையே நிரந்தரப்பகைமையும் வெறுப்பும் ஏற்பட்டு விட்டன- ஏக அல்லாஹ்வின் மீது மட்டும் நீங்கள் நம்பிக்கைகொள்ளும் வரையில்!" (60:4)

ஏனெனில் அல்லாஹ்வை எதிர்க்கின்றவர்களை ஒருவன் நேசிப்பதும், அவர்களோடு உறவாடுவதும் அவனுடைய உள்ளத்திலுள்ள அல்லாஹ்வைப் பற்றியும் அவன் தூதரைப் பற்றியும் உள்ள நம்பிக்கை- ஈமான் பலவீனமாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது. ஏனெனில் மனிதன் தனது நேசனுக்கு எதிரியாக இருக்கின்ற ஒருவனை நேசிப்பது அறிவுடமையல்ல! மேலும் காஃபிர்களை நேசிப்பது அவர்களின் இறைநிராகரிப்புக்கும், வழிகேட்டுக்கும் உதவுவதாக அமையும். அவர்களை நேசிப்பதென்பது நேசம்கொள்வதற்கான எல்லாக்காரண காரியங்களைச் செய்வதன் மூலமே ஏற்படும். அப்படியானால் எல்லா வழிகளிலும் அவர்களின் நேசத்தைத் தேடுவதாக ஆகிவிடும். இது சந்தேகமில்லாமல் பரிபூரணமான ஈமானுக்கு முரணானதாகும்.

எனவே ஒரு முஃமின் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் எதிர்ப்பவர்களை பகைத்துக்கொள்வதும், வெறுத்து ஒதுங்குவதும் கடமையாகும். அவர்கள் தனக்கு நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் சரியே! ஆனாலும் இவ்வாறு நடந்து கொள்வது

அவர்களுக்கு அறிவுரை கூறுவதற்கும் சத்தியத்தின் பால் அவர்களை அழைப்பதற்கும் தடையாக இருக்காது.

---

**தனக்கு கீழ்படிவதற்காக அல்லாஹ் உமக்கு வழிகாட்டுவானாக! அறிந்து கொள்! இப்றாஹீம்(அலை)[1] கடைபிடித்த வழியான ஹனஃபிய்யா[2] என்பது வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கி[3] அவனை மட்டும் வணங்குவதாகும்.[4]**(4)

---

**(1)**இப்றாஹீம் **(**அலை**)**அவர்கள் அல்லாஹ்வின் உற்ற நண்பர் ஆவார். அல்லாஹ் கூறுகிறான்: இப்றாஹீமை தன் உற்ற நண்பராக அல்லாஹ் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.(4:125) இவர்கள் நபிமார்களின் தந்தையென போற்றப்படுபவர்கள். திருக்குர்ஆனில் அநேக இடங்களில் அவர்களின் வழிமுறை திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. அதனை நாம் பின்பற்ற வேண்டுமென்பதற்காக.

**(2)**"ஹனீஃபிய்யா" என்பது இணைவைத்தலை விட்டும் விலகி அல்லாஹ்வுக்காகவே என தூய்மையான எண்ணத்துடன் செயல்படக்கூடிய வழியாகும்.

**(3)**வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்குதல் என்பதன் கருத்து, ஒருவன் தனது வணக்கவழிபாடுகளை அல்லாஹ்வின் திருமுகத்தையும், அவனுடைய கண்ணியத்திற்குரிய வீடான சுவனத்தை அடைவதையும் நாடிச்செய்வதாகும். மேலும் அல்லாஹ்வுடன் அல்லாஹ்வுக்கு நெருக்கமான மலக்கையோ அல்லது அவனால் அனுப்பப்பட்ட தூதரையோ எவரையும் வணங்கக்கூடாது.

அல்லாஹ்கூறுகிறான்: பிறகு நாம் உமக்கு இவ்வாறு வஹீ அனுப்பினோம்: நீர் இப்றாஹீமின் மார்க்கத்தை ஒரு மனப்பட்டவராய் பின்பற்றுவீராக! அவர் ஒருபோதும் இறைவனுக்கு இணைவைப்பவராய் இருந்ததில்லை.(16:123)

இப்றாஹீமின் வழிமுறையை யார் புறக்கணிப்பார்? தன்னைத் தானே எவன் மூடனாக்கிக் கொண்டானோ அவனைத் தவிர. இப்ராஹீமையோ திண்ணமாக நாம் இவ்வுலகில் (எமதுபணிக்காகத்) தேர்ந்தெடுத்துக் கொண்டோம். இன்னும் நிச்சயமாக மறு உலகிலும் அவர் நல்லடியார்களில் ஒருவராக இருப்பார். மேலும் அவருடைய இறைவன் (எனக்கு) "அடிபணிந்துவிடுவீராக" என்று அவரிடம் கூறியபோது "அகிலமனைத்தின் அதிபதிக்கு நான் அடிபணிந்துவிட்டேன்" என்று அவர் (பதில்) கூறினார். இதே வழிமுறையில் செல்லும்படித் தம் மக்களுக்கும் இப்றாஹீம் அறிவுறுத்தியிருந்தார். மேலும் இதனையே பின்பற்றி வாழும்படி யஃகூபும் தம்மக்களுக்கு அறிவுறுத்திச் சென்றார். அவர் கூறினார்: எனது மக்களே! அல்லாஹ் உங்களுக்காக இந்த தீனையே தேர்ந்தெடுத்துள்ளான். எனவே நீங்கள் முஸ்லிம்களாகவேயன்றி இறந்துவிடாதீர்கள்.(2:130-132)

(4)வணக்கம் என்பதற்குப் பொதுவான கருத்து என்ன வெனில் அல்லாஹ்வை நேசித்தவாறும் கண்ணியப்படுத்திய வாறும் அவனுக்குப் பணிவதாகும். இது- அவனுடைய மார்க்கம் காட்டிய முறையில்- அவனுடைய ஏவல்களை எடுத்து நடந்து அவனுடைய விலக்கல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகும்.

வணக்கம் என்பதற்குத் தனிப்பட்ட கருத்து என்னவெனில்- அதாவது அதை விவரித்துச் சொல்வதாக இருந்தால்- இப்னுத் தைமிய்யா(ரஹ்)அவர்கள் கூறியுள்ளார்கள்: வணக்கம் என்பது அல்லாஹ் விரும்புகின்ற பொருந்திக்கொள்கின்ற வெளிப்படையான, அந்தரங்கமான அனைத்து சொல், செயல்களுக்கும் சொல்லப்படும். உதாரணமாக அச்சம், பயம், தவக்குல்- நம்பிக்கை, தொழுகை, ஜகாத், நோன்பு போன்றனவாகும்.

---

**இவ்வாறே[1] அல்லாஹ் எல்லா மனிதர்களுக்கும் கட்டளையிட்டுள்ளான். அவர்களைப் படைத்திருப்பதும் இந்த நோக்கத்திற்காகத்தான். அல்லாஹ் கூறுகிறான் - ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்.*(51:56)* என்னை வணங்குவதற்காக என்பதன் கருத்து என்னை மட்டுமே வணங்குவதற்காக என்பதாகும்.[2]**

---

**(1)**அதாவது இந்த ஹனீஃபிய்யா வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்றே அல்லாஹ் எல்லா மனிதர்களுக்கும் கட்டளையிட்டுள்ளான். இந்த நோக்கத்திற்காகத்தான் அவன் மனிதர்களைப் படைத்துள்ளான். ஹனீஃபிய்யா வழி என்றால் வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கி அவனை மட்டுமே வணங்குவதாகும். அல்லாஹ் கூறுகிறான்:

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கி முற்றிலும் ஒரு மனப்பட்டவர்களாய் அல்லாஹ்வையே வணங்கவேண்டும் என்றே அவர்கள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள்.(98:5)

(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எந்தத்தூதரிடத்திலும், "நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் என்னைத் தவிர வேறு யாருமில்லை.எனவே என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹியின் மூலம் அறிவிக்காமலில்லை.(21:25)

மேலும் அல்லாஹ் தனதுவேதத்தில் மனிதர்கள் இந்த நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளனர் எனவும் விளக்கியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:56)

***(2)*வணக்கம் இரு வகைப்படும்*:***

**1.**இயல்பான வணக்கம்: இது அல்லாஹ்வின் இவ்வுலகியல் நியதிக்குப்பணிவதாகும். இவ்வகை வணக்கம் எல்லாப்

படைப்பினங்களுக்கும் பொதுவானது. எவரும் இவ்வகை வணக்கத்தை விட்டும் வெளியேற முடியாது.

அல்லாஹ் கூறுகிறான்: வானங்களிலும், பூமியிலுமுள்ள அனைவரும் அடிமைகளாய் கருணைமிக்க இறைவனின் திருமுன் வரத்தான் போகின்றனர்.(19:93) இதில் முஃமின்,காஃபிர், நல்லவன், கெட்டவன் அனைவரும் அடங்குவர்.

**2.**மார்க்கரீதியான வணக்கம்: இது ஷரீஅத் சம்பந்தமான அல்லாஹ்வின் கட்டளைக்குப் பணிவதாகும். இந்த வணக்கம் குறிப்பாக எவர்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து, இறைத்தூதர்கள் கொண்டு வந்தமார்க்கத்தை பின்பற்றுகிறார்களோ அவர்களை மட்டுமே உள்ளடக்கும்.

அல்லாஹ் கூறுகிறான்: கருணைமிக்க இறைவனின்(உண்மையான) அடியார்கள் எத்தகையவர்களெனில் அவர்கள் பூமியில் பணிவோடு நடப்பவர்கள்.(25:63)

முதல்வகை வணக்கத்தின்படி எந்தமனிதனும் போற்றப் படுவதில்லை. காரணம் அதை அவன் விரும்பிச் செய்வதில்லை. இயல்பாகச் செய்கிறான். என்றாலும் சந்தோஷமாக இருக்கும்போது நன்றி செலுத்தி, துன்பத்தின் போது பொறுமையை மேற்கொள்ளும் போது சில சமயம் போற்றப்படுவான். ஆனால் இரண்டாம் வகை வணக்கம் அப்படியல்ல. அதில் மனிதன் போற்றப்படுவான்.

---

**அல்லாஹ் ஏவியவற்றில் மிக முக்கியமானது தவ்ஹீதாகும். அது வணக்கத்தில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதாகும்.**[1]

---

**(1)**தவ்ஹீத் என்பதற்கு அகராதியில் ஒருமைப்படுத்துதல் என்று பொருள். உடன்பாடு, எதிர்மறை எனும் இரு அம்சங்களின்றி இப்பொருள் நிரூபணமாகாது. இப்பொருள் நிகழமறுக்க வேண்டிய

விஷயங்களை மறுத்தாக வேண்டும். உறுதிப்படுத்த வேண்டிய விஷயங்களை உறுதிப்படுத்தியாக வேண்டும். உதாரணமாக ஒருவன் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை என்பதை உறுதியாக நம்பி, வணக்கத்திற்குரிய தகுதி எவனுக்கும் கிடையாது என மறுத்து, அத்தகுதி அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு என உறுதிப்படுத்தாத வரை தவ்ஹீத் அவனுக்குப் பரிபூரணமாகாது.

சொல்வழக்கில் தவ்ஹீத் என்பதற்கு ஆசிரியர் "வணக்கத்தில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல்" என இலக்கணம் கூறியுள்ளார். அதாவது அல்லாஹ்வை மட்டுமே வணங்குவதாகும். அவனுக்கு எவரையும் இணையாக்கக் கூடாது. இறைவனால் அனுப்பப்பட்ட தூதரையோ, இறைவனுக்கு நெருக்கமான மலக்கையோ அல்லது தலைவரையோ மன்னரையோ, படைப்பினங்களில் எவரையும் எதனையும் இணையாக்கக் கூடாது. மாறாக நேசம், கண்ணியம், அச்சம், ஆர்வம் முதலியவற்றுடன் வணக்கத்தை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்க வேண்டும்.

மூலாசிரியர்- ஷேக் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்)- அவர்கள், எந்த ஏகத்துவத்தை நிலை நாட்டுவதற்காக இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டார்களோ அந்த ஏகத்துவத்தையே இங்கே குறிப்பிடுகின்றார்கள். அந்த ஏகத்துவத்தில்தான் மக்கள் தவறிழைத்துக் கொண்டிருந்தார்கள்.
தவ்ஹீதுக்குப் பொதுவான ஒரு இலக்கணமும் உண்டு. அது, அல்லாஹ்வுக்கே உரித்தான விஷயங்களில் அவனை ஒருமைப்படுத்துவதாகும்.

**தவ்ஹீத் மூன்று வகைப்படும்.**

**1.**தவ்ஹீதுர் ருபூபிய்யா: படைத்தல், பரிபாலித்தல், ஆட்சி செய்தல், நிர்வகித்தல் ஆகியவற்றில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல். அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ் அனைத்துப் பொருளையும் படைத்தவனாவான். (39:62)

வானம் மற்றும் பூமியிலிருந்து உங்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கின்ற படைப்பாளன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இருக்கின்றாரா? வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை.(35:3)

யாருடையகையில் (இப்பேரண்டத்தின்) ஆட்சியதிகாரம் இருக்கிறதோ அவன் உயர்வுமிக்கவனாவான். மேலும் அவன் எல்லா பொருள்களின் மீதும் பேராற்றலுடையவனாவான். (67:1)

அறிந்து கொள்ளுங்கள்! படைப்பும் ஆட்சியும் அவனுக்கேயுரியது. அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ் அருள் வளமிக்கவனாவான்.(7:54)

**2.**தவ்ஹீதுல் உலூஹிய்யா: வணக்கத்தில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல். எவ்வாறெனில் மனிதன் அல்லாஹ்வுடன் அல்லாஹ்வை வணங்குவதைப்போல வணங்குவதற்கும் அவனிடம் நெருக்கத்தைப் பெறுவதைப் போல நெருக்கத்தைப் பெறுவதற்கும் எவரையும் ஏற்படுத்திக் கொள்ளாதிருத்தல்.

**3.**தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத்: அல்லாஹ்வின் திரு நாமங்களிலும் அவனது பண்புகளிலும் அவனை ஒருமைப் படுத்துவது. அதாவது அல்லாஹ் தனது வேதத்தில் அல்லது தனது தூதர் மூலமாக தனக்கு என்னென்ன திருநாமங்களை, பண்புகளைக் கொடுத்துள்ளானோ அவற்றை மாற்றாமல், மறுக்காமல், உருவகப்படுத்தாமல், ஒப்பாக்காமல் அப்படியே கொடுப்பது.

இங்கு மூலாசிரியர் குறிப்பிடுவது தவ்ஹீதுல் உலூஹிய்யா வைத்தான். ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் எந்த

இணைவைப்பவர்களுடன் ஜிஹாத் எனும் புனிதப் போர் செய்தார்களோ (அது குர்ஆன்,ஹதீஸ் கூறும் நெறிமுறைப்படி ஆனதாகும்) அந்த இணைவைப்பவர்கள் இதில் தான் வழிதவறிப்போனார்கள். இறைத்தூதர்கள் அனைவரும் தம் சமுதாயத்தவர்களுடன் அதிகம் போராடியது இவ்வகைத் தவ்ஹீதில் தான்.

அல்லாஹ் கூறுகிறான்: "அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனை விடுத்து மற்றவர்களை வணங்குவதிலிருந்து விலகியிருங்கள்" என்று(போதிக்குமாறு)திண்ணமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பினோம்.(16:36)

வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வைத் தவிர வேறுயாருக்கும் செய்யக்கூடாது என்ற இந்தத்தவ்ஹீதில் யாரேனும் தவறிழைத்து விட்டால் அவன் இணைவைத்தவனாக, காஃபிராக ஆகிவிடுவான். தவ்ஹீதுர்ருபூபிய்யாவையும்,தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத்தையும் அவன் ஏற்றுக்கொண்டாலும் சரியே.

உதாரணமாக ஒருவன் தவ்ஹீதுர் ருபூபிய்யாவையும், தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத்தையும் முழுமையாக நம்பியிருக்கிறான். ஆனால் கப்ருக்குச் சென்று, அங்கு அடக்கம் செய்யப்பட்டவரை வணங்குகிறான் அல்லது அவரின் நெருக்கத்தைப் பெறுவதற்காக அவருக்கு நேர்ச்சை செய்கிறான் எனில் அவன் காஃபிராக, இணைவைத்தவனாக, நிரந்தர நரகத்திற்குரியவனாக ஆகிவிடுகின்றான்.

அல்லாஹ் கூறுகிறான்: எவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கின்றானோ அவனுக்குத் திண்ணமாக அல்லாஹ் சுவனத்தைத்தடை செய்திருக்கின்றான். மேலும் அவனுடைய இருப்பிடம் நரகமாகும். இத்தகைய அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர்யாருமில்லை. (5:72)

அல்லாஹ் ஏவியவற்றில் தவ்ஹீத் மிக முக்கியமானதாக இருப்பதற்குக்காரணம், அதுதான் அடிப்படையாகும். அந்த அடிப்படையின் மீது தான் இறைமார்க்கம் அமையப்பெற்றிருக்கிறது. இதனால் தான் நபி(ஸல்)அவர்கள் தமது அழைப்புப் பணியை முதன் முதலில் தவ்ஹீதைக் கொண்டு ஆரம்பித்தார்கள். மட்டுமல்ல அழைப்புப் பணிக்காக தாம் யாரை அனுப்பி வைத்தாலும் முதலில் தவ்ஹீதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்றே அவருக்கு ஏவுவார்கள்.

---

**அல்லாஹ் விலக்கியவற்றில் மிகப் பெரியது ஷிர்க்-இணைவைத்தலாகும்.[1] அது அல்லாஹ்வுடன் மற்றவரை அழைப்பதாகும். ஆதாரம் - அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள்** (4:36)

---

**(1)**அல்லாஹ் விலக்கியவற்றில் மிகப்பெரியது இணை வைத்தலாகும். இது ஏனென்றால் கடமைகளில் மிக முக்கிய மானது அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமையாகும். மனிதன் இதில் தவறிழைத்துவிட்டால் மிக முக்கியமான கடமையில் அதாவது அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குகின்ற ஏகத்துவத்தில் தவறிழைத்தவனாவான்.

அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக இணைவத்தல் மிகப்பெரும் அநீதியாகும். (31:13)

அல்லாஹ்வுக்கு இணைவைப்பவர்கள் திண்ணமாகப் பெரும் பொய்யைப் புனைந்தவராவர். (4:48)

எவன் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றானோ அவன் வழிகேட்டில் வெகுதூரம் சென்றுவிட்டான்(4:116)

எவன் அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கிறானோ அவனுக்குத் திண்ணமாக அல்லாஹ் சுவர்க்கத்தை தடை செய்திருக்கின்றான்.

மேலும் அவனுடைய இருப்பிடம் நரகமாகும். இத்தகைய அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் யாருமில்லை. (5:72)

நிச்சயமாக அல்லாஹ் தனுக்கு இணைவைப்பதை மன்னிக்க மாட்டான். இது அல்லாத(பாவத்)தைத் தான் நாடுகின்றவர்களுக்கு அவன் மன்னித்துவிடுவான்.(4:116)

இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்விடத்தில் மிகப்பெரும் பாவம் எது? என்று நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள்,அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க அவனுக்கு நீ இணைவைப்பதாகும் எனக்கூறினார்கள். (புகாரி,முஸ்லிம்)

நபி(ஸல்)அவர்கள் கூறியதாக ஜாபிர்(ரலி)அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் யார் அல்லாஹ்வை சந்தித்தாரோ அவர் சொர்க்கம்புகுவார். அல்லாஹ்வுக்கு இணைவைத்தவராக யார் அல்லாஹ்வை சந்தித்தாரோ அவர் நரகம் புகுவார்.(முஸ்லிம்)

அல்லாஹ்வைவிடுத்து அவனுக்கு இணையாக ஒருவரை அழைத்துக் கொண்டிருந்த நிலையில் யாரேனும் மரணமடைந்தால் அவன் நரகத்திற்குச் செல்வான் என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி),(புகாரி)

அல்லாஹ், இறைவணக்கத்தை ஏவி, இணைவைத்த லைத் தடுத்திருப்பதற்கு மூலாசிரியர், "அல்லாஹ்வை வணங் குங்கள், அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள்"(4:36) என்ற வசனத்தை ஆதாரமாகக் காட்டியிருக்கின்றார்கள். இதில் அல்லாஹ் தன்னை வணங்கவேண்டுமென்று ஏவியிருக்கின்றான். தனக்கு இணைவைப்பதைத் தடுத்திருக்கின்றான். இதில் வணக்கத்தை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்க வேண்டும் என்ற கருத்தும் அடங்கியுள்ளது. எனவே எவன் அல்லாஹ்வை

வணங்கவில்லையோ அவன் ஆணவங்கொண்ட காஃபிராவான். எவன் அல்லாஹ்வையும் அல்லாஹ்வுடன் மற்றவரையும் வணங்குகின்றானோ அவன் காஃபிரும், முஷ்ரிகும் (இணைவைப்பவன்) ஆவான். எவன் அல்லாஹவைமட்டும் வணங்குகிறானோ அவன் தூய முஸ்லிமாவான்.

**ஷிர்க் இரு வகைப்படும்.**

பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க்.
பொதுவாக ஷரீஅத் எவற்றை ஷிர்க் என்று கூறியுள்ளதோ அவையனைத்தும் பெரியஷிர்க்காகும். அது ஒருவனை அவனுடைய மார்க்கத்தை விட்டும் வெளியேற்றி விடும்.

சிறிய ஷிர்க் என்றால் ஷரீஅத் ஷிர்க் என்று கூறியுள்ள சொல், செயல் அனைத்துக்கும் சொல்லப்படும். எனினும் அவனை மார்க்கத்தை விட்டும் வெளியேற்றி விடாது.

ஒரு மனிதன் சிறிய, பெரிய ஷிர்க் ஆகிய இரண்டை விட்டும் விலகியிருப்பது அவசியமாகும். அல்லாஹ் கூறியுள்ளான்:
நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்க மாட்டான்.(4:48)

---

**ஒரு மனிதன் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய மூன்று அடிப்படை விஷயங்கள்[1] யாவை?[2] என உன்னிடம் கேட்கப்பட்டால் நீ கூறு - ஒரு அடியான் தனது இறைவனையும்[3] தனது மார்க்கத்தையும்[4] தனது நபி முஹம்மது(ஸல்) அவர்களையும்[5] அறிவதாகும்.**

---

**(1)**மூன்று அடிப்படை விஷயங்கள் என்பதன் மூலம் மூலாசிரியர் சுட்டிக்காட்டுவது, மண்ணறையில் மனிதனிடம் விசாரிக்கப்படக்கூடிய அடிப்படை விஷயங்களே. அதாவது உன்னுடைய இறைவன் யார்? உன்னுடைய மார்க்கம் எது? உன்னுடைய நபி யார்? ஆகிய விஷயங்களே.

**(2)**இவ்விஷயத்தை ஆசிரியர் கேள்வி, பதில் அமைப்பில் கொண்டு வந்திருப்பதன் நோக்கம், மனிதன் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஏனெனில் இது மிகப்பெரும் அடிப்படை விஷயமாகும். இவைதான் மனிதன் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய மூன்று அடிப்படை விஷயங்களாகும் என ஆசிரியர் கூறியிருப்பதன் காரணம், மண்ணறையில் மனிதனிடம் விசாரிக்கப்படக்கூடிய அடிப்படை விஷயங்கள் இவைதான்.

ஆம்!மனிதன் மண்ணரையில் அடக்கம் செய்யப்பட்டு உறவினர்கள் திரும்பிச் சென்றபிறகு அவனிடம் இரு வானவர்கள் வருவார்கள். அவர்கள் அவனை உட்கார வைத்து, உன்னுடைய இறைவன் யார்? உன்னுடைய மார்க்கம் எது? உன்னுடைய நபி யார்? என விசாரிப்பார்கள். அப்போது, அவன் முஃமினாக இருந்தால் என்னுடைய இறைவன் அல்லாஹ், என்னுடைய மார்க்கம் இஸ்லாம், என்னுடைய நபி முஹம்மத் எனக்கூறுவான். ஆனால் அவன் சந்தேகத்தில் உழன்றவனாக (காபிராக) அல்லது நயவஞ்சகனாக இருந்தால் ஐயகோ! நான் அறியேன்! மனிதர்கள் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டு நானும் சொன்னே எனக் கூறுவான்.

**(3)**முதல் அடிப்படை விஷயம் இறைவனை அறிவது. இறைவனை அறிவதற்கு பல வழிகள் உள்ளன:

அவனுடைய படைப்பினங்களை சிந்தித்துப் பார்த்தல்: ஏனெனில் இது இறைவனையும் அவனுடைய மகத்தான ஆட்சி, பரிபூரணமான ஆற்றல், அவனுடைய நுட்பம், விவேகம் மற்றும் அவனுடைய பேரருள் ஆகிய அனைத்தையும் அறிய உதவுகிறது. அல்லாஹ் கூறுகிறான்:
வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சிமைப்பையும் மேலும் அல்லாஹ் படைத்திருக்கும் எந்தப்பொருளையும் இவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா?(7:185)

நான் உங்களுக்கு அறிவுறுத்துவது ஒரே ஒரு விஷயத்தைத்தான் நீங்கள் அல்லாஹ்வுக்காக தனித்தனியாகவோ இருவரிருவராகவோ சேர்ந்து ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள் என்று (நபியே!) நீர்கூறும்.(34:46)

நிச்சயமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவு, பகல் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்கு பல சான்றுகள் உள்ளன. (3:190)

நிச்சயமாக இரவு, பகல் மாறி மாறி வருவதிலும். வானங்கள் மற்றும் பூமியில் அல்லாஹ் படைத்திருப்பவற்றிலும் (இறைவனைப் பற்றிய) அச்சமுள்ள மக்களுக்கு பல சான்றுகள் உள்ளன.(10:6)

திண்ணமாக வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றைப் படைத்திருப்பதிலும், இரவு, பகல் மாறி மாறி வருவதிலும், மக்களுக்குப் பயன் தருபவற்றைச் சுமந்துகொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும், வானத்திலிருந்து அல்லாஹ் தண் ணீரை இறக்கி, அதன் மூலம் பூமியை- அது இறந்துபோன பின்னர் கூட உயிர்ப்பித்து, மேலும் அதில் எல்லாவிதமான உயிரினங்களையும் பரவச்செய்திருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்திருப்பதிலும், வானத்திற்கும், பூமிக்கு மிடையே கட்டுப்படுத்தப்பட்ட மேகங்களிலும் சிந்திக்கும் மக்களுக்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.(2:164)

மனிதன் தன் இறைவனை அறியும் வழிகளில் ஒன்றுதான் அவனுடைய ஷரிஅத் ரீதியிலான சான்றுகளை சிந்திப்பதும். அவைதான் இறைத்தூதர்கள் கொண்டுவந்த வஹி எனும் வேத வசனங்கள். எனவே மனிதன் இந்த வசனங்களையும் அவற்றில் அடங்கியுள்ள மகத்தான நலன்களையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வுலகிலும் சரி மறுவுலகிலும் சரி அந்நலன்களின்றி

மனிதர்களின் வாழ்க்கை சீராக நிலைத்திருக்க முடியாது. அந்த அளவு மகத்தான நலன்கள் அவை.

ஆம்! இவ்வேத வசனங்களில் அவன் சிந்தனை செலுத்தினால் இவ்வேத வசனங்களையும் அவற்றிலுள்ள ஞானத்தையும் நுட்பத்தையும் சிந்தித்துப் பார்க்கும்போது அவை எத்தகையை ஒழுங்கமைப்போடு அமைந்திருக்கின்றன, மனிதர்களின் நலன்களுக்கு அவை எந்த வகையில் ஏற்றவையாக இருக்கின்றன என்பதைக் காணும்போது அதன் மூலம் தன் இறைவனை அவன் அறிந்து கொள்ள முடியும்.

அல்லாஹ் கூறுகிறான்: திருக்குர்ஆனை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? (இது) அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருக்குமானால் ஏராளமான முரண்பாடுகளை இதில் கண்டிருப்பார்கள்.(4:82)

மனிதன் தன் இறைவனை அறியும் வழிகளில் இதுவும் ஒன்றாகும்: இறைவனைப் பற்றிய ஞானத்தை ஒரு முஃமினுடைய உள்ளத்தில் அல்லாஹ் உதிக்கச் செய்வது.அதனால் அவன் தன் இறைவனை நேரடியாகப் பார்ப்பது போன்று ஆகிவிடுவான். ஜிப்ரீல்(ரலி)அவர்கள் நபி(ஸல்)அவர்களிடம் இஹ்ஸான் என்றால் என்ன? எனக் கேட்டபோது நபி(ஸல்)அவர்கள், இஹ்ஸான் என்பது நீ அல்லாஹ்வைப் பார்ப்பதுபோல வணங்குவதாகும். நீ அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்க்கின்றான் எனக் கூறினார்கள்.

(4)இரண்டாவது அடிப்படை விஷயம் மார்க்கத்தை அறிவது. அதாவது அடியான் எந்த மார்க்கத்தின்படி செயல்பட வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளானோ அந்த மார்க்த்தையும் அதில் அடங்கியுள்ள நுட்பங்கள்,அருட்பேறுகள்,மக்கள் நலன்கள் ஆகியவற்றையும் அறிவதாகும். இஸ்லாமிய மார்க்கத்தை எவன் ஆய்வு செய்யவேண்டிய முறைப்படி-குர்ஆன்,ஹதீஸ்

அடிப்படையில் ஆய்வு செய்தால் அதுதான் உண்மையான மார்க்கம் என்பதையும், அந்த மார்க்கத்தின் மூலம் தான் மக்கள் நலன்கள் சீராக நிலைத்திருக்க முடியாது என்பதையும் அறிந்து கொள்வான்.

ஆனால் இன்றைய முஸ்லிம்களின் நிலையை வைத்து இஸ்லாத்தை நாம் எடைபோடக் கூடாது. ஏனெனில் முஸ்லிம்கள் அநேக விஷயங்களில் தவறிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். விலக்கப்பட்ட பெரும் பெரும் காரியங்களைச்செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கு எனில் ஒரு சில இஸ்லாமிய நாடுகளில் இத்தகைய முஸ்லிம்களுக்கு மத்தியில் வாழ்பவன் இஸ்லாமல்லாத சூழலில் வாழ்பவனைப் போல உணர்கின்றான்.

அல்லாஹ்வின் அருளால் இஸ்லாமிய மார்க்கம் முந்தைய மார்க்கங்களில் உள்ள அனைத்து நலன்களையும் உள்ளடக்கி, எல்லா காலத்திற்கும், எல்லா இடத்திற்கும், எல்லா சமுதாயத்திற்கும் பொருத்தமானதாக இருப்பதன் மூலம் ஏனைய மார்க்கங்களிலிருந்து தனிச்சிறப்பு பெற்று விளங்குகின்றது. இஸ்லாமிய மார்க்கம் அனைத்து நற்செயல்களையும் நற்குணங்களையும் ஏவுகின்றது. தீயசெயல்கள், தீயகுணங்கள் அனைத்தையும் தடுக்கின்றது.

(5)மூன்றாவது அடிப்படை விஷயம் மனிதன் தன்னுடைய நபி முஹம்மது(ஸல்) அவர்களை அறிவது. நபி(ஸல்) அவர்களுடைய வாழ்க்கை, வணக்க வழிபாடு, நற்குணங்கள், அல்லாஹ்வின் பால் மக்களை அழைத்தது, அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிந்தது இன்னும் அவர்களது வாழ்க்கையின் பல்வேறு துறைகளையும் படிப்பதன் மூலம் இவ்வறிவு அவனுக்குக் கிடைக்கிறது.

ஆகையால் நபி(ஸல்)அவர்களைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவும், அவர்களைப் பற்றிய ஈமானை-நம்பிக்கையை அதிகப்படுத்திக் கொள்ளவும் விரும்புகிறவர் அவர்களுடைய ஸீராவை (வாழ்க்கை வரலாறு)இயன்ற அளவு படிப்பது அவசியமாகும். அவர்கள் சந்தித்த போர்க்களங்கள், அவர்கள் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைகள், அவர்களின் செல்வச்செழிப்பு, பிறகு அவர்களுக்கு ஏற்பட்ட வறுமை, துன்பங்கள்...என அவர்களின் அனைத்து நிலைமைகளையும் இயன்றவரை தெரிந்து கொள்வது அவசியமாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவரையும் அகமும் புறமும் அவனது தூதரைப் பின்பற்றக்கூடிவர்களாக ஆக்கியருள்வானாக. அவ்வாறே நம்மை மரணிக்கச் செய்வானாக. திண்ணமாக அல்லாஹ் அதற்குப் பொறுப்புள்ளவனாகவும் ஆற்றல் உள்ளவனாகவும் இருக்கின்றான்.

---

**உன்னுடைய இறைவன் யார்?[1] என உன்னிடம் கேட்கப்பட்டால் நீ கூறு - என்னுடைய இறைவன் அல்லாஹ். அவன்தான் என்னையும் அகிலஉலகையும் படைத்து. தனது அருட்கொடைகளால் பரிபாலித்து வருபவன்.[2] நான் வணங்குவதும் அவனைத்தான்.[3] அவனையன்றி வணக்கத்திற்குரிய இறைவன் எனக்கு வேறுயாருமில்லை. ஆதாரம் - அகில உலகத்தையும் படைத்துப் பரிபாலிக்கக் கூடிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.[4] *(1:1)* அல்லாஹ்வைத் தவிர அனைத்தும் அகில உலகம் ஆகும்.[5] அதில் நானும் ஒருவனாகும்.**

---

**(1)**அதாவது உன்மைப் படைத்து, உனக்கு உதவி செய்து, தேவையானவற்றை உனக்குத் தயார்படுத்தி, உனக்கு உணவளித்து வரும் நாயன் யார்?

**(2)**பரிபாலித்தல் என்பது படைப்பினங்களுக்குத் தேவையான அனைத்தையும் தந்து பராமரித்தலாகும். அகிலத்தார் அனைவருக்கும் வாழ்வாதாரம் தந்து உதவிசெய்து, அவர்கள் படைக்கப்பட்டதன் நோக்கத்திற்காக அவர்களைத் தயார்படுத்தி,

தனது அருட்கொடைகளால் பரிபாலித்து வருகிறான். மூஸா (அலை) அவர்களுக்கும் ஃபிர்அவ்னுக்கும் இடையே நடந்த உரையாடலைப் பற்றி அல்லாஹ் கூகிறான்:

ஃபிர்அவ்ன் கேட்டான்: மூஸாவே! உங்கள் இருவரின் இறைவன் யார்? அதற்கு மூஸா கூறினார்: ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய படைப்பமைப்பைக் கொடுத்து பின்னர் அதற்கு வழிகாட்டியவன் யாரோ அவன்தான் எங்கள் இறைவன். (20:49-50) எனவே அகிலத்தில் உள்ள ஒவ்வொருவரையும் அல்லாஹ்வே தனது அருட்பாக்கியங்களால் பரிபாலிக்கிறான்.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கிய அருட்கொடைகள் ஏராளம் உள்ளன. அவற்றைக்கணக்கிட முடியாது. அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் எண்ணிடமுயன்றால் அவற்றை உங்களால் எண்ணமுடியாது. (14:34)

ஆக அல்லாஹ் தான் உன்னைப் படைத்து உனக்கு வேண்டியவற்றை சித்தப்படுத்தி, உனக்கு உதவி செய்தும் உணவளித்தும் வருகிறான். எனவே அவன் மட்டுமே வணக்கத்திற்குத் தகுதியானவன்.

(3)அதாவது பணிவு, நேசம், கண்ணியம் ஆகிவற்றுடன் அவனுக்குப் பணிந்து அவனையே நான் வணங்குகிறேன். மேலும் அவன் ஏவியவற்றைச் செய்கிறேன். அவன் விலக்கியவற்றைத் தவிர்க்கிறேன். நான் வணங்குவதற்குத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை.

அல்லாஹ் கூறுகிறான்: உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எந்தத் தூதரிடத்திலும் நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் என்னைத் தவிர வேறுயாருமில்லை. எனவே என்னையே நீங்கள்

வணங்கவேண்டும் என்றே வஹியின் மூலம் நாம் அறிவித்திருந்தோம். (21:25)

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவர்களாக முற்றிலும் ஒரு மனப்பட்டவர்களாய் அல்லாஹ்வையே அவர்கள் வணங்கவேண்டும். மேலும் தொழுகையை நிலைநாட்ட வேண்டும், ஜகாத்தும் கொடுக்க வேண்டும் என்றே அவர்கள் ஏவப்பட்டுள்ளனர். இதுதான் மிகவும் சரியான, நேரியமார்க்கமாகும்.(99:5)

(4)"எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே"- அதாவது புகழ்மாத்திரமல்ல கண்ணியம் மகத்துவம் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானது. "அகில உலகையும் படைத்துப் பரிபாலிப்பவன்"- அதாவது தனது அருட்கொடைகள் மூலம் பரிபாலிப்பவன், அவர்களை தான் விரும்புவதுபோல் ஆட்சி செய்பவன், நிர்வகிப்பவன்.

(5)மூலத்தில் "அகில உலகம்" என்பதற்கு "ஆலம்" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஆலம்" என்றால் அடையாளம், சான்று என்று பொருள். அகில உலகமனைத்தும் அதனைப் படைத்து,ஆட்சி செய்யக்கூடிய,நிர்வகிக்கக் கூடியவனுக்கு சான்றாக, அடையாளமாக இருப்பதால் அதற்கு ஆலம் எனப்பெயர் வந்தது. ஆம்! அகிலத்திலுள்ள ஒவ்வொரு பொருளிலும் அல்லாஹ் ஒருவன் என்பதற்கு சான்று உள்ளது.

---

**உனது இறைவனை எப்படி அறிந்து கொண்டாய்? என் உம்மிடம் கேட்கப்பட்டால் நீர் கூறும் - அவனுடைய சான்றுகள்[1] அவனது படைப்பினங்கள் ஆகியவற்றின் மூலம் அறிந்து கொண்டேன். இரவும்,பகலும்,சூரியனும்,சந்திரனும் அவனுடைய சான்றுகளிலுள்ளவையாகும். ஏழு வானங்களும்,ஏழு பூமிகளும் இன்னும் அவற்றிலுள்ளவைகளும், அவ்விரண்டிற்கிடையே உள்ளவைகளும் அவனது படைப்பினங்களிலுள்ளவையாகும்.[2]**

---

**(1)**அல்லாஹ்வின் சான்றுகள் என்பது உலகியல் சான்று, இறைமார்க்கத்தின் சான்று என இரு வகைப்படும். உலகியல் சான்று என்பது அவனது படைப்பினங்களாகும். இறைமார்க்கத்தின் சான்று என்பது அல்லாஹ் தனது தூதருக்கு அருளிய வஹீ எனும் இறைச்செய்தியாகும்.

அல்லாஹ்வை உலகியல் சான்றான பிரமாண்டமான படைப்பினங்கள், அவற்றின் புதுமையான அமைப்பு, நுட்பம் ஆகியவற்றின் மூலம் அறியலாம். இவ்வாறே இறைமார்க்கத்தின் சான்றுகள் மூலமும் அவற்றிலுள்ள நீதி,நேர்மை,மக்கள் நலன்கள் ஆகியவற்றின் மூலமும் அவனை அறியலாம்.

**ஒவ்வொரு பொருளிலும் அவனுக்குண்டு**
**அவன் ஏகன் என்பதற்குச் சான்று**

**(2)**அல்லாஹ்வின் இச்சான்றுகள் அனைத்தும் அவனுடைய பரிபூரணமான ஆற்றல், நுட்பம், அருட்பேறு ஆகியவற்றை அறிவிக்கக்கூடியவையாக உள்ளன. சூரியன் அல்லாஹ்வின் சான்றுகளில் ஒன்றாகும். ஏனெனில் அல்லாஹ் அதைப்படைத்த நாளிலிருந்து வியக்கத்தக்க ஒழுங்குடன் சுற்றிக் கொண்டிருக்கிறது. உலம் அழிவதற்கு அல்லாஹ் அனுமதி வழங்கும் வரை இவ்வாறே அது சுற்றிக்கொண்டிருக்கும். அல்லாஹ் கூறுவதுபோல அது தனக்குரிய இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. "சூரியன் தனக்குரிய இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இது பேரறிவு படைத்தவனும் வல்லமை மிக்கவனுமான இறைவனின் நிர்ணயமாகும்." (36:38)

அளவு மற்றும் பயன்களைப் பொருத்து சூரியன் அல்லாஹ்வின் சான்றுகளில் ஒன்றாகும். அதன் அளவோ மிகப்பெரியதும் பிரமாண்டமானதுமாகும். அதன் பயன்களோ உயிரினங்கள், மரங்கள், கடல்கள், ஆறுகள்... என அனைத்திற்கும் அதனால் கிடைக்கக்கூடிய அநேக பயன்களைக் குறிக்கும். இம்மகத்தான

சான்றான சூரியன் நாம் நோக்கினால் நமக்கும் அதற்கும் இடையில் எத்துணை தூரம் இருக்கிறது என்பது தெரியவரும். அவ்வாறிருந்தும் இவ்வளவு கடுமையான அதன் வெப்பத்தை நாம் உணர முடிகின்றது.

மேலும் அதிலிருந்து பெறப்படக்கூடிய மிகப் பிரகாசமான ஒளியை சிந்தித்துப் பார். அதனால் மக்களுக்கு ஏராளமான பொருளாதார மிச்சம் ஏற்படுகின்றது. ஆம்! பகல் நேரங்களில் அவர்களுக்கு எந்த விளக்கும் தேவைப்படாதே. அப்படியானால் சூரியனால் மக்களுக்கு மிகப் பெரும்பொருளாதார மிச்சம் தானே ஏற்படுகின்றது! சூரியனின் எத்தனையோ அற்புதங்களில் இது ஒன்றுதான். அவற்றிலிருந்து நாம் அறிந்து கொள்வது சிறிதளவே!இவ்வாறே சந்திரனும் அல்லாஹ்வின் சான்றுகளில் ஒன்றாகும். அதற்கு அல்லாஹ் பல்வேறு நிலைகளை ஏற்படுத்தியுள்ளான். ஒவ்வொரு இரவிலும் ஒரு நிலையை அமைத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: மேலும் சந்திரன் (இன்னொரு சான்றாகும்.) அதற்கு நாம் பல்வேறு நிலைகளை ஏற்படுத்தியுள்ளோம். எதுவரை எனில் அது (அவற்றையெல்லாம் கடந்து)உலர்ந்து வளைந்துபோன பேரீச்சங்காம்பு போல் மீண்டும் ஆகிவிடுகிறது.(36:39)

சந்திரன் ஆரம்பத்தில் மிகச்சிறியதாகத் தோன்றி பின்னர் கொஞ்சம், கொஞ்சமாக பெரியதாகிறது. இறுதியில் முழுமை பெற்று பின்னர் மீண்டும் தேய ஆரம்பிக்கின்றது. இந்த அடிப்படையில் இது மனிதனுக்கு ஒப்பாகின்றது. மனிதன் ஆரம்பத்தில் பலவீனமாகவே படைக்கப்படுகின்றான். பின்னர் அவனுடைய பலம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து இறுதியில் மீண்டும் பலவீன நிலைக்கே திரும்புகிறான். படைப்பாளர்களில் எல்லாம் மிக அழகான படைப்பாளனான அல்லாஹ் பெரும் அருட்பேறுகள் உடையவனாவான்.

---

ஆதாரம்[1] - அவனுடைய சான்றுகளில் இரவும் பகலும் சூரியனும் சந்திரனும் உள்ளவையாகும். சூரியனுக்கும் சந்திரனுக்கும் சிரம்பணியாதீர்கள். மாறாக அவற்றைப் படைத்த இறைவனுக்கே சிரம்பணியுங்கள் - நீங்கள் உண்மையில் அவனையே வணங்குபவர்களாக இருந்தால்!*(41:37)* மேலும் அல்லாஹ் கூறுகிறான்[2].

திண்ணமாக அல்லாஹ்தான் உங்கள் இறைவன் அவன் எத்தகையவன் எனில் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். பின்னர் அர்ஷில் அமர்ந்தான். அவன் இரவைக் கொண்டு பகலை மூடுகின்றான். இரவுக்குப் பின்னால் பகல் விரைந்து வருகின்றது. அவனே சூரியன்,சந்திரன்,நட்சத்திரங்கள் ஆகியவற்றையும் படைத்தான். அவையனைத்தும் அவனுயைட கட்டளைக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன. அறிந்து கொள்ளுங்கள்! படைக்கும் ஆற்றலும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்குரியவையே! அனைத்துலகங்களுக்கும் அதிபதியாகிய அல்லாஹ் அருள் வளமிக்கவனாவான்.*(7:54)*

---

**(1)**அதாவது இரவு, பகல், சூரியன், சந்திரன் அனைத்தும் அல்லாஹ்வின் சான்றுகளில் உள்ளவையாகும் என்பதற்கு ஆதாரம் அல்குர்ஆனின் 41:37 என்ற வசனமாகும். அதாவது அல்லாஹ்வின் மீது அறிவிக்கக்கூடிய தெளிவான சான்றுகளில் இரவும் பகலும்,அவை மாறி மாறி வருவதும் மேலும் அவற்றில் அல்லாஹ் ஏற்படுத்திருக்கும் மக்கள் நலன்கள் மற்றும் அவர்களின் நிலை மாற்றங்கள் யாவும் அடங்கும்.

அதுபோல சூரியனும் சந்திரனும், அவற்றின் ஓட்டமும் ஒழுங்கும் அவற்றால் விளையும் மக்கள் நலன்களும் அவற்றால் தடுக்கப்படும் தீங்குகளும் ஆகிய அனைத்தும் அச்சான்றுகளில் அடங்கும்.

பிறகு அல்லாஹ் தனது அடியார்களை சூரியனுக்கோ சந்திரனுக்கோ சிரம்பணியக்கூடாதெனத் தடுத்துள்ளான். அவர்களின் உள்ளங்களில் அவ்விரண்டும் என்னதான் பெரும்

அந்தஸ்தை அடைந்திருந்தாலும் சரியே. ஏனெனில் அவ்விரண்டும் படைக்கப்பட்டவையாக இருப்பதால் வணக்கத்திற்குத் தகுதியுடையவையாக இல்லை. உண்மையில் வணக்கத்திற்குத் தகுதியுள்ளவன் அவற்றைப் படைத்த அல்லாஹ் மட்டுமே.

**(2)**அதாவது வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்தான் என்பதற்கான ஆதாரங்களில் 7:54 என்ற வசனமும் ஒன்றாகும். இவ்வசனத்தில் பல சான்றுகள் உள்ளன. அவை வருமாறு:

**1.**பிரமாண்டமான இப்படைப்புகளை அல்லாஹ் ஆறு நாட்களில் படைத்துள்ளான். அவன் நாடினால் அவற்றை ஒரு வினாடியில் படைத்திருக்க முடியும். எனினும் அவனது நுண்ணறிவின் தேட்டத்திற்கேற்ப காரணங்களை காரியங்களோடு ஒரு தொடர்பை ஏற்படுத்தியுள்ளான்.

**2.**அல்லாஹ் அர்ஷின் மீது அவனுக்கே உரியவிதத்தில் அமர்ந்துள்ளான். அதாவது அவனது கண்ணியத்திற்கும் மகத்துவத்திற்கும் ஏற்றவிதத்தில். இது அவனுடைய ஆட்சி அதிகாரத்தின் நிறைநிலைக்குச் சான்றாகும்.

**3.**இரவை பகலின் மீது போர்த்தியிருக்கிறான். அதாவது இரவைப் பகலுக்குத் திரையாக ஆக்கியுள்ளான். அது பகலின் வெளிச்சத்தின் மீது தொங்கவிடப்பட்ட ஆடையைப் போன்றிருக்கிறது. அது பகலை மூடியிருக்கிறது.

**4.**சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிவற்றை தனது கட்டளைக்கு கட்டுப்படக்கூடியவையாக ஆக்கியுள்ளான். அடியார்களின் நலனுக்கேற்ப அவற்றை தான் நாடியபடி ஏவுவான்.

**5.**படைக்கும் ஆற்றலும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் ஏனையவர்களை விடுத்து அவனுக்கே உரித்தானது எனும் வகையில் அவனுடைய ஆட்சி பொதுவானது. அதிகாரம் பரிபூரணமானது.

**6.**அவனுடைய பரிபாலனம் அகிலமனைத்துக்கும் பொதுவானது.

---

**ரப்பு[1]-(படைத்த இறைவன்) தான் வணக்கத்திற்குரியவன். ஆதாரம்[2] - மனிதர்களே![3] உங்கள் இறைவனை வணங்குங்கள். அவனே உங்களையும் உங்களுக்கு முன்னிரந்தோரையும் படைத்தான்.[4] (அவ்வாறு செய்வதானால் மட்டுமே) நீங்கள் இறையச்சமுடையோராய்த் திகழ முடியும்.[5] அவனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும்[6] வானத்தை முகடாகவும்[7] ஆக்கினான். மேலும் வானத்திலிருந்து மழைப் பொழியச் செய்து,[8] அதிலிருந்து உங்கள் உணவுக்காக[9] விளைபொருள்களை வெளிப்படுத்துகிறான்.(இவற்றையெல்லாம்) நீங்கள் அறிந்திருந்தும்[10]அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள். *(2:21-22)***

---

**(1)**ரப்பு என்றால் படைப்பவன், ஆட்சி செய்பவன், அனைத்து காரியங்களையும் நிர்வகிப்பவன் என்று பொருள். ரப்புதான் வணங்கப்படுபவன். அதாவது அவனே வணங்கப்படுவதற்குத் தகுதியானவன். ஆயினும் வணங்கப்படுபவர்கள் அனைவரும் ரப்பு என்று அர்த்தமில்லை. இதனடிப்படையில் அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படக்கூடிய கடவுள்கள் அனைத்தும், அவற்றை வணங்குபவர்கள் அவற்றை ரப்புகளாக எடுத்துக்கொண்டாலும் அவை ரப்புகளல்ல.

**(2)**அதாவது ரப்புதான் வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதற்கு ஆதாரம்.

**(3)**இங்கு மனிதர்களே என அழைத்திருப்பது ஆதமுடைய சந்ததிகளில் உள்ள அனைத்து மனிதர்களையும் குறிக்கும். அவர்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்கவேண்டும். அவனுக்கு

இணைகளை ஏற்படுத்தக் கூடாது என அல்லாஹ் அவர்களுக்கு கட்டளையிட்டுள்ளான். மேலும் அவன் வணக்கத்திற்குத் தகுதியானவன் என்பதற்குக் காரணம் அவனே படைப்பாளனாக- ஈடு இணை இல்லாதவனாக இருப்பதனால் ஆகும் என்பதையும் விளக்கியுள்ளான்.

**(4)**"அவனே உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்தான்"எனும் சொற்றொடர் இதற்கு முந்திய சொற்றொடருக்குக் காரணமாக அமைகின்றது. அதாவது,"உங்கள் இறைவனை வணங்குங்கள். காரணம் அவன்தான் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்தான். எனவே அவன் படைத்த இறைவனாக இருப்பதால் அவனை வணங்குவது உங்களுக்கு அவசியமாகிவிட்டது. ஆகையால் தான் நாம் கூறுகிறோம்: அல்லாஹ் படைத்துப் பரிபாலிப்பவன் என்பதை ஏற்றுக்கொள்கின்ற ஒவ்வொருவருக்கும் அவனை மட்டும் வணங்குவது அவசியமாகின்றது. இல்லையெனில் தனது நம்பிக்கைக்கு அவர் முரண்பட்டவராக ஆகிவிடுவார்.

**(5)**இறையச்சம் என்பது அல்லாஹ்வின் ஏவல்களை எடுத்து நடந்து அவனுடைய விலக்கல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலம் அவனுடைய தண்டனையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதாகும். அதாவது அவ்வாறு செய்வதனால் மட்டுமே அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

**(6)**மனிதன் தனது விரிப்பில் எவ்வித சிரமமுமின்றி தூங்குவதைப் போல பூமியில் நாம் எவ்வித சிரமமுமின்றி சுகம் அனுபவிப்பதற்காக அதை அல்லாஹ் விரிப்பாக ஆக்கியுள்ளான்.

**(7)**"மேலும் வானத்தை பாதுகாக்கப்பட்ட ஒரு கூரையாகவும் அமைத்தோம். ஆயினும் அவர்கள் பேரண்டத்திலுள்ள சான்றுகளைக் கவனிப்பதேயில்லை"(21:32) என்று அல்லாஹ்

கூறியிருப் பதைப்போல வானம் பூமியிலுள்ளவர்களுக்குப் பாதுகாப்பான கூரையாகும்.

**(8)**அதாவது மேலே உள்ள மேகத்திலிருந்து சுத்தமான தண்ணீரை இறக்கினான்- "அதில் குடிநீரும் இருக்கின்றது, மேலும் அதிலிருந்து உங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்கான புற்பூண்டுகளும் முளைக்கின்றன"(16:10)என அல்லாஹ் கூறுவதுபோல.

**(9)**"உங்களுக்கும் உங்கள் கால்நடைகளுக்கும் வாழ்வாதாரப் பொருட்களாய் ஆகும் பொருட்டு" என்று மற்றொரு வசனத்தில் கூறுகிறான்.(79:33)

**(10)**அதாவது"அவனுக்கு இணையேதுமில்லை. படைத்தல், உணவளித்தல், நிர்வகித்தல் யாவும் அவன்வசமே உள்ளன" என்பதை நீங்கள் அறிந்திருந்தும் வணக்கத்தில் அவனுக்கு இணையை துணையை ஏற்படுத்தாதீர்கள்.

**(11)**அதாவது உங்களையும், உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்து, பூமியை உங்களுக்கு விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் ஆக்கி மேலும் வானத்திலிருந்து மழையைப் பொழியச் செய்து அதன் மூலம் விளைபொருட்களை உங்களுக்கு உணவாக அமையும் பொருட்டு வெளிப்படுத்திய இத்தகைய அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள். மேலும் அல்லாஹ்வை வணங்குவது போல அவர்களை வணங்கவும் அல்லது அல்லாஹ்வை நேசிப்பதுபோல அவர்களை நேசிக்கவும் செய்யாதீர்கள். அவ்வாறு செய்வது அறிவுக்கும் மார்க்கத்திற்கும் பொருத்தமற்றதாகும்.

---

**இவற்றையெல்லாம் படைத்தவனே வணக்கத்திற்குத் தகுதியானவன் என இப்னு கஸீர்(ரஹ்) அவர்கள்[1] கூறியுள்ளார்கள். அல்லாஹ் ஏவிய வணக்கவகைகள்[2] *இஸ்லாம், ஈமான், இஹ்ஸான்,* போன்றவையாகும். பிரார்த்தனை *செய்தல்,***

**அஞ்சுதல், எதிர்ப்பு, நம்பிக்கை வைத்தல், ஆர்வம், பயம், பணிவு, பயபக்தி, முற்றாகத்திரும்பி விடுதல் மற்றும் அல்லாஹ் ஏவிய ஏனைய வணக்கங்கள் அனைத்தும் அவற்றில் உள்ளவைதான். அவையனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும்.**[3]

---

(1)டமாஸ்கஸில் கர்ஷி குடும்பத்தைச்சேர்ந்த இப்னு கஸீர்(ரஹ்) அவர்கள்களின் இயற்பெயர் இஸ்மாயீல். தந்தையின் பெயர் உமர். இமாதுத்தீன் என்ற சிறப்புப் பெயரும் அபுல்ஃபிதா என்ற பட்டப் பெயரும் அவர்களுக்கு உண்டு. பிரபலமான திருக்குர்ஆன் விரிவுரையாளரும் வரலாற்று ஆசிரியருமான இப்னுகஸீர் அவர்கள் ஷைகுல் இஸ்லாம் இப்னுதைமிய்யா(ரஹ்)அவர்களின் மாணவராவர். அவர்கள் ஹிஜ்ரி 774-ல் மரணமடைந்தார்கள்.

(2)ஆசிரியர் அவர்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்குவது நம் கடமை என்பதை விளக்கிக்கூறிய பிறகு வணக்கவழிபாடுகளில் சிலவற்றை இங்கு விளக்குகிறார். அவர் கூறுகிறார்: இஸ்லாம், ஈமான், போன்றவை வணக்கவகைகளாகும். இம்மூன்றும்தான் மார்க்கம்.

உமர்இப்னுல் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: ஒரு நாள் நாங்கள் நபி(ஸல்)அவர்களுடன் இருந்தபோது எங்களிடையே ஒரு மனிதர் தோன்றினார். அவர் தூயவெண்ணிற ஆடை அணிந்திருந்தார். தலைமுடி மிகவும் கருத்து இருந்தது. பயணத்தின் எந்த அறிகுறியும் அவரிடம் தென்படவில்லை. மேலும் நாங்கள் யாரும் அவரை அறிந்திருக்கவில்லை. அவர்நபி(ஸல்) அவர்களிடம் வந்து அமர்ந்தார். தமது இரு முட்டுக்கால்களையும் நபி(ஸல்) அவர்களுடைய முட்டுக் கால்களுடன் சேர்த்துவைத்து, தமது கைகளை தம் இரு தொடைகளின் மீது வைத்துக்கொண்டார். பிறகு "முஹம்மதே! இஸ்லாம் என்றால் என்ன? என எனக்கு அறிவித்துத் தாருங்கள்" என்றார்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள், "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாருமில்லை என்றும் முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார் என்றும் நீ சாட்சியம் கூறுவதும், தொழுகையை நிலை நாட்டுவதும், ஸகாத் கொடுப்பதும்,ரமழானில் நோன்பு நோற்பதும், மக்காவுக்குச் சென்றுவர சக்தியிருந்தால் ஹஜ் செய்வதும் ஆகும் எனக்கூறினார்கள். உடனே அவர் "நீர் உண்மையை உரைத்தீர்" என்றார். அவர் நபி(ஸல்) அவர்களிடம் கேள்வி கேட்பதும் (அவர்கள் பதில் சொன்னதும்)"உண்மையை உரைத்தீர்"என்று சொல்வதும் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பிறகு அவர் "ஈமான் என்றால் என்ன?என எனக்குச் சொல்லுங்கள்" என்றார். அதற்கு நபி(ஸல்)அவர்கள், "அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவன் தூதர்களையும், இறுதி நாளையும், விதியையும் - அதில் நல்லதையும் கெட்டதையும் நீ நம்புவதாகும்" எனக் கூறினார்கள். உடனே அவர் "உண்மையைக் கூறினீர்" என்றார்.

பிறகு"இஹ்ஸான் என்றால் என்ன? என எனக்குக் கூறுங்கள்" என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள்,"அல்லாஹ்வை நீ பார்ப்பதைப் போன்று வணங்குவதாகும். நீ அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்க்கிறான்" என்று கூறினார்கள். பிறகு அவர்"கியாமத் நாள் எப்போது? என்பதைக் கூறுவீராக" என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள்,"கேட்கப்படுபவர் கேட்பவரைவிட அதிகம் அறிந்தவரல்ல" எனக் கூறினார்கள். பிறகு அவர் "அதன் அடையாளங்கள் பற்றி கூறுவீராக என்றார். அதற்கு நபி(ஸல்)அவர்கள், ஒரு பெண் தனது எஜமானியைப் பெற்றெடுப்பாள். மேலும் செருப்பணியாத, நிர் வாணிகளான, ஏழைகளான, ஆடு மேய்ப்பவர்கள் உயரமான கட்டடங்களை எழுப்புவதைக் காணலாம்" என்றார்கள்.

அதன் பின்னர் அவர் சென்றுவிட்டார். சிறிது நேரம் நான் அங்கேயே இருந்தேன். பின்னர் நபி(ஸல்)அவர்கள்,"உமரே! கேள்வி கேட்டவர் யார் என்று தெரியுமா?" எனக் கேட்டார்கள். அதற்கு நான்,"அல்லாஹ்வும், அவன் தூதருமே மிக அறிந்தவர்கள்" என்று கூறினேன்."இவர்தான் ஜிப்ரீல். உங்கள் மார்க்கத்தை உங்களுக்குக் கற்றுத்தருவதற்காக வந்தார்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

நபி(ஸல்) அவர்கள் இந்த விஷயங்களையெல்லாம் மார்க்கத்தில் சேர்த்துள்ளார்கள். காரணம் முழுமார்க்கத்தில் இவையும் அடங்கியுள்ளன.

**(3)**அதாவது அவற்றை அல்லாஹ் அல்லாமல் வேறுயாருக்கும் செய்வது கூடாது.

---

**ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - நிச்சயமாக பள்ளிகள் அல்லாஹ்வுக்கே உரியனவாகும், எனவே அங்கு அல்லாஹ்வுடன் யாரையும் அழைக்காதீர்கள்.*(72:18)***

**ஒருவன் இவ்வணக்க வகைகளில் எதையேனும் அல்லாஹ் அல்லாதவருக்குச் செய்தால் அவன் முஷ்ரிக் மற்றும் காஃபிராவான். இதற்கு ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான் - யாரேனும் அல்லாஹ்வுடன் வேறு கடவுளை அழைத்தால் - அது பற்றி அவனிடம் எந்த ஆதாரமும் இல்லாத நிலையில், அவனுடைய கணக்கு அவனுடைய இறைவனிடமே உள்ளது. இத்தகைய நிராகரிப்பாளர்கள் ஒரு போதும் வெற்றி பெறுவதில்லை.*(23:117)*[1]**

---

**(1)**மூலாசிரியர் பலவகையான வணக்கங்களைக் கூறிவிட்டு அவற்றில் ஏதேனும் ஒன்றை அல்லாஹ் அல்லாதவருக்கு ஒருவன் செய்தால் அவன் காஃபிராகவும், முஷ்ரிக்காவும் ஆகிவிடுகிறான் என்று கூறி அதற்கு ஆதாரமாக 72:18, 23:117 ஆகிய வசனங்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வசனங்கள் எவ்வகையில் ஆதாரமாக அமைகின்றன என்றால் முதல் வசனத்தில்,"பள்ளிகள் அதாவது சுஜூத் செய்யுமிடங்கள் அல்லது சுஜூத் செய்யும் உறுப்புகள் அல்லாஹ்வுக்குரியனவாகும்" என்று அல்லாஹ் கூறிவிட்டு தொடர்ந்து"அல்லாஹ்வுடன் யாரையும் அழைக்காதீர்கள்" -அதாவது அவனுடன் யாரையும் வணங்காதீர்கள், அவனுக்கே சிரம்பணியுங்கள் என்று கூறியுள்ளான்.

இரண்டாம் வசனத்தில்,"யாரேனும் அல்லாஹ்வுடன் வேறு கடவுளை அழைத்தால் அவன் காஃபிராவான்" என விளக்கியுள்ளான். "ஏனெனில் இத்தகைய காஃபிர்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை" என அல்லாஹ் கூறியதிலிருந்து இதைப்புரிந்து கொள்ள முடிகின்றது."அது பற்றி அவனிடம் எந்த ஆதாரமும் இல்லாத நிலையில்" என்று கூறியிருப்பது "பல்வேறு கடவுள்கள் இருப்பதற்குச் சாத்தியமில்லை" எனச்சுட்டிக் காட்டுகிறது.

---

ஹதீஸில் "துஆ வணக்கத்திற்கு மூளை" என வந்துள்ளது. இதற்கு ஆதாரமாக "உங்கள் இறைவன் கூறுகின்றான் - என்னிடம் பிரார்த்தியுங்கள். நான் உங்கள் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் கர்வம் கொள்கின்றார்களோ அவர்கள் நரகில் நுழைவார்கள்"என்று அல்லாஹ்வும் கூறியுள்ளான்.*(40:60)*

---

**(1)**அல்லாஹ் ஏவிய வணக்க வகைகளைக் குறிப்பிட்ட ஆசிரியர் ஒவ்வொன்றுக்கும் ஆதாரங்களைக்கூற ஆரம்பித்துள்ளார். முதலில் துஆவுக்குரிய ஆதாரங்களைக் கூறுகிறார். இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் ஆகியவற்றுக்கான ஆதாரங்கள் இன்ஷா அல்லாஹ் பின்னர் கூறப்படும்.

**(40:60)**என்ற இறைவசனம் வணக்கவழிபாடுகளில் பிரார்த் தனையும் ஒன்று என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இல்லை யெனில் "எவர்கள் என்னை வணங்குவதைவிட்டும் கர்வம்

கொள்கின்றார்களோ அவர்கள் இழிவுக்கும் கேவலத்துக்கும் ஆளாகி அவசியம் நரகில் நுழைவார்கள்" என்று கூறியிருப்பது பொருத்தமாக இருக்காது. எனவே யாரேனும் அல்லாஹ்வினால் மாத்திரம் முடியுமான ஒன்றை அல்லாஹ் அல்லாதவரிடம்- அவர் உயிருடன் இருந்தாலும், மரணித்துவிட்டாலும் சரியே- பிரார்த்தித்தால் அவன் முஷ்ரிக் மற்றும் காஃபிராவான்.

ஆனால் ஒருவர் உயிருள்ளவரிடம் அவரால் இயலுமான ஒன்றைக் கேட்டால், உதாரணமாக எனக்கு உணவளியுங்கள் அல்லது தண்ணீர் கொடுங்கள் எனக்கேட்டால் அதில் தவறேதும் இல்லை. எனினும் இறந்தவரிடத்தில் அல்லது மறைந்திருப்பவரிடத்தில் இதுபோன்று கேட்டால் நிச்சயமாக அவன் இணைவைத்தவனாகி விட்டான்.

ஏனெனில் அவர்கள் இது போன்ற பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பது என்பது சாத்தியமில்லாததாகும். அப்படியானால் அவர்களிடம் பிரார்த்திப்பது இவ்வுலகில் அதன் காரியங்களை நிர்வகிப்பதில் அவர்களுக்குப் பங்குண்டு என நம்புவதாகும் இவ்வாறு நம்புவது ஷிர்க்காகும்.

பிரார்த்தனை இருவகைப்படும். ஒன்று தேவைகளைக் கேட்கும் பிரார்த்தனை. மற்றொன்று வணக்கத்தைச் சார்ந்த பிரார்த்தனை.

தேவைகளைக் கேட்கும் பிரார்த்தனை: அடியான் தன் தேவைகளை அல்லாஹ்விடம் கேட்டால் அது வணக்கமாகும். ஏனெனில் இச்செயலில் அல்லாஹ்வின் பக்கமே தேவையாகுதல், ஒதுங்குதல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அல்லாஹ் ஆற்றலுள்ளவனாகவும் விசாலமான கருணை மற்றும் அருளுடையவனாவும், ஈகைக்குணமுடையவனாகவும் இருக்கின்றான் என்ற நம்பிக்கையும் அடங்கியுள்ளது.
ஆனால் ஒரு அடியான் தன்தேவைகளைத் தன்னைப் போன்ற மனிதர்களை அழைத்துக் கேட்டால் அவ்வழைப்பை விளங்கி

அதற்குப் பதிலளிக்க அவர்களால் இயலுமானால் அது ஆகுமானதே.

வணக்கத்தைச் சார்ந்த பிரார்த்தனை: இப்பிரார்த்தனையை அழைக்கப் படுபவனுக்குச் செய்யும் வணக்கமாகக் கருதி அவனிடத்தில் நன்மையை வேண்டியும் அவனுடைய தண்டனைக்கு அஞ்சியும் அவனிடம் பிரார்த்தித்தால் அது வணக்கத்தைச் சார்ந்த பிரார்த்தனையாகும். இவ்வகைப் பிரார்த்தனையை அல்லாஹ் அல்லாதவரிடம் கேட்கக் கூடாது. அவ்வாறு செய்தால் அது மார்க்கத்தைவிட்டே வெளியேற்றக்கூடிய மிகப்பெரும் ஷிர்க்காகும்.

இதனையே அல்லாஹ் பின்வறுமாறு எச்சரிக்கின்றான்: எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் கர்வம் கொள்கின்றார்களோ அவர் கள் அழிவுக்கும் கேவலத்துக்கும் ஆளாகி அவசியம் நரகத்தில் நுழைவார்கள்.(40:60)

---

**அச்சத்திற்கு ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - எனவே நீங்கள் உண்மையிலேயே இறை நம்பிக்கையுடையோராயின் (இனி) அம்மனிதர்களுக்கு அஞ்சாதீர்கள். எனக்கே அஞ்சுங்கள். *(3:175)*[1] எதிர்பார்ப்புக்கு ஆதாரமாவது - அல்லாஹ் கூறுகிறான் - எவர் தன் இறைவனின் சந்திப்பை எதிர்பார்த்தவராய் இருக்கின்றாரோ அவர் நற்செயல்கள் புரியட்டும். தன் இறைவனை வணங்குவதில் யாரையும் இணையாக்காதிருக்கட்டும். *(18:110)*[2]**

---

**(1)**அச்சம் என்பது அழிவு, தீங்கு, துன்பம் ஆகியவற்றை எதிர் நோக்கும்போது ஏற்படும் ஒரு வித அதிர்ச்சியாகும். இவ்வசனத்தில் அல்லாஹ் ஷைத்தானின் நண்பர்களுக்கு அஞ்சுவதைத்தடுத்து தனக்கே அஞ்சுமாறு ஏவியுள்ளான்.

**அச்சம் மூன்று வகைப்படும்.**

**1.**இயல்பானஅச்சம்: இது விலங்குகள், நெருப்பு, நீரில் மூழ்கிவிடுதல் ஆகியவற்றுக்கு மனிதன் பயப்படுவது போலாகும்.

இதனால் எந்த தவறும் கிடையாது. அல்லாஹ் மூஸா (அலை)அவர்கள் பற்றிக்கூறுகிறான்: மறுநாள் காலையில் அஞ்சியபடியும் (நாற்புரங்களிலிருந்து) அபாயத்தை உணர்ந்தவாறும் நகரில் அவர் போய்க்கொண்டிருந்தார்.(28:18) ஆனால் இத்தகைய அச்சம்- மூலாசிரியர் கூறியபிரகாரம்- கடமையான ஒன்றை விடுவதற்கோ அல்லது ஹராமான ஒன்றைச் செய்வதற்கோ காரணமாகிவிடுமானால் அது ஹராமாகும். ஏனெனில் ஒரு விஷயம் கடமையை விடுவதற்கும் ஹராமானதைச் செய்வதற்கும் காரணமாக இருந்தால் அது ஹராமாகும். இதற்கு ஆதாரம்: நீங்கள் உண்மையிலேயே இறைநம்பிக்கையுடையோராயின் (இனி) அம்மனிதர்களுக்கு அஞ்சாதீர்கள். எனக்கே அஞ்சுங்கள்.(3:175)

இறையச்சத்தில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. அவ்வச்சம் கடமைகளைச் செய்வதற்கும், விலக்கப்பட்டவைகளை விடுவதற்கும் ஒருவனைத் தூண்டினால் அது நல்லதும் சிறந்ததுமாகும். இத்தகைய அச்சம் ஒருவனிடம் ஏற்பட்டு விட்டால் அவனது உள்ளம் நிம்மதியடைந்து, அவனிடம் இறையருள் குறித்த மகிழ்ச்சியும் நற்கூலி பற்றிய நம்பிக்கையும் மேலோங்கிவிடும்.

அவ்வச்சம் இறையருளைவிட்டும் நிராசையடைவதற்கு அவனைத் தூண்டுமானால் அது கெட்டதாகும். இந்த நேரத்தில் அவன் கைசேதமடைந்துவிடுவான். சிலசமையம் அவனது அவநம்பிக் கையின் தாக்கத்தால் பாவத்தில் நிரந்தர மாகிவிடுவான்.

**2.**வணக்கத்தைச் சார்ந்த அச்சம்: ஒருவனுக்கு அஞ்சு வதை வணக்கமாகக் கருதி அஞ்சுவதாகும். இத்தகைய அச்சம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும். அல்லாஹ்வை விடுத்து வேறொருவருக்குத் திருப்பினால் அது மாபெரும் ஷிர்க்காகும்.

**3.**அந்தரங்க அச்சம்: இது மண்ணறையில் அடங்கப்பட்டவருக்கு அல்லது தனக்கு எதையும் செய்ய முடியாத, தன்னை விட்டும் தூரமாக இருக்கக்கூடிய ஒரு இறைநேசருக்கு அஞ்சுவது போலாகும். இதையும் அறிஞர்கள் ஷிர்க் என்றே கூறியுள்ளனர்.

**(2)**எதிர்பார்த்தல்: விரைவில் கிடைக்கும் ஒன்றை ஆவல் கொள்வதாகும். சில சமயம் மிகத்தாமதமாகக் கிடைக்கும் ஒன்றை விரைவில் கிடைப்பதாக ஆவல் கொள்வதற்கும் சொல்லப்படும். அடக்கத்துடனும் பணிவுடனும் கூடிய ஒருவனது எதிர்பார்ப்பு அல்லாஹ்விடம் மட்டுமே இருக்க வேண்டும். அல்லாஹ் அல்லாதவரிடம் இவ்வாறு எதிர்பார்ப்பது அவன் எண்ணத்தைப் பொருத்து சிறிய, பெறிய ஷிர்க்காக ஆகிவிடும். இதற்கு மூலாசிரியர் (18:110) என்ற வசனத்தை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

இங்கு ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது சிறந்த எதிர்பார்ப்பு என்பது அல்லாஹ்வுக்கு வழிப்படுவதன் மூலம் அவனுடைய நன்மையை எதிர்பார்ப்பதாகும். அல்லது அவனுக்கு மாறு செய்வதை விட்டும் தவ்பாச்செய்து விலகி தன்னுடைய தவ்பா ஏற்றுக் கொள்ளப்படுவதை அவனிடம் எதிர்பார்ப்பதாகும். அமல் செய்யாமல் எதிர் பார்ப்பது மோசமானதும் ஏமாற்றமுமாகும்.

---

**தவக்குல்-நம்பிக்கை வைத்தலுக்கு ஆதாரம்:** *அல்லாஹ் கூறுகிறான் - நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வையுங்கள்.(5:23) யார் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ அவருக்கு அவனே போதுமானவன்.(65:3)*[1]

---

**(1)**ஒன்றின் மீது நம்பிக்கை வைத்தல் என்பது அதையே முழுவதும் சார்ந்திருப்பதாகும். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தல் என்பது நன்மையைப் பெறுவதற்கும் தீமையைத் தடுப்பதற்கும் அவனையே முழுவதும் சார்ந்திருப்பதாகும். இது

பரிபூரணமான ஈமானைச் சார்ந்ததும் அதன் அடையாளமுமாகும். ஏனெனில் "நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால் அல்லாஹ்வின்மீதே நம்பிக்கை வைய்யுங்கள்" (5:23) என அல்லாஹ் கூறுகிறான்.

ஒரு அடியான் அல்லாஹ்வை முழுவதும் சார்ந்திருப்பதில் வாய்மையோடு நடந்து கொண்டால் அவன் காரியத்துக்கு அவனே போதுமானவன். அல்லாஹ் கூறுகிறான்: யார் அல்லாஹ்வையே முழுவதுஞ் சார்ந்திருக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் போதுமானவன்.(65:3) மேலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பவர்,"நிச்சயமாக அல்லாஹ் தனது காரியத்தை நிறைவேற்றியே தீருவான். (65:3)" என்று அல்லாஹ் கூறுவதைக் குறித்து திருப்தியடைந்து கொள்ளவேண்டும். ஏனெனில் தான் நினைத்த எந்தக்காரியமும் அல்லாஹ்வை இயலாமையில் ஆழத்திவிட முடியாது.

**தவக்குல்-நம்பிக்கை வைத்தல் பல வகைப்படும்.**

**1.**அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்தல்: இது பரிபூரணமான ஈமானைச் சார்ந்ததும் அதன் அடையாளமுமாகும். இது கடமையான ஒன்றாகும். இதன் மூலமேயல்லாமல் ஈமான் பரிபூரணமடைய முடியாது.

**2**இரகசியத் தவக்குல்: நன்மையைப் பெறுவதற்கும் தீமையைத் தடுப்பதற்கும் இறந்தவர் மீது நம்பிக்கை வைத்தால் அது இரகசியத் தவக்குல் ஆகும். இறந்துபோனவர் நபியாகவோ இறை நேசராகவோ அல்லது வேறுயாராக இருந்தாலும் சரியே. இது பெரும் ஷிர்க்காகும். உலகியல் விவகாரங்களில் இறந்தவருக்கு இரகசியமாக அதிகாரம் செலுத்த முடியும் என்ற நம்பிக்கையுள்ளவன்தான் இத்தகைய தவக்குல் வைக்க முடியும்.

**3.**ஒருவன் பிறர்மீது அவர் தன்னைவிட அந்தஸ்தில் உயர்ந்தவர் என எண்ணி அவரால் முடியுமான காரியங்களில் தவக்குல் வைத்தல்: உதாரணமாக தன்னுடைய வாழ்க்கை ஆதாரத்தைப் பெறுவதற்கு அவரையே முழுவதுஞ் சார்ந்திருப்பது. இது ஒரு வகையான சிறிய ஷிர்க்காகும். ஏனெனில் அவனுடைய உள்ளம் அவரை பலமாக நம்பி அவரையே முழுவதும் சார்ந்திருக்கிறது. எனினும் தனக்கு வாழ்க்கையாதாரம் கிடைப்பதற்கு அவர் ஒரு காரணம்தான். ஆனால் அல்லாஹ்தான் இதற்கு முழு ஆற்றல் உள்ளவன். அவர் மூலம் தனக்குத்தருகிறான் என்ற அடிப்படையில் அவரின் மீது தவக்குல்- நம்பிக்கை வைத்தால், இதற்கு சரியான பலனும் இருந்தால் அது பற்றிக் குற்றமில்லை.

**4.**தன்னால் இயலுமான காரியத்தில் பிறர் மீது நம்பிக்கை வைத்தல்: அதாவது பிறரை அக்காரியத்தில் தனக்குப் பதிலாக நியமித்தல். இது பிறறைப் பதிலாக நியமிப்பது அனுமதிக்ப்பட்ட காரியத்தில் மட்டுமே கூடும். திருக்குர்ஆனிலும் நபிமொழியிலும் மற்றும் இஜ்மாஃ-அறிஞர்களின் ஏக மனதான முடிவிலும் இதற்குச் சான்று உள்ளது.

யஃகூப் (அலை) அவர்கள் தனது பிள்ளைகளிடம் கூறினார்கள்: என் பிள்ளைகளே! நீங்கள் சென்று யூசுப் மற்றும் அவருடைய சகோதரரைப் பற்றித் தீரவிசாரியுங்கள்.(21:87)

நபி(ஸல்)அவர்கள் ஜகாத் நிதியை வசூலிக்க பணியாட்களையும் அதைப் பாதுகாக்க காவலர்களையும் நியமித்தார்கள். குற்றங்களுக்குரிய தண்டனையை நிறைவேற்றுவதற்கும் சிலரை நியமித்தார்கள். அதுபோல நபி(ஸல்)அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின்போது நூறு ஆடுகளைக் குர்பானி கொடுத்தார்கள். அவற்றில் 63 ஆடுகளைத் தமதுகையால் அறுத்துவிட்டு மீதமுள்ள ஆடுகளை அறுப்பதற்கும் அவற்றின் இறச்சியை பங்கிடுவதற்கும் அவற்றின் தோல்கள் மற்றும் அவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்ட கயிறுகள் போன்ற பொருட்களை தர்மம்

செய்வதற்கும் அலி(ரலி)அவர்களை நியமித்தார்கள். இத்தகைய தவக்குல் கூடும் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இல்லாததால் இஜ்மாஃ அடிப்படையிலும் இது ஆகுமானதே.

---

**ஆர்வம்,[1] பயம்,[2] பணிவு,[3] ஆகியவற்றிற்கு ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - நிச்சயமாக இவர்கள் யாவரும் நற்பணிகளை விரைந்து செய்வோராகவும் அச்சத்துடனும் ஆர்வத்துடனும் நம்மிடம் இறைஞ்சுவோராகவும் திகழ்ந்தார்கள். நம் முன் பணிந்தோராயும் விளங்கினார்கள்.*(21:90)*[4]**

---

(1)ஆர்வம் என்பது பிரியமான ஒன்றை அடைய விரும்புவதற்குச் சொல்லப்படும்.

(2)பயம்: மூலத்தில் இதற்கு "ரஹபத்" எனும் சொல் ஆளப் பட்டுள்ளது. இதன் கருத்து அச்சமூட்டப்படும் விஷயத்திலிருந்து விலகவைக்கும் பயம் என்பதாகும். இத்தகைய பயம் செயலுடன் சேர்ந்திருக்கும்.

(3)பணிவு என்பது அல்லாஹ்வின் வல்லமைக்குப் பணிவதாகும்- அவனுடைய உலக மற்றும் மார்க்க நியதிகளுக்கு முற்றிலும் கட்டுப்படும் வகையில்.

(4)இந்த வசனத்தில் அல்லாஹ் தனது அடியார்களில் உத்தமர்களை "அவர்கள் அல்லாஹ்வுக்குப் பணிந்தவர்களாக அச்சத்துடனும் ஆர்வத்துடனும் அவனிடம் பிரார்த்திக்கிறார்கள்" என வர்ணித்துள்ளான். இவ்விடத்தில் பிரார்த்தனை, தேவைகளை வேண்டிப் பிரார்த்திப்பதையும் வணக்கத்தைச் சேர்ந்த பிரார்த்தனையையும் உள்ளடக்கிக்கொள்கிறது. ஆம்! அவர்கள் அல்லாஹ்விடத்திலுள்ள நன்மைக்கும் கூலிக்கும் ஆசைப்பட்டு அதே நேரத்தில் அவனுடைய தண்டனைக்கும் தம் பாவங்களின் விளைவுக்கும் அஞ்சி அல்லாஹ்விடம் இறைஞ்சுகிறார்கள்.

ஒரு முஃமின் அச்சத்திற்கும் ஆர்வத்திற்கும் மத்தியில் நின்று அல்லாஹ்வுடனான தொடர்பை அமைத்துக்கொள்ள வேண்டும். மேலும் வழிபாடு செய்யும்போது- அதில் கூடுதல் உற்சாகமும் இறைவனால் அது ஏற்றுக் கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பும் ஏற்படுவதற்காக- ஆர்வம் மிகைத்திருக்க வேண்டும். அல்லாஹ்வுக்கு மாறுசெய்யும்போது-அதிலிருந்து விலகுவதற்காகவும் அதன் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும்- அச்சம் மிகைத் திருக்க வேண்டும்.

சில அறிஞர்கள் கூறுகின்றார்கள்: நோயுற்றிருக்கும் போது எதிர்பார்ப்பும் ஆரோக்கியமாக இருக்கும்போது பயமும் மிகைத் திருக்க வேண்டும். ஏனெனில் நோயாளி பலஹீனமடைந்து, உள்ளம் உடைந்து போயிருப்பான். ஒரு வேளை அவனது தவணை நெருங்கியிருக்கலாம். பிறகு அவன் அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் கொண்டவனாக மரணிக்கூடும். அதுபோல ஆரோக்கியமாக இருப்பவன் அந்த நேரத்தில் அவன் உற்சாகமாகவும் நீண்டகாலம் வாழ்வதற்கு ஆசையுள்ளவனாகவும் இருப்பான்.இது அவனை தீமை செய்வதற்கும் வரம்பு மீறுவதற்கும் இட்டுச் செல்லும். எனவே இந்நிலையிலிருந்து விடுபட பயம் அவனிடம் மிகைத்திருக்க வேண்டும்.
எதிர்பார்ப்பும் பயமும் அவனிடம் சமமாக இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்தும் சொல்லப்படுகின்றது. ஏனெனில் எதிர்பார்ப்பு அவனை அல்லாஹ்வின் சூழ்ச்சி குறித்து அச்சமற்றிருக்க வைத்து விடவும், பயம் அல்லாஹ்வின் அருளில் நிராசையை ஏற்படுத்திவிடவும் கூடாது. இவ்விரண்டுமே மோசமானதும் அவனை அழிவில் ஆழ்த்தக்கூடியதுமாகும்.

---

**பயபக்திக்கு ஆதாரம்: அல்லாஹ் கூறுகிறான் - அவர்களுக்கு நீங்கள் அஞ்ச வேண்டாம். எனக்கே அஞ்சுவீர்காளாக!(2:150)[1] முற்றாகத் திரும்பி விடுதலுக்கு ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - உங்கள் இறைவன் பக்கம் திரும்பிவிடுங்கள். மேலும் அவனுக்குக் கட்டுப்பட்டு விடுங்கள்.(39:54)[2]**

---

**(1)**பயபக்தி: இது ஒருவன் யாரைப்பயப்படுகிறானோ அவனின் மகத்துவத்தையும் அவனுடைய பரிபூரணமாக ஆற்றலையும் அறிந்து பயப்படுவதாகும். அல்லாஹ் கூறுகிறான்: உண்மையில் அல்லாஹ்வின் அடிமைகளில் ஞானமுடையோர் மட்டுமே அவனுக்கு அஞ்சுகின்றார்கள்.(35:28) அதாவது அல்லாஹ்வின் மகத்துவத்தையும், அவனது பரிபூரணமான ஆற்றலையும் அறிந்தவர்கள் மட்டுமே அவனுக்கு அஞ்சுகின்றார்கள். இத்தகைய அச்சம் சாதாரணமான அச்சத்தை விட வித்தியாசமானது. உதாரணமாக, ஒருவனைப் பற்றி அவன் நம்மை எதையும் செய்ய முடியும் எனத்தெரிந்து அஞ்சினால் அது பயபக்தியாகும். இதைத் தெரியாமல் அஞ்சினால் அது சாதாரணபயமாகும்.

**(2)**முற்றாகத் திரும்பிவிடுதல்: இது அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு அவனுக்கு மாறுசெய்வதிலிருந்து விலகுவதன் மூலம் அவன் பக்கமே திரும்பிவிடுவதற்குச் சொல்லப்படும். இது கிட்டத்தட்ட "தவ்பா" எனும் வார்த்தைக்குரிய பொருளைக் கொண்டதாகும். (தவ்பா என்றால் பாவம் செய்வதிலிருந்து விலகி அல்லாஹ்வின் பக்கம் முழுமையாகத் திரும்புதல்) எனினும் இதன் கருத்து தவ்பாவின் கருத்தை விடவும் நுட்பமானதாகும். ஏனெனில் இதில் அல்லாஹ்வையே முழு வதுஞ்சார்ந்திருத்தல் அவனேகதி என அவன் பக்கமே ஒதுங்கிவிடுதல் என்ற கருத்தும் உள்ளது. ஆதாரம்: உங்கள் இறைவன் பக்கம் திரும்புங்கள். மேலும் அவனுக்கே கட்டுப்பட்டுங்கள்.(39:54)அவனுக்குக் கட்டுப்படுதல் என்பது அவனுடைய மார்க்க சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுதலாகும்.

**அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவது இரு வகைப்படும்.**

**1.**இயல்பான கட்டுப்படுதல்: அதாவது இவ்வுலகில் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள நியதிக்குக் கட்டுப்படுவது. இது முஃமின், காஃபிர், நல்லவன், கெட்டவன் இன்னும் வானங்கள் மற்றும் பூமியிலுள்ள அனைவருக்கும் பொதுவானதது. ஆதாரம்:

வானங்களிலும் பூமியிலும் உள்ளவை விரும்பியோ விரும்பாமலோ அவனுக்கே கட்டுப்படுகின்றன.(3:83)

**2.**மார்க்க ரீதியான கட்டுப்படுதல்: இது அவனது மார்க்க சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுவதாகும். இது குறிப்பாக இறைத்தூதர்களுக்குக் கட்டுப்பட்டு நேர்மையான முறையில் அவர்களைப் பின்பற்றி நடப்பவர்களுக்குரியதாகும். திருக்குர்ஆனில் இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. மூலா சிரியர் குறிப்பிட்டுள்ள (39:54) என்ற வசனமும் அச்சான்றுகளில் ஒன்றுதான்.

---

**உதவி தேடுவதற்கு ஆதாரம் - இறைவா! உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம்*(1:4)* மேலும் ஹதீஸில் வந்துள்ளது - நீ உதவி தேடுவதாக இருந்தால் அல்லாஹ்விடமே உதவி தேடு.[1] பாதுகாவல் தேடுவதற்கு ஆதாரம் - (நபியே!) நீர் கூறுவீராக - வைகறையின் இறைவனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.*(113:1)*(நபியே!) நீர் கூறுவீராக - மனிர்களின் இரட்சகனிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.*(114:1)*[2]**

---

**(1)**உதவி தேடுதல் பல வகைப்படும். அவை:

**1.**அல்லாஹ்விடம் உதவி தேடுதல்: இது அடியான் தன் இறைவனுக்கு முழுமையாகப் பணிந்து, தன் காரியங்களை அவனிடமே ஒப்படைத்து, தனக்கு அவனே போதுமானவன் என்று நம்பி உதவி தேடுவதற்குச் சொல்லப்படும். இதை அல்லாஹ்வைத் தவிர வேறுயாரிடத்திலும் செய்யக் கூடாது.

ஆதாரம்: இறைவா! உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம்(1:4) இங்கு அல்லாஹ், "உன்னிடம் உதவிதேடுகிறோம்" என்று கூறுவதற்குப் பதிலாக "உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்று கூறியுள்ளான். காரணம் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரிடமும் உதவிதேடக்கூடாது

என்பதற்காக. அவ்வாறு செய்வது மார்க்கத்தை விட்டும் வெளியேற்றிவிடக்கூடிய ஷிர்க்காகும்.

**2.**மனிதர்களிடம் அவர்களால் இயலுமான காரியங்களில் உதவி தேடுதல்: இது காரியங்களைப் பொறுத்து அமையும். அதாவது உதவி தேடுதல் நன்மையான காரியங்களுக்காக இருந்தால் உதவி தேடுபவரைப் பொருத்து அது அவருக்கு ஆகுமானதே. உதவி செய்பவரைப் பொருத்து உதவி செய்வது அவருக்கு மார்க்கமாக்கப்பட்டதாகும். அல்லாஹ் கூறுகிறான்: நன்மையான மற்றும் இறையச்சத்திற்குரிய காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.(5:2)

உதவி தேடுதல் பாவமான காரியங்களுக்காக இருந்தால் உதவி தேடுவதும் உதவி செய்வதும் இரண்டுமே ஹராமாகும். அல்லாஹ் கூறுகிறான்: பாவமான மற்றும் வரம்புமீறும் காரியங்களில் ஒருவருக்கொருவர் உதவவேண்டாம். (5:2) உதவிதேடுதல் ஆகுமான காரியங்களுக்காக எனில் உதவிதேடுவதும், உதவி அளிப்பதும் அனுமதிக்கப்பட்டதாகும். எனினும் உதவியவருக்கு பிறருக்கு உபகாரம் செய்ததன் கூலிகிடைக்கும். மட்டுமல்ல இதனால் உதவுதல் என்பது அவர் விஷயத்தில் மார்க்கமாக்கப்பட்ட ஒன்றாகும். ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உபகாரம் செய்பவர்களுடன் இருக்கின்றான்.(2:195)

**3.**உதவி செய்ய சக்தியற்ற தம்முன் உள்ள உயிருள்ள வர்களிடம் உதவிதேடுவது: இது பயனற்ற வீணான காரியமாகும். இதற்கு உதாரணம் பலவீனமான இயலாத ஒருவனிடம் மிகவும் பாரமான ஒரு பொருளை சுமக்கும்படி வேண்டுவது போலாகும்.

**4.**பொதுவாக இறந்தவர்களிடம் உதவிதேடுதல் அல்லது சக்தியற்ற உயிருள்ளவர்களிடம் மறைவான காரியங்களில் உதவிதேடுதல்: இது ஷிர்க்காகும். ஏனெனில் உலகியல் விவகாரங்களில்

இவர்களுக்கு இரகசியமாக அதிகாரம் செலுத்த முடியும் என்ற நம்பிக்கையுடையவன்தான் இவ்வாறு செய்வான்.(இந்த நம்பிக்கை இணைவைத்தல்தானே)

**5.**அல்லாஹ்வுக்கு விருப்பமான செயல்கள் மற்றும் நிலைகளைக் கொண்டு உதவி தேடுவது. இது அல்லாஹ்வின் கட்டளையின் மூலம் மார்க்கமாக்கப்பட்ட காரியமாகும். அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள்.(2:45)

ஆசியர், உதவி தேடுதலில் முதல்வகைக்கு ஆதாரமாக "உன்னிடமே உதவி தேடுகிறோம்" என்ற வசனத்தையும், "நீ உதவி தேடினால் அல்லாஹ்விடம் உதவி தேடு" என்ற நபி மொழியையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

**(2)**பாதுகாப்புத் தேடுதல் என்பது வெறுக்கத்தக்க காரியத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுவதாகும். பாதுகாப்புத் தேடுபவன் தான் யாரிடம் பாதுகாப்புத் தேடுகிறானோ அவனை உறுதியாக நம்பி, அவனையே முழுவதுஞ் சார்ந்து பாதுகாப்புத் தேடுவான். இதற்குப் பலவகைகள் உள்ளன.

**1.**அல்லாஹ்வைக் கொண்டு பாதுகாப்புத் தேடுவது: இதில் நாம் அல்லாஹ்விடமே முற்றிலும் தேவையுள்ளவர்களாக, அவனையை முழுவதும் சார்ந்தவர்களாக இருக்கிறோம் என்ற எண்ணமும் மேலும் அவனே நமக்குப் போதுமானவன், நடக்கப்போகிற இனி நடக்கவிருக்கின்ற, சிறிய, பெரிய அனைத்துத் தீங்குகளை விட்டும் இன்னும் மனிதர்கள் மற்றும் மனிதர்களல்லாத ஏனைய படைப்புகளின் தீங்குகளை விட்டும் நமக்கு முழுமையான பாதுகாப்புத் தரக்கூடியவன் என்று நம்பிக்கையும் உள்ளடங்கியிருக்கும்.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) கூறுவீராக! வைகறை யின் அதிபதியிடம் அவன் படைத்துள்ள ஒவ்வொன்றின் தீங்கிலிருந்தும்! இரவின் இருள் படரும்போது அந்தஇருளின் தீங்கிலிருந்தும்! முடிச்சுகளில் ஊதுகின்ற (ஆண்) பெண்களின் தீங்கிலிருந்தும் மேலும் பொறாமைக்காரர்கள் பொறாமை கொள்ளும்போது ஏற்படுகின்ற தீங்குகளிலிருந்தும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.(113:1-5)

(நபியே!)கூறுவீராக! மனிதர்களின் அதிபதியிடம்- மனிதர்களின் மன்னனிடம்- மனிதர்களின் இறைவனிடம் நான் பாதுகாப்பு தேடுகிறேன்- மறைந்திருந்து ஊசலாட்டங்களை ஏற்படுத்துபவனின் தீங்கிலிருந்து! அவன் எத்தகையவன் எனில், மனிதர்களின் உள்ளங்களில் ஊசலாட்டங்களை ஏற்படுத்துகின்றான். இத்தகையவன் ஜின் இனத்திலும் இருக்கின்றான். மனித இனத்திலும் இருக்கின்றான்.(114:1-6)

2.அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்றைக்கொண்டு பாதுகாப்பு தேடுவது: உதாரணமாக அவனுடையவார்த்தை, அவனுடைய மகத்துவம் மற்றும் கண்ணியத்தைக்கொண்டு பாதுகாவல் தேடுவது. சான்றாக, "அல்லாஹ்வின் பரிபூரணமான வார்த்தைகளைக் கொண்டு அவன் படைத்த அனைத்தின் தீங்கை விட்டும்நான் பாதுகாவல தேடுகிறேன்" "எதிர்பாராத விதமாக நான் கொல்லப்படுவதிலிருந்து உன் கண்ணியத்தைக் கொண்டு பாதுகாவல் தேடுகிறேன்" "அல்லாஹ்வின் கண்ணியம் மற்றும் ஆற்றலைக் கொண்டு எனக்கு ஏற்பட்டிருக்கின்ற மேலும் நான் பயப்படுகின்ற தீங்கை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்" "இறைவா! உனது பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்தை விட்டும் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்றெல்லாம் நபி(ஸல்)அவர்கள் பாதுகாப்புத் தேடியுள்ளார்கள். மேலும்,

"(நபியே!)கூறுவீராக: உங்களுக்கு மேலிருந்து ஒரு வேதனையை உங்களுக்கு அனுப்பிட அவன் ஆற்றலுள்ளவன்." (6:65)என்ற

வசனம் இறங்கிய போது நபி(ஸல்)அவர்கள் "இறைவா உன் திருமுகத்தைக் கொண்டு உன்னிடம் அதைவிட்டும் பாதுகாவல் தேடுகிறேன்" எனவும் கூறினார்கள்.

**3.**இறந்தவர்களிடம் அல்லது பாதுகாப்பளிக்க முடியாத நம்மை விட்டும் மறைந்திருக்கக்கூடிய உயிருள்ளவர்களிடம் பாதுகாப்புத் தேடுவது: இது இணைவைத்தலாகும். இதுபற்றி அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களில் சிலர் சில ஜின்களிடம் பாதுகாப்பு கோரக்கூடியவராகளாய் இருந்தனர். இவ்வாறு செய்து அவர்கள் ஜின்களின் ஆணவத்தை இன்னும் அதிகமாக்கிவிட்டார்கள்.(72:6)

**4.**படைப்பினங்களில் மனிதர்கள், இடங்கள் போன்ற பாதுகாப்பளிக்க சாத்தியமுள்ளவர்களிடம் பாதுகாவல் தேடுவது: இது கூடும். குழப்பங்கள் குறித்து நபி(ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் இதற்குச்சான்றாகும். "யாரேனும் குழப்பங்களை அடைந்தால் அது அவரை அழித்தே தீரும். எனவே அவர் அந்நேரத்தில் ஒரு ஒதுங்குமிடம் அல்லது பாதுகாப்பான ஒரு இடம் கிடைத்தால் அங்கு சென்று தன்னைக்காத்துக் கொள்ளட்டும்." (புகாரி,முஸ்லிம்)

மேலும் "குழப்பங்கள் வந்து விடுமானால் யாரிடம் ஒட்டகம் இருக்கிறதோ அவர் தன் ஒட்டகத்துடன் சேர்ந்து (ஒதுங்கி) விடட்டும்" என்று முஸ்லிமுடைய ஒரு அறிவிப்பில் உள்ளது. மஃக்ஸூம் குடும்பத்தை சேர்ந்த ஒரு பெண் திருடிவிட்டாள். அவள் நபி(ஸல்)அவர்களிடம் கொண்டு வரப்பட்டாள். அப்பெண் உம்முஸலமா(ரழி) அவர்களிடம் பாதுகாப்புத் தேடியதாக மற்றொரு ஹதீஸூம் முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிமிலுள்ள வேறொரு ஹதீஸ் வருமாறு: "கஅபத்துல்லாஹ்வைக் கொண்டு ஒருவன் பாதுகாப்புத் தேடுவான். அப்போது அவனிடம் ஒரு குழு அனுப்பிவைக்கப்படும்..."(சுருக்கம்) எனினும் ஒருவன்

அநியாயக்காரனின் தீங்கிலிருந்து அபயம்தேடினால் முடிந்த அளவிற்கு அவனுக்கு அபயமளிப்பது கடமையாகும். ஒருவன் விலக்கப்பட்ட காரியத்தை செய்வதற்காக அல்லது ஒரு கடமையிலிருந்து தப்புவதற்காக அபயம் தேடினால் அவனுக்கு அபயமளிப்பது ஹராம்.

---

**இரட்சிப்பு தேடுவதற்கு ஆதாரம் - உங்கள் இறைவனிடம் நீங்கள் உதவி(இரட்சிப்பு) தேட முறையிட்டுக் கொண்டிருந்ததையும் நினைத்துப் பாருங்கள். அப்போது அவன், "ஓராயிரம் வானவர்களைத் தொடர்ச்சியாக அனுப்பி திண்ணமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன்" என பதிலளித்தான்.*(8:9)*[1]**

---

**(1)**அல்லாஹ்விடம் இரட்சிப்புத் தேடுதல் என்பது துன்பம், அழிவு ஆகிவற்றிலிருந்து பாதுகாப்புத் தேடுவதாகும். இது பலவகைப்படும்.

**1.**அல்லாஹ்விடம் இரட்சிப்புத் தேடுதல்: இது செயல்களிலேயே மிகச்சிறந்த செயலும் இறைத்தூதர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றியவர்களின் நடைமுறையும் ஆகும். ஆதாரம் மூலாசிரியர் குறிப்பிட்ட(8:9) வசனமாகும். அவ்வசனத்தில் கூறப்பட்ட சம்பவம் பத்ருப் போரில் நடந்ததாகும்.

அப்போரில் நபி(ஸல்)அவர்கள் 1000 இணைவைப்பாளர்களையும் 310 க்கும் சற்று அதிகமான தம்தோழர்களையும் கண்டபோது தமக்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் நுழைந்து, கிப்லாவை முன்னோக்கி தமது இரு கைகளையும் உயர்த்தி "இறைவா! நீ எனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுவாயாக! இறைவா! இஸ்லாமியர்களான இச்சிறு கூட்டத்தை நீ அழித்து விட்டால் இப்புவியில் உன்னை வணங்குபவர் யாரும் இருக்கமாட்டார்" என்று தம் இறைவனிடம் முறையிட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் இரு கை ஏந்தி தம் இறைவனிடம் தொடர்ந்து உதவி(இரட்சிப்பு)தேடிக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய மேலங்கி தோளிலிருந்து கீழேவிழவும் அபூபக்கர்(ரலி)அவர்கள் அதை எடுத்து அவர்களின் தோளில் போட்டு, அது விழுந்து விடாமல் பின்னால் நின்று பிடித்துக்கொண்டு, "அல்லாஹ்வின் தூதரே! இறைவனிடம் நீங்கள் முறையிட்டது போதும். அவன் உங்களுக்கு வாக்களித்ததை நிச்சயம் நிறைவேற்றுவான்" எனக் கூறினார்கள். அப்போது தான் அல்லாஹ் இந்த வசனத்தை அருளினான்.

**2.**இறந்தவர்களிடம் அல்லது இரட்சிக்க-பாதுகாக்க முடிந்த மறைந்திருக்கும் உயிருள்ளவர்களிடம் இரட்சிப்புத் தேடுதல். இது ஷிர்க்காகும். ஏனெனில் இத்தகையவர்களுக்கு உலகில் மறைமுகமான நிர்வகிக்கும் ஆற்றலிருக்கிறதென நம்பி, இறைத்தன்மையை அவர்களுக்கும் யார் பங்கிட்டுக் கொடுக்கிறாரோ அவர்தான் இவ்வாறு செய்வார்.

அல்லாஹ் கூறுகிறான்: துன்பத்திற்கு ஆளானவர் இறைஞ்சும்போது அவருக்குப் பதிலளித்து அவருடைய துன்பத்தை நீக்குபவன் யார்? உங்களைப் பூமியில் பிரதிநிதிகளாய் ஆக்குகிறவன் யார்? (இப்பணிகளைச் செய்ய) அல்லாஹ்வுடன் வேறு கடவுள் உண்டா? நீங்கள் மிகக்குறைவாகவே சிந்திக்கின்றீர்கள். (27:62)

**3.**பாதுகாக்க முடிந்த,நம் நிலையை அறிந்த உயிருடன் இருப்பவர்களிடம் இரட்சிப்புத்தேடுதல். இத்தகையவர்களிடம் உதவி தேடுவது ஆகுமானது என்பது போலவே இரட்சிப்புத்தேடுவதும் ஆகுமானதே. மூஸா(அலை) அவர்களின் வரலாற்றில் அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான்: அவருடைய (மூஸாவின்) சொந்த சமுதாயத்தைச் சேர்ந்தவன் எதிர் சமுதாயத்தைச் சேர்ந்தவனுக்கு எதிராக தனக்கு உதவும்படி (அதாவது தன்னை இரட்சிக்கும்படி) இவரை அழைத்தான். பிறகு

மூஸா அவனை ஓங்கிக் குத்தினார். அவன் கதையை முடித்தார். (28:15)

**4.**பாதுகாக்க முடியாத, உயிருடன் இருப்பவரிடம் அவருக்கு மறைமுகமான சக்தியிருக்கிறதென நம்பாமல் இரட்சிப்புத்தேடுதல். உதாரணமாக தண்ணீரில் மூழ்குபவன் கை, கால்கள் செயலற்றிருக்கும் ஒரு மனிதரிடம் உதவி தேடுவது போலாகும். இவ்வாறு உதவி தேடுவது வீணானதும் அந்த மனிதரைப் பரிகசிப்பதுமாகும். இதனால் இது தடை செய்யப்பட்டதாகும். வேறொரு காரணத்திற்காகவும் இது தடை செய்யப்படுகிறது. அதாவது தண்ணீரில் மூழ்குபவன் இதனால் பிறரை ஏமாற்றத்தில் ஆழ்த்தி, கை கால்கள் செயலிழந்த இந்த மனிதருக்கு துன்பத்திலிருந்து பாதுகாக்கும் மறைமுக ஆற்றல் இருக்கிறதென்ற ஊகத்தை ஏற்படுத்தி விடலாம்.

---

**அறுத்துப் பலியிடுவதற்கு ஆதாரம்:** *(நபியே!)* **நீர் கூறுவீராக - நிச்சயமாக எனது தொழுகையும் எனது குர்பானியும் என்னுடைய வாழ்வும் என்னுடைய மரணமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அவனுக்கு யாதொரு இணையுமில்லை.***(3:162,163)*[1]*.* **"அல்லாஹ் அல்லாதவருக்காக அறுத்துப் பலியிட்டவனை அல்லாஹ் சபிப்பானாக" என்பது நபிமொழி** *(முஸ்லிம்)*

---

**(1)**அறுத்தல் என்பது பிராணியின் இரத்தத்தை குறிப்பிட்ட முறையில் ஓட்டுவதன் மூலம் அதன் உயிரைப் போக்குவதாகும். இது பல நோக்கங்களுக்காக அமையும்:

**1.**வணக்கமாக அமைதல்: அதாவது அதன் மூலம் அல்லாஹ்வை மகத்துவப்படுத்துதல், அவனுக்குப் பணிதல், அவனிடம் நெருக்கத்தைத் தேடுதல் ஆகியவற்றை நாடுவதாகும். இது அல்லாஹ் மார்க்கமாக்கிய முறையில் அல்லாஹ்வுக்காகவே இருக்க வேண்டும். அல்லாஹ் அல்லாதவருக்காக இதைச் செய்வது பெரும் ஷிர்க்காகும். இதற்குரிய ஆதாரம் மூலாசியர்

கூறிய அதே வசனமாகும்."(நபியே!)நீர்கூறுவிராக: நிச்சயமாக எனது தொழுகையும் எனது குர்பானியும் (அறுத்துப்பலியிடுதல்)என் வாழ்வும் என்மரணமும் அகிலங்களின் அதிபதியாகிய அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. (3:162,163)

**2.**விருந்தினருக்கு விருந்துபசரித்தல், திருமணவிருந்து (வலீமா)போன்ற இன்னும் பல நோக்கங்களுக்காக அமைதல்: இது கடமை அல்லது விரும்பத்தக்கது எனும் முறையில் ஏவப்பட்ட காரியமாகும். நபி(ஸல்)கூறினார்கள்: அல்லாஹ்வையும் மறுமையையும் நம்புபவர் தனது விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும்.(புகாரி,முஸ்லிம்) மேலும் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப்(ரலி)திருமணம் முடித்தபோது "ஒரு ஆட்டையேனும் அறுத்து விருந்து அளிப்பீராக" என அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(புகாரி,முஸ்லிம்)

**3.**உண்ணுதல் அல்லது வியாபாரம் செய்தல் போன்ற நோக்கங்களுக்காக அமைதல்: இது அனுமதிக்கப்பட்ட வகையைச் சார்ந்ததாகும். அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள் கவனிக்கவில்லையா என்ன? திண்ணமாக நம்கரங்கள் உருவாக்கியவற்றிலிருந்து அவர்களுக்காக கால்நடைகளை நாம் படைத்துள்ளோம். இப்போது அவர்கள் அவற்றிற்கு உரிமையாளர்களாய் இருக்கின்றார்கள். மேலும் அவற்றை அவர்களுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளோம். அவற்றில் சிலவற்றின் மீது அவர்கள் சவாரி செய்கின்றார்கள். மேலும் சிலவற்றின் இறைச்சியைப் புசிக்கின்றார்கள்.(36:71,72)
மொத்தத்தில் அவனது நோக்கத்தைப் பொருத்து அறுத்தல் என்பது சிலவேளை அனுமதிக்கப் பட்டதாகவும் சிலவேளை விலக்கப்பட்டதாகவும் அமையும்.

---

**நேர்ச்சை செய்வதற்கு ஆதாரம்[1] - இவர்கள் (எத்தகையவர்கள் என்றால் இந்த உலகத்தில்) நேர்ச்சைகளை நிறைவேற்றிக் கொண்டும் அனைத்துத்**

**திசைகளிலும் துன்பங்கள் பரவக்கூடிய அந்த (மறுமை) நாளினைக் குறித்து அஞ்சிக் கொண்டுமிருப்பார்கள். *(76:7)*[2]**

---

**(1)**அதாவது நேர்ச்சை செய்தல் வணக்கம் என்பதற்கு ஆதாரம்(76:7)வசனமாகும்.

**(2)**இவ்வசனம் எவ்வகையில் ஆதாரமாக அமைகிறதெனில், இங்கு அல்லாஹ் நேர்ச்சையை நிறைவேற்றுபவர்களைப் புகழ்ந்து கூறியுள்ளான். இது அதனை அவன் விரும்புகிறான் என்பதற்கு ஆதாரமாகும். அல்லாஹ்வுக்கு விருப்பமான செயல்கள் அனைத்தும் வணக்கமே! இவ்வசனத்தின் பிற்பகுதியும் இதையே உறுதி செய்கிறது. "அனைத்துத் திசைகளிலும் துன்பங்கள் பரவக்கூடிய அந்த(மறுமை) நாளினைக் குறித்து அஞ்சிக் கொண்டுமிருப்பார்கள்.(76:7)"

இங்கு ஒரு விஷயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ் புகழ்ந்து கூறியிருக்கின்ற நேர்ச்சையாகிறது அல்லாஹ் கடமையாக்கிய அனைத்து வணக்கங்களாகும். இத்தகைய கடமையான வழிபாடுகளை ஒருவன் செய்ய ஆரம்பித்து விட்டால் அதை அவன் நிறைவேற்றுவது அவசியமாகிவிடுகிறது. இதற்கு ஆதாரம்: அல்லாஹ் கூறுகிறான்: பிறகு அவர்கள் தம்மிடம் உள்ள அழுக்குகளை நீக்கட்டும். தமது நேர்ச்சைகளை நிறைவேற்றட்டும். பழமையான அந்த ஆலயத்தைச் தவாஃப் செய்யட்டும்.(22:29)

ஒருவன் எதையாவது ஒன்றை அல்லது கடமையில்லாத ஒரு வழிபாட்டை நேர்ச்சை செய்வது மக்ரூஹ்-வெறுக்கத் தக்கதாகும். சில அறிஞர்கள் ஹராம் என்றே கூறியுள்ளனர். காரணம் இத்தகைய நேர்ச்சையை நபி(ஸல்)அவர்கள் தடுத்துள்ளார்கள். மேலும் "அது எந்த நன்மையும் தராது. மாறாக கஞ்சனிடமிருந்து பொருளை அது வெளிக்கொணர்கிறது" என்று கூறியுள்ளார்கள். அவ்வாறிருந்தும் ஒரு மனிதன் ஒரு வழிபாட்டை நேர்ச்சை

செய்து விட்டால் அதனை நிறைவேற்றுவது அவன் மீது கடமையாகும். ஏனெனில் "இறைவனுக்கு வழிப்படும் விஷயத்தில் ஒருவன் நேர்ச்சை செய்தால் அவன் அதை நிறைவேற்றட்டும்" என்பது நபிமொழி.(புகாரி)

ஆக நேர்ச்சை என்பது, பொதுவாக கடமையான எல்லா வணக்க வழிபாடுகளுக்கும் சொல்லப்படும். ஒரு மனிதன் குறிப்பாக ஒன்றை அல்லாஹ்வுக்காக நேர்ச்சை செய்வதற்கும் சொல்லப்படும். இந்த வகை நேர்ச்சை பலவகைப்படும் என அறிஞர்கள் கூறியுள்ளனர். அதுபற்றிய விளக்கத்தை பிக்ஹுகிரந்தங்களில் காணலாம்.

---

**இரண்டாவது அடிப்படை, இஸ்லாமிய மார்க்கத்தை ஆதாரங்களின் மூலம் அறிவதாகும்.[1] இஸ்லாமிய மார்க்கம்[2] என்பது அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதன் மூலம் அவனுக்குப் பணிவதும்[3] அவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம்[4] வழிபடுவதும் இணைவைத்தல் மற்றும் இணை வைப்பவர்களை விட்டும் விலகுவதும்[5] ஆகும். இதற்கு இஸ்லாம், ஈமான், இஹ்ஸான், என மூன்று நிலைகளும்[6] ஒவ்வொன்றுக்கும் பல அடிப்படைகளும் உள்ளன.[7]**

---

**(1)**அதாவது இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகளில் இரண்டாவது அடிப்படையாவது இஸ்லாமிய மார்க்கத்தை திருக்குர்ஆன் மற்றும் நபிவழி ஆதாரங்கள் மூலம் அறிவது.

**(2)**இஸ்லாம் அல்லது இஸ்லாமிய மார்க்கம் என்பது அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதன் மூலம் அவனுக்குப் பணிவது, அவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் வழிப்படுவது, இணைவைத்தல் மற்றும் இணைவைப்பவர்களை விட்டும் விலகுவது ஆகிய மூன்று விஷயங்களை உள்ளடக்கியுள்ளது.

**(3)**அதாவது ஒரு அடியான் தன் இறைவனுக்கு மார்க்கம் விரும்பும் முறையில் கீழ்ப்படிவதாகும். அது வணக்கத்தில்

இறைவனை ஒருமைப்படுத்துவதன் மூலம் இருக்க வேண்டும். இத்தகைய (இஸ்லாம்) கீழ்ப்படிதலில் தான் அடியான் புகழப்படுவதோடு கூலியும் வழங்கப்படுகிறான். நிர்பந்தமாகக் கீழ்ப்படிவதில் எந்த நன்மையும் கூலியும் கிடையாது. காரணம், அதில் மனிதனுக்கு சிந்தித்து உணரும் நிலை கிடையாது. அல்லாஹ் கூறுகிறான்: வானங்கள் மற்றும் பூமியிலுள்ள அனைத்தும் விரும்பியோ விரும்பாமலோ அவனுக்கே பணிந்து(முஸ்லிமாக)இருக்கின்றன. மேலும் அவனிடமே அவர்கள் அனைவரும் திரும்பவர வேண்டியவராய் இருக்கின்றனர்.(3:83)

**(4)**அதாவது அவனுடைய ஏவல்களை எடுத்து நடந்து அவனுடைய விலக்கல்களைத் தவிர்ந்து கொள்வதன் மூலம் கீழ்ப்படிதலாகும். ஏனெனில் வழிப்படுதல் என்பது இதற்குத் தான் சொல்லப்படும்.

**(5)**இணைவைத்தலை விட்டு விலகும்போது இணை வைப்பவர்களையும் விட்டு விலகுவது அவசியமாகிவிடுகின்றது. அல்லாஹ் கூறுகிறான்: உங்களுக்கு இப்ராஹீமிடத்திலும் அவருடைய தோழர்களிடத்திலும் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது. அதாவது, அவர்கள் தங்கள் சமூகத்தாரிடம் தெளிவாகக் கூறிவிட்டார்கள்: " உங்களை விட்டும், இறைவனை விடுத்து நீங்கள் வணங்குகின்ற கடவுளரை விட்டும் நாங்கள் திண்ணமாக விலகிவிட்டோம். நாங்கள் உங்களை நிராகரித்து விட்டோம். மேலும் உங்களுக்கும் எங்களுக்குமிடையே நிரந்தரப் பகைமையும் வெறுப்பும் ஏற்பட்டுவிட்டன, ஏக அல்லாஹ்வின் மீது மட்டும் நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரையில்!" (60:4)

**(6)**இங்கு ஆசிரியர் விளக்குவதாவது: இஸ்லாமிய மார்க்கத்திற்கு மூன்று நிலைகள் உள்ளன. அவற்றில் ஒன்று மற்றொன்றை விட மேலானது. அவை இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் ஆகியவையாகும்.

(7)இதற்கு ஆதாரம் உமர்(ரழி) அவர்கள் அறிவிக்கும் ஜிப்ரீலுடைய ஹதீஸாகும். அதாவது நபி(ஸல்)அவர்களிடம் ஜிப்ரீல்(அலை)வந்து இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் ஆகியவற்றைப் பற்றி கேட்டபோது நபி(ஸல்)அவர்கள் அவற்றை விளக்கிச் சொன்னார்கள்.மேலும், இவர் ஜிப்ரீல் ஆகும். உங்களின் மார்க்கத்தை உங்களுக்குக் கற்றுத் தருவதற்காக உங்களிடம் வந்தார் எனவும் குறிப்பிட்டார்கள்.(இந்த ஹதீஸ் முன்பு கூறப்பட்டுள்ளது)

---

**இஸ்லாத்தின் அடிப்படைகள் ஐந்து.[1] அவை, வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத்தவிர வேறயாருமில்லை என்றும் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் சாட்சி சொல்வது,[2] தொழுகையை நிலைநாட்டுவது, ஸகாத்கொடுப்பது, ரமழான் மாதம் நோன்பு நோற்பது, ஹஜ் செய்வது ஆகியனவாகும்.**

---

(1)ஆதாரம்: நபி(ஸல்)கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து அடிப்படை(கடமை)களின் மீது நிறுவப்பட்டுள்ளது. அவை: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் சாட்சியம் சொல்வது தொழுகையை நிலை நாட்டுவது, ஸகாத் கொடுப்பது, ரமழான் மாதம் நோன்பு நோற்பது, ஹஜ் செய்வது ஆகியனவாகும். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரழி), நூல்: புகாரி, முஸ்லிம்

(2)வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது(ஸல்)அவர்கள் அல்லாஹ் வின் தூதராவார்கள் என்றும் சாட்சியம் சொல்வது இஸ்லாத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். இது இரண்டு பகுதிகளாக இருந்தும் இவ்விரண்டையும் சேர்த்து ஒரு அடிப்படையாகக் கணிக்கப்பட்டிருப்பதன் காரணம் என்னவெனில், வழிபாடுகள் அனைத்தும் இவ்விரண்டையும் மெய்ப்படுத்துவதன் மீதே அமைந்துள்ளன. ஆகவே எந்த வணக்கமும்

அல்லாஹ்வுக்காகவே என தூய எண்ணத்துடனும் (இதுதான் லாஇலாஹ இல்லல்லாஹுஎன்பதன் கருத்து) அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களைப் பின்பற்றியும்(இதுதான் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதன் கருத்து)செய்யப்படாத வரை அது இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

---

**ஏகத்துவ சாட்சியத்திற்குரிய ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - அல்லாஹ் நீதியை நிலை நாட்டக்கூடியவனாக உள்ள நிலையில் வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத்தவிர வேறு யாருமில்லை என்று சாட்சியம் கூறுகிறான். மேலும் வானவர்களும் அறிவுடையோரும்(அவ்வாறே சாட்சியம் கூறுகின்றனர்). வல்லமை மிக்கவனும், நுண்ணறிவாளனுமான அவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறுயாருமில்லை.(3:18)[1]**

**அதன் பொருள் - உண்மையில் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை "லாஇலாஹ" என்பதில் வணங்கப்படுவதற்குரிய தகுதி அல்லாஹ்வை விடுத்து எதற்கும் கிடையாது என மறுத்தலும் (எதிர்மறை) "இல்லல்லாஹ்" என்பதில் வணக்கத்திற்குரிய தகுதி அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு - அவன் தனித்தவன், அவனை வணங்குவதிலும் அவனுடைய ஆட்சி, அதிகாரத்திலும் அவனுக்கு இணை துணை எதுவும் கிடையாது - என உறுதிப்படுத்துதலும் (உடன்பாடு) உள்ளது.[2]**

---

(1)இவ்வசனத்தில், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்பதற்கு அல்லாஹ்வுடைய சாட்சியமும், வானவர்கள் மற்றும் அறிவுடையோரின் சாட்சியமும் உள்ளது. மேலும் திண்ணமாக அல்லாஹ் நீதியை நிலைநாட்டுபவனாக இருக்கிறான் என்றும் கூறப்பட்டுள்ளது. அதன் பிறகு "வல்லமை மிக்கவனும், நுண்ணறிவாளனுமான அவனைத்தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறுயாருமில்லை" என்று கூறி ஏகத்துவ சாட்சியை மேலும் உறுதிப்படுத்திக் கொள்கிறான்.

மேலும் இந்த வசனத்தில் அறிவுடையோர் அல்லாஹ்வுடனும் வானவர்களுடனும் சேர்ந்து சாட்சியம் கூறுபவர்களாய் இருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருப்பதால் அறிவுடையோருக்கு

மாபெரும் சிறப்பு இருப்பதாக அறியமுடிகிறது. அறிவுடையோர் என்பதன் கருத்து மார்க்க அறிவு உடையோர் என்பதாகும். இதில் இறைவனுடைய கண்ணியத்திற்குரிய தூதர்களுக்கு முதலிடம் உண்டு.

இந்த ஏகத்துவ சாட்சி மிக முக்கியமான சாட்சியாகும். காரணம் சாட்சி சொல்பவர்களும் சாட்சி சொல்லப்படும் விஷயமும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதனால். சாட்சி சொல்பவர்கள் அல்லாஹ், வானவர்கள் மற்றும் அறிவுடையோர் ஆவர். சாட்சி சொல்லப்படும் விஷயம் வணக்கத்தில் இறைவனை ஒருமைப்படுத்துதல் எனும் ஏகத்துவம் ஆகும். இதை அந்த வசனத்தின் பிற்பகுதியும் உறுதிப்படுத்துகிறது: "வல்லமை மிக்கவனும், நுண்ணறிவாளனுமான அவனைத்தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறுயாருமில்லை."

**(2)**அதன் பொருள்-அதாவது "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதன் பொருள், உண்மையில் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்பதாகும். "லாஇலாஹ இல்லல்லாஹ்" என சாட்சியம் கூறுவதென்பது, உண்மையில் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை ஒரு மனிதன் தன் நாவாலும் உள்ளத்தாலும் ஒப்புக்கொள்வதாகும். "லாஇலாஹ இல்லல்லாஹ்" எனும் இக்கலிமாவில் எதிர்மறை, உடன்பாடு என இரு அம்சம் உள்ளன. "லாஇலாஹ" என்பதில் எதிர்மறையும் 'இல்லல்லாஹ்" என்பதில் உடன்பாடும் உள்ளது. அதாவது வணக்கத்திற்குரிய தகுதி எவனுக்கும் எதற்கும் கிடையாது என மறுத்துச்சொல்வது எதிர்மறை. இத்தகைய தகுதி அல்லாஹ்வுக்கு மட்டுமே உள்ளது என்பதை ஒத்துக்கொள்வது உடன்பாடு.

இங்கு நாம் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதற்கு உண்மையில் வணங்கப்படுவதிற்குரிய கடவுள் அல்லது வணங்கப் படுவதிற்குரிய உண்மையான கடவுள் அல்லாஹ்வைத் தவிர

வேறு யாருமில்லை என்று பொருள் கொண்டோம். ஆனால் இதன் பொருள் "அல்லாஹ்வைத்தவிர வேறுகடவுள் இல்லை" என்றிருக்குமானால், இந்தக் கேள்வி எழுவது நிச்சயம். அதாவது உலகில் அல்லாஹ்வைவிடுத்து, வணங்கப்படக்கூடிய வேறுகடவுள்கள் இருக்கவே செய்கின்றன. அவற்றை அல்லாஹ்வும் அவற்றை வணங்கக்கூடியவர்களும் கடவுள் என்றே கூறுகின்றனர்.

"மேலும் உம் இறைவனின் கட்டளை வந்துவிட்டபோது, அல்லாஹ்வைவிடுத்து அவர்கள் அழைத்த வண்ணமிருந்த அவர்களுடைய கடவுள்கள் அவர்களுக்கு எந்தப்பயனும் அளிக்கவில்லை."(11:101)

அவ்வாறிருக்க "லாஇலாஹ இல்லல்லாஹ்" -அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை - என்று எப்படிக்கூற முடியும்? மேலும் இறைத்தூதர்கள் தம் சமுதாயத்தவருக்கு, "என்னுடைய சமுதாயத்தவரே! அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனையன்றி வேறு இறைவன் உங்களுக்கில்லை." (7:59) என்று கூறியிருக்க அல்லாஹ் அல்லாதவர்களுக்கு வணங்கப்படுவதற்குரிய தகுதி இருக்கிறது என்பதை எப்படி ஒத்துக் கொள்ள முடியும்?

இதற்கான பதில் இதுதான்: அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படக்கூடிய இத்தகைய கடவுள்களும் கடவுள்களே! ஆனாலும் அவை உண்மையான கடவுள்களல்ல. மாறாக போலியான கடவுள்களேயாவர். அவற்றுக்கு வணங்கப்படுவதற்குரிய எந்தத் தகுதியும் கிடையாது. இதைத்தான் பின்வரும் வசனங்கள் தெறிவிக்கின்றன.

இது ஏனெனில் அல்லாஹ்தான் உண்மையானவன். அவனை விடுத்து இவர்கள் அழைக்கின்ற அனைத்தும் போலியானவை.

மேலும் அல்லாஹ்தான் உயர்ந்தவனும் மாபெரியவனுமாவான். (22:62)

இந்த லாத், உஸ்ஸா, மற்றும் மூன்றாவது தேவதையான மனாத் ஆகியவற்றின் உண்மை நிலைபற்றி நீங்கள் எப்போதேனும் சிந்தித்ததுண்டா? ஆண் மக்கள் உங்களுக்கும் பெண்மக்கள் இறைவனுக்குமா? அப்படியென்றால் இது ஒரு மோசமான பங்கீடேயாகும்! உண்மையில் இவை யெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக் கொண்ட சில பெயர்களேயன்றி வேறெது வுமில்லை. இவற்றிற்கு இறைவன் எந்த ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை. உண்மையா தெனில், மக்கள் வெறும் ஊகத்தையே பின்பற்றிக் கொண்டிருக்கின்றார்கள். மனம்போன போக்கில் செல்கின்றார்கள். இத்தனைக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து வழிகாட்டல் அவர்களுக்கு வந்து கொண்டிருக்கின்றது.(53:19-23)

அவனைவிடுத்து எவற்றை நீங்கள் வணங்கி வருகின்றீர்களோ அவையாவும் நீங்களும் உங்களுடைய மூதாதையர்களும் சூட்டிக் கொண்ட வெறும் பெயர்களே(தவிர வேறொன்றுமில்லை). அவற்றை வணங்குவதற்கு எத்தகைய ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்கி வைக்கவில்லை.(12:40)

---

**பின்வரும் வசனங்கள் அதனுடைய தெளிவான விளக்கமாக அமைகின்றன. அல்லாஹ் கூறுகிறான் - இப்ராஹீம்[1] தமது தந்தையிடமும், தமது சமூகத்தாரிடமும் கூறியதை நினைவுகூருங்கள் - நீங்கள் வணங்குகின்றவற்றை விட்டும் திண்ணமாக நான் விலகிக் கொண்டேன்,[2] என்னைப் படைத்தவனைத் தவிர.[3] அவனே எனக்கு வழிகாட்டுவான்.[4] மேலும் இதையே[5] இப்ராஹீம் தம் வழித்தோன்றல்களிலும் நிலைத்திருக்கும் கொள்கையாக்கினார். அவர்கள் (ஷிர்க்கை விட்டும்) அவன் பக்கம் திரும்புவதற்காக.*(43:26-28)***

**(நபியே!) நீர் கூறும் - வேதம் அருளப்பட்டவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள பொதுவான ஒரு விஷயத்தின்[6] பக்கம் வாருங்கள்**

**- அதாவது "அல்லாஹ்வைத்தவிர வேறு யாரையும் நாம் வணங்க மாட்டோம். அவனோடு எதனையும் நாம் இணைவைக்கமாட்டோம். மேலும் அல்லாஹ்வையன்றி நம்மில் ஒருவர் மற்றவரைக் கடவுள்களாக ஆக்கக்கூடாது."[7] அவர்கள் (இதனை) புறக்கணித்தால், "நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சியாக இருங்கள்" என்று கூறிவிடுங்கள்.(3:64)[8]**

---

**(1)**இப்ராஹீம் இறைவனின் நேசரும், ஏகத்துவவாதிகளின் வழிகாட்டியுமாவார். முஹம்மத்(ஸல்) அவர்களுக்குப் பிறகு இறைத்தூதர்களிலேயே மிகச்சிறந்தவர். அவரது தந்தை ஆஸர்.

**(2)**"நீங்கள் வணங்குகின்றவற்றை விட்டும் திண்ணமாக நான் விலகிக்கொண்டேன்"என்ற அவரின் கூற்று "லாஇலாஹ" என்பதற்கு ஒத்திருக்கின்றது. (அதாவது வணக்கத்திற்குரிய இறைவன் யாருமில்லை என்பதனாலேயே ஏனைய தெய்வங்களை விட்டும் விலகிக்கொண்டதாகக் கூறுகின்றார்)

**(3)**"என்னைப் படைத்தவனைத் தவிர" என்ற அவரின் கூற்று "இல்லல்லாஹ்" என்பதற்கு ஒத்திருக்கின்றது. (அதாவது வணங்கப்படுவதற்குரிய தகுதி அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு என்பதனால்தான் இவ்வாறு கூறுகின்றார்) ஏனெனில் ஆட்சி அதிகாரத்தில் அந்த அல்லாஹ்வுக்கு இணை, துணை இல்லாததுபோலவே வணக்கத்திலும் அவனுக்கு இணை, துணை யாரும் கிடையாது. அல்லாஹ் கூறுகிறான்:

அறிந்து கொள்ளுங்கள்: படைத்தலும் ஆட்சி, அதிகாரமும் அவனுக்கே உரியது! அனைத்துலகங்களுக்கும் அதிபதியான அல்லாஹ் அருள்வளமிக்கிவன்!(7:54)இந்த வசனத்தில் படைப்பும், ஆட்சி, அதிகாரமும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியவை எனக் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் படைக்கும் ஆற்றலும், உலக சம்பந்தமான மற்றும் ஷரீஅத்- மார்க்க சம்பந்தமான அதிகாரமும் அவனுக்கே உரியவையாகும்.

**(4)**அதாவது சத்தியத்தின் பக்கம் வழிகாட்டுவான். அதைப் பின்பற்றி நடக்க உதவி செய்வான்.

**(5)**அதாவது அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படுகின்ற அனைத்தையும் விட்டும் விலகுதல் என்பதை.

**(6)**பொதுவான விஷயம் என்பது வசனத்தில் கூறப்பட்டிருப்பது போல, "அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் நாம் வணங்கமாட்டோம். அவனோடு எதனையும் எவரையும் நாம் இணைவைக்க மாட்டோம். மேலும் நம்மில் எவரும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் இறைவனாய் ஆக்கிக் கொள்ளக்கூடாது" ஆகியனவாகும். லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதன் கருத்தும் இதுதான். இந்தக் கருத்தில் நாங்களும் நீங்களும் சமமானவர்கள்.

**(7)**அஹ்வைத் தவிர யாரையும் கடவுளாக்கக் கூடாது என்பதன் பொருள், அல்லாஹ்வை கண்ணியப்படுத்துவது போல அவரைக் கண்ணியப்படுத்துவதும் அல்லாஹ்வை வணங்குவதுபோல அவரை வணங்குவதும் சட்டமியற்றும் அதிகாரத்தை அவரிடம் ஒப்படைப்பதும் ஆகும்.

**(8)**அதாவது"நீங்கள்தான் அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கின்ற முஸ்லிம்கள்."லாஇலாஹ இல்லல்லாஹ்" எனும் மக்கத்துவமிக்க கலிமாவைப் புறக்கணித்தல், அசத்தியத்தில் பிடிவாதமாக இருத்தல் ஆகிய அவர்களின் செயலை விட்டும் விலகிக் கொண்டவர்கள்" என்பதை அவர்களுக்குத் தெளிவாக அறிவித்துவிடுங்கள். மேலும் அவர்களையே இதற்கு சாட்சியாகவும் ஆக்கிவிடுங்கள்.

---

**முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்ற சாட்சியத்திற்குரிய ஆதாரம் - திண்ணமாக உங்களிலிருந்தே[1] ஒரு தூதர் உங்களிடம் வந்திரக்கின்றார். நீங்கள் துன்பத்திற்குள்ளாவது அவருக்கு**

**கழனமாக இருக்கின்றது. அன்றியும் உங்கள் மீது அக்கறை கொண்டவராகவும்,[2] முஃமின்கள் மீது அதிகப் பரிவும் கருணையும் உடையவராகவும் இருக்கின்றார்.[3]*(9:128)***

**முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்று சாட்சியம் சொல்வகம் பொரள் - [4] அவர்கள் ஏவியவற்றில் அவர்களுக்குக் கீழ்படிவதும், அவர்கள் அறிவித்தவற்றை நம்புவதும். அவர்கள் விலக்கியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும், அவர்கள் மார்க்கமாக்கியதன் பிரகாரம் அல்லாஹ்வை வணங்குவதும் ஆகும்.**

---

**(1)**அதாவது உங்கள் இனத்திலிருந்தே, இன்னும் சொல்வதானால் உங்களுக்கு மத்தியிலிருந்தே. பின்வரும் வசனத்திலும் இவ்வாறே கூறிப்பிடுகிறான்: அவனே எழுதப்படிக்காத சமுதாயத்தில் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பினான். அவர் அவனது வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காட்டுகிறார், அவர்களைத் தூய்மைப்படுத்துகிறார், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக்கொடுக்கிறார். அவர்கள் இதற்கு முன்தெளிவான வழிகேட்டில் இருந்தார்கள்.(62:2)

**(2)**அதாவது உங்கள் நலனில்- உங்களை விட்டும் தீங்கையும் தீமையையும் தடுப்பதில் அக்கறை கொண்டவர்.

**(3)**ஏனெனில் காபிர்களுடனும் நயவஞ்கசர்களுடனும் போர் புரியும்படியும், அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளும்படியும் அவர்கள் ஏவப்பட்டிருக்கிறார்கள். எனவேதான் குறிப்பாக முஃமின்களிடம் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள்.

மேற்கூறப்பட்ட, அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் இத்தகைய தன்மைகள், உண்மையில் அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர் என்பதற்குச் சான்றாக இருக்கின்றன. பின்வரும் வசனங்களும் சான்றாக அமைகின்றன: முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார்.(48:29)

(நபியே!) நீர்கூறும்: மனிதர்களே! திண்ணமாக நான் உங்கள் அனைவர்பாலும் அனுப்பப்பட்டுள்ள அல்லாஹ்வின் தூதராவேன்.(7:158)
இந்தக்கருத்தில் ஏராளமான வசனங்கள் உள்ளன. அவை அனைத்தும் முஹம்மத்(ஸல்) அவர்கள் உண்மையில் அல்லாஹ்வின் தூதர் என்பதற்குச் சான்றாக உள்ளன.

(4)முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என சாட்சியம் சொல்வதன் பொருள்: இதனை நாவால் மொழிந்து ஏற்றுக் கொள்வதும்,"குறைஷி குலத்தில் ஹாஷிம் குடும்பத்தைச் சார்ந்த அப்துல்லாஹ்வுடைய மகன் முஹம்மத், ஜின்கள் மற்றும் மனிதர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்ட அல்லாஹ்வினுடைய தூதராவார்" என உள்ளத்தால் நம்புவதும் ஆகும். அல்லாஹ் கூறுகிறான்: நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்.(51:56)

முஹம்மத்(ஸல்)அவர்கள் கொண்டு வந்த இறைச்செய்தி கூறும் வழியில் அல்லாமல் அல்லாஹ்வை வணங்குவதென்பது முடியாது. மேலும் "அகிலத்தார் அனைவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டும்) இந்த ஃபுர்கானை (குர்ஆனை) தன் அடியார் மீது இறக்கிவைத்தவன் பெரும் பாக்கியம் நிறைந்தவன்!" (25:1) என்றும் கூறியுள்ளான்.

இந்த தூதுத்துவ சாட்சியத்தின் தேட்டம் என்னவெனில், அல்லாஹ்வின் தூதர் முஹம்மத்(ஸல்)அவர்களை நம்புவதும் அவர்கள் ஏவிய ஏவல்களை எடுத்து நடந்து, அவர்கள் விலக்கிய விலக்கல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதும், அவர்கள் மார்க்கமாக்கியதன்படி அல்லாஹ்வை வணங்குவதுமாகும். மேலும் படைத்துப் பரிபாலிப்பதிலோ, உலகை நிர்வகிப்பதிலோ அல்லது வணக்கத்திலோ அவர்களுக்கு எந்தபங்கும் கிடையாது. மாறாக அவர்கள் ஒரு அடிமை.அவர்கள் வணங்கப்பட மாட்டார்கள்.

அவர்கள் ஓர் இறைத்தூதர். அவர்கள் பொய்ப்படுத்தப்பட மாட்டார்கள். மேலும் அவர்கள் தமக்கோ அல்லது பிறருக்கோ நன்மையோ தீமையோ எதுவும் செய்ய முடியாது. இவையாவும் தூதுத்துவ சாட்சியத்தின் தேட்டமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

(நபியே!) நீர் கூறும்: அல்லாஹ்வின் கருவூலம் என்னிடம் உள்ளன என்றும், மறைவானவற்றை நான் அறிகிறேன் என்றும் உங்களிடம் நான் கூறவில்லை. மேலும் நான் ஒரு வானவர் என்றும் கூறவில்லை. என் மீது இறக்கியருளப்படுகின்ற வஹியை மட்டுமே நான் பின்பற்றுகின்றேன்.(6:50)

ஆக அவர்கள் ஒரு அடிமை. இறைவனால் ஏவப்பட்டவர். அவர்களுக்கு இடப்படுகின்ற கட்டளை எதுவோ அதையே அவர்கள் பின்பற்றுவார்கள்.
மேலும் அல்லாஹ் கூறுவதாவது: (நபியே!) நீர் கூறும்: உங்களுக்கு ஏதேனும் நன்மையோ தீமையோ செய்திடும் ஆற்றல் எனக்கில்லை. கூறும்: அல்லாஹ்வின் பிடியிலிருந்து எவராலும் என்னைக் காப்பாற்ற முடியாது, மேலும் அவனைத் தவிர வேறு எந்தப் புகலிடத்தையும் என்னால் பெற முடியாது. (72:21,22)

(நபியே!) கூறும்: அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ தீமையோ செய்துகொள்ள சக்தியில் லாதவன். மறைவானவற்றை நான் அறிபவனாக இருந்திருந்தால் எனக்கு நானே நன்மைகளை அதிகம் செய்திருப்பேன். மேலும் எந்தத் தீங்கும் என்னை அணுகியிருக்காது. என்னை நம்புகின்ற மக்களுக்கு நான் எச்சரிக்கை செய்பவனும் நற்செய்தி அறிவிப்பவனுமாக இருக்கின்றேன்.(7:188)

ஆக இதன் மூலம் தெரியவருவது என்னவெனில், திண்ணமாக வணங்கப்படுவதற்குரிய தகுதி நபி(ஸல்) அவர்களுக்கோ அல்லது ஏனைய படைப்பினங்களுக்கோ கிடையாது. மாறாக அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே அத்தகைய தகுதி உள்ளது. அல்லாஹ்

கூறுகிறான்: (நபியே!) கூறும்: திண்ணமாக எனது தொழுகையும், எனது குர்பானியும், என் வாழ்வும் என் மரணமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியனவாகும். அவனுக்கோ யாதொரு இணையுமில்லை. இவ்வாறே எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் நான் இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடப்போரில் முதன்மையானவனாக உள்ளேன். (6:162,163)

நபி(ஸல்)அவர்கள் விஷயத்தில் உனது கடமை என்ன வெனில் அல்லாஹ் அவர்களுக்கு எந்த அந்தஸ்தைக் கொடுத்துள்ளானோ அதே அந்தஸ்தை நாமும் கொடுக்கவேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்கள் என்பதே அது.

---

**தொழுகை மற்றும் ஸகாத்திற்குரிய ஆதாரம்[1] - அல்லாஹ் கூறுகிறான் - வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவர்களாக, முற்றிலும் ஒருமனப்பட்டவர்களாய் அல்லாஹ்வையே வணங்க வேண்டும், மேலும் தொழுகையை நிலைநாட்டி, ஸகாத் கொடுக்க வேண்டும்[2] என்றே அவர்கள் ஏவப்பட்டுள்ளனர். இது தான்[3] மிகவும் சரியான, நேரிய மார்க்கமாகும்.[4](9:85) தவ்ஹீதின் விளக்கமும் இதுதான்.**

---

**(1)**தொழுகையும் ஸகாத்தும் மார்க்கத்திலுள்ளது என்பதற்கு ஆதாரம்(98:5) வசனமாகும். இவ்வசனம் எல்லா வகையான வணக்க வழிபாடுகளையும் உள்ளடக்கிய ஒரு பொதுவான வசனமாகும். இவ்வசனப்படி மனிதன் எல்லா வணக்கவழிபாடுகளையும், ஒருமனப்பட்டவனாய் அல்லாஹ்வினுடைய மார்க்கத்தைப் பின்பற்றி அல்லாஹ்வுக்காவே என மனத்தூய்மையுடன் செய்வது அவசியமாகும்.

**(2)** இவ்வசனத்தில் பொதுவாக வணக்கத்தைப் பற்றிக்கூறிய இறைவன் தொழுகையையும் ஸகாத்தையும் தனியாக கூறியிருப்பதற்குக் காரணம் அவ்விரண்டிற்கும் மார்க்கத்தில்

முக்கியத்துவம் இருப்பதாலாகும். தொழுகை உடல்வழி வழி பாடாகும். ஸகாத் பொருள் வழி வணக்கமாகும். திருக்குர்ஆனில் இவ்விரண்டும் சேர்ந்தே வந்திருக்கின்றன.

**(3)**அதாவது வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கியவர்களாக, முற்றிலும் ஒருமனப்பட்டவர்களாய் அல்லாஹ்வையே வணங்கவேண்டும், தொழுகையை நிலை நாட்ட வேண்டும், ஸகாத் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

**(4)**இதில் கோணல் கிடையாது. ஏனெனில் இது அல்லாஹ் வினுடைய நேரான மார்க்கமாகும்."நிச்சயமாக இது தான் என்னுடைய நேரான வழியாகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள்.வேறு வழிகளைப் பின்பற்றாதீர்கள்.ஏனெனில் அவை நேரான வழியிலிருந்து உங்களைச் சிதறடித்துவிடும்" (6:153)என்று அல்லாஹ் கூறுவதைப் போல.
இவ்வசனம் வணக்க வழிபாடுகள், குறிப்பாக தொழுகை, ஸகாத் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பது போல ஏகத்து வத்தின் உண்மை நிலையையும் உள்ளடக்கியிருக்கின்றது. ஷிர்க்கின் பக்கம் சாராமல் வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்குவதுதான் அது. வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்காதவனும் அல்லாஹ் அல்லாதவருக்கு வணக்கத்தைச் செய்வதும் ஏகத்துவத்தை மேற்கொண்டவராக மாட்டார்.

---

**நேன்பிற்குரிய ஆதாரம்[1] - அல்லாஹ் கூறுகிறான் - இறைநம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. நீங்கள் இறையச்சமுடையோராய்த் திகழவேண்டும் என்பதற்காக.*(2:183)*[2] ஹஜ்ஜுக்குரிய ஆதாரம்[3] - மக்களில் அந்த ஆலயத்திற்குச் சென்றுவர சக்தி பெற்றவர் மீது அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்வது கடமையாகும். இதனை யாரேனும் மறுத்தால் (அவர் தெரிந்து கொள்ளட்டும்) உலகத்தார் அனைவரையும் விட்டும் நிச்சயம் அல்லாஹ் தேவையற்றவனாக இருக்கின்றான்.*(3:97)*[4]**

---

**(1)**அதாவது நோன்பு கடமை என்பதற்குரிய ஆதாரம். (2:183)வசனத்தில் "உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டதுபோல்" என்று இறைவன் கூறியிருப்பதில் பல பயன்கள் உள்ளன.

**1.**நோன்பின் முக்கியத்துவம் உணரப்படுதல்-அல்லாஹ் நமக்கு முன்பிருந்த சமுதாயத்தவர்கள் மீதும் நோன்பை கடமையாக்கினான் எனும் வகையில். இது, நோன்பை அல்லாஹ் நேசிக்கிறான், அது எல்லா சமுதாயத்துக்கும் அவசியமானது என்பதைக் காட்டுகிறது.

**2.**உடலுக்கும் உள்ளத்துக்கும் சிலவேளை சிரமமாக இருக்கக்கூடிய இந்த நோன்பு இந்த சமுதாயத்துக்கு மட்டும் கடமையாக்கப் படவில்லை எனும் வகையில் இந்த சமுதாயத்துக்கு இது லேசானதாகும்.

**3.**இதில் ஒரு சமிக்கினை உள்ளது. அதாவது அல்லாஹ் இந்த சமுதாயத்துக்கு அதனுடைய மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டான். முந்தைய சமுதாயத்துக்குக் கிடைத்த சிறப்புக்களை அல்லாஹ் இந்த சமுதாயத்துக்கும் பரிபூரணமாக்கி விட்டான் எனும் வகையில்.

**(2)**இவ்வசனத்தில் அல்லாஹ் "இறையச்சமுடையோராய் திகழ வேண்டும் என்பதற்காக" எனக் கூறுவதன் மூலம் நோன்பு கடமையாக்கப்பட்டதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியுள்ளான். அதாவது நோன்பு உங்கள் மீது கடமையாக்கப்பட்டதன் நோக்கம், நீங்கள் உங்கள் நோன்பு மூலமாகவும் நோன்பினால் ஏற்படக்கூடிய இறையச்சத்திற்குரிய பண்புகளின் மூலமாகவும் இறைவனை அஞ்சக்கூடிவர்களாய்த் திகழவேண்டும் என்பதற்காக. இந்த நன்மையைத் தான் நபி(ஸல்)அவர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்: "யார் பொய்யான பேச்சுக்களையும் அதன்படி செயல்படுவதையும் விட்டுவிடவில்லையோ அவர்

உண்ணாமல் பருகாமல் இருப்பதில் இறைவனுக்கு எந்தத் தேவையும் இல்லை" (புகாரி)

(3)அதாவது ஹஜ் கடமை என்பதற்குரிய ஆதாரம்(3:97) வசனமாகும். இவ்வசனம் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் இறக்கியருளப்பட்டது. இவ்வசனத்தின் மூலம் தான் ஹஜ் கடமையாக்கப்பட்டது. "அங்கு சென்றுவர சக்தி பெற்றவர்மீது..." என்று இறைவன் கூறுவதால் சக்தியில்லாதவர் மீது ஹஜ் கடமையாகாது.

(4)"இதனை யாரேனும் மறுத்தால் (அவர்தெரிந்துகொள்ளட்டும்) உலகத்தார் அனைவரையும் விட்டும் அல்லாஹ் நிச்சயம் தேவையற்றவானாக இருக்கின்றான்" எனும் இவ்வசனத்தில் சக்தி பெற்றவர் ஹஜ் செய்வதை விட்டுவிடுவது குஃப்ர்-இறைநிராகரிப்பாகும். ஆனாலும் அவர் அறிஞர்களின் ஏகோபித்த முடிவின் பிரகாரம் மார்க்கத்தை விட்டும் வெளியேறியவராக மாட்டார். ஏனெனில் "தொழுகையைத் தவிர வேறு எந்த செயலையும் விட்டுவிடுவது குஃப்ர் என்று நபித்தோழர்கள் கருதியது கிடையாது" என அப்துல்லாஹ் பின் ஷகீக்(ரஹ்)கூறியுள்ளனர்.

---

**இஸ்லாமிய மார்க்கத்தின் இரண்டாம் நிலை ஈமான்[1] ஆகும். இதற்கு எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. அவற்றில் மிக உயர்ந்தது லாஇலாஹ "இல்லல்லாஹ்" எனும் கலிமாவாகும். அவற்றில் மிகத்தாழ்ந்தது, பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை[2] அகற்றுவதாகும். நாணம் ஈமானின் ஒரு பகுதியாகும்.[3]**

---

(1)ஈமான் என்றால் அரபி அகராதியில் நம்புதல், உண்மைப்படுத்துல் என்று பொருள். இறைமார்க்கத்தில், ஈமான் என்றால் உள்ளத்தால் நம்பி, நாவால் மொழிந்து, உடல் உறுப்புக்களால் செயல் படுத்துதலாகும்.

**(2)**தொல்லை தரும் பொருட்கள் என்றால் உதாரணமாக, கற்கள், முட்கள், குப்பை- கூளங்கள், அசிங்கங்கள், துர்நாற்றம் உடையவை இன்னும் இது போன்றவையாகும்.

**(3)**நாணம் என்பது வெட்கப்படும்போது ஏற்படக்கூடிய ஒருவித உணர்வு ஆகும். ஆண்மைக்கு மாற்றமான செயலை செய்வதை விட்டும் ஒரு மனிதனை அது தடுக்கிறது.

---

**ஈமானின் அடிப்படைகள் ஆறு.[1] அவையாவன-**

---

**அல்லாஹ்வை நம்புவது[2]**

**(1)**முன்பு ஆசிரியர் ஈமானுக்கு 70 க்கும் மேற்பட்ட கிளைகள் இருப்பதாகக்கூறினார். இங்கு ஈமானின் அடிப்படைகள் ஆறு என்று கூறுகிறார். முரண்பாடுபோல் தோன்றக்கூடிய இவ்விரண்டையும் இணைக்கும் முறையாவது, இஸ்லாத்தின் அடிப்படையாக உள்ள ஈமானின் அடிப்படைஅம்சங்கள் ஆறு. அதுதான் ஜிப்ரீல்(அலை)அவர்களுடைய ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

அதாவது அவர்கள் நபி(ஸல்)அவர்களிடம் வந்து ஈமான் என்றால் என்ன? எனக் கேட்டபோது, நபி(ஸல்) அவர்கள், அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும், விதியையும்- அதில் நல்லது, கெட்டதையும் நம்புவது என பதிலளித்தார்கள். (புகாரி,முஸ்லிம்)

செயல்கள் மற்றும் அவற்றின் இனங்களையும் வகைகளையும் உள்ளடக்கிய ஈமான் எழுபதுக்கும் அதிகமான கிளைகளை கொண்டதாகும். இதனால் தான், "அல்லாஹ் உங்கள் ஈமானை வீணாக்க மாட்டான்" (2:143) என்ற வசனத்தில் தொழுகையை ஈமான் என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

கஃபாவை நோக்கித் தொழும்படி கட்டளை வருவதற்கு முன்பு நபித்தோழர்கள் பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது வந்தனர். எனவே இவ்வசனத்தில் ஈமான் என்பது பைத்துல் முகத்தஸை நோக்கித்தொழுத தொழுகை என விரிவுரையாளர்கள் குறிப்பிடுகின்றனர். (மேலதிக விளக்கத்திற்கு (2:143) வசனத்தை முழுவதும் பார்வையிடவும்)

**(2)**அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது நான்கு விஷயங்களை உள்ளடக்கியுள்ளது.

**1)**அல்லாஹ் இருப்பதாக நம்புவது. இயல்பும், பகுத்தறிவும் இறைமார்க்கமும், புலன்களும் அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு ஆதாரமாக உள்ளன.

**1.**அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு இயல்பின் ஆதாரம்:

ஒவ்வொரு படைப்பினமும் தன்னைப் படைத்த இறைவனை நம்பும் உணர்வுடன் படைக்கப்பட்டுள்ளது. இந்நிலை சிந்தனையூட்டலோ கற்பித்தலோ எதுவுமின்றியே மனிதர்களிடம் அமைந்துள்ளது. எவனுடைய உள்ளத்தில் திசை திருப்பும் கருத்து புகுத்தப்பட்டதோ அவனைத் தவிர வேறுயாரும் இத்தகைய இயல்புணர்வின் தேட்டத்திலிருந்து விலகுவது இல்லை. ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் இறைவனை நம்பும் இயல்புடனேயே பிறக்கின்றது. ஆனால் அதன் பெற்றோர் தாம் அதனை யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ, நெருப்பு வணங்கியாகவோ மாற்றிவிடுகின்றனர்.(புகாரி)

**2.**அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு பகுத்தறிவின் ஆதாரம்:

படைக்கப்பட்ட முந்தைய, பிந்தைய படைப்பினங்கள் அனைத்திற்கும் அவற்றைப் படைத்த படைப்பாளன் ஒருவன்

இருப்பது அவசியம். ஏனெனில் அவை தம்மைத்தாமே படைத்துக் கொள்வதற்கும் திடீரெனத் தோன்றி விடுவதற்கும் சாத்தியமில்லை.

அவை தம்மைத்தாமே படைத்துக் கொள்வதற்கு சாத்தியமில்லை என்று ஏன் சொல்கிறோமெனில், ஒரு பொருள் தன்னைத்தானே படைத்துக் கொள்ள முடியாது. காரணம் அது தோன்றுவதற்கு முன் எப்பொருளாயும் இல்லாமலிருந்தது. அப்படியாயின் "இல்லாமை" என்பது படைக்கும் ஆற்றலுடையதாக எப்படி ஆக முடியும்?

படைப்பினங்கள் திடீரெனத் தோன்றிவிடுவதற்கும் சாத்தியமில்லை என்று ஏன் சொல்கிறோமெனில், உருவாகும் ஒவ்வொரு பொருளுக்கும் உருவாக்கும் மூலகர்த்தா இருப்பது அவசியம்.

அதுமட்டுமல்ல, இந்தப்படைப்பினங்கள் இந்த நூதனமான அமைப்பில் அமைந்திருப்பதும், ஒருங்கிணைந்த கட்டுக்கோப்பான நிலையில் இருப்பதும், காரணங்களுக்கும் காரியங்களுக்கும் இடையிலான உறுதியான தொடர்பும், அண்ட சராசரங்களுக்கிடையே ஒன்று மற்றொன்றுடன் சம்பந்தப்பட்டிருப்பதும் படைப்பினங்கள் தற்செயலாக தோன்றிவிட்டன என்பதை உறுதியாக மறுக்கின்றன. ஏனெனில் திடீரெனத்தோன்றும் ஒரு பொருள் அது அசலில் உருவாகும்போதே ஓர் ஒழுங்கமைப்புடன் இருப்பதில்லை. பிறகு நீடித்து நிற்கும் நிலையிலும் பரிணமான நிலையிலும் எப்படி அது ஒழுங்கமைப்புடன் திகழமுடியும்?!

படைப்பினங்கள் தம்மைத்தாமே படைத்துக் கொள்ளவுமில்லை தற்செயலாகத் தோன்றவுமில்லை எனும்போது அவற்றைப்படைத்த ஒருவன் இருக்கவேண்டும் என்பது உறுதியாகிவிடுகிறது. அவன்தான் அகில உலகங்களையும் படைத்துப்பரிபாலிக்கும் அல்லாஹ்!

பகுத்தறிவுரீதியான இந்த ஆதாரத்தையும், உறுதியான அத்தாட்சியையும் "அத்தூர்" அத்தியாயத்தில் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்: படைப்பாளன் யாருமின்றித்தாமாகவே இவர்கள் படைக்கப் பெற்றுவிட்டார்களா? அல்லது இவர்கள் தமக்குத்தாமே படைப்பாளர்களாய் இருக்கின்றார்களா? (52:35) அதாவது இவர்கள் படைப்பாளனின்றித் தாமாகப் படைக்கப்படவுமில்லை. அல்லது இவர்கள் தம்மைதாமே படைத்துக்கொண்டவர்களும் அல்லர். ஆக எல்லாம்வல்ல அல்லாஹ்தான் அவர்களின் படைப்பாளன் என்பது உறுதியாகிவிட்டது.

இதனால்தான், ஜுபைர் இப்னுமுத்இம்(ரலி) அவர்கள்- "படைப்பாளன் யாருமின்றித் தாமாகவே இவர்கள் படைக்கப்பெற்று விட்டார்களா? அல்லது இவர்கள் தங்களுக்கு தாங்களே படைப்பாளர்களாய் இருக்கின்றார்களா? அல்லது வானங்களையும் பூமியையும் இவர்கள்தான் படைத்துள்ளார்களா? உண்மையாதெனில் இவர்கள் உறுதியான நம்பிக்கை கொள்வதில்லை. அல்லது உம்இறைவனின் கருவூலங்கள் இவர்களின் பிடியில் இருக்கின்றனவா? அல்லது அவற்றின் மீது இவர்களின் ஆதிக்கம்தான நடைபெறுகின்றதா?" (52:35-37)- எனும் "அத்தூர்" அத்தியாயத்தின் வசனங்களை நபி(ஸல்) அவர்கள் ஓதிடக்கேட்டபோது, அப்போது இணைவைப்பவராக இருந்த ஜுபைர்(ரலி)கூறினார்கள்: "எனது இதயம் சிறகடிக்கத் தொடங்கியது. என் உள்ளத்தில் ஈமான் இடம் பிடித்ததன் ஆரம்பம் இதுதான்."(புகாரி)

இதை இன்னும் தெளிவாகவிளக்க ஒரு உதாரணம் கூறுகிறோம்: உங்களிடம் ஒருவர் உறுதிமிக்க ஒரு மாளிகைபற்றிக் கூறுகிறார். அதைச்சுற்றித் தோட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுக் கிடையில் ஆறுகளும் ஓடுகின்றன. அம்மாளிகையில் விரிப்புகளும் கட்டில்களும் போடப்பட்டிருக்கின்றன. அம்மாளிகைக்குப் பூரண அழகு சேர்க்கும் வகையில்

விதவிதமான அழகு சாதனங்களைக் கொண்டும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

"இம்மாளிகையும் அதிலுள்ள அழகுசாதனங்களும் தம்மைத் தாமே உண்டாக்கிக் கொண்டன. அல்லது உருவாக்குபவன் யாரும் இன்றித் தற்செயலாகத் தோன்றின." என்று அம்மனிதர் உன்னிடம் கூறினால் உடனே அவர் சொல்வது பொய்எனக்கூறி அதனை மறுத்து விடுவாய். மேலும் அவரது இந்தப்பேச்சை முட்டாள்தனமாகக் கருதுவாய். இத்தனைக்குப்பிறகும் வானம், பூமி, கோள்கள், அவற்றின் நிலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்துவிரிந்த இப்பிரபஞ்சமும், அதன் நூதனமான, பிரமிக்கத்தக்க ஒழுங்கமைப்பும் படைப்பாளன் யாருமின்றிதானே உருவாகிவிட்டன. அல்லது தற்செயலாகத் தோன்றிவிட்டன என்று சொல்ல முடியுமா?

**3.**அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு இறைமார்க்கத்தின் ஆதாரங்கள்: இறைவனிடமிருந்து இறக்கியருளப்பட்ட வேதங்கள் அனைத்தும் இது பற்றிக்கூறியிருக்கின்றன. மக்கள் நலன்களை உள்ளடக்கிய சட்டங்களை அவ்வேதங்கள் கூறியிருப்பது, அவை நுண்ணறிவாளனும் மக்களின் நலன்களை நன்கறிந்தவனுமாகிய இறைவனிடமிருந்துதான் வந்துள்ளன என்பதற்கு ஆதாரமாகும். இப்பேரண்டத்தைப் பற்றிவேதங்கள் கூறியசெய்திகள் உண்மையானதுதான் என யதார்த்த நிலை சான்று அளித்திருப்பதும், அவ்வேதங்கள் இறைவனால் இறக்கியருளப்பட்டவை என்பதற்கும்தான் கூறியவற்றை உருவாக்கிட அவன் ஆற்றல் பெற்றவன்தான் என்பதற்கும் ஆதாரமாகும்.

**4.**அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கு புலன்களின் ஆதாரங்கள் இரு கோணங்களிலாகும்.

**1.**பிரார்த்திப்போரின் பிரார்த்னைகள் ஏற்கப்படுவதையும் துன்பங்களுக்கு ஆட்பட்டோர் இரட்சிக்கப்படுவதையும் நாம் கேள்விப்படுகிறோம், கண்கூடாகக் காண்கிறோம். இது அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கு உறுதியான ஆதாரம்.

அல்லாஹ் கூறுகிறான்: (இதே அருட்பேற்றினை) நாம் நூஹுக்கும் வழங்கினோம். முன்னர் அவர் நம்மிடம் பிரார்த்தனை செய்ததை நினைவுகூரும். நாம் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம். அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் மாபெரும் துன்பத்திலிருந்து காப்பாற்றினோம்.(21:76)

இன்னும் கூறுகிறான்: உங்கள் இறைவனிடம் நீங்கள் உதவி தேடியதை நினைத்துப்பாருங்கள். அப்போது அவன் உங்களுக்குப் பதிலளித்தான்.(8:9)

மேலும் அனஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்)அவர்கள் வெள்ளிக்கிழமை பிரசங்கம் செய்துகொண்டிருந்தபோது ஒரு கிராமவாசி வந்து, "அல்லாஹ்வின் தூதரே! செல்வங்கள் அழிந்து விட்டன! குழந்தை குட்டிகள் பசியால் வாடுகின்றனர்! எனவே எங்களுக்காக அல்லாஹ்விடம் துஆச் செய்யுங்கள்" என்றார். அப்போது நபி(ஸல்)அவர்கள் தமது இருகைகளை உயர்த்தி துஆச் செய்தார்கள். உடனே மலைகள் போல மேகங்கள் திரண்டு அவர்கள் மிம்பரிலிருந்து இறங்குவதற்குள் மழை கொட்டி அவர்களின் தாடியிலிருந்து வழிந்ததை நான் பார்த்தேன்.

மறு வெள்ளிக்கிழமை அதே கிராமவாசி அல்லது வேறொருவர் எழுந்து, "அல்லாஹ்வின் தூதரே! கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன! செல்வங்கள் மூழ்குகின்றன! எனவே எங்களுக்காக அல்லாஹ்விடம் துஆச் செய்யுங்கள்" என்றார். உடனே நபி(ஸல்)அவர்கள், தமது கைகளை உயர்த்தி, "இறைவா! இம்மழையை எங்கள் சுற்றுப் புறங்களில் பொழியச் செய்வாயாக!

எங்கள் மீது வேண்டாம்!" என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டிய (வானத்தின்) மூலைகளில் மேகங்கள் கலைந்து செல்லலாயின.(புகாரி,முஸ்லிம்)

பிரார்த்தனை செய்வோரின் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படுவது இன்றுவரை கண்கூடாகக்கண்டுவரும் விஷயமாகும். அல்லாஹ்விடம் உண்மையான முறையில் தஞ்சம் அடைந்து பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் பேணி அல்லாஹ்விடம் பிரார்த்திப்போரின் பிரார்த்தனை ஏற்கப்படுகிறது.

**2.**நபிமார்களுக்கு வழங்கப்பட்ட சான்றுகள். அவை முஃஜிஸாத்-அற்புதங்கள் என்று சொல்லப்படுகின்றன. மக்கள் அவற்றை கண்கூடாகக் கண்டுவருகிறார்கள் அல்லது கேட்டுவருகிறார்கள். இத்தகைய ஆதாரங்கள் அந்த நபிமார்களை அனுப்பிய ஒருவன் இருக்கிறான் என்பதற்கு உறுதியான ஆதாரங்களாகும். அவன்தான் அல்லாஹ்! ஏனெனில் அந்த அற்புதங்கள் மனிதசக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களாகும். அல்லாஹ் தனது தூதர்களுக்கு உதவியும் உறுதியும் அளிப்பதற்காக அவற்றை நிகழ்த்திக் காட்டுகிறான்.

உதாரணமாக மூஸா(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட சான்று: அல்லாஹ் அவர்களுக்குத் தமது கைத்தடியால் கடலை அடிக்குமாறு கட்டளையிட்டபோது அவர்கள் அதை அடித்தார்கள். கடல், காய்ந்த பன்னிரண்டு பாதைகளாகப் பிளந்தது. அவற்றுக்கிடையே தண்ணீர் மலைபோல நின்றது. அதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: உமதுகைத்தடியினால் அந்தக் கடலை நீர் அடியும் என மூஸாவுக்கு நாம் வஹீ அறிவித்தோம்.(அவ்வாறு அடித்ததும்) கடல் பிளந்தது. (பிளவுண்ட) ஒவ்வொரு பகுதியும் பெரும் மலைபோன்று ஆகி விட்டது.(26:63)

மற்றொரு உதாரணம்: ஈஸா(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம்: அவர்கள் அல்லாஹ்வின் அனுமதியுடன் இறந்தவர்களை உயிர்ப்பித்து, மண்ணறைகளிலிருந்து அவர்களை எழச்செய்தார்கள். அல்லாஹ் கூறுகிறான்: (மேலும் ஈஸா கூறினார்:) இறந்தவர்களை அல்லாஹ்வின் அனுமதி கொண்டு உயிர்பெற்றெழச் செய்வேன்.(3:49) மரணித்தவர்களை எனது கட்டளைப்படி நீர் வெளிக்கொணர்பவராய் இருந்தீர்.(5:110)

மூன்றாவது உதாரணம்: முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட சான்று: குறைஷிகள் அவர்களிடம் ஏதேனும் அற்புதம் செய்துகாட்டும்படி வேண்டியபோது, நபி(ஸல்)அவர்கள் சந்திரனைச் சுட்டிக்காட்ட அது இருகூறாகப் பிளந்தது. மக்கள் அதைப் பார்த்தனர்.

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: மறுமைக்கான நேரம் நெருங்கிவிட்டது. மேலும் சந்திரன் பிளந்து விட்டது. ஆனால் இந்த மக்கள் எந்தச் சான்றினைப் பார்த்தாலும் புறக்கணித்து விடுகிறார்கள். "இது எப்போதும் நடைபெறுகின்ற சூனியம்தான்" என்றும் சொல்கிறார்கள். (54:1,2)

தன்னுடைய தூதர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதற்காக அல்லாஹ் நிகழ்த்திக்காட்டக்கூடிய புலன்களுக்குட்பட்ட இத்தகைய சான்றுகள் அல்லாஹ் இருக்கிறான் என்பதை உறுதியாக அறிவிக்கக்கூடிய ஆதாரங்களாகும்.

2)அல்லாஹ்வின் படைத்துப் பரிபாலிக்கும் ஆற்றலை நம்புவது. அதாவது படைத்துப் பரிபாலிப்பவன் அவன் ஒருவனே. அதில் அவனுக்கு இணை துணை எதுவும் எவனும் கிடையாது என நம்புவது.

ரப்பு என்பது படைக்கும் ஆற்றல், ஆட்சி, அதிகாரம் அனைத்தும் யாருக்குக்கு இருக்கிறதோ அவனுக்குச்

சொல்லப்படும். எனவே அல்லாஹ்வைத் தவிர படைப்பவன் எவனு மில்லை, அவனைத் தவிர பேரரசன் யாரும் இல்லை, ஆட்சி அதிகாரம் அவனைத் தவிர வேறு யாருக்கும் இல்லை.

அல்லாஹ் கூறுகிறான்: அறிந்து கொள்ளுங்கள்! படைக்கும் ஆற்றலும் ஆட்சியதிகாரமும் அவனுக்குரியவையே.(7:54)

அந்த அல்லாஹ்தான் உங்களுடைய இறைவன். ஆட்சி அதிகாரம் அவனுக்குரியதே. அவனை விடுத்து நீங்கள் எவர்களைப் அழைக்கின்றீர்களோ அவர்கள் ஓர் இம்மியளவுப் பொருளுக்கும் அதிகாரம் உடையவர்களல்லர்.(35:13)

அல்லாஹ்தான் படைத்துப் பரிபாலிப்பவன் என்பதை மனிதர்களில் யாரும் மறுத்ததாகத் தெரியவில்லை. தான் சொல்வதைத் தானே நம்பாத பிடிவாதம் கொண்டவனைத்தவிர. பிர்அவ்ன் மறுத்ததைப்போல. அவன் தனது சமுதாயத்தாரிடம் கூறினான்: நான்தான் உங்களுடைய மாபெரும் இறைவன்.(79:24) மேலும் கூறினான்: அவையோரே! உங்களுக்கு என்னைத்தவிர வேறு இறைவன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.(28:38)

எனினும் அவன் உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் மறுக்கவில்லை. அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள் முற்றிலும் அநியாயமான முறையிலும் ஆணவத்தினாலும்தான் அந்தச் சான்றுகளை மறுத்தார்கள். ஆனால் அவர்களின் உள்ளங்களோ அவற்றை ஏற்றுக்கொண்டிருந்தன.(27:14)

மூஸா(அலை) ஃபிர்அவ்னிடம் கூறியதாக அல்லாஹ் கூறுகிறான்: அகத்தெளிவை ஏற்படுத்தக்கூடிய சான்றுகளை வானங்களையும் பூமியையும் படைத்த இறைவனைத்தவிர வேறுயாரும் இறக்கி வைக்கவில்லை என்பதை நீ நன்கறிவாய். ஃபிர்அவ்னே!

திண்ணமாக நான் உன்னை நாசத்திற்குள்ளாகக்கூடியவனாகவே கருதுகிறேன்.(17:102)

இதனால்தான் (மக்காவிலிருந்த) இணைவைப்பாளர்கள் வணக்கத்தில் அல்லாஹ்வுடன் பிறவற்றை இணையாக்கியதோடு படைத்துப் பரிபாலிப்பவன் அல்லாஹ்தான் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே! இவர்களிடம்) கேளும்:"நீங்கள் அறிந்திருந்தால் இப்பூமியும் இதிலுள்ள அனைவரும் யாருக்குரியவர்கள்? என்பதைக் கூறுங்கள்."அல்லாஹ்வுக் குரியவர்கள் என்று அவர்கள் சொல்வார்கள்."(அவ்வாறாயின்) நீங்கள் ஏன் உணர்ந்து கொள்வதில்லை" என்றுகேளும்."ஏழு வானங்களின் உரிமையாளனும் மகத்துவமிக்க அர்ஷினுடைய உரிமையாளனும் யார்?"என்றும் கேளும். அல்லாஹ் என்றே அவர்கள் கூறுவார்கள். "பிறகு ஏன் நீங்கள் அஞ்சுவதில்லை?" என்று கேளும்.

"எல்லாப் பொருட்களின் மீதுள்ள ஆட்சி அதிகாரம் யாருடைய கையில் இருக்கிறது? அனைவருக்கும் அபயம் அளிப்பவனும் எவராலும் அபயம் அளிக்கப்படத் தேவையில்லாதவனும் யார்? என்று உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்!"என்று கேட்டுப்பாரும்! அதற்கும் அல்லாஹ் என்றே பதில் கூறுவார்கள்."அப்படியானால் எங்கிருந்து நீங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள்?"என்று கேளும்.(23:84-89)

இன்னும் அல்லாஹ் கூறுகிறான்:(நபியே!)நீர் அவர்களிடம் வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்? என்று கேட்டால், வல்லமையும்,பேரறிவும் கொண்ட(இறை)வன்தான் அவற்றைப் படைத்தான் என்று அவர்கள் நிச்சயம் கூறுவார்கள்.(43:9) மேலும் அவர்களைப் படைத்தது யார்? என்று நீர் அவர்களிடம் கேட்டால், நிச்சயமாக அல்லாஹ் என்றே

அவர்கள் கூறுவார்கள். பிறகு எங்கிருந்து அவர்கள் திசைதிருப்பப் படுகிறார்கள்?(43:87)

அல்லாஹ்வின் கட்டளை என்பது பிரபஞ்சம் சம்பந்தப்பட்ட கட்டளையையும், மார்க்கச் சட்டதிட்டங்கள் சம்பந்தப்பட்ட கட்டளையையும் உள்ளடக்கியதாகும். அல்லாஹ் இப்பிரபஞ்சத்தை நிர்வகிப்பவனாக,அதில் தனது நுண்ணறிவின் தேட்டத்திற்கேற்ப தான் நாடியதைச செயல்படுத்துபவனாக இருப்பதுபோலலே உலகத்தில் தனது நுண்ணறிவின் தேட்டத்திற்கேற்ப வணக்கவழிபாடுகளையும் நடைமுறைப் பழக்கவழக்கங்களின் சட்டதிட்டங்களையும் வகுத்து கட்டளையிடுபவனாகவும் இருக்கிறான். எனவே யாரேனும் அல்லாஹ்வை விடுத்து வேறொருவரை வணக்க வழிபாடுகளிலும் நடைமுறைப் பழக்கவழக்கங்களிலும் சட்டம் இயற்றுபவனாக ஆக்கினால் அவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தவனாகி விடுவான். ஈமானைநிறைவுபடுத்தியவனாக மாட்டான்.

**3)**அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் என நம்புவது. அதாவது உண்மையிலேயே வணங்கப்படுவதற்குரிய இறைவன் அவன் மட்டும்தான். அதில் அவனுக்கு இணை துணையாரும் எதுவும் இல்லை என் நம்புவது.

("வணக்கத்திற்குரிய இறைவன்" என்பதற்கு மூலத்தில் "இலாஹ்" எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.) "இலாஹ்" என்றால் உள்ளன்புடனும் கண்ணியத்துடனும் வழிபாடு நடத்தப்படும் இறைவன் என்று பொருள். அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான். அவனைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவன் வேறு யாருமில்லை,(அவன்) அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்.(2:163)

அல்லாஹ் நீதியை நிலை நாட்டக்கூடியவனாக உள்ள நிலையில் வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத்தவிர வேறுயாருமில்லை

என்று சாட்சி கூறுகிறான். மேலும் மலக்குகளும் அறிவுடையோரும்(அவ்வாறே சாட்சி கூறுகின்றனர்). வல்லமை மிக்கவனும் நுண்ணறிவாளனுமான அவனைத்தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை.(3:18)

அல்லாஹ்வை விடுத்து அவனுடன் இணைக்கடவுளாக ஏற்படுத்தப்பட்டு வணங்கப்படுகின்ற அனைத்தும் போலியா னவையாகும். அல்லாஹ் கூறுகிறான்: இது ஏனெனில், அல்லாஹ் தான் உண்மையானவன். அவனை விடுத்து இவர்கள் அழைக்கின்ற அனைத்தும் போலியானவை. மேலும் அல்லாஹ்தான் உயர்ந்தோனாகவும் மாபெரியோனாகவும் இருக்கின்றான்.(22:62)

அவை கடவுள் என்று கூறப்படுவதால் மட்டுமே கடவுளாகிவிட முடியாது. அல்லாஹ் லாத், உஸ்ஸா, மனாத் ஆகிய தெய்வங்களைப் பற்றிக் கூறுகிறான்: உண்மையில் இவையெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக்கொண்ட சில பெயர்களேயன்றி வேறில்லை. நீங்களும் உங்கள் மூதாதையர்களும் வைத்துக்கொண்ட வெறும் பெயர்கள்! இவற்றிற்கு அல்லாஹ் எந்த ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை.(53:23)

ஹூத்(அலை) தமது சமுதாயத்தினருக்குச் சொன்னதை அல்லாஹ் கூறுகிறான்: நீங்களும் உங்களுடைய முன்னோர்களும் ஏற்படுத்திக் கொண்ட பெயர்களைக் குறித்தா நீங்கள் என்னிடம் தர்க்கம் செய்கிறீன்ர்கள்? அல்லாஹ் அவற்றிற்கு எந்த ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை.(7:71)

யூசுப்(அலை)அவர்கள் தமது இரு சிறைத்தோழர்களுக்குச் சொன்னதை அல்லாஹ் குறிப்பிடும் போது,"என்னுடைய சிறைத் தோழர்களே!(நீங்களே சிந்தித்துப் பாருங்கள்) பல்வேறுபட்ட கடவுளர் சிறந்தவர்களா? அல்லது யாவற்றையும் அடக்கி

ஆளுகின்ற ஏக இறைவனாகிய அல்லாஹ் சிறந்தவனா? அவனை விடுத்து எவற்றை நீங்கள் வணங்கி வருகிறீர்களோ அவையாவும் நீங்களும் உங்கள் மூதாதையரும் சூட்டிக்கொண்ட வெறும் பெயர்களேயன்றி வேறொன்று மில்லை. அவற்றை வணங்குவதற்கு எத்தகைய ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்கிவைக்கவில்லை."(12:39,40)என்று கூறுகிறான்.

இதனால்தான் எல்லா இறைத்தூதர்களும் தமது சமுதாயத்தவர்களுக்கு இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள். அவனையன்றி வேறு இறைவன் உங்களுக்கில்லை.(11:50,61) ஆனால் இணைவைப்பாளர்கள் அதனை மறுத்தனர். அல்லாஹ்வைவிடுத்து வேறு கடவுளர்களை ஏற்படுத்திக்கொண்டனர். அல்லாஹ்வுடன் அவர்களையும் வணங்கினார்கள். அவர்களிடம் உதவி தேடினார்கள், பாதுகாப்புத் தேடினார்கள். இணைவைப்பவர்களின் இச்செயல் தவறானது என்பதை அறிவுப்பூர்வமான இரு ஆதாரங்களின் மூலம் அல்லாஹ் நிரூபித்துள்ளான்.

1.அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட இத்தகைய கடவுள்களுக்கு வணங்கப்படுவதற்குரிய எந்த சிறப்பம்சமுமில்லை. அவைகளே படைக்கப்பட்டவைதாம். அவை எதனையும் படைக்க முடியாது. தம்மை வணங்குவோருக்கு எந்த நன்மையும் அளிக்கவோ அல்லது அவர்களை விட்டும் எவ்விதத் தீமையையும் தடுக்கவோ முடியாது. அவர்களை உயிர்ப்பிக்கவோ மரணிக்கச் செய்யவோ சக்தியற்றவை. வானங்களில் எதுவும் அவைகளின் ஆதிக்கத்தில் இல்லை. அதில் அவை பங்காளிகளாகவும் இல்லை.

அல்லாஹ் கூறுகிறான்: ஆனால் இவர்கள் அவனை விடுத்து எத்தகைய கடவுளரை ஏற்படுத்திக் கொண்டார்கள் எனில், அவை எந்தப் பொருளையும் படைப்பதில்லை. (ஏனெனில்)அவர்களே படைக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இன்னும் அவர்கள் தங்களுக்கு நன்மை செய்து கொள்ளவோ தீமையைத் தடுத்துக்

கொள்ளவோ சக்தி பெறமாட்டார்கள். மேலும் அவர்கள் உயிர்பிக்கவோ மரணிக்கச் செய்யவோ மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பவோ இயலாதவர்களாகவும் இருக்கின்றனர்.(25:3)

(நபியே! இந்த இணைவைப்பவர்களிடம்)கூறும்: அல்லாஹ்வை விடுத்து உங்களின கடவுளர்களாக யாரை நீங்கள் கருதுகிறீர்களோ அவர்களை அழைத்துப்பாருங்கள். வானங்களிலோ பூமியிலோ அவர்களுக்கு ஓர் அணுவளவும் அதிகாரமில்லை. அவற்றில் அவர்களுக்கு எத்தகைய பங்குமில்லை. இன்னும் அவர்களில் அவனுக்கு (அல்லாஹ்வுக்கு) உதவி செய்பவர்யாருமில்லை. மேலும் அவனிடத்தில் எந்த ஒரு பரிந்துரையும் யாருக்கும் பயனளிக்காது. யாவருக்கு அவன் பரிந்துரை வழங்கஅனுமதி கொடுக்கிறானோ அவரைத் தவிர! (34:22,23)

மேலும் கூறுகிறான்: எந்தப் பொருளையும் படைக்கயிலா தவற்றையா இவர்கள்(அல்லாஹ்வுக்கு) இணையாக்குகிறார்கள்? இன்னும் அவைகளே(அல்லாஹ்வால்)படைக்கப்பட்டவை தாம்! இவர்களுக்கு எத்தகைய உதவியும் செய்ய அவற்றால் இயலாது. அவர்கள் தமக்குத் தாமே உதவி செய்துகொள்ளவும் முடியாது.(7:191,192)

இதுதான் அந்தத் தெய்வங்களின் நிலை எனும்போது அவற்றைக் கடவுளாகக் கருதுவது மிகப்பெரும் முட்டாள் தனமும் மாபெரும் தவறுமாகும்.

2.இந்த இணைவைப்பாளர்கள் படைத்துப் பரிபாலிப்பவன் அல்லாஹ் ஒருவன்தான். எல்லாப் பொருட்களின் ஆட்சியதிகாரம் அவன் கையில்தான் இருக்கிறது. அனைவருக்கும் அபயம் அளிப்பவனும் எவராலும் அபயம் அளிக்கப்படத் தேவையில்லாதவனும் அவன்தான் என்பதை ஏற்றிருந்தனர். இது, படைத்துப் பரிபாலிப்பவன் அவன் மட்டும்தான் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டதுபோல வணக்கத்திற்குரிய இறைவனும்

அவன் மட்டும்தான் என்பதை அவர்கள் ஏற்றிட வலியுறுத்துகிறதல்லவா?!

அல்லாஹ் கூறுகிறான்: மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள்.(அதனால்) நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். அவனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் ஆக்கினான். மேலும் வானத்திலிருந்து மழையைப் பொழியச் செய்து அதன் மூலம் உங்கள் உணவுக்காக விளைபொருட்கள் அனைத்தையும் வெளிப்படுத்துகிறான். எனவே,(இவற்றையெல்லாம்) நீங்கள் அறிந்திருந்தும் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள் (2:21,22)

மேலும் அவர்களைப் படைத்தது யார்? என்று நீர் அவர்களிடம் கேட்டால், நிச்சயமாக அல்லாஹ் என்றே அவர்கள் கூறுவார்கள். பிறகு எங்கிருந்து அவர்கள் திசைதிருப்பப்படுகிறார்கள்?(43:87)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: (நபியே! இவர்களிடம்) கேளும்: "வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? உங்களிடமுள்ள கேட்கும் மற்றும் பார்க்கும் ஆற்றல் யாருடைய அதிகாரத்தில் உள்ளன? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும் உயிருள்ளவற்றி லிருந்து இறந்தவற்றையும் தோற்றுவிப்பவன் யார்? (அகிலங்களின் அனைத்துக்) காரியங்களையும் நிர்வகிப்பவன் யார்?"

அதற்கு அவர்கள் "அல்லாஹ்தான்" என்று பதில் கூறுவார்கள். "அவ்வாறாயின் நீங்கள் (உண்மைக்கு மாறாய் நடப்பதை) தவிர்ந்து கொள்ளக் கூடாதா?" என்று கேளும் ஆகவே இந்த அல்லாஹ்தான் உங்களின் உண்மையான இறைவன்! உண்மைக்குப் பின்னே வழிகேட்டைத் தவிர வேறு என்ன இருக்கிறது? நீங்கள் எங்கு திருப்பப்படுகின்றீரகள்? (10:31,32)

**4)**அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் நம்புவது: அதாவது அல்லாஹ் தனக்கு என்னென்ன பெயர்களும் பண்புகளும் இருப்பதாகத் திருக்குர்அனில் கூறியுள்ளானோ அல்லது நபி(ஸல்)அவர்கள் தம்முடைய ஹதீஸில் கூறியுள்ளார்களோ அவற்றை மாற்றாமல், மறுக்காமல், விவரிக்காமல், உவமைப்படுத்தாமல் அவனுடைய கண்ணியத்திற்கும் மகத்துவத்திற்கும் ஏற்ற முறையில் அப்படியே அவனுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. எனவே அவற்றைக் கொண்டே அவனை அழையுங்கள். அவனுடைய பெயர்களைத் தவறாகப் பயன் படுத்துவோரை விட்டுவிடுங்கள். அவர்களுடைய செயல்களுக்காக அவர்கள்(தக்க)கூலி கொடுக்கப்படுவார்கள். (7:180) வானங்களிலும் பூமியிலும் அவனுடைய தன்மை மிக உயர்ந்ததாகும். மேலும் அவன் வலிமைமிக்கவன், நுண்ணறிவாளன்.(30:27)அவனைப் போன்று எதுவும் இல்லை. அவன்தான் யாவற்றையும் செவியேற்பவன், பார்ப்பவன்.(42:11)

அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் விஷயத்தில் இரு பிரிவினர் வழிதவறிவிட்டனர்.

முதல் பிரிவினர்:"முஅத்திலா"-க்கள்-மறுப்பவர்கள். அதாவது அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் அனைத்தையுமோ அல்லது சிலவற்றையோ மறுப்பவர்கள். அல்லாஹ்வுக்குப் பெயர்கள் பண்புகள், இருப்பதாகக் கூறினால் அவனைப்படைப்பினங்களுடன் ஒப்பிட வேண்டியது வரும் என்று அவர்கள் கருதினார்கள். இந்த வாதம் பல காரணங்களால் தவறானதாகும். அவற்றில் இரண்டு வருமாறு:

**1.**அல்லாஹ்வின் வார்த்தையில் முரண்பாடு உள்ளது போன்ற வீணானபிரச்சனைகள் உருவாகும். இது எப்படியென்றால்,

அல்லாஹ் தனக்குப்பெயர்களும் பண்புகளும் இருப்பதாக் கூறியுள்ளான். மேலும் அவனைப்போன்று எதுவுமில்லை எனவும் மறுத்துரைத்துள்ளான். அல்லாஹ்வுக்குப் பெயர்களும் பண்புகளும் இருப்பதாகச் சொல்வது அவனைப்படைப்பினங்களுடன் ஒப்பிடுவதாக அமையும் என்றிருக்குமானால் அல்லாஹ்வின் வார்த்தையில் முரண்பாடு ஏற்படுவதுடன் ஒன்று மற்றொன்றைப் பொய்ப்படுத்துவதாகவும் ஆகிவிடும்.

**2.**இரண்டு பொருட்கள் பெயரிலோ அல்லது பண்பிலோ ஒத்திருப்பது அவை இரண்டும் சரி நிகரானவையாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நீ இரண்டு மனிதர்களைப் பார்க்கிறாய். அவ்விருவரும் கேட்கின்ற, பார்க்கின்ற, பேசுகின்ற ஆற்றலுள்ள மனிதர்கள் என்ற அடிப்படையில் ஒத்திருக்கின்றனர். அதனால் அவ்விருவரும் மனிதத்தன்மையில், கேட்கின்ற, பார்க்கின்ற, பேசுகின்ற ஆற்றலில் சரிநிரானவர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை.

அது போலவே நீ பிற உயிரினங்களைப் பார்க்கிறாய். அவற்றுக்கு கைகள்,கால்கள்,கண்கள் உள்ளன. இவற்றில் அவை ஒத்திருப்பதால் அந்த உயிரினங்கள் அனைத்தும் சரிநிகரானவையாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. எனவே பெயர்கள், பண்புகள் ஒத்த படைப்பினங்களுக்கு மத்தியிலேயே வேறுபாடு தோன்றும்போது படைத்தவனுக்கும் படைப்பினங்களுக்கும் மத்தியில் அந்த வேறுபாடு மிக மிகத் தெளிவானதாகவும் மிகப் பெரியதுமாகவும் இருக்கும்.

இரண்டாம் பிரிவினர்: "முஷப்பிஹா"-க்கள்- ஒப்பிடுபவர்கள். இவர்கள் அல்லாஹ்வுக்குப் பெயர்களும் பண்புகளும் இருப்பதாகக் கூறும் அதே நேரத்தில் படைப்பினங்களுடன் அவனை ஒப்பிடுகின்றனர். மேலும் "மூல ஆதாரங்களுடைய கருத்தின் தேட்டமும் இதுதான். ஏனெனில் அல்லாஹ் அடியார்களிடம் அவர்கள் புரிந்துகொள்ளும் வார்த்தைகளில் தான்

உரையாடுகின்றான் என்பதாகவும் கருதுகின்றனர். இந்த வாதமும் பல காரணங்களால் தவறானதாகும்.

**1.**அல்லாஹ் தன்னுடைய படைப்புக்கு ஒப்பாக இருக்கிறான் என்பது தவறானதாகும். அறிவும் இறைமார்க்கமும் அதனைத்தவறு என்றே கூறுகின்றன. மேலும் குர்ஆன், ஹதீஸினுடைய வார்த்தைகளின் தேட்டம் தவறான கருத்தாக இருக்க முடியாது.

**2.**அல்லாஹ் தனது அடியார்களுடன் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய வார்த்தைகளைக் கொண்டு உரையாடுவது அவ்வார்த்தைகளின் அசல் அர்த்தத்தைப் பொருத்தேயாகும். ஆனால் அந்த அர்த்தம் எந்த எதார்த்த நிலையில் அமைந்துள்ளதோ அந்த எதார்த்த நிலை பற்றிய அறிவை அல்லாஹ் தனது உள்ளமை மற்றும் தன்மைகளைப் பொருத்த அளவில் தனக்குரியதாக்கிக் கொண்டான்.

"அனைத்தையும் செவியேற்பவன்" என்று அல்லாஹ் தன்னைப் பற்றி கூறுகிறான் எனில், செவியேற்றல் என்பது(சப்தங்களைக் கேட்டல் எனும் அதன்) அசல் அர்த்தத்தைப் பொருத்து எல்லோரும் அறிந்த ஒன்றுதான். எனினும் அல்லாஹ்வின் செவியேற்கும் ஆற்றலைப் பொருத்து அதன் யதார்த்த நிலை யாராலும் அறிந்து கொள்ள முடியாததாகும். ஏனெனில் படைப்பினங்களுக்கு மத்தியிலேயே செவியேற்றலின் எதார்த்த நிலை வித்தியாசப்படும் போது படைத்தவனுக்கும் படைப்பினங்களுக்கும் மத்தியில் அது வித்தியாசப்படுவது மிகத்தெளிவானதும் பெரிய அளவிலானதும் ஆகும்.

அல்லாஹ் தன்னைப் பற்றி "அவன் அர்ஷின் மீது அமர்ந்தான்" என்று தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறான் எனில், அமர்தல் என்பது அதன் அசல் அர்த்தத்தைப் பொருத்து யாவரும் அறிந்த ஒன்றுதான். ஆனால் அமர்தல் என்பதன் யதார்த்த நிலை

அதாவது அல்லாஹ் அர்ஷின் மீது அமர்ந்தான் என்பதன் யதார்த்த நிலை நம்மால் அறிந்து கொள்ள முடியாத தாகும்.

ஏனெனில் படைப்பினங்களுக்கு மத்தியிலேயே அமர்தல் என்பதன் யதார்த்த நிலை வித்தியாசப்படுகிறது. அசையாமல் உறுதியாக உள்ள ஆசனத்தில் அமர்வது விரண்டோடும் முரட்டுத்தனமான ஒட்டகத்தின் மீது அமர்வதைப் போலன்று! ஆக படைப்பினங்கள் விஷயத்திலேயே இது வேறு படும்போது படைத்தவனுக்கும் படைப்பினங்களுக்கும் மத்தியில் அவ்வேறுபாடு தெள்ளத் தெளிவானதும் மிகப் பெரியதும் ஆகும்.

நாம் மேலே கூறியது போன்று அல்லாஹ்வை நம்புவது முஃமின்களுக்கு மகத்தான பலன்களைத்தருகின்றது. அவற்றுள் சில:

**1.**அல்லாஹ்வை ஒருமைப்படுத்துதல் எனும் ஏகத்துவத்தை முழுமைப்படுத்துதல். அவனல்லாதவரிடம் ஆதரவும் அச்சமும் கொள்ளப்படாதவகையில் - அவனல்லாதவருக்கு வழிபாடு செலுத்தப்படாத வகையில்.

**2.**அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள் மற்றும் உயர்ந்த பண்புகளின் தேட்டத்திற்கேற்றவாறு பரிபூரணமான முறையில் அவனை மகத்துவப்படுத்துதல், பரிபூரணமான முறையில் அவனை நேசித்தல்.

**3.**அவனுடைய ஏவல்களை எடுத்து நடந்து அவன் விலக்கியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலம் வணக்கவழிபாட்டை மெய்ப்படுத்துவது.

---

### அவனுடைய மலக்குகளை நம்புவது[1]

---

**(1)**மலக்குகள் நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு படைப்பினம். அல்லாஹ்வை வணங்குபவர்கள். படைத்துப் பரிபாலித்தலுக்குரிய

மற்றும் வழிபடுவதற்குரிய சிறப்பம்சங்களில் எதுவும் அவர்களுக்குக் கிடையாது. அல்லாஹ் அவர்களை ஒளியினால் படைத்துள்ளான். தனது ஆணைக்கு முழுமையாகக் கீழ்ப்படியும் தன்மையையும் அதனைச் செயல்படுத்தும் ஆற்றலையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியுள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்: மேலும் அவனிடம் இருப்பவர்கள் (மலக்குகள்)அவனை வணங்குவதை விட்டும் பெருமையடிக்கவும் மாட்டார்கள், சோர்வடையவும் மாட்டார்கள். இடைவிடாமல் அவர்கள் இரவிலும் பகலிலும் அவனைத் துதித்துக்கொண்டே இருக்கிறார்கள்.(21:19,20)

அவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளவர்கள். அவர்கள் எத்தனை பேர் என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது.
மிஃராஜ் பற்றிய சம்பவத்தில் அனஸ்(ரலி)அறிவிக்கும் ஹதீஸில் வருவதாவது: வானத்தில் உள்ள பைத்துல் மஃமூர் நபி (ஸல்)அவர்களுக்கு எடுத்துக்காட்டப்பட்டது. அதில் ஒவ்வொரு நாளும் எழுபது ஆயிரம் வானவர்கள் தொழுகிறார்கள். அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டால் மீண்டும் அங்கு திரும்பி வர மாட்டார்கள். அதுவே அவர்களுக்குக் கடைசி வருகையாக இருக்கும். (புகாரி,முஸ்லிம்)

**வானவர்களை நம்புவதில் *4* விஷயங்கள் உள்ளன:**

**1.**அப்படி ஒரு படைப்பு உண்டு என நம்பவேண்டும்.

**2.**அவர்களில் யாருடைய பெயரை நாம் அறிந்துள்ளோமோ அத்தகைய வானவரை அவருடைய பெயருடன் நம்ப வேண்டும். உதாரணமாக ஜிப்ரீல்.பெயர் தெரியாத வானவர் களை பொதுவாக நம்ப வேண்டும்.

**3.**அவர்களுடைய தன்மைகளில் நாம் அறிந்தவற்றை நம்ப வேண்டும். உதாரணமாக ஜிப்ரீல்(அலை)அவர்களின் தன்மையைப் போல. அவர்கள் எந்த தன்மையில் படைக்கப்பட்டுள்ளார்களோ அதே தன்மையில் அவர்களைத்தாம் கண்டதாகவும், அவர்களுக்கு 600 இறக்கைகள் இருந்ததாகவும், அவர்கள் கீழ்வானத்தையே அடைத்து நின்றதாகவும் நபி(ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மலக்கு சிலவேளை அல்லாஹ்வின் ஆணையுடன் மனித உருவிலும் வருவார். அல்லாஹ், மர்யம்(அலை)அவர்களிடம் ஜிப்ரீலை அனுப்பிய போது அவர் சரியான மனித உருவில் தோன்றினார். ஒரு முறை நபி(ஸல்)அவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்திருந்தபோது அவர்களிடம் வெள்ளை வெளேர் என்ற ஆடை அணிந்த ஒரு மனித வடிவில் ஜிப்ரீல் வந்தார். அவரது தலைமுடி கன்னங்கரேலென்று இருந்தது. பயண அடையாளம் ஏதும் அவரிடம் காணப்படவில்லை. அவரை நபித்தோழர்களில்யாரும் முன்பின் அறிந்திருக்கவுமில்லை. அவர் நபி(ஸல்)அவர்களின் அருகில் அமர்ந்தார். தமது முழங்கால்களை நபி(ஸல்)அவர்களின் முழங்கால்களுடன் சேர்த்து வைத்தார். தமது இரு கைகளையும் தமது இரு தொடைகளின் மீது வைத்தார். பிறகு இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் பற்றியும் கியாம நாள் மற்றும் அதன் அடையாளங்கள் பற்றியும் நபி(ஸல்)அவர்களிடம் வினவினார். நபி(ஸல்) அவர்கள் அவற்றுக்குப் பதிலளித்தார்கள். உடனே அவர் திரும்பிச் சென்று விட்டார். பின்னர் நபி(ஸல்), "இவர் ஜிப்ரீல், உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்கு கற்றுத்தர உங்களிடம் வந்தார்" என்று கூறினார்கள்.(முஸ்லிம்)

இவ்வாறே இப்ராஹீம்(அலை),லூத்(அலை)ஆகியோரிடம் அல்லாஹ் அனுப்பி வைத்த வானவர்களும் மனித உருவில் வந்திருக்கிறார்கள்.

**4.**அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் அவர்கள் நிறை வேற்றுகின்ற அவர்களுடைய செல்பாடுகளில் நாம் அறிந்தவற்றை நம்ப வேண்டும். உதாரணமாககளைப்பு சோர்வு எதுவுமின்றி இராப்பகலாக இறைவனை துதித்தல், வழிபாடு செய்தல் போன்று!

அவர்களில் சிலருக்கு குறிப்பிட்ட சில பணிகளும் இருக்கின்றன. உதாரணமாக:வஹியைக் கொண்டு செல்லும் பணிக்கு நம்பிக்கைக்குரிய ஜிப்ரீல்(அலை)நியமிக்கப்பட்டிருப்பது போன்று. அல்லாஹ் அவர்களை நபிமார்கள், ரசூல்மார்களுக்கு வஹியைக் கொடுத்து அனுப்பி வைக்கின்றான்.

மழை பொழிவித்து தாவரங்களை விளைவிக்கும் பணிக்கு மீக்காயீல்(அலை)நியமிக்கப்பட்டிருப்பது போன்று.

கியாமத் நாள் ஏற்படும்போதும், படைப்பினங்களை மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பும் போதும் சூர் எனும் எக்காளம் ஊதும் பொறுப்புக்கு இஸ்ராஃபீல்(அலை)நியமிக்கப்பட்டிருப்பது போன்று.

மரணிக்கும்போது உயிர்களைக் கைப்பற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட மலக்குகள் இருப்பதைப் போன்று.

நரகக் காவலராக மாலிக்(அலை)நியமிக்கப்பட்டிருப்பது போன்று.

மனிதன் தாயின் கருவரையில் நான்கு மாதக் கருவாயிருக்கும் போது அல்லாஹ் ஒரு மலக்கை அனுப்பி அதன் ரிஸ்க்-வாழ்வாதாரம், வாழ்நாள், அதன் செயல்பாடுகள்,அவன் நற்பாக்கியமுடையவனா, துர்ப்பாக்கியமுடையவனா என்ற விபரங்களை எழுதும்படிக் கட்டளையிடுகின்றான்.
மனிதர்களின் செயற்பாடுகளைப் பாதுகாத்து அவற்றை எழுதி வைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட மலக்குகளைப் போன்று. இந்தப் பொறுப்புக்காக ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு

மலக்குகள் உள்ளனர். ஒருவர் அவனது வலது புறமும் இன்னொருவர் அவனது இடது புறமும் இருப்பார்.

மரணமடைந்தவர் மண்ணறையில் வைக்கப்படும்போது அவரிடம் கேள்வி கேட்பதற்காக நியமிக்கப்பட்ட மலக்குகளைப் போன்று. அவரிடம் இரண்டு மலக்குகள் வந்து அவருடைய இறைவன், அவருடைய மார்க்கம், அவருடைய நபி ஆகியவற்றைக் குறித்து கேள்வி கேட்பார்கள்.

மலக்குகளை நம்புவதில் மகத்தான பலபயன்கள் உள்ளன. அவற்றுள் சில:

1.அல்லாஹ்வின் மகத்துவம், ஆற்றல், ஆட்சி அதிகாரம் ஆகியவற்றை அறிதல். ஏனெனில் படைப்பினங்களின் மகத்துவம் படைத்தவனின் மகத்துவத்தில் அடங்கியதுதானே!

2.மனிதர்களைப் பாதுகாக்கவும், அவர்களது செயல்களைப் பதிவுசெய்யவும் மற்றும் அவர்களின் ஏனைய நலன்களுக்காகவும் இந்த மலக்குகளை அல்லாஹ் நியமித்திருக்கும் வகையில் மனிதர்களை அல்லாஹ் பராமரித்துப் பாதுகாப்பதற்காக அவனுக்கு நன்றி செலுத்துதல்.

3.மலக்குகளை நேசித்தல். அவர்கள் அல்லாஹ்வை வணங்கி வழிபடுகிறார்கள் என்பதற்காக.

வானவர்கள் உடலமைப்பு கொண்டவர்கள் என்பதை வழி தவறிய கூட்டத்தினர் சிலர் மறுத்துள்ளனர். மேலும் படைப்பினங்களிடம் மறைந்துள்ள நல்ல சக்திகளுக்குத்தான் மலக்குகள் என்று சொல்லப்படுகின்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர். இது அல்லாஹ்வின் வேதத்தையும் நபிவழியையும் மற்றும் முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவையும் பொய்ப்படுத்துவதாகும். அல்லாஹ் கூறுகிறான்: வானங்களையும் பூமியையும்

படைத்தவனும் வானவர்களை தூதுகொண்டு செல்பவர்களாக நியமித்தவனும் ஆகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். (அவ்வானவர்கள் எத்தகையோர் எனில்) அவர்களுக்கு இரண்டிரண்டு, மூன்று மூன்று, நான்கு நான்கு இறக்கைகள் உள்ளன.(35:1)

(வீழ்த்தப்பட்ட) நிராகரிப்பாளர்களின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்ததை நீர்கண்டிருக்க வேண்டுமே! அந்த வானவர்கள்கள், அவர்களுடைய முகங்களிலும் முதுகுகளிலும் அடித்துக்கொண்டிருந்தார்கள்.(8:50)

இந்த அக்கிரமக்காரர்கள் மரணவேதனைகளில் சிக்கியிருக்கும்போது நீர் பார்க்க வேண்டுமே! வானவர்கள் தங்கள்கரங்களை நீட்டியவாறு "கொடுங்கள் உங்கள் உயிர்களை .... (என்று கூறுவார்கள்)"(6:93)

மேலும் கூறுகிறான்: இவ்வாறு வானவர்களின் உள்ளங்களிலிருந்து அச்சம் அகலும்போது "உங்களுடைய இறைவன் என்ன கூறினான்?" என்று கேட்பார்கள். அதற்கு, " (சொல்ல வேண்டிய)உண்மையையே கூறினான். அவன் மிக்க உயர்ந்தவனும் மகாப்பெரியவனும் ஆவான்" என்று பதில் கூறுவார்கள்.(34:23)

ஓரிடத்தில் சுவர்க்கவாசிகள் குறித்து அல்லாஹ் கூறும்போது, "வானவர்கள் எல்லா வாசல்களில் இருந்தும் அவர்களை வரவேற்க வருவார்கள். மேலும் அவர்களிடம் கூறுவார்கள்: "உங்கள் மீது சாந்தி நிலவட்டும். (உலகில்)நீங்கள் பொறுமையுடன் வாழ்ந்து வந்த காரணத்தால் இன்று இதற்குத்தகுதி பெற்றிருக்கிறீர்கள். மறுமையின் இல்லம் எத்துணை அழகானது! "(13:23,24) என்று கூறுகின்றான்.

நபி(ஸல்)கூறினார்கள்:அல்லாஹ் ஓர் அடியானை நேசித்துவிட்டால் ஜிப்ரீல்(அலை) அவர்களை அழைத்து, "திண்ணமாக அல்லாஹ் இன்னஅடியானை நேசிக்கிறான். எனவே நீரும் அவனை நேசிப்பீராக" என்று கூறுகிறான். அவ்வாறே ஜிப்ரீல் அவரை நேசிக்கிறார். பிறகு வானிலுள்ளவர்களிடம் ஜிப்ரீல் அறிவிப்புச் செய்கிறார்:"திண்ணமாக அல்லாஹ் இன்ன அடியானை நேசிக்கிறான் எனவே நீங்களும் அவரை நேசியுங்கள்"அவ்வாறே வானத்தில் உள்ளவர்களும் அவரை நேசிக்கின்றனர். பிறகு அந்த பூமியில் அந்த அடியார் நல்லவர் என்று அங்கீகரிக்கப்படுகிறார். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி

"ஜும்ஆ நாள் வந்தால் பள்ளியின் ஒவ்வொரு வாசலிலும் மலக்குகள் நின்று கொண்டு, முதலில் வருபவர்களையும் அதைத்தொடர்ந்து வருவோரையும் வரிசைப்படி பதிவு செய்கிறார்கள். இமாம்(மின்பரில்) அமர்ந்து விட்டால்(தங்கள்) ஏடுகளைச் சுருட்டி விட்டு சொற்பொழிவைக் கேட்கவந்து விடுவார்கள்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: புகாரி
இந்த மூலஆதாரங்களெல்லாம், மலக்குகள் உடலமைப்பு கொண்டவர்களே அன்றி வழி பிறழ்ந்த கூட்டத்தினர் சொல்வது போல் மானசீக சக்திகள் அல்லர் என்பதைத் தெளிவாக அறிவிக்கின்றன. இந்த மூலஆதாரங்களின் தேட்டத்தின் பிரகாரம்தான் "மலக்குகள் உடலமைப்பு கொண்டவர்கள்" என்பதில் முஸ்லிம்கள் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளனர்.

---

**அவனுடைய வேதங்களை நம்புவது[1] அவனுடைய தூதர்களை நம்புவது[2]**

---

**(1)**இங்கு வேதங்கள் என்பதன் கருத்து அல்லலாஹ் தன்னுடைய தூதர்களுக்கு இறக்கிவைத்த வேதங்கள் என்பதாகும். அவற்றை அல்லாஹ் மனிதர்களுக்கு அருட்கொடையாகவும் நேர்வழி காட்டுவதற்காகவும் இறக்கியருளினான். அவற்றின் மூலம்

இவ்வுலகிலும் மறுமையிலும் தங்கள் நற்பேறை அவர்கள் அடைந்திட வேண்டும் என்பதற்காக.

**வேதங்களை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன:**

**1.**உண்மையில் இவை அல்லாஹ்விடமிருந்தே இறக்கியருளப்பட்டன என நம்புவது.

**2.**அவற்றில் எதனுடைய பெயரை நாம் அறிந்துள்ளோமோ அந்த வேதத்தை அதனுடைய பெயருடன் நம்புவது. உதாரணமாக முஹம்மது(ஸல்)அவர்களுக்கு அருளப்பட்ட அல்குர்ஆன், மூஸா(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட தவ்ராத், ஈஸா(அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இன்ஜீல், தாவூது(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஜபூர் ஆகிய வேதங்களைப் போன்று.

எந்த வேதங்களின் பெயர்களை நாம் அறியவில்லையோ அந்த வேதங்களை நாம் பொதுப்படையாக நம்ப வேண்டும்.

**3.**அந்த வேதங்கள் வழங்கும் செய்திகளிலிருந்து நம்பகமானவற்றை உண்மையென ஏற்றுக் கொள்ளுவது. உதாரணமாக, குர்ஆனில் உள்ள செய்திகளையும் முன்னர் அருளப்பட்ட வேதங்களில் மாற்றப்படாமல் திரிக்கப்படாமல் உள்ள செய்திகளையும் ஏற்றுக் கொள்வது போன்று.

**4.**அவற்றில் வழக்கொழிக்கப்படாத, குர்ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களைக் கொண்டு செயல்படுவது. அவற்றைப் பொருந்திக் கொள்ளவது, உளப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது. அந்தச் சட்டங்களின் நுணுக்கத்தை நாம் புரிந்து கொண்டாலும் புரியாவிட்டாலும் சரியே. முன்னர் அருளப்பட்ட வேதங்கள் அனைத்தும் மகத்துவமிக்க அல்-குர்ஆனால் காலாவதியாக்கப்பட்டுவிட்டன.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) உண்மையை உள்ளடக்கிய வேதத்தை உமக்கு அருளினோம். இது, தனக்கு முன்சென்ற வேதத்தை உண்மைப் படுத்துவதாகவும் அதனை முடிவுகட்டக் கூடியதாகவும் இருக்கின்றது.(5:48)

இதன்படி முன்னர் அருளப்பட்ட வேதங்களின் எந்தச்சட்டத்தைக் கொண்டும் செயல்படுவது கூடாது. அவற்றில் நம்பகமானதையும் குர்ஆன் அங்கீகரித்ததையும் தவிர.

வேதங்களின் மீது நம்பிக்கை கொள்வது மகத்தான பயன்களைத் தருகின்றன. அவற்றுள் சில:

**1.**தன்னுடைய அடியார்களின் மீது அல்லாஹ்வுக்குரிய அக்கரையை அறிவது. ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் நேர்வழி காட்டக்கூடிய ஒரு வேதத்தை அருளியிருக்கின்றான் எனும் வகையில்.

**2.**அல்லாஹ்வின் ஷரீஅத்திலுள்ள நுட்பத்தை அறிவது. ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் அவரவர்களின் நிலைமைகளுக்கு உகந்தமுறையில் சட்டங்களை வகுத்தளித்துள்ளான் எனும் வகையில்.

அல்லாஹ் கூறுகிறான்: உங்களில் ஒவ்வொரு சமூகத்தாருக்கும் மார்க்கத்தையும் வழிமுறையையும் அமைத்துத்தந்தோம்.(5:48)

**(2)**இங்கு தூதர்கள் என்பதன் கருத்து மனிதர்களில் எவர்களுக்கு இறைமார்க்கம் பற்றிய வஹீ -இறைச் செய்தி அறிவிக்கப்பட்டு அதை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படி கட்டளையிடப்பட்டதோ அத்தகையவர்கள் என்பதாகும். இறைத்தூதர்களில் முதலாமவர் நூஹ்(அலை)அவர்கள். இறுதியானவர் முஹம்மது(ஸல்)அவர்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:(நபியே!)நூஹுக்கும், அவருக்குப் பின்னால் வந்த நபிமார்களுக்கும் வஹீ அறிவித்தது போலவே திண்ணமாக உமக்கும் நாம் வஹீ அறிவித்துள்ளோம். (4:163)

அனஸ்(ரலி)அறிவித்துள்ள மறுமைநாளின் பரிந்துரை பற்றிய ஹதீஸில் வருகிறது: மனிதர்கள் தங்களுக்குப் பரிந்துரை செய்ய வேண்டி ஆதம்(அலை)அவர்களிடம் வருவார்கள். அவரோ தம்மால் இயலாது என்று அவர்களிடம் கூறிவிடுவார்கள். பிறகு கூறுவார்: அல்லாஹ் அனுப்பிய முதல் தூதரான நூஹிடம் செல்லுங்கள்....என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.(ஹதீஸின் சுருக்கம்) (புகாரி)

முஹம்மது(ஸல்) அவர்கள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: முஹம்மது உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர். ஆயினும் அவர் அல்லாஹ்வின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கின்றார்.(33:40)

❁ எந்தச் சமுதாயமும் இறைத்தூதர் அனுப்பப்படாமல் இல்லை. அல்லாஹ் அத்தூதருக்கு தனிப்பட்ட ஷரீஅத்தையோ அல்லது முந்தைய ஷரீஅத்தையோ கொடுத்து அந்தசமுதாயத்தின்பால் அனுப்பிவைக்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வையே வணங்குங்கள், அவனல்லாதவற்றை வணங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று(போதிக்குமாறு)திண்ணமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பி வைத்தோம். (16:36)

அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் எவரும் வருகை தராமல் எந்தச் சமுதாயமும் இருந்ததில்லை.(35:24)
நிச்சயமாக நாம் தாம் தவ்ராத்தை இறக்கிவைத்தோம்: அதில் வழிகாட்டுதலும் ஒளியும் இருந்தது.(அல்லாஹ்வுக்கு) முற்றிலும்

கீழ்ப்படிந்த நபிமார்கள் அதைக்கொண்டே இந்த யூதர்களுக்குத் தீர்ப்பளித்து வந்தனர்.(5:44)

❁ இறைத்தூதர்கள் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட மனிதர்களாவர். அவர்களுக்கு படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத்தன்மைகளோ கடவுள் தன்மைகளோ எதுவும் கிடையாது.

முஹம்மது(ஸல்)அவர்கள் குறித்து- அவர்களேஇறைத் தூதர்களின் தலைவரும் அல்லாஹ்விடத்தில் அவர்கள் அனைவரையும் விடவும் மகத்தான அந்தஸ்துக்குரியவரும் ஆவார்- அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!)நீர் கூறும்: எனக்கே நான் எந்த நன்மையோ அல்லது தீமையோஅளிக்க ஆற்றல் பெற்றிலேன். அல்லாஹ் எதை நாடுகிறானோ அதுவே நிகழ்கிறது. மறைவானவற்றை நான் அறிபவனாக இருந்திருந்தால் அதிகமதிகம் நன்மைகளையே தேடியிருப்பேன். எந்தத் தீங்கும் என்னை அணுகியிருக்காது. நம்பிக்கைகொள்ளும் மக்களுக்கு எச்சரிக்கை செய்பவனாகவும் நற்செய்தி சொல்பவனாகவுமே நான் இருக்கிறேன்.(7:188)

மேலும் கூறுகிறான்: (நபியே!)கூறும்: உங்களுக்கு ஏதேனும் தீமையோ நன்மையோ செய்திடும் ஆற்றல் எனக்கில்லை. கூறும்: அல்லாஹ்வின் பிடியிலிருந்து எவராலும் என்னைக் காப்பாற்ற முடியாது. மேலும் அவனைத்தவிர வேறு எந்தப் புகலிடத்தையும் என்னால் பெறமுடியாது.(72:21,22)

❁ பசி, தாகம், நோய், மரணம் போன்ற மனித இயல்பைச் சேர்ந்த தன்மைகள் இறைத் தூதர்களுக்கும் உண்டு.
இப்ராஹீம்(அலை) அவர்கள் தம்இறைவனை வர்ணித்துச் சொன்னதை அல்லாஹ் குறிப்பிடுகிறான்: அவனே எனக்கு உண்ணவும் பருகவும் தருகின்றான், நான் நோயுற்றால் அவனே என்னைக் குணப்படுத்துகிறான். மேலும் அவனே என்னை

மரணிக்கச்செய்கிறான். பிறகு அவனே என்னை உயிர்ப்பிப்பான். (26:79-81)

நபி(ஸல்) கூறினார்கள்: நானும் உங்களைப் போன்ற மனிதன் தான். நீங்கள் மறப்பது போன்றே நானும் மறந்துவிடுகிறேன். நான் மறந்து விட்டால் எனக்கு நினைவூட்டுங்கள்.

இறைத்தூதர்களை, அல்லாஹ் தனக்கு அடிபணியும் விஷயத்தில் மிக உயர்ந்ததகுதியில் வைத்து வர்ணித்திருக்கின்றான். அவர்களைப் புகழ்ந்துரைக்கும் தொடரில் நூஹ் (அலை)அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்:நிச்சயமாக அவர் நன்றியுள்ள ஓர் அடியாராகத் திகழ்ந்தார்.(17:3)

முஹம்மது(ஸல்)அவர்கள் பற்றிக்கூறுகிறான்: உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்துக்காட்டக்கூடிய இவ்வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் பெரும்பாக்கியமுடையவனாக இருக்கின்றான்.(25:1)

இப்ராஹீம்(அலை), இஸ்ஹாக்(அலை), யஃகூப்(அலை) ஆகி யோரைப் பற்றிக்கூறும்போது," (நபியே!)நம்முடைய அடியார்களான இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரையும் நினைவுகூர்வீராக! அவர்கள் மிகுந்த செயலாற்றலும் நுண்ணோக்கும் உடையவர்களாவர். மறுமையை நினைவு கூர்தல் எனும் ஒரு தூய பண்பு அவர்களிடம் இருந்தமையால் நாம் அவர்களைத் தேர்ந்தெடுத்திருந்தோம். நிச்சயமாக அவர்கள் நம்மி டத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட சான்றோர் ஆவர்."(38:45-47) என்று கூறுகிறான்.

மர்யமின் மகன் ஈஸா(அலை)அவர்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:அவர்(மரியத்தின் குமாரர்)ஓர் அடியாரே தவிர வேறல்லர். அவர் மீது நாம் அருள் புரிந்திருந்தோம்.

இஸ்ராயீலின் சந்ததியினருக்கு (நமது ஆற்றலின்) முன்னுதாரணமாக அவரை நாம் ஆக்கிருந்தோம்.(43:59)

இறைத்தூதர்களின் மீது நம்பிக்கை கொள்வதில் நான்கு விஷயங்கள் உள்ளன.

❁ அவர்களின் தூதுத்துவப் பொறுப்பு உண்மையில் அல்லாஹ்விடமிருந்து வழங்கப்பட்டதாகும் எனநம்புவது. ஒருவன் இறைத்தூதர்களில் ஒருவருடைய தூதுத்துவத்தை மறுத்தாலும் அவன் அனைத்து இறைத்தூதர்களையும் நிராகரித்தவனாவான்.

அல்லாஹ் கூறுகிறான்: நூஹுடைய சமூகத்தினர் இறைத் தூதர்களைப் பொய்ப்படுத்தினார்கள்.(26:105) இங்கு அச்ச மூகத்தினர் எல்லா இறைத்தூதர்களையும் பொய்ப்படுத்தியதாகக் கூறுகிறான். ஆனாலும் அவர்கள் நூஹ்(அலை) அவர்களைப் பொய்ப்படுத்திய நேரத்தில் வேறு இறைத்தூதர்கள் இருந்ததில்லை.

இந்த அடிப்படையில் எந்த கிறிஸ்தவர்கள் முஹம்மது (ஸல்)அவர்களைப் பொய்ப்படுத்தி அவர்களைப் பின்பற்றாமல் இருந்தார்களோ அந்த கிறிஸ்தவர்கள் மர்யமின் குமாரர் ஈஸா(அலை) அவர்களையும் பொய்ப்படுத்தியவர்களாவர். மேலும் அவர்களைப் பின்பற்றாதவர்களாவர். குறிப்பாக ஈஸா(அலை) அவர்கள், முஹம்மது(ஸல்) அவர்களின் வருகை பற்றி கிறிஸ்தவர்களுக்கு முன்னறிவிப்புச் செய்திருந்தார்கள். அவ்வாறு முன்னறிவிப்புச் செய்ததன் பொருள்,"அந்த முஹம்மத், அவர்கள் பால் அனுப்பப்பட்ட தூதர். அவர் மூலம் அல்லாஹ் அவர்களை வழிகேட்டிலிருந்து பாதுகாத்து நேர்வழியின் பால் வழிகாட்டிட விரும்புகிறான்" என்பதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?!

❁ அவர்களில் யாருடைய பெயரை நாம் அறிந்துள்ளோமோ அவர்களை அவர்களின் பெயருடன் நம்புவது. உதாரணமாக முஹம்மது(ஸல்), இப்ராஹீம்(அலை), மூஸா(அலை), ஈஸா (அலை), நூஹ்(அலை)ஆகியோரைப் போன்று.

இந்த ஐந்து தூதர்ககளும் மனஉறுதி பெற்ற தூதர்களாவர். இவர்களைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இரண்டு இடங்களில் குறிப்பிடுகிறான். அல்-அஹ்ஸாப் அத்தியாயத்தில் கூறுகிறான்: (நபியே! எல்லா)நபிமார்களிடமிருந்தும் நாம் வாங்கிய வாக்குறுதியை நினைவுகூரும். உம்மிடமிருந்தும் மேலும் நூஹ், இப்ராஹீம், மூஸா, மர்யமுடைய குமாரர் ஈஸா ஆகியோரிடமிருந்தும் (நாம் வாக்குறுதி வாங்கினோம்). அனைவரிடமிருந்தும் நாம்வலுவான வாக்குறுதி வாங்கியிருக்கின்றோம். (33:7)

அஷ்ஷூரா அத்தியாயத்தில் கூறுகிறான்: நூஹுக்கு அவன் அறிவுறுத்தியதையே உங்களுக்கு மார்க்கமாக வகுத் தளித்துள்ளான். ஆகவே(நபியே!)நாம் உமக்கு வஹி மூலம் அறிவிப்பதும் இப்ராஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் அறிவுறுத்தியதும் என்னவென்றால் நீங்கள் (அனைவரும்) இந்த மார்க்கத்தை நிலைநாட்டுங்கள், இதில் பிரிந்து போய்விடாதீர்கள் என்பதே. (42:13)

அவர்களில் யாருடைய பெயரை நாம்அறியவில்லையோ அவர்களைப் பொதுப்படையாக நம்பவேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!)திட்டமாக நாம் உமக்கு முன்னர் பல தூதர்களை அனுப்பியிருக்கிறோம். அவர்களில் சிலரைக் குறித்து நாம் உமக்கு எடுத்துரைத்திருக்கின்றோம். வேறு சிலரைப்பற்றி நாம் உமக்கு எடுத்துரைக்கவில்லை.(40:78)

❁ அவர்களைப் பற்றிய செய்திகளில் நம்பகமானவற்றை உண்மைப்படுத்துவது.

❁ அவர்களில் எந்தத்தூதர் இப்போது நம்மிடம் அனுப் பப்பட்டுள்ளாரோ அந்தத்தூதரின் ஷரீஅத்தின்படி செயல்பட வேண்டும். அவர்தாம் நபிமார்களில் இறுதியானவரும் எல்லா மனிதர்களுக்காகவும் அனுப்பப் பட்டவருமான முஹம்மது (ஸல்)அவர்களாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:(முஹம்மதே!)உம் இறைவன் மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்கிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்றுப்பின்னர் நீர் அளிக்கும் தீர்ப்பு குறித்து எத்தகைய அதிருப்தியையும் தம்மனங்களில் கொள்ளாது முற்றிலும் அதற்கு அடிபணியாத வரையில் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக ஆகமாட்டார்கள்.(4:65)

இறைத்தூதர்களை நம்புவதில் மகத்தான பலபயன்கள் உள்ளன. அவற்றில் சில:

1.அடியார்கள் மீது அல்லாஹ்வுக்குரிய கருணையும் அக்கரையையும் அறிவது. எவ்வாறெனில் அவர்களை அல்லாஹ்வின் நேர்வழியின் பால் வழிகாட்டுவதற்காகவும் அல்லாஹ்வை எவ்வாறு வணங்க வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்குவதற்காகவும் இறைத்தூர்களை அனுப்பியிருக்கின்றான். மனிதனின் பகுத்தறிவால் மட்டும் இதைப்புரிந்து கொள்ள முடியாது.

2.இம்மாபெரும் அருட்கொடைக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது.

3.இறைத்தூதர்களை நேசிப்பது, அவர்களைக் கண்ணியப்படுத்துவது, அவர்களின் தகுதிக்குப் பொருத்தமான முறையில் அவர்களைப் புகழ்வது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர்கள், அவனை வணங்கி, வழிபட்டு

அவனது தூதுச்செய்தியை மக்களுக்கு எடுத்துச் சொல்லி நற்போதனை புறிந்தவர்கள்.

ஆனால் பிடிவாதக்காரர்கள் தங்களின் இறைத்தூதர்களை பொய்ப்படுத்தினார்கள். மனிதர்கள் அல்லாஹ்வின் தூதர்களாய் வரமுடியாது என்றனர். இந்த வாதத்தை அல்லாஹ் எடுத்துக்கூறி அது தவறானது என்பதை பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகிறான்:

மக்களிடம் நேர்வழி வந்தபோதெல்லாம் அதன் மீது நம்பிக்கை கொள்ளவிடாமல் அவர்களைத் தடுத்து, "அல்லாஹ் ஒரு மனிதரையா தூதராக அனுப்பியிருக்கிறான்?"என்று அவர்கள் கேட்டதுதான். (நபியே!)அவர்களிடம் கூறும்:"பூமியில் வானவர்களே நிம்மதியுடன் நடந்து திரிந்து கொண்டிருப் பார்களேயானால், நாம் அவர்களுக்காக வானத்திலிருந்து ஒரு வானவரையே தூதராக ஆனுப்பியிருப்போம்!" (17:94,95)

இந்த வசனத்தில் அவர்களின் வாதம் தவறானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறான். பூமியில் வசிப்பவர்களிடம் தான் இறைத்தூதர் அனுப்பப்படுகிறார்.பூமியில் வசிப்பவர்கள் மனிதர்களாக இருப்பதனால் இறைத்தூரும் மனிதராகவே இருக்கவேண்டும். பூமியில் வசிப்போர் மலக்குகளாக இருந்திருந்தால் வானிலிருந்து ஒரு மலக்கை தூதராக அல்லாஹ் அனுப்பியிருப்பான். ஏனெனில் அவர்களைப்போன்றே அவர் இருக்கவேண்டும் என்பதற்காக.

இவ்வாறே இறைத்தூதர்களைப் பொய்ப்படுத்தியவர்கள் கூறியதை அல்லாஹ் பின்வருமாறு எடுத்துரைக்கிறான்:

அதற்கு அந்தமக்கள் கூறினார்கள்:"நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்களேயன்றி வேறில்லை. எங்களுடைய மூதாதையர்கள் வணங்கிவந்தவற்றை நாங்கள் வணங்குவதிலிருந்து எங்களைத்

தடுக்கவே நீங்கள் விரும்புகிறீர்கள். அப்படியானால் ஒரு தெளிவான சான்றினை எங்களுக்குக் கொண்டுவாருங்கள்!" அதற்கு அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் கூறினார்கள்:"உண்மையில் நாங்கள் உங்களைப் போன்ற மனிதர்கள்தாம். ஆனால் அல்லாஹ் தன்னுடைய அடியார்களில் தான் நாடுகின்றர்களுக்குப் பேரருளை வழங்குகின்றான். மேலும் உங்களிடம் சான்றினைக் கொண்டு வருவது எங்களுடைய அதிகாரத்தில் இல்லை. அல்லாஹ்வின் உத்தரவு கொண்டேதவிர." (14:10,11)

---

**இறுதி நாளை நம்புவது[1]**

---

**(1)**இறுதி நாள் என்பது மனிதர்கள் அனைவரும் உயிர்ப்பித்து எழுப்பப்படும் மறுமை நாளாகும்-கேள்வி கணக்குக் கேட்டு நற்கூலி அல்லது தண்டனை வழங்கப்படுவதற்காக! இந்நாளை இறுதிநாள் என்று கூறுவதற்குக் காரணம் இந்த நாளுக்குப் பிறகு வேறொரு நாள் இருக்காது. முடிவாக சுவர்க்கவாசிகள் தத்தமது இடங்களிலும் நரகவாசிகள் தத்தமது இடங்களிலும் தங்கிவிடுவார்கள்.

இறுதி நாளை நம்புவதில் மூன்று விஷயங்கள் அடங்கியுள்ளன.

❁ உயிர்ப்பித்து எழுப்பப்படுதலை நம்புவது. சூர் எனும் எக்காளம் இரண்டாவது தடவை ஊதப்படும் போது மரணித்தவர்கள் உயிர்ப்பித் தெழுப்படுவார்கள். மனிதர்கள் அனை வரும் பாதணிகளின்றி வெறுங்காலுடனும், அடைகளின்றி நிர்வாணமாகவும், விருத்தசேதனம் செய்யப்படாதவர்களாகவும் அகிலங்களைப் படைத்த இறைவன் முன் நிற்பார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: முதலில் நாம் எவ்வாறு படைக்கத் தொடங்கினோமோ அவ்வாறே மீண்டும் படைப்போம். இது

நம்முடைய பொறுப்பில் உள்ள ஒரு வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் இதனைச் செய்தே தீருவோம். (21:104)

உயிர்ப்பித்து எழுப்பப்படுவது குர்ஆனும் ஹதீஸும் அறிவித்துள்ள உறுதியான உண்மையாகும். முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவும் அதுவேயாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: பின்னர் நிச்சயமாக நீங்கள் இதற்குப் பிறகு மரணிக்கக்கூடியவர்கள்தாம். பிறகு நிச்சயமாக நீங்கள் மறுமை நாளன்று எழுப்பப்படுவீர்கள்.(23:15,16)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளில் மனிதர்கள் அனைவரும் பாதணிகளின்றியும் விருத்தசேதனம் செய்யப்படாமலும் எழுப்பப்படுவார்கள்.(புகாரி,முஸ்லிம்)

இது ஆதாரப்பூர்வமான உண்மையாகும் என முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்தகருத்து கொண்டுள்ளனர். நுட்பத்தின் தேட்டமும் அதுதான். எவ்வாறெனில் அல்லாஹ் இந்த மனிதப் படைப்பிற்கு மறுஉலகம் என்ற ஒன்றை அமைத்திருக்க வேண்டும். உலகில் தன்னுடைய தூதர்கள் வாயிலாக என்னென்ன கடமைகளை அவர்கள் மீது சுமத்தினானோ அவற்றின் பேரில் அன்று அவர்களுக்கு நற்கூலி அல்லது தண்டனை கொடுக்க வேண்டுமெறே பகுத்தறிவும் உணர்த்துகிறது. அல்லாஹ் கூறுகிறான்:

நாம் உங்களை வீணாகவே படைத்துள்ளோம் என்றும் நம்மிடம் திரும்பக் கொண்டுவரப்படவே மாட்டீர்கள் என்றும் நீங்கள் எண்ணிக்கொண்டீர்களா? என்ன?(23:115)

மேலும் தன் நபியிடம் கூறுகிறான்: (நபியே!) இந்தக் குர்ஆனை உம்மீது கடமையாக்கியவன் உம்மை மறுமையின் பக்கம் கொண்டு செல்லக்கூடிவனாக இருக்கிறான்.(28:85)

❁ விசாரணனை மற்றும் கூலி கொடுக்கப்படுவதை நம்புவது. தனது செயல்குறித்து மனிதன் விசாரிக்கப்படுவான். அதன்பேரில் நற்கூலி அல்லது தண்டனை வழங்கப்படும். இது பற்றிக் குர்ஆனும் ஹதீஸும் அறிவித்துள்ளன. முஸ்லீம்களின் ஏகோபித்த முடிவும் அதுவே.

அல்லாஹ் கூறுகிறான்: திண்ணமாக இவர்கள் நம் பக்கமே திரும்பி வரவேண்டியுள்ளது. பிறகு இவர்களிடம் கணக்கு வாங்கும் பொறுப்பு நம்மீதே உள்ளது.(88:25,26)

எவர்(இறைவனின் திருமுன்)நன்மையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அதைப்போல் பத்துமடங்கு நற்கூலி உண்டு. எவர் தீமையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அவர் செய்ததீமை அளவுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும். மேலும் அவர்கள் யாருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது.(6:160)

நாம் மறுமைநாளில் துல்லியமாக எடைபோடும் தராசுகளை நிறுவுவோம். பின் எவருக்கும் இம்மியளவும் அநீதி இழைக்கப்பட மனிதன் செய்யும் கடுகளவு செயலாயினும் அதனை நாம்(மறுமையில்)அவன் முன் கொண்டு வருவோம். கணக்கு வாங்குவதற்கு நாமே போதுமானவர்களாக இருக்கிறோம்.(21:47)

நபி(ஸல்)அவர்கள் கூறியதாக இப்னு உமர்(ரலி)அறிவிக்கி றார்கள்: ஒரு இறைநம்பிக்கையாளனை அல்லாஹ்(மறுமை யில்) தன் பக்கம் கொண்டு வருவான். அவன் மீது தனது கருணையைப் பொழிந்து,'நீ இன்னின்ன பாவத்தை அறிவாயா?" எனக் கேட்பான். அதற்கு அவன் "ஆம்! எனது இறைவனே!" என்று கூறுவான். அவ்வாறு அவன் எல்லாப் பாவங்களையும் ஒத்துக்கொண்டு தனக்கு அழிவுதான் எனக் கருதும்போது அல்லாஹ் கூறுவான்:"இந்தப் பாவங்களை எல்லாம் உலகத்திலேயே உனக்காக நான் மறைத்துவிட்டிருந்தேன்.

இன்றைய தினம் உனக்காக நான் அவற்றை மன்னித்து விடுகிறேன்." பிறகு அவனுடைய நன்மைகளின் பதிவேடு அவனிடம் கொடுக்கப்படும்.

ஆனால், நிராகரிப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்களின் நிலைமையோ படைப்பினங்களின் முன்னிலையில் அல்லாஹ் அவர்களை அழைத்துக்கூறுவான்: இவர்கள்தாம் இறைவனின் பேரில் பொய்யுரைத்தவர்கள். அறிந்து கொள்ளுங்கள்! அநியாயக்காரர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக.(புகாரி,முஸ்லிம்)

மேலும் நபி(ஸல்)கூறியதாவது: ஒருவர் ஒரு நன்மையைச் செய்ய நாடி அதைச் செய்துவிட்டால் (அவரது எண்ணத் தூய்மைக்கேற்ப) அல்லாஹ் அவருக்குப் பத்து முதல் எழு நூறு மடங்குகள் வரை ஏன் அதையும் விட கூடுதலான நன்மைகளைத் தன்னிடம் பதிவு செய்கிறான். ஒருவர் தீமையைச் செய்ய எண்ணி அதைச் செய்து விட்டால் அவருக்கு ஒரேயொரு தீமையையே பதிவு செய்கிறான்.(புகாரி,முஸ்லிம்)

மறுமையில் மனிதர்களின் செயல்களுக்கு விசாரணையும் உண்டு, அதன் பேரில் நற்கூலியோ தண்டனையோ உண்டு என்பது ஆதாரப்பூர்வமான உண்மையாகும் என முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். பகுத்தறிவின் தேட்டமும் அதுவேயாகும். ஏனெனில் அல்லாஹ் வேதங்களை இறக்கியுள்ளான் தூதர்களையும் அனுப்பியுள்ளான். அத்தூதர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை ஏற்றுக் கொள்வதையும் அதில் கடமையானவற்றைச் செய்தாக வேண்டும் என்பதையும் அதேநேரத்தில் அம்மார்க்கத்தை எதிர்ப்பவர்களுடன் போராட வேண்டும் என்பதையும் அடியார் களின் மீது கடமையாக்கினான்.

விசாரணையோ நற்கூலி, தண்டனையோ இல்லாவிட்டால் மேற்சொன்ன அனைத்தும் வீணாகிவிடும். நுண்ணறிவாளனாக

அல்லாஹ் வீணானகாரிணங்களைச் செய்வதை விட்டும் பரிசுத்தமானவன். பின்வரும் வசனத்தில் அல்லாஹ் இதைச் சுட்டிக்காட்டுகிறான்: எனவே எந்த மக்களிடம் தூதர்கள் அனுப்பப்பட்டார்களோ அந்த மக்களையும் திண்ணமாக நாம் விசாரணை செய்வோம். அத்தூதர்களையும் நிச்சயம் நாம் விசாரிப்போம். பிறகு(நடந்த நிகழ்ச்சிகள்) அனைத்தையும் நாம் முழு அறிவுடன் அம்மக்களுக்கு எடுத்துச் சொல்வோம். நாம் எங்கும் மறைந்து போய்விடவில்லை. (7:6,7)

❁ சுவர்க்கத்தையும் நரகத்தையும் நம்புவது. இவ்விரண்டும் படைப்பினங்கள் இறுதியில் சென்றடைய வேண்டிய நிரந்தரமான இடங்களாகும்.

சுவர்க்கம் என்பது அருட்பேறுகள் நிறைந்த ஓர் உலகமாகும். இறையச்சமுடைய நம்பிக்கையாளர்களுக்காக அல்லாஹ் அதனைத்தயார் செய்து வைத்திருக்கிறான். அவர்கள் எதையெல்லாம் ஈமான் கொள்ள வேண்டுமென அல்லாஹ் கடமையாக்கினானோ அவற்றை ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்தார்கள். அல்லாஹ்வுக்கு வாய்மையாளர்களாகவும் அவனது தூதரைப் பின்பற்றியவர்களாகவும் திகழ்ந்தார்கள். அந்த சுவர்க்கத்தில் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக்காதும் கேட்டிராத, எந்த மனிதனின் உள்ளத்திலும் உதித்திராத விதவிதமான அருட்பேறுகள் உள்ளன.

அல்லாஹ் கூறுகிறான்: எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர்கள்தாம் படைப்பினங் களில் மிகவும் சிறந்தவர்கள். அவர்களின் கூலி அவர்களுடைய இறைவனிடம் நிலையாகத் தங்கும் சுவனங்களாகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கிவாழ்வார்கள். அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தியடைவான். அவர்களும் அவனைக்குறித்து

திருப்தியடைவார்கள். இவையனைத்தும் தம் இறைவனை அஞ்சக் கூடியவர்களுக்குரியவையாகும்.(98:7,8) மேலும் கூறுகிறான்:

அவர்களுடைய செயல்களின் கூலியாக எத்தகைய இன்பங்கள் அவர்களுக்காக மறைத்து வைக்கப்பட்டுள்ள என்பதை யாரும் அறியமாட்டார்கள்.(32:17)

நரகம்: நரகம் என்பது வேதனைகள் நிறைந்ததோர் உலகமாகும். அல்லாஹ்வை நிராகரித்து அவனுடைய தூதர்களுக்கு மாறுசெய்த அநீதியாளர்களான இறைநிராகரிப்பாளர்களுக்காக அல்லாஹ் அதனை தயார் செய்து வைத்துள்ளான். அதில் கற்பனையில் கூட உதித்திராத விதவிதமான வேதனைகளும் தண்டனைகளும் உள்ளன.

அல்லாஹ் கூறுகிறான்: இறைநிராகரிப்பாளர்களுக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ள நரக நெருப்புக்கு அஞ்சுங்கள்.(3:131)

(நிராகரிக்கக்கூடிய) அநியாயக்காரர்களுக்கு நாம் ஒரு நெருப்பைத் தயார் செய்துவைத்துள்ளோம்.அதன் சுவாலை கள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். அங்கு அவர்கள் தண்ணீர் கேட்பார்களாயின் உருக்கிய உலோகம் போன்ற நீர் அவர்களுக்குக் கொடுக்கப்படும். அது அவர்களுடைய முகங்களைக் கரித்துவிடும். அது மிகவும் கேடுகெட்ட பானமாகும்! மேலும் அவர்களின் ஓய்விடம் மிகத் தீயதாகும்.(18:29)

இன்னும் அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்களைச் சபித்து விட்டான். மேலும் அவர்களுக்காக கொழுந்துவிட்டெரியும் நரக நெருப்பைத் தயார்செய்தும் வைத்திருக்கிறான். அதில் அவர்கள் என்றென்றும் வீழ்ந்து கிடப்பார்கள். எந்த ஒரு ஆதரவாளரையும் உதவியாளரையும் அவர்கள் பெறமாட்டார்கள். நெருப்பில் அவர்களுடைய முகங்கள்

புரட்டப்படும் அந்நாளில், 'அந்தோ! நாங் கள் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிந்து வாழ்ந்தோமில்லையே!" என்று கூறுவார்கள்.(33:64-66)

மரணத்துக்குப் பின்னால் ஏற்படும் அனைத்தைப் பற்றியும் ஈமான் கொள்வது இறுதிநாளின் மீது ஈமான் கொள்வதில் அடங்கும். உதாரணத்திற்குச் சில:

(அ) கப்ர் எனும் மண்ணறையின் குழப்பம்: அதாவது மரணமடைந்தவரிடம் அவரை அடக்கம் செய்த பின்,உன்னு டைய இறைவன் யார்? உனது மார்க்கம் என்ன? உனது நபி யார்? என்று கேட்கப்படும். இறைநம்பிக்கை கொண்டவர்களை அல்லாஹ் உறுதியான சொல்லைக் கொண்டு உறுதிப் படுத்துவான். அதன்படி அவர், 'என் இறைவன் அல்லாஹ், எனது மார்க்கம் இஸ்லாம், எனது நபி முஹம்மது(ஸல்) அவர்கள்" என்று கூறுவார். ஆனால் நிராகரிப்பாளர்களான அநியாயக்காரர்களை அல்லாஹ் வழிபிறழச் செய்வான். இறைநிராக ரிப்பாளன் சொல்வான்: 'ஹா! ஹா! நான் அறியேன்." நயவஞ்சகன் அல்லது சந்தேகத்தில் உழன்று கொண்டிருந்தவன் சொல்வான்: 'நான் அறியேன்,மக்கள் ஏதோ சொல்லக் கேட்டிருக்கிறேன், அதையே நானும் சொன்னேன்."

(ஆ) மண்ணறையின் துன்பமும் இன்பமும்: கப்ரின் துன்பம் நயவஞ்சகர்களாகவும் இறைநிராகரிப்பாளர்களாகவும் வாழ்ந்த அநியாயக்காரர்களுக்கு ஏற்படும்.

அல்லாஹ் கூறுகிறான்: இந்த அக்கிரமக்காரர்கள் மரண வேதனைகளில் சிக்கியிருக்கும் போது நீர் பார்க்க வேண்டுமே! வானவர்கள் தங்கள் கரங்களை நீட்டியவாறு 'கொடுங்கள் உங்கள் உயிர்களை! அல்லாஹ்வின் பேரில் உண்மைக்குப் புறம்பானவற்றை நீங்கள் கூறிக்கொண்டிருந்ததாலும், அவன் வசனங்களை ஏற்காமல் நீங்கள் கர்வம் கொண்டிருந்ததாலும்

இன்று உங்களுக்கு இழிவு மிக்க வேதனை கூலியாகத் தரப்படுகின்றது" என்று கூறுவார்கள்.(6:93)

பிர்அவ்னின் கூட்டத்தினர் குறித்து அல்லாஹ் கூறுகிறான்: காலையிலும் மாலையிலும் அவர்கள் நரக நெருப்பின் முன் கொண்டு வரப்படுவார்கள்.மேலும் மறுமைநாள் வந்துவிடும் போது பிர்அவ்னின் கூட்டத்தாரை மிகக் கடுமையான வேதனையில் புகுத்துங்கள் என்று கூறப்படும்.(40:46)

ஸைது பின் தாபித்(ரலி) அறிவிப்பதாவது: நீங்கள் புதையுண்டு போவீர்கள் எனும் அச்சமில்லையானால் நான் செவியுறும் மண்ணறையின் வேதனையை உங்களுக்கும் கேட்கச் செய்திடுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தித்திருப்பேன் என நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்.பின்பு எங்களை முன்னோக்கி, 'நரகத்தின் வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள்" என்று கூறினார்கள். உடனே நபித்தோழர்கள், 'நாங்கள் நரகவேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்"என்றனர்.பிறகு நபி(ஸல்)அவர்கள் 'கப்ருடைய வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள்" என்று கூற, அவர்கள் 'கப்ருடைய வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்" என்றார்கள். பிறகு நபி(ஸல்)அவர்கள், 'வெளிப்படையான, மறைவான குழப்பங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள்" என்று கூறினார்கள். அதற்குத் தோழர்களும், 'வெளிப்படையான, மறைவான அனைத்துக் குழப்பங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்"என்றனர். மேலும் 'தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுங்கள்" என்று நபியவர்கள் கூற, 'தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்" என்று தோழர்களும் கூறினர்.(முஸ்லிம்)

கப்ருடைய இன்பங்கள், உண்மையான இறைவிசுவாசிகளுக்காகும். அல்லாஹ் கூறுகிறான்: எவர்கள்,எங்கள் இறைவன் அல்லாஹ்தான் என்று கூறி, பின்னர் அதில் உறுதியாக நிலைத்து நின்றார்களோ திண்ணமாக அவர்கள் மீது வானவர்கள் இறங்குகிறார்கள். (மேலும் அவர்களிடம் கூறுகிறார்கள்:)'நீங்கள் பயப்படாதீர்கள், கவலைப்படாதீர்கள், உங்களுக்கு வாக்களிக்கப் பட்டிருக்கும் சுவனம் குறித்து மகிழ்ச்சி அடையுங்கள்."(41:30)
மேலும் கூறுகிறான்:
ஒருவனது உயிர் தொண்டைக் குழியை அடையும் போது, அந்த நேரத்தில்(அவனை)நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். உங்களை விட நாமே அவனுக்கு மிக அருகிலிருக்கிறோம். எனினும் நீங்கள் பார்க்க மாட்டீர்கள். நீங்கள் (இம்மார்க்கத்தைக்) கடைப்பிடிக்காது இருந்தால், அதில் நீங்கள் உண்மை யாளர்களாகவும் இருந்தால் அதை (உயிரை) திரும்பக் கொண்டுவரலாமே! அவர் இறைவனுக்கு நெருக்கமானோரில் ஒருவராக இருந்தால் அவருக்கு உணவும், நறுமணமும், சுகமான சொர்க்கச் சோலையும் உள்ளன.(56:83-89)
இறைநம்பிக்கையாளர் பற்றி நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: அவர் தன்னுடைய கப்ரில் இரு மலக்குகளுக்கு பதில ளித்திடும் போது வானிலிருந்து ஓர் அழைப்பாளர், உரக்கக் கூறுவார்: 'எனது அடியார் உண்மை உரைத்து விட்டார். சுவனத்து விரிப்பை அவருக்கு விரியுங்கள். சுவனத்து ஆடையை அவருக்கு அணிவியுங்கள்.சுவனத்தின் வாயிலை அவருக்காகத் திறந்து விடுங்கள்." நபி(ஸல்)கூறினார்கள்: சுவனத்தின் வாசனையும் மணமும் அவரிடம்வரும். அவரது பார்வை செல்லும் தூரம் வரை அவரது மண்ணறை விரிவாக் கப்படும்.அறிவிப்பவர்: பராஉப்னு ஆஸிப்(ரலி),நூல்:அஹ்மத் அபூதாவூது

### இறுதி நாளை நம்புவதன் பயன்கள்:

**இறுதி நாளை நம்புவதில் மகத்தான பயன்கள் உள்ளன. அவற்றுள் சில:**

**1.** அந்த நாளின் நற்கூலியை எதிர்பார்த்து வழிபாடுகள் செய்வதில் ஆர்வமும் அக்கறையும் கொள்வது.

**2.** அந்த நாளின் தண்டனைக்கு அஞ்சி பாவம் செய்வதற்கு அஞ்சுவது. அது குறித்து அதிருப்தி அடைவது.

**3.** இம்மையின் சுகங்கள் கிடைக்காமல்போனதற்காக ஒரு முஃமின் ஆறுதல் அடைவது- மறுமையின் அருட்பேறு களையும் அழகான கூலியையயும் எதிர்பார்த்து.

மரணத்துக்குப் பின் மீண்டும் எழுப்பப்படுவது சாத்திய மற்றது எனக் கருதி இறைமறுப்பாளர்கள் அதனை மறுக்கின்றனர். அவர்களின் கருத்து தவறானதாகும். இறை மார்க்கமும், புலனுணர்வும், பகுத்தறிவும் அது தவறானது என்பதைத் தெளிவாக அறிவிக்கின்றன.

இறைமார்க்கத்தின் ஆதாரம்:

அல்லாஹ் கூறுகிறான்: (இறந்த பின்)மீண்டும் அவர்கள் எழுப்பப்படவே மாட்டார்கள் என்று நிராகரிப்பாளர்கள் எண்ணிக் கொண்டனர். (அவர்களிடம்) நீர் கூறும்: அப்படியல்ல! என் இறைவன் மீது சத்தியமாக! நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள். பின்னர்(உலகில்) நீங்கள் என்னவெல்லாம் செய்தீர்கள் என்று உங்களுக்கு நிச்சயம் அறிவித்துத் தரப்படும். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிகவும் எளிதான தாகும்.(64:7)

இறைவேதங்கள் அனைத்தும் இந்த உண்மையை ஒரு மித்துக் கூறுகின்றன.

புலனுணர்வின் ஆதாரமாவது:

இறந்தவர்களை உயிர்ப்பித்து எழுப்புவதை இவ்வுலகிலேயே அல்லாஹ் தனது அடியார்களுக்குக் காட்டியுள்ளான்.

திருக்குர்ஆனில் அல்-பகரா எனும் இரண்டாவது அத்தியாயத்தில் இதற்கு ஐந்து உதாரணங்கள் உள்ளன.

**1.** மூஸாவிடம் அவரது சமூகத்தினர்,'நாங்கள்அல்லாஹ்வைக் கண்கூடாகக் காணாத வரை உம் மீது நம்பிக்கை கொள்ளமாட்டோம்" (2:55) எனக் கூறியபோது அல்லாஹ் அவர்களை மரணிக்கச் செய்து பின்னர் உயிர்ப்பித்தான். இது பற்றி இஸ்ராயீலின் சந்ததிகளை நோக்கி அல்லாஹ் கூறுகிறான்:
இன்னும் (இதையும் நினைவு கூருங்கள்:) மூஸாவே! நாங்கள் அல்லாஹ்வைக் கண் கூடாகக் காணாத வரை உம் மீது நம்பிக்கை கொள்ள மாட்டோம் என்று நீங்கள் கூறினீர்கள். அப்பொழுது நீங்கள் பார்த்துக்கொண்டிருக் கும்போதே உங்களை ஒரு பேரிடி தாக்கிற்று.பிறகு நீங்கள் இறந்த பின் மீண்டும் உங்களை உயிர்ப்பித்து எழுப்பினோம். நீங்கள் நன்றி செலுத்துவீர்கள் என்பதற்காக. (2:55,56)

**2.** கொலை செய்யப்பட்ட ஒருவரது விஷயத்தில் இஸ்ராயீலின் சந்ததிகள் தர்க்கித்துக் கொண்டபோது,'ஒரு மாட்டை அறுத்து அதில் ஒரு பாகத்தைக் கொண்டு கொல்லப்பட்டரை அடியுங்கள். அவர் எழுந்து தன்னைக் கொன்றவர் யார் என்பதைத் தெரிவிப்பார்" என்று அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

இது குறித்து அல்லாஹ் பின்வருமாரறு குறிப்பிடுகிறான்: நீங்கள் ஒருவரைக் கொன்று விட்டு அது குறித்து விவாதித்துக் கொண்டிருந்ததை எண்ணிப்பாருங்கள். நீங்கள் மறைத்துக் கொண்டிருந்ததை அல்லாஹ் வெளிப்படுத்து பவன்.'அதன்(அறுக்கப்பட்ட அப்பசுவின்) ஒரு பகுதியால் (கொலையுண்ட)அவரை அடியுங்கள்" என்று கூறினோம். இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான். நீங்கள் விளங்குவதற்காக தன் சான்றுகளை உங்களுக்குக் காட்டுகிறான். (2:72,73)

**3.**மரணத்திலிருந்து தப்புவதற்காக ஆயிரக்கணக்கானோர் தத்தமது வீடுகளை விட்டும் வெளியேறிய சம்பவத்தை அல்லாஹ் கூறும்போது, அல்லாஹ் அவர்களை மரணிக்கச் செய்து பின் உயிர்ப்பித்ததாகக் கூறுகிறான்:

மரணத்திற்கு அஞ்சி தமது ஊர்களை விட்டு வெளியேறியோரை நீர் அறியவில்லையா? அவர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தனர். 'செத்து விடுங்கள்'' என்று அல்லாஹ் அவர்க ளிடம் கூறினான். பின்பு அவர்களை உயிர்ப்பித்தான். மனிதர்கள் மீது அல்லாஹ் அருளுடையவன். எனினும் மனிதர் களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை.(2:243)

**4.** அழிந்துபோன ஒரு கிராமத்தைக் கடந்து சென்ற ஒரு மனிதர் அல்லாஹ் அவர்களை உயிர்ப்பிப்பது சாத்தியமா? எனக் கருதியபோது அல்லாஹ் அவரை நூறு ஆண்டுகள் மரணிக்கச் செய்து பின்னர் உயிர்ப்பித்தான். இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

அல்லது ஒரு கிராமத்தைக் கடந்து சென்றவரைப் பற்றி (நீர் அறிவீரா?) அந்த ஊர் அடியோடு வீழ்ந்து கிடந்நது. 'இவ்வு+ர் அழிந்த பிறகு அல்லாஹ் எவ்வாறு இதை உயிராக் குவான்?'' என்று அவர் நினைத்தார். உடனே அவரை நூறு ஆண்டுகள் அல்லாஹ் மரணிக்கச் செய்தான். பின்பு அவரை உயிர்ப்பித்தான். 'எவ்வளவு நாளைக் கழித்திருப்பீர்'' என்று கேட்டான். 'ஒரு நாள் அல்லது ஒரு நாளில் சிறிதளவு கழித்திருப்பேன்'' என்று அவர் கூறினார்.

'அவ்வாறில்லை! நூறு ஆண்டுகளைக் கழித்து விட்டீர்! உமது உணவும் பானமும் கெட்டுப் போகாமல் இருப்பதைக் காண்பீராக! (செத்து விட்ட) உமது கழுதையையும் கவனிப்பீராக! மக்களுக்கு உம்மை எடுத்துக்காட்டாக ஆக்குவதற்காக (இவ்வாறு செய்தோம். கழுதையின்) எலும்புகளை எவ்வாறு திரட்டுகிறோம் என்பதையும்

அதற்கு எவ்வாறு மாமிசத்தை அணிவிக்கிறோம் என்பதையும் கவனிப்பீராக!" என்று அவன் கூறினான். அவருக்குத் தெளிவு பிறந்த போது 'அல்லாஹ் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன் என்பதை அறிகிறேன் எனக் கூறினார்.(2:259)

**5.** இறைவனின் நண்பரான இப்ராஹீம்(அலை)அல்லாஹ் விடம், இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிப்பாய்? என்ப தை தமக்குக் காண்பிக்குமாறு வேண்டியபோது அல்லாஹ் அவர்களிடம், நான்கு பறவைகளை அறுத்து அவற்றைத் துண்டு துண்டுகளாக ஆக்கிச் சுற்றியிருக்கின்ற மலைகளின் மீது வைத்து பின்னர் அவற்றை அழைத்தால் அந்த இறைச்சித் துண்டுகள் ஒன்றோடொன்று இணைந்து மீண்டும் பறவைகளாய் அவர்களை நோக்கிப் பறந்து வரும் என்று கூறினான்.

இது பற்றி அல்லாஹ் பின்வரும் வசனத்தில் குறிப்பிடு கிறான்: 'என் இறைவனே! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய்? என்பதை எனக்குக் காட்டுவாயாக! " என இப்ராஹீம் கூறியதையும் நினைவு கூர்வீராக.அதற்கு அவன், "நீர் நம்பிக்கை கொள்ளவில்லையா?"எனக் கேட்டான். 'அவ்வாறல்ல! மாறாக எனது உள்ளம் அமைதியுறவே கேட்கிறேன்" என்று அவர் கூறினார்.

அதற்கு அல்லாஹ்,"நீர் நான்கு பறவைகளைப் பிடிப்பீராக! அவற்றைத் துண்டு துண்டாக வெட்டி உம்மிடம் வைத்துக் கொள்வீராக! பின்னர் அவற்றில் ஒரு பகுதியை ஒவ்வொரு மலையின் மீதும் வைப்பீராக! பின்னர் அவற்றை அழைப்பீராக! அவை உம்மிடம் விரைந்து வரும். அல்லாஹ் மிகைத்தவன், ஞானமிக்கவன் என்பதை அறிந்து கொள்வீராக!"என்று கூறினான்.(2:260)
இவ்வைந்து உதாரணங்களும் உண்மையில் நடைபெற்ற புலனுணர்வுக்குட்பட்ட உதாரணங்களாகும்.இவை,இறந்த வர்களை உயிர்ப்பிப்பது சாத்தியம் என்பதை அறிவிக்கின்றன. மேலும்

அல்லாஹ்வின் அனுமதியுடன் இறந்தவர்களை உயிர்ப்பித்தல், மண்ணறைகளிலிருந்து அவர்களை வெளிக்கொணர்தல் ஆகிய சான்றுகளை ஈஸா(அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியது முன்னர் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பகுத்தறிவின் ஆதாரம்: இது இரு கோணங்களிலாகும்.

**1.** நிச்சயமாக அல்லாஹ் வானங்களையும் பூமியையும் அவற்றிலுள்ள அனைத்தையும் உருவாக்கியவன், அவற்றை முதன் முதலாகப் படைத்தவன். முதன் முதலாகப் படைக்கும் ஆற்றல் உள்ளவனுக்கு அவற்றை மீண்டும் படைப்பதற்கு இயலாமல் போகாது.

அல்லாஹ் கூறுகிறான்: அவனே முதல் முறையாகப் படைக்கின்றான். பிறகு அவனே அதை மறுமுறையும் படைப்பான். இது அவனுக்கு மிகவும் எளிதானதாகும்.(30:27)

நாம் முதலில் எவ்வாறு படைக்கத் தொடங்கினோமோ அவ்வாறே நாம் மீண்டும் படைப்போம். இது நம்முடைய பொறுப்பிலுள்ள ஒரு வாக்குறுதியாகும். திண்ணமாக நாம் அதனை நிறைவேற்றியே தீருவோம். (21:104)

மக்கிப் போய்விட்ட எலும்புகளை உயிர்ப்பிப்பதை நிராக ரிப்பவர்களுக்குப் மறுப்பாக அல்லாஹ் கூறுகிறான்:(நபியே!) கூறும்: முதல் தடைவ இதை யார் படைத்தானோ அவனே இதை உயிர்ப்பிப்பான். அவன் ஒவ்வொரு படைப்பையும் நன்கறிந்தவனாவான்.(36:79)

**2.**பச்சைப் புற்பூண்டுகள் ஏதுமின்றி இந்த பூமி வறண்டு காய்ந்து போய் விடுகிறது. அதில் மழை பொழிந்தவுடன் அது உயிர் பெற்று பசுமையாய்த் தளிர்க்கின்றது. விதவிதமான அழகிய தாவரங்கள் அதில் முளைக்கின்றன. இறந்துபோன பூமிக்கு உயிர்

கொடுக்கும் ஆற்றல் உள்ளவன் இறந்தவர் களை உயிர்ப்பிக்கவும் ஆற்றலுள்ளவனே.

அல்லாஹ் கூறுகிறான்: அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும்: பூமி வறண்டு காய்ந்து கிடப்பதை நீர் காண்கிறீர். அதில் நாம் மழையைப் பொழிந்தவுடன் அது சட்டென்று தளிர்த்து தழைத்தோங்குகின்றது. திண்ணமாக இறந்துபோன இப்பூமிக்கு எ(ந்த இறை)வன் உயிர் கொடுத்தானோ அவனே இறந்தவர்களையும் உயிர்ப்பிப்பவன்! திண்ணமாக அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் உடையவன். (41:39)
இன்னும் சொல்கிறான்: மேலும் நாம் வானத்திலிருந்து அருள்மிக்க நீரினை(மழையை)இறக்கினோம். பின்பு அதன் மூலம் தோட்டங்களையும், அறுவடைத் தானியங்களையும், கனிகள் நிறைந்து, குலைகள் அடுக்கடுக்காய்த் தொங்குகின்ற நீண்ட நெடிய பேரீச்சை மரங்களையும் முளைக்கச் செய்தோம். இது அடியார்களுக்கு வாழ்வாதாரம் வழங்கு வதற்கான ஏற்பாடாகும். இறந்து கிடக்கும் ஒரு பூமிக்கு நாம் இந்த நீரினால் உயிரூட்டுகின்றோம். (இறந்து விட்ட மனிதர்கள் பூமியிலிருந்து) வெளிப்படுவதும் இவ்விதமே. (50:9-11)

வழிகெட்ட கூட்டத்தினர் சிலர் மண்ணறையின் வேதனையையும் இன்பத்தையும் மறுக்கின்றனர். அது சாத்தியமற்றது, யதார்த்தத்திற்கு மாற்றமானது என்று கருதுகின்றனர். ஏனெனில் மண்ணறையைத் தோண்டிப் பார்த்தால் பிரேதம் முன்பு இருந்த நிலையிலேயே இருக்கிறது. மண்ணறையில் விரிவடைதல், சுருங்குதல் போன்ற எந்த மாற்றமும் ஏற்படவில்லை எனக் கூறுகின்றனர். இந்த வாதம் மார்க்க அடிப்படையிலும் புலனுணர்வு மற்றும் பகுத்தறிவு அடிப்படையிலும் தவறானதாகும். மார்க்க ஆதாரம்: மண்ணறையில் வேதனையும் இன்பமும் உண்டு என்பதற்கான இறைமார்க்கத்தின் ஆதாரங்கள் 'மண்ணறையின் துன்பமும் இன்பமும்" என்ற தலைப்பில் முன்னர் கூறப்பட்டுள்ளது.

ஸஹீஹுல் புகாரியில் இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்)அவர்கள் மதீனாவின் தோட்டங்கள் ஒன்றிலிருந்து வெளியேறினார்கள். அப்போது தங்கள் மண்ணறையில் வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த இரு மனிதர்களின் சப்தத்தைக் கேட்டார்கள்.(அந்த ஹதீஸின் தொடரில் சொல்லப்பட்டுள்ளது:) 'அவ்விருவரில் ஒருவர் சிறுநீர் கழிக்கும்போது (தெறிக்கும் சிறுநீர்த் துளிகளிலிந்து தன்னைக்) காத்துக் கொள்ளவில்லை. மற்றொருவர் கோள்சொல்லித் திரிந்தார்."

புலனுணர்வின் ஆதாரம்: தூங்குபவன் கனவுகாணும் போது, தான் ஒரு பசுமையான விசாலமான இடத்தில் இருந்து கொண்டு இன்பம் அனுபவிப்பது போலவோ அல்லது நெருக்கடியான, தனிமையான ஒரு இடத்தில் இருந்து கொண்டு துன்பப்படுவது போலவோ காண்கிறான். சில வேளை தான் கண்ட கனவினால் விழித்துக் கொள்ளவும் செய்கிறான். ஆனாலும் அவன் தனது அறையில் தன்னுடைய படுக்கையில் தான் இருந்தவாறே இருக்கின்றான். தூக்கம் ஒரு வகையில் மரணத்திற்கு ஒப்பானது. இதனால் தான் அல்லாஹ் பின் வரும் வசனத்தில் தூக்கத்தை மரணம் என்று குறிப்பிடுகிறான்:

அல்லாஹ், மரணத்தின்போது உயிர்களைக் கைப்பற்றுகிறான். (அவ்வாறே) மரணிக்காதவர்களின் உயிர்களைத் தூக்கத்தின்போது கைப்பற்றுகிறான். பிறகு எவர்களின் மீது மரணத்தை விதிக்கிறானோ அவர்களின் உயிரைத் தடுத்து வைத்துக் கொள்கிறான். மற்றவர்களின் உயிர்களை ஒரு குறிப்பிட்ட தவணை வரை திருப்பி அனுப்புகிறான்.(39:42)

பகுத்தறிவின் ஆதாரம்: தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் யதார்த்தத்திற்கு ஒத்துவரக்கூடிய உண்மையான கனவைக் காண்கிறான். சில வேளை நபி(ஸல்)அவர்களை அவர்களது உண்மையான தோற்றத்தில் காண்கிறான். யார் நபி(ஸல்)அவர்களை அவர்களது உண்மையான தோற்றத்தில்

கண்டாரோ அவர் உண்மையில் அவர்களையே கண்டார். ஆனாலும் அவன் தனது அறையில் தன்னுடைய படுக்கையில் தான் கண்டகாட்சியை விட்டும் தூரமாகவே இருக்கிறான். இவ்வுலக நிலைகளில் இது சாத்தியம் எனும் போது மறு உலக நிலைகளில் அது சாத்தியமானதாக இருக்காதா என்ன?!

மண்ணறையில் வேதனையும் இன்பமும் ஏற்படுவதென்பது சாத்தியமற்றது, யதார்த்தத்திற்கு முரணானது என்று கூறுவோர் தங்களின் கூற்றுக்கு 'மண்ணறையைத் தோண்டிப் பார்த்தால் பிரேதம் இருந்த நிலையிலேயே இருக்கிறது. மண்ணறையில் விசாலமோ நெருக்கடியோ எந்த மாற்றமும் ஏற்படவில்லை'' என்பதையே ஆதாரமாக வைத்தனர். அதற்கு நாம் பல கோணங்களில் பதில் சொல்லலாம். அவற்றுள் சில:

**1.** மார்க்கம் கூறுகின்ற உண்மைகளை இது போன்ற பலவீனமான சந்தேகங்களைக் கொண்டு ஆட்சேபிக்க முடியாது. இவற்றைக் கொண்டு ஆட்சேபிப்பவர்கள் மார்க்கம் கூறுகின்ற உண்மைகளை சிந்திக்க வேண்டிய முறைப்படி சிந்தித்துப் பார்த்தால் இத்தகைய சந்தேகங்கள் தவறான வை என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

**2.** மண்ணறையில் நடப்பவையாவும் புலன்களால் அறிந்து கொள்ள முடியாத மறைவான விஷயங்களைச் சேர்ந்ததாகும். புலன்களால் அறிந்து கொள்ள முடியுமென்றிருந்தால் 'மறைவான விஷயங்களை நம்புதல்'' என்பதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும். மட்டுமல்லாமல் மறைவான விஷயங்களை நம்புவோரும் மறுப்போரும் சமமாகி விடுவர்.

**3.**மண்ணறையின் வேதனையையும் சுகத்தையும் அதன் விசாலத்தையும் நெருக்கடியையும் அனுபவிப்பது மரணித்தவர்தானே தவிர மற்றவரல்லர். இது, தூங்குபவன் தான் ஒரு நெருக்கடியான, தனிமையான இடத்தில் இருப்பதாகவோ அல்லது பசுமையான விசாலமான இடத்தில் இருப்பதாகவோ

கனவு காண்பது போலாகும். ஆனால் மற்றவர்களின் பார்வையில் அவன் தனது அறையில் படுக்கையில் போர்த்திக் கொண்டு தூங்கிக்கொண்டிருக்கிறான்.

நபி(ஸல்)அவர்கள் தமது தோழர்களுக்கு மத்தியில் இருக்கும் போது வஹீ வந்திருக்கிறது. நபி(ஸல்)அவர்களுக்குக் கேட்கின்ற அந்த வஹீ தோழர்களுக்குக் கேட்காது. சில சமயம் மலக்கு மனித வடிவில் வந்து நபி(ஸல்)அவர்களிடம் பேசுவார். ஆனால் நபித்தோழர்கள் அந்த வானவரைக் காணவோ அவரது பேச்சைக் கேட்கவோ முடியாது.

**4.** மனிதர்களின் அறிவு, அல்லாஹ் தனது அறிவிலிருந்து எந்த அளவு அவர்களுக்கு வழங்கியிருக்கின்றானோ அந்த அளவுக்கு உட்பட்டதாகும். அவர்களால் எல்லாவற்றையும் அறிய முடியாது.

ஏழு வானங்கள், பூமி மற்றும் அவற்றிலுள்ள அனைத்தும் மெய்யாகவே அல்லாஹ்வைப் புகழ்ந்து துதிக்கின்றன. சில போது அல்லாஹ் தான் நாடியவருக்கு அதைக் கேட்கச் செய்கிறான்.ஆனாலும் அவன் நம்மை விட்டும் மறைந்து இருக்கின்றான். இது விஷயமாக அல்லாஹ் கூறுகிறான்:

ஏழு வானங்களும் பூமியும், அவற்றில் உள்ள அவனைத் தும் அவனைத் துதித்திக் கொண்டிருக்கின்றன. இன்னும் எந்தப் பொருளும் அவனைப் புகழந்து துதிக்காமலில்லை. எனினும் அவை துதி செய்வதை நீங்கள் புரிந்து கொள்ள மாட்டீர்கள்.(17:44)

இவ்வாறே ஷைத்தான்களும் ஜின்களும் பூமியில் வருவ தும் போவதுமாக திரிந்து கொண்டிருக்கின்றன. நபி(ஸல்) அவர்களிடம் கூட ஜின்கள் வந்தன. அவை நபியவர்கள் குர்ஆன் ஓதுவதை மௌனமாக இருந்து செவியேற்றன. பின்னர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாக தமது சமூகத்தாரிடம் சென்றன.

இத்தனைக்கும் அவை நம் கண்களை விட்டும் மறைவாகவே இருக்கின்றன. இது பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

ஆதமுடைய மக்களே! எவ்வாறு ஷைத்தான் உங்கள் தாய் தந்தையரை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றினானோ, மேலும் அவர்களுடைய வெட்கத்தலங்களை பரஸ்பரம் வெளிப்படுத்திட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய ஆடையை அவர்களை விட்டும் களைந்தானோ அவ்வாறு மீண்டும் உங்களை அவன் குழப்பத்திலாழ்த்திட வேண்டாம். இடத்திலிருந்து அவனும் அவனுடைய நண்பர்களும் உங்களைப் பார்க்கிறார்கள். நீங்கள் அவர்களைப் பார்க்க முடியாத வகையில். திண்ணமாக நாம் இறைநம்பிக்கை கொள்ளாதவர்களுக்கு இந்த ஷைத்தான்களை நண்பர்களாய் ஆக்கியுள்ளோம்.(7:27)
மனிதர்கள் எல்லாவற்றையும் அறிய முடியாதவர்களாக இருக்கும்போது மறைவான விஷயங்கள் என நிரூபணமானவற்றை- தங்களால் அறியமுடியவில்லை என்பதற்காக மறுக்கக் கூடாது.

---

**நன்மையும் தீமையாவும் அவன் விதித்த விதிப்படியே நடக்கின்றன என்பதை நம்புவது.*1* இந்த ஆறு அடிப்படைகளுக்கும் ஆதாரம் *-* அல்லாஹ் கூறுகிறான் - நன்மை என்பது உங்கள் முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல. மாறாக அல்லாஹ்வையும், இறுதிநாளையும், மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதே நன்மையாகும்.** *(*2:177*)*
**விதிக்கு ஆதாரம்*:*அல்லாஹ் கூறுகிறான் *-* நிச்சமாக நாம் ஒவ்வொரு பொருளையும் ஒரு குறிப்பிட்ட விதியின்படி படைத்திருக்கிறோம்.** *(*54:49*)*

---

**(1)** விதி என்பது படைப்பினங்களுக்கு அல்லாஹ் நிர்ணயித்து வைத்திருக்கும் ஏற்பாடாகும். இது, எல்லாவற்றையும் முன்னரே அவன் அறிந்திருப்பதற்கு ஏற்பவும் அவனது விவேகத்தின் தேட்டத்தின்படியும் நிர்ணயிக்கப்பட்டதாகும்.

விதியை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன:

அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் பொதுவாகவும் விரிவாகவும் ஆதி முதல் அந்தம் வரையிலும் அறிந்திருக்கிறான் என நம்புவது. அது அவனுடைய செயல்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களாயினும் அல்லது அவனுடைய அடியார் களின் செயல்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களாயினும் சரியே.

❁ இந்த விபரங்களை அல்லாஹ் 'லவ்ஹுல் மஹ்ஃபூழ்'' எனும் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் எழுதி வைத்துள்ளான் என நம்புவது.

இவ்விரண்டு விஷயங்களைப் பற்றியும் அல்லாஹ் கூறுகிறான்: வானங்கள் மற்றும் பூமியிலுள்ள அனைத்தையும் திண்ணமாக அல்லாஹ் அறிகிறான் என்பதை நீர் அறியவில்லையா? நிச்சயமாக அவையனைத்தும் ஓர் ஏட்டில்(பதிவு செய்யப்பட்டு) உள்ளன. திண்ணமாக இது அல்லாஹ்வுக்கு மிகவும் சுலபமானதாகும். (22:70)

அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைப்பதற்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே படைப்பினங்களின் விதியை எழுதிவிட்டான் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ்(ரலி)அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்)

❁ நிகழுபவை அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நிகழ்கின்றன என நம்புவது. அவை அவனுடைய செயல்கள் சம்பந்தப்பட்டதாயினும் சரி. அல்லது அவனுடைய அடியார்களின் செயல்கள் சம்பந்தப்பட்டதாயினும் சரி.

தனது செயல்கள் சம்பந்தப்பட்டதைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்: ''மேலும் உம்முடைய இறைவன், தான் நாடுவதைப் படைக்கிறான். மேலும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்.''(28:68) ''மேலும் அல்லாஹ், தான் நாடுவதைச் செய்கிறான்.''(14:27)

"அவனே கருவறைகளில் தான் நாடுகிறவாறு உங்கள் உருவங்களை அமைக்கிறான்."(3:6)

படைப்பினங்களின் செயல்கள் சம்பந்தமாக அல்லாஹ் கூறுகிறான்:

"அல்லாஹ் நாடியிருந்தால் உங்களின் மீது அவர்களின் (நயவஞ்சகர்களின்)ஆதிக்கத்தைத் திணித்திருப்பான்.அவர் களும் உங்களுக்கு எதிராகப் போர் புரிந்திருப்பார்கள்." (4:90)"உங்களுடைய இறைவன் நாடியிருந்தால் அவர்கள் ஒருபோதும் இச்செயலைச் செய்திருக்க மாட்டார்கள். எனவே (நபியே!) நீர் அவர்களையும், அவர்கள் புனைந்து கொண்டிருப்பதையும் விட்டு விடும்."(6:137)

❁ உலகில் உள்ளவை அனைத்தும் அவற்றின் உள்ளமை, தன்மைகள், அசைவுகள் உட்பட அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவையாகும் என நம்புவது.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்தவன். அனைத்திற்கும் அவனே பொறுப்பாளன். (39:62) மேலும் கூறுகிறான்: அவன் ஒவ்வொரு பொருளையும் படைத்து, அவை ஒவ்வொன்றுக்கும் விதியை நிர்ணயம் செய்தான்.(25:2)

இபுராஹீம்(அலை)தமது சமுதாயதவருக்குச் சொன்னதை அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ்தான் உங்களையும் படைத்தான், நீங்கள் உருவாக்குகிற இப்பொருட்களையும்படைத்தான்.(37:96)

இதுவரை நாம் கூறிய பிரகாரம் விதியை நம்புவதென்பது மனிதனுக்கு அவனது சுயமான செயல்களில் நாட்டமும்,

ஆற்றலும் உண்டு என்பதற்கு முரணாகாது.ஏனெனில் இறை மார்க்கமும் யதார்த்தமும் இதையே உறுதிசெய்கின்றன.

மார்க்கம் கூறுவதாவது: மனிதனுக்கு அவனது செயலில் சுய நாட்டம் உண்டு என்பது பற்றி அல்லாஹ் கூறுகிறான்: "அந்த நாள் (வருவது) உண்மையாகும்.எனவே நாடியவர் தம் இறைவனின் பக்கம் மீளும் பாதையைத் தேர்ந்தெடுத் துக் கொள்ளட்டும்."(78:39)
"உங்கள் மனைவியர் உங்களின் விளைநிலங்களாவர். எனவே நீங்கள் விரும்பும் முறையில் உங்களின் விளைநிலங்களுக்குச் செல்லுங்கள்."(2:223)

மனிதனுக்கு அவனது செயலில் சுய ஆற்றலும் உண்டு என்பது பற்றி அல்லாஹ் கூறுகிறான்: "ஆகவே, உங்களால் இயன்றவரை அல்லாஹ்வுக்கு அஞ்சிய வண்ணம் வாழுங்கள். மேலும் (அவன் போதனைகளைச்) செவிதாழ்த்திக் கேளுங்கள், கீழ்ப்படியுங்கள்." (64:16)

"அல்லாஹ் எந்த மனிதனையும் அவனது சக்திக்கு அதி கமாக(பொறுப்புக்களைச் சுமத்தி)சிரமப்படுத்துவதில்லை. அவன் சம்பாதித்த நன்மையின் பலனும் அவனுக்கே. அவன் சம்பாதித்த தீமையின் விளைவும் அவனுக்கே.(2:286)

யதார்த்தம் உணர்த்துவதாவது: தனக்கு சுய நாட்டமும் சுய ஆற்றலும் உண்டு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தெரியும். அவ்விரண்டைக் கொண்டே அவன் செயல்படுகிறான். அவ்விரண்டைக் கொண்டே செயல்படாமல் விட்டும் விடுகிறான். தனது நாட்டப்படி நிகழ்வதையும்- உதாரணமாக நடந்து செல்வது- தனது நாட்டமில்லாமல் நிகழ் வதையும்- உதாரணமாக கை கால்கள் நடுங்குவது- அவன் பிரித்து அறிந்து கொள்கிறான். எனினும் அவனது நாட்டமும், அவனது ஆற்றலும்

அல்லாஹ்வின் நாட்டப்படியும் அவனின் ஆற்றலைக் கொண்டுமே நிகழ்கின்றன.

ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்:(இந்தக் குர்ஆன்)நேர் வழியில் நடந்திட விரும்பும் ஒவ்வொருவருக்கும் உரியது. மேலும் நீங்கள் நாடுவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இப்பிரபஞ்சம் முழுவதற்கும் அதிபதியான அல்லாஹ் நாடாத வரையில்! (81:28,29)

மட்டுமல்ல, இப்பிரபஞ்சம் முழுவதும் அல்லாஹ்வுக்குரியது. அல்லாஹ்வுக்குரிய ஒன்றில் அவன் அறியாமலும் அவன் நாடாமலும் எதுவும் நிகழ்வதில்லை!

இதுவரை நாம் கூறிய பிரகாரம் விதியை நம்புவது மனிதன் கடமைகளை விட்டுவிடுவதற்கோ அல்லது பாவங்கள் செய்வதற்கோ ஆதாரமாக ஆகிவிடாது. இதெற்கெல்லாம் விதியை ஆதாரமாகக் காட்டுவது பலவகைகளில் தவறானதாகும்.

**1.** அல்லாஹ் கூறுகிறான்: "அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும் எங்கள் மூதாதையர்களும் இணைவைத்திருக்க மாட்டோம். எதையும் விலக்கப்பட்டதாக ஆக்கியிருக்கவும் மாட்டோம்"" என்று இணை கற்பிப்போர் கூறுகின்றனர். இவ்வாறே அவர்களுக்கு முன் சென்றோரும் பொய்யெனக் கருதினர். இறுதியில் நமது வேதனையை அவர்கள் அனுபவித்தார்கள். "உங்களிடம் இதுபற்றிய விபரம் உண்டா? (இருந் தால்) அதை எங்களுக் காட்டுங்கள்.நீங்கள் ஊகத்தையே பின்பற்றுகிறீர்கள். நீங்கள் அனுமானம் செய்வோர் தவிர வேறில்லை"" என்று (நபியே!) கேட்பீராக!(6:148)

விதியின் மூலம் அவர்களுக்கு ஆதாரம் கிடைத்திருந்தால் அல்லாஹ் தனது வேதனையை அவர்கள் அனுபவிக்கும்படி செய்திருக்க மாட்டான்.

**2.**அல்லாஹ் கூறுகிறான்: தூதர்களை நற்செய்தி கூறு பவர்களாகவும் எச்சரிக்கை செய்பவர்களாகவும் அனுப்பி வைத்தோம். ஏனெனில் இத்தூதர்களை அனுப்பிய பிறகு அல்லாஹ்விடம் முறையிட மக்களுக்கு ஆதாரம் எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காக. மேலும் அல்லாஹ்(யாவரையும்) மிகைத்தவனாகவும்,நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான்.(4:165)

இறைவனுக்கு மாறு செய்து வாழ்ந்தவர்களுக்கு விதி ஆதாரமாக இருந்திருந்தால் இறைத்தூதர்களை அனுப்புவதன் மூலம் அந்த ஆதாரம் எடுபட்டுப் போயிருக்காது. காரணம், இறைத்தூதர்களை அனுப்பிய பின்னரும் மாறு செய்யக்கூடிய நிலை அல்லாஹ்வின் விதிப்படி நிகழக்கூடியதாகவே இருந்தது.

**3.** அலி(ரலி)அறிவிக்கிறார்கள்: உங்களில் ஒவ்வொருவருக்கும் அவரது இருப்பிடம் நரகத்திலா? அல்லது சுவர்க்கத்திலா? என்று எழுதப்படாமல் இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறியபோது கூட்டத்திலிருந்த ஒருவர், அல்லாஹ் வின் தூதரே! அதை நம்பி நாங்கள்(அமல் ஏதும் செய்யாமல்)இருந்துவிடட்டுமா? எனக் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், 'கூடாது! நீங்கள் அமல் செய்யுங்கள். ஒவ்வொரு வரும் எதற்காகப் படைக்கப் பட்டுள்ளாரோ அதற்குரிய அமலைச் செய்ய அவருக்கு இலகுவாக்கித்தரப்படுகிறது" எனக் கூறிவிட்டு பின்வரும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

"எனவே எவர்(இறைவழியில்)பொருளை வழங்கினாரோ மேலும்(இறைவனுக்கு மாறு செய்வதிலிருந்து)விலகி இருந்தாரோ மேலும் நன்மையை உண்மையென ஏற்றுக் கொண்டாரோ அவருக்கு இலகுவான வழியில் செல்ல நாம் வகை செய்வோம். எவர் கஞ்சத்தனம் செய்கின்றாரோ மேலும் (தன் இறைவனைப்) பொருட்படுத்தாமல் நடந்தாரோ இன்னும் நன்மையைப் பொய்யென நிராகரித்தாரோ அவருக்கு கடினமான வழியில் செல்வதற்கு நாம் வகை செய்வோம்." (92:4-7) (புகாரி,முஸ்லிம்)

எனவே நபி(ஸல்)அவர்கள் செயல்படும்படி ஏவினார்கள். விதியை கதி என செயல்படாமல் இருப்பதைத் தடுத்தார்கள்.

**4.** அல்லாஹ் மனிதனுக்கு ஏவல்களையும் கொடுத்திருக்கின்றான். விலக்கல்களையும் கொடுத்திருக்கின்றான். மேலும் அவனால் இயன்ற அளவுக்கு செயல்படும்படியே பணித்திருக்கின்றான்.

அல்லாஹ் சொல்கிறான்: உங்களால் இயன்றவரை அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.(64:16) மேலும் சொல்கிறான்: அல்லாஹ் எந்த மனிதனையும் அவனது சக்திக்கு அதிகமாக (பொறுப்புகளைச்சுமத்தி) சிரமப் படுத்துவதில்லை. (2:286)

செயலில் மனிதன் நிர்பந்திக்கப்படுபவனாக இருந்திருந்தால் செய்து முடிக்க முடியாத காரியத்தைச் செய்யுமாறு சிரமப்படுத்தப்பட்டிருப்பான். அது தவறு! அதனால்தான் அறியாமலோ, மறதியாகவோ, நிர்ப்பந்தமாகவோ அவன் பாவம் செய்துவிட்டால் அதன் பேரில் அவன் குற்றம் சுமத்தப் படுவதில்லை. ஏனெனில் அவன் தக்க காரணம் உடையவனாக இருக்கின்றான்.

**5.** அல்லாஹ் நிர்ணயித்த விதி மறைக்கப்பட்ட இரகசியமாகும். விதிக்கப்பட்டது நடந்த பின்பு தான் அது தெரியவரும். மனிதனின் நாட்டமோ அவனுடைய செயலை முந்தியதாய் இருக்கிறது. எனவே மனிதன் ஒன்றைச் செய்ய வேண்டு மென நாடுவது அவனுடைய விதியை அவன் அறிந்திருப்பதன் மீது அமைக்கப்பட்டதல்ல. ஆகையால் விதியை அவன் தாரமாகக் காட்டுவது எடுபடாமல் போகிறது. ஏனெனில் மனிதனுக்கு அவன் அறிந்திராத விஷயங்களில் எந்த ஆதாரமும் இல்லை.

**6.** மனிதன் இவ்வுலக விஷயங்களில் தனக்கு இணக்க மானவற்றின் மீதே ஆர்வம் கொள்வதைப் பார்க்கிறோம்- அவற்றை அவன் அடையும் வரை.அவற்றை விடுத்து அவனுக்கு

இணக்கமில்லாதவற்றின் பக்கம் அவன் திரும்புவதில்லை. அப்படித் திரும்பாததற்கு விதியையும் அவன் ஆதாரமாகக் காட்டுவதில்லை. அப்படி இருக்கும் போது, மார்க்க விஷயங்களில் அவனுக்குப் நன்மையளிப்பவற்றை விட்டுவிட்டு தீமையளிப்பவற்றை ஏன் செய்கிறான்? அதற்கு விதியை ஏன் ஆதாரமாகக் காட்டுகிறான்? இவ்விரண்டு விஷயங்களும் ஒன்றில்லையா!?

இதோ இதைத் தெளிவுபடுத்துவதற்கு ஓர் உதாரணம்:

ஒரு மனிதனுக்கு முன் இரண்டு பாதைகள் இருக்கின்றன. ஒன்று, சட்ட ஒழுங்குஇல்லாத, கொலை, கொள்ளை நடைபெறுகிற, கண்ணியம், மான மரியாதைகள் பங்கப்படுத் தப்படுகிற, அச்சமும் பட்டினியும் நிலவுகிற ஊரை நோக்கிச் செல்கிறது. மற்றொன்று சட்டஒழுங்கு பேணப்படுகிற, நிலையான பாதுகாப்பும் நிறைவாழ்வுமுடைய, உயிர், உடமை, மான மரியாதைகளுக்கு மதிப்பளிக்கப்படுகிற ஊரை நோக்கிச் செல்கிறது. இவ்விரண்டு பாதைகளில் எந்தப் பாதையில் அவன் செல்வான்?

நிச்சயமாக அவன், சட்ட ஒழுங்கும், அமைதியும் உள்ள ஊரை நோக்கிச் செல்கின்ற பாதையில்தான் செல்வான். அறிவுள்ள எவனும் சட்ட ஒழுங்கு இல்லாத, அச்சம் நிறைந்த ஊரை நோக்கிச் செல்கின்ற பாதையில் சென்று அதற்கு விதியை ஆதாரமாகக் காட்டுவது அறிவுடைய எந்த மனிதனுக்கும் சாத்தியமாகாது.

பிறகு ஏன் மறுமையின் விஷயத்தில் மட்டும் மனிதன் சுவர்க்கத்தின் பாதையை விடுத்து நரகத்தின் பாதையில் செல்ல வேண்டும்? பின்பு விதியை ஏன் ஆதாரமாகக் காட்ட வேண்டும்? மற்றொரு உதாரணம்: நோயாளியைப் பார்க்கிறோம், மருந்து உட்கொள்ளுமாறு அவருக்குச் சொல்லப்படுகிறது. மனம் விரும்பாமலேயே அதனைச் சாப்பிடுகிறார். மேலும் அவருக்குத்

தீங்களிக்கக்கூடிய உணவைத் தவிர்க்குமாறு கூறப்படுகிறது. மனம் விரும்பியும் அதை உண்ணாது விட்டு விடுகிறார். இதுவெல்லாம் அவரது நிவாரணத்திற்கும் பாதுகாப்புக்கும் தான். அவர் மருந்தையும் உட்கொள்ளாமல், தீங்களிக்கக்கூடிய உணவையும் தவிர்க்காமல் இருந்து கொண்டு விதியை ஆதாரமாகக் காட்டுவது சாத்தியமில்லை.

அப்படியாயின் அல்லாஹ்வும் அவன் தூதரும் ஏவியதை பிறகு ஏன் விட்டுவிடுகிறான்? அவர்கள் தடை செய்ததைச் செய்கிறான்? பிறகு அதற்கு விதியை ஏன் ஆதாரமாகக் காட்டுகிறான்?

7. கடமைகளை விடுவதற்கும் பாவங்களைச் செய்வதற் கும் விதியை ஆதாரமாகக் காட்டக்கூடிய ஒருவர் மீது இன் னொருவர் வரம்பு மீறி நடந்து கொண்டு அவரது பொருளை அபகரித்து, அவரது மானம் மரியாதைக்குப் பங்கம் விளை வித்து, பிறகு 'என்னை நீ பழிக்காதே! நான் உன்னிடம் வரம்பு மீறி நடந்து கொண்டது அல்லாஹ் விதித்த விதியா கும்" என்று கூறி விதியை ஆதாரமாகக் காட்டினால் அவர் அதை ஏற்றுக்கொள்வாரா? மாட்டார்தானே!

அடுத்தவர் அவருக்கு அக்கிரமம் செய்து அதற்கு விதியை ஆதாரமாகக் காட்டும்போது ஏற்றுக் கொள்வதில்லை. அப்படி இருக்கும் போது,அவர் அல்லாஹ் விஷயத்தில் வரம்பு மீறி நடந்து கொண்டு அதற்கு விதியை ஆதாரமாகக் காட்டு வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?!

முஃமின்களின் ஆட்சித் தலைவர் கலீஃபா உமர் பின் கத்தாப்(ரலி)அவர்களிடம் திருட்டுக் குற்றம் புரிந்த ஒருவ ரைக் கொண்டு வரப்பட்டபோது அவரது கையை வெட்டும் படி உத்தர விட்டார்கள். அப்போது அவர், 'முஃமின்களின் ஆட்சித் தலைவரே! சற்றுப் பொறுங்கள்! அல்லாஹ் விதித்த விதிப்படியே நான் திருடினேன்" அதற்கு கலீஃபா அவர்கள், 'நாம் உம்

கையை வெட்டுவதும் அல்லாஹ் விதித்த விதிப்படிதான்" என்று பதிலளித்தார்கள்.

விதியை நம்புவதில் பல பயன்கள் உள்ளன. அவற்றுள் சில:

**1.** காரண காரியங்களைச் செய்யும் போது அந்த காரணி யின் மீது சார்ந்திராமல் அல்லாஹ்வின் மீதே முழுவதும் சார்ந்திருத்தல். ஏனெனில் அல்லாஹ் விதித்த விதிப்படியே ஒவ்வொன்றும் நடக்கிறது.

**2.** நாடிய கரியம் நிறைவேறும்போது மனிதன் தற்பெருமை கொள்ளாதிருப்பது. ஏனென்றால் அது நிறைவேறியது அல்லாஹ்வின் அருளினால் ஆகும். அவன்தான் நன்மை மற்றும் வெற்றிக்கான காரணிகளை நிர்ணயித்து வைத் தான். அது குறித்து மனிதன் தற்பெருமை கொள்வது இந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதை விட்டும் அவனை மறக்கடித்து விடும்.

**3.**அல்லாஹ் நிர்ணயித்த விதிப்படி காரியங்கள் நடை பெறுகிறபோது அது குறித்து மனிதன் மன நிம்மதியும் சாந் தியும் அடைவது. 'தான் விரும்பியது தவறிவிட்டதே" என்றோ 'தான் வெறுக்கும் காரியம் நடந்து விட்டதே" என்றோ அவன் மனக்கலக்கம் அடைவதில்லை. ஏனெனில் அது வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அதிகாரம் யார் கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் விதிப்படி நடந்ததாகும்.அது சந்தேக மின்றி நடந்தே தீரும்.

இது விஷயமாக அல்லாஹ் கூறுகிறான்: பூமியில் ஏற்படுகிற அல்லது உங்களின் மீது இறங்குகிற எந்தத் துன்பமானாலும் அதனை நாம் உருவாக்குவதற்கு முன்பு அதைக் குறித்து ஓர் விதி ஏட்டில் எழுதி வைக்காமல் இல்லை. அப்படிச் செய்வது அல்லாஹ்வுக்கு மிக எளிதான தாகும்.(இவையனைத்தும்) எதற்காகவெனில் உங்களுக்கு எந்த நஷ்டம் ஏற்பட்டாலும் நீங்கள்

மனம் துவண்டுவிடக் கூடாது. மேலும் அல்லாஹ் உங்களுக்கு வழங்கியிருப்பதைக் கொண்டு நீங்கள் பூரித்துப் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான். தம்மையே பெரிதாக நினைத்துக் கொள்கிற பெருமை பேசித்திரிகிற எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.(57:22,23)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ஒரு இறைவிசுவாசியின் நிலமை குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன்! அவனது எல்லா விஷயங்களும் நன்மையாகவே உள்ளன! இறைவிசு வாசிக்கே தவிர வேறெவருக்கும் இப்படி வாய்ப்பதில்லை. அவனுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டால்(அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துகிறான்.அது அவனுக்கு நன்மையாக அமைகிறது. அவனுக்கு ஒரு தீங்கு எற்பட்டால் பொறுமையை மேற்கொள்கிறான்.அதுவும் அவனுக்கு நன்மையாகி விடுகிறது! (முஸ்லிம்)

விதிபற்றிய கொள்கையில் இரு கூட்டத்தினர் வழிதவறி விட்டனர்.

ஒரு கூட்டத்தினர் 'ஜப்ரிய்யா" என்போர். இவர்கள் கூறுகின்றனர்: 'மனிதன் தனது செயலில் நிர்ப்பந்திக்கப்படுபவனாக இருக்கிறான். அவனுக்கு அதில் சுய நாட்டமோ சுய ஆற்றலோ இல்லை"

மற்றொரு கூட்டத்தினர் 'கத்ரிய்யா" என்போர். இவர்கள் கூறுவதாவது: 'மனிதன் தனது செயலில் சுய நாட்டமும் ஆற்றலும் உடையவனாக இருக்கின்றான்.அதில் அல்லாஹ்வின் நாட்டத்திற்கோ ஆற்றலுக்கோ எந்த சம்பந்தமும் கிடையாது"

முதல் கூட்டத்தினரான ஜப்ரிய்யாக்களுக்கு இறைமார்க்கமும் யதார்த்தமும் அளிக்கும் பதில்:

இறைமார்க்கத்தின் பதில்: அல்லாஹ் ஒரு மனிதனுக்கு சுய நாட்டத்தையும் விருப்பத்தையும் கொடுத்து,அவனுடன் அவனது செயலை இணைத்துள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்: "உங்களில் இவ்வுலகை நாடு வோரும் உள்ளனர்.உங்களில் மறு உலகை விரும்புவோரும் உள்ளனர்." (3:152)

"(நபியே!)நீர் கூறிவிடும்:இந்த சத்தியம் உங்கள் இறை வனிடமிருந்து வந்துள்ளது. ஆகவே, விரும்புவோர்(அதனை) நம்பிக்கை கொள்ளட்டும். விரும்புவோர்(அதனை) நிராகரிக்கட்டும். அநியாயக்காரர்களுக்கு திண்ணமாக நாம்(நரக) நெருப்பை தயார்படுத்தி வைத்துள்ளோம். அதன் சுவாலைகள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும்."(18:29)

"யாரேனும் நற்செயல் புரிந்தால் அது அவருக்கு சாதகமானது. யாரேனும் தீமை செய்தால் அது அவருக்கு எதிரானது. உம்முடைய இறைவன் அடியார்களுக்கு அநியாயம் செய்பவன் அல்லன்."(41:46)

யதார்த்தம் கூறுவதாவது: உண்ணுதல், பருகுதல், கொடுக்கல் வாங்கல் போன்ற சுய நாட்டத்துடன் செய்கின்ற செயல்களுக்கும், காய்ச்சலால் ஏற்படுகின்ற உடல் நடுக்கம், மாடியிலிருந்து விழுதல் போன்ற சுய நாட்டமின்றி ஏற்படுகின்ற செயல்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை ஒவ்வொரு மனிதனும் அறிந்தே இருக்கிறான். முதல் வகை செயல்களில் மனிதன் எவ்வித நிர்ப்பந்தமும் இன்றி சுய நாட்டத்துடன் செயல்படும் சுயஅதிகாரம் உள்ளவனாக இருக்கின்றான். இரண்டாம் வகை செயல்களில் சுய அதிகாரம் அற்றவனாகவும் நிகழ்ந்தவற்றை நாடாதவனாகவும் இருக்கின்றான்.

இரண்டாவது கூட்டத்தினரான கத்ரிய்யாக்களுக்கு இறைமார்க்கமும் பகுத்தறிவும் தரும் பதில்:

இறைமார்க்கத்தின் பதில்: அல்லாஹ்தான் ஒவ்வொரு பொருளையும் படைத்தான். ஒவ்வொன்றும் அவனது நாட்டப்படியே நடைபெறுகின்றது. அல்லாஹ் திருக்குர்அனில் மனிதர்களின் செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நிகழ்கின்றன என்பதை தெளிவுபடுத்தியுள்ளான்.

அல்லாஹ் நாடியிருந்தால் அந்தத் தூதர்களுக்குப் பின்னர் வந்தவர்கள், தெளிவான அத்தாட்சிகள் தம்மிடம் வந்தபின்னரும்(தமக்குள்ளேயே) போரிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள்(தமக்குள்ளேயே)வேறுபட்டுக் கொண்டனர். அவர்களில் சிலர் இறைநம்பிக்கை கொண்டனர். வேறு சிலர் நிராகரிப்புப் போக்கை மேற்கொண்டனர். அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் போரிட்டிருக்க மாட்டார்கள். ஆயினும் தான் நாடுகின்றவற்றை அல்லாஹ் செய்கிறான்.(2:253)

மேலும் கூறுகிறான்: நாம் நாடியிருந்தால் ஆரம்பத்திலேயே ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்குரிய நேர்வழியைக் காட் டியிருப்போம். ஆனால் ஜின்கள் மற்றும் மனிதர்கள் அனைவ ரைக் கொண்டும் நிச்சயமாக நரகத்தை நிரப்புவேன் என்று நான் கூறியிருந்த எனது வாக்கு நிறைவேறிவிட்டது.(32:13)

பகுத்தறிவு கூறுவதாவது: இப்பேரண்டம் முழுவதும் அல்லாஹ்வின் உடமையாகும். மனிதனும் இப்பேரண்டத்தைச் சேர்ந்தவன் தான். எனவே அவனும் அல்லாஹ்வின் உடமை தான்.ஓர் அடிமை தனது எஜமானனின் உடமையில் எஜமானனின் அனுமதி மற்றும் நாட்டமில்லாமல் ஆதிக்கம் செலுத்துவது சாத்தியமில்லை.

-----------------------------------------------------------------------------

**மூன்றாம் நிலை இஹ்ஸான் ஆகும். இதற்கு ஒரே அழப்படைதான் உள்ளது அது. அல்லாஹ்வை நீ பார்ப்பது போன்று வணங்குவதாகும். நீ அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்க்கிறான். என்பதாகும். ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - திண்ணமாக அல்லாஹ் இறையச்சம் கொள்வர்களுடனும் நன்மை செய்பவர்களுடனும் இருக்கின்றான். *(16:128)***

**மேலும் கூறுகிறான் - மேலும் வல்லமை மிக்கவனும், பெரும கிரபையாளனுமாகிய (இறை)வனிடமே முழு நம்பிக்கை வைப்பீராக! அவன், நீர்(தனித்து வணங்குவதற்காக) நிற்கும் போது உம்மைப் பார்க்கிறான். மேலும் ஸஜ்தா செவோருடன் நீர் இயங்குவதையும்(அவன் பார்க்கிறான்). திண்ணமாக அவன்(யாவற்றையும்) செவியேற்பவனும் நன்கு அறிபவனும் ஆவான்.*(26:217-220)***

**மேலும் கூறுகிறான் - (நபியே!) நீர் எந்த நிலையில் இருந்தாலும், குர்ஆனிலிருந்து நீர் எதை ஓதிக்காண்பித்தாலும், (மக்களே!) நீங்களும் எந்தச்செயலைச் செய்து கொண்டிருந்தாலும், அதை நீங்கள் செய்து கொண்டிருக்கும்போதே நாம் உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம். *(10:61)*[1]**

-----------------------------------------------------------------------------

**(1)** மார்க்கத்தின் மூன்றாம் நிலை இஹ்ஸான் ஆகும். இஹ்ஸான் என்பதற்கு நன்மை செய்தல் என்று பொருள். அதாவது ஒரு மனிதன் நன்மை செய்வதும் தீமையைத் தவிர்ப்பதும் இஹ்ஸான் ஆகும். எனவே ஒரு மனிதன் பிற மனிதர்களுக்கு தனது பொருளால், அந்தஸ்தால், கல்வியால், உடலால் நன்மை செய்ய வேண்டும்.

பொருளால் நன்மை செய்தல் என்பது இறைவழியில் செலவு செய்தல், தான தர்மம் செய்தல், ஸகாத் கொடுத்தல் ஆகியவையாகும். பொருளால் நன்மை செய்தலின் வகைகளில் சிறந்தது ஸகாத் கொடுத்தலாகும். ஏனெனில் ஸகாத் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். அது இல்லாமல் ஒரு மனிதனின் இஸ்லாம் பரிபூரணமாகாது. இறைவழியில் செலவு செய்தலில் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானது அதுவேயாகும்.

பிறகு மனிதன் செலவு செய்யக் கடமைப்பட்டவர்களான மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், அவர்களின் பிள்ளைகள், தந்தையின் சகோதரர்கள், தந்தையின் சகோதரிகள், தாயின் சகோதரிகள் இன்னும் இது போன்ற உறவினர்களுக்கு செலவு செய்தல் சிறந்த தாகும். அதன் பின்னர் ஏழைகளுக்கும், தர்மம் செய்யத் தகுதியானவர்களுக்கும்- உதாரணமாக கல்வி கற்பவர்கள்- செலவு செய்தல் ஆகும்.
அந்தஸ்தால் நன்மை செய்தல் என்பது எவ்வாறெனில், மனிதர்கள் பல அந்தஸ்துகளில் பல பதவிகளில் உள்ளனர். ஆட்சி அதிகாரம் உடையவர்களிடம் சிலர் அந்தஸ்து பெற்றிருப்பார்கள். இத்தகையோர் தமது அந்தஸ்தைப் பயன் படுத்தி நன்மை செய்ய வேண்டும். ஒருவர் அவர்களிடம் வந்து அதிகாரிகளிடம் பரிந்துரை செய்யுமாறு உதவி கேட்டால் அவருக்காக அங்கு சென்று பரிந்துரை செய்ய வேண்டும். அது ஒரு தீங்கை அவரை விட்டும் நீக்கும் வகையிலோ அல்லது அவருக்கு ஒரு நன்மை கிடைக்கச் செய்யும் வகையிலோ இருக்க வேண்டும்.

கல்வியால் நன்மை செய்தல் என்பது, பொதுக் கூட்டங்களில் அல்லது தனிப்பட்ட சபைகளில்- தேநீர் அருந்தும் சபை உட்பட- மக்களுக்கு கல்வியை போதிப்பதாகும். ஏனெனில் நீ மக்களுக்குக் கற்றுக்கொடுப்பதும் நன்மை செய்தல் மற்றும் உபகாரம் செய்தலைச் சேர்ந்ததே. எனினும் இது விஷயத்தில் நீ விவேகத்துடன் செயல்பட வேண்டும்.

சபையில் நீ அமரும் போதெல்லாம் மக்களுக்கு ஏதாவது சொல்லி, அறிவுரை செய்ய ஆரம்பித்து, அவர்களுக்கு சிரமத்தைக் கொடுத்து விடக்கூடாது. ஏனெனில் நபி(ஸல்)அவர்கள், தமது தோழர்களுக்கு அறிவுரை செய்யும்போது சமயோ சிதமாகச் செய்வார்கள். அதிகம் செய்ய மாட்டார்கள். ஏனெனில் உள்ளங்கள் சோர்ந்து சடைவு ஏற்பட்டுவிடும். அதனால் உள்ளங்கள் பலவீனமடைந்து விடும்.

சிலபோது அதிகமதிகம் அறிவுரை கூறுபவர்களால் உள்ளங்கள் நன்மையை வெறுக்கக் கூடும்.

உடலால் மக்களுக்கு நன்மை செய்தல்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதருக்கு அவர் வாகனத்தில் ஏறுவதற்கு நீ உதவுவது அதாவது அவரை அவரது வாகனத்தில் ஏற்றிவிடுவதோ அல்லது அவருக்காக அவரது பொருட்களை வாகனத்தில் ஏற்றி வைப்பதோ தர்மமாகும்"(புகாரி,முஸ்லிம்)

ஒரு மனிதருக்கு அவருடன் அவரது பொருட்களை சுமந்து உதவி செய்தல், அல்லது அவருக்குப் பாதையைக் காட்டுதல், இன்னும் இது போன்ற அனைத்துக் காரியங்களும் உடலால் செய்கின்ற நன்மையாகும். இதுவரை கூறப்பட்ட அனைத்தும் மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளாகும்.

இறைவழிபாட்டைப் பொருத்தவரையில் நன்மை செய்தல் (நல்லவிதமாகச் செய்தல்)இதுதான்: அல்லாஹ்வைப் பார்த்துக் கொண்டிருப்பது போல நீ அவனை வழிபடுவதாகும்.
இவ்வாறே நபி(ஸல்)கூறியுள்ளார்கள். இந்த வழிபாடு, அதாவது மனிதன் தன் இறைவனை- அவனைப் பார்ப்பது போன்ற நிலையில் இருந்து- வழிபடுவதென்பது நாடுதல் மற்றும் அன்பு செலுத்தும் வழிபாடாகும். இந்த வழிபாட்டின் மீதான ஒரு தூண்டுதலை மனிதன் தனது உள்ளத்திலேயே பெற்றுக் கொள்கிறான். எவ்வாறெனில் தான் நேசிக்கின்ற இறைவனைத் தேடுகிறான் மனிதன். எனவே அவனை நேரில் பார்ப்பதுபோன்று வழிபடுகிறான். அவனை நாடுகிறான், அவன் பக்கம் மீளுகிறான், அவனை நெருங்கிச் செல்கிறான்.

"நீ அவனைப் பார்க்காவிட்டால் நிச்சயமாக அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்."" அஞ்சுதல் மற்றும் தப்பித்தலுடன் கூடிய வழிபாடாகும். இதனால் இது இஹ்ஸான் எனும் நன்மை செய்தலின் இரண்டாம் அந்தஸ்தைப் பெறுகிறது.

அதாவது நீ அவனைப் பார்ப்பது, தேடுவது போன்ற நிலையுடன், உனது மனம் அவனைச் சென்றடையத் தூண்டுவது போன்ற நிலையுடன் அல்லாவை நீ வழிபடவில்லையானால் அவன் உன்னைப் பார்க்கிறான் என்ற நிலையில் அவனை வழிபடு. அவனைக் குறித்து அஞ்சு பவனின் வழிபாடாக அவனது தண்டனையில் இருந்து தப்பிப்பவனின் வழிபாடாக அவனை நீ வழிபடுவதாகும் இது. சான்றோர்களிடத்தில் இதன் அந்தஸ்து முந்திய அந்தஸ்தைவிடவும் தரம் குறைந்ததாகும்.

இறைவனை வழிபடுவதென்பது இப்னுல் கைய்யிம்(ரஹ்) அவர்கள் கூறியது போன்றாகும்."இறைவனை வழிபடுவதில் அதிக அளவு அன்பு வைத்தலும் அதிக அளவு பணிதலும் உள்ளன. இவ்விரண்டும் வழிபாட்டின் இரு அடிப்படைகள்.""

இறைவழிபாடு இவ்விரு அடிப்படைகளின் மீது அமையப் பெற்றதாக உள்ளது: அதிக அன்பு! அதிகப் பணிவு! அன்பில் (இறைவனைத்)தேடுதல் உள்ளது.பணிவில்(இறைவனைப் பற்றிய) அச்சமும் (அவனுடைய வேதனை மற்றும் தண்டனையிலிருந்து) தப்பித்தலும் உள்ளது.இவ்விரண்டும் இணைந்த நிலைதான் இறைவழிபாட்டைப் பொருத்து நன்மை செய்தல் -நல்லவிதாமாகச் செய்தல் ஆகும்.

இந்த முறையில் ஒரு மனிதன் அல்லாஹ்வை வணங்கினால் நிச்சயமாக அவன் அல்லாஹ்வுக்கு வாய்மையாளனாகத் திகழ்வான். அவனது வழிபாட்டை மக்கள் பார்க்க வேண்டும், புகழ வேண்டும் என்று நாடியவனாக ஆக மாட்டான். மக்கள் அவனது வழிபாட்டைப் பார்ப்பதும் பார்க்கா திருப்பதும் இரண்டும் அவனைப் பொருத்து சமம்தான். இத்தகைய மனிதன் எல்லா நிலைகளிலும் இஹ்ஸானுடன் வழிபட்டவன் ஆவான்.

சரியாகச் சொல்வதானால் வழிபாடு செய்யும்போது பிற மக்கள் தன்னைப் பார்க்கக் கூடாது என்றும் தனது வழிபாடு தன்

இறைவனுடன் இரகசியமாக இருக்க வேண்டும் என்றும் மனிதன் விரும்புவது வாய்மையின் நிறை நிலையாக உள்ளது. ஆனால் அதனை பகிரங்கப்படுத்துவதில் இஸ்லாத்திற்கோ முஸ்லிம்களுக்கோ நலன் இருந்தால் மட்டும் அவ்வாறு செய்வதுகூடும்.

உதாரணமாக ஒரு மனிதன் முன்மாதிரியாக, மக்களால் பின்பற்றப்படுபவனாக இருக்கிறான்,மேலும் தனது வழிபாட்டு முறையை மக்களுக்கு விளக்கிக் கொடுக்க விரும்புகிறான் - காரணம் அவர்கள் அதனை வழிகாட்டும் ஒளிவிளக்காகக் கொண்டு அதன்படி நடைபோட வேண்டும் என்பதற்காக - எனில் அல்லது அவன் தனது வழிபாட்டை வெளிப்படுத்த விரும்புகிறான்- அதனை அவனுடைய பள்ளித் தோழர்கள், சகக் கூட்டாளிகள், நண்பர்கள், பின்பற்ற வேண்டும் என்பதற்காக எனில் அப்படிச் செய்வதில் தவறில்லை. அதில் நன்மைதான் இருக்கிறது. மட்டுமல்ல,இந்த நன்மை அதாவது பிறரது கவனத்தை ஈர்க்கும் இந்த நன்மை வழிபாட்டை மறைப்பதை விடவும் சில பொழுது சிறந்ததாக உயர்ந்ததாக ஆகிறது. இதனால் தான் இரகசியமாகவும் பகிரங்கமாகவும் பொருட்களைச் செலவு செய்பவர்களைப் பற்றி அல்லாஹ் புகழ்ந்து கூறியுள்ளான்.

ஆக வழிபாட்டை இரகசியமாகச் செய்வது சிறப்பானதாகவும், உள்ளத்திற்கு பயனளிப்பதாகவும், இறையச்சத்திற் குரியதாகவும் அல்லாஹ்விடம் முழுமையாகத் திரும்புவதாகவும் இருந்தால் இரகசியமாகச் செய்யுங்கள். பகிரங்கமாகச் செய்வதில் இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் பகிரங்கமாகின்றன எனும் வகையில் இஸ்லாத்திற்கும் அவ்வாறு செய்யக் கூடியவரைப் பின்பற்றக்கூடிய முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்குமானால் பகிரங்கமாகச் செய்யுங்கள். எது அதிகம் நன்மை தரக்கூடியது என்பதைத்தான் ஒரு முஸ்லிம் பார்க்க வேண்டும். வணக்க வழிபாடுகளில் எது அதிக நன்மை தரக்கூடியதாகவும் பயன்

தரக்கூடியதாகவும் இருக்கின்றதோ அதுவே சிறந்ததும் பரிபூரணமானதும் ஆகும்.

---

**நபிவழியில் இதற்கு (இஹ்ஸானுக்கு) ஆதாரம் உமர்(ரழி) அறிவிக்கக்கூடிய, ஜிப்ரீல்(அலை) சம்மந்தப்பட்ட பிரபலமான ஹதீஸ் ஆகும். ஒரு நாள் நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருக்கும் போது திடீரென ஒரு மனிதர் தோன்றினார். அவரது ஆடைகள் பளிச்சிடும் வெண்மையாகவும் முடி கருகருப்பாகவும் இருந்தது. அவரிடம் பயணத்தின் அடையாளம் எதுவும் தென்படவில்லை. மேலும் எங்களில் யாரும் அவரை அறிந்திருக்கவுமில்லை. அவர் நபி(ஸல்) அவர்கள் முன் அமர்ந்தார். தனது முழங்கால்களை நபி(ஸல்) அவர்களின் முழங்கால்களுடன் சேர்த்து வைத்தார். தனது இரு கைகளையும் தனது இரு தொடைகளின் மீது வைத்தார். பிறகு "முஹம்மதே! இஸ்லாத்தைப் பற்றி எனக்குக் கூறும்" என்று கேட்டார்.**

**அதற்கு நபி(ஸல்) அவர்கள். "இஸ்லாம் என்பது வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்றும் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் உறுதியாக நம்புவதும், தொழுகையை நிலை நாட்டுவதும், ஸகாத் கொடுப்பதும், ரமழானில் நோன்பு நோற்பதும், மக்காவுக்கு சென்றுவர சக்தியிருந்தால் ஹஜ் செய்வதுமாகும் என்று கூறினார்கள். உடனே அவர், "நீர் உண்மை உரைத்துவிட்டீர்" என்று கூறினார்.**

**இவ்வாறு அவர் கேள்வி கேட்டு,(பதில் சொன்னால்) "நீர் உண்மை உரைத்துவிட்டீர்" என்று கூறியது குறித்து நாங்கள் ஆச்சரியப்பட்டோம்! அதன் பிறகு, "ஈமானைப் பற்றி எனக்கு அறிவியுங்கள்" என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும், இறுதி நாளையும், நன்மை தீமையாவும் அவன் விதித்த விதிப்படியே நடக்கின்றன என்றும் நம்புவது" எனக்கூறினார்கள். அதற்கவர், "நீர் உண்மை உரைத்துவிட்டீர்" என்றார்.**

**பிறகு, "இஹ்ஸானை பற்றி எனக்குக் கூறுங்கள்" என்றார் அதற்கு நபி(ஸல்) அவர்கள், "நீர் அல்லாஹ்வை(நேரில்) காண்பதுபோல வணங்குவதாகும். நீ அவனைப் பார்க்காவிட்டாலும் நிச்சயமாக அவன் உன்னைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான்" என்று கூறினார்கள். அடுத்து "கியாமநாள் பற்றி எனக்கு சொல்லுங்கள்" என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்)**

**அவர்கள் "கேட்கப்பட்டவர் கேட்டவரை விட அதிகம் அறிந்தவரல்லர்" என்றார்கள். உடனே அவர் "அதன் அடையாளங்களையாவது எனக்குச் சொல்லுங்கள்" என்றார்.**

**அதற்கு நபி(ஸல்) அவர்கள், "ஒரு பெண் தன் எஜமானியைப் பெற்றெடுப்பாள், மேலும் பாதணிகள் இல்லாத, நிர்வாணிகளான, வறியவர்களான, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருப்பவர்கள் உயரமான கட்டடங்களை எழுப்புவதை நீர் காண்பீர்" என்று கூறினார்கள்.**

**பிறகு அவர் சென்றுவிட்டார். நாங்கள் சிறிது நேரம் அங்கு அமர்ந்திருந்தோம். நபி(ஸல்) அவர்கள், "உமரே! கேள்வி கேட்டவர் யார் என்று உமக்குத் தெரியுமா?" என்று கோட்டார்கள். அதற்கு நான் "அல்லாஹ்வும் அவன் தூதருமே நன்கறிந்தவர்கள்" என்றேன். நபி(ஸல்) அவர்கள்,"அவர்தான் ஜிப்ரீல். உங்களுடைய மார்க்க விஷயங்களை உங்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக வந்தார்" என்று கூறினார்கள். (முஸ்லிம்)**

---

**(1)** அதாவது மனிதன் அவசியம் அறிய வேண்டிய மூன்று அடிப்படைகளில் மூன்றாவது அடிப்படை. அம்மூன்று அடிப்படைகளாவன, மனிதன் தனது இறைவனை அறிவது, தனது மார்க்கத்தை அறிவது,தனது நபியை அறிவது ஆகியனவாகும். முதல் இரண்டு அடிப்படைகள் பற்றிய விளக்கங்களை நாம் முன்னரே கூறிவிட்டோம்.

நபியை அறிவதில் ஐந்து விஷயங்கள் உள்ளன.

❁ அவர்களை அவர்களுடைய வமிசப் பரம்பரையுடன் அறிதல்:

அவர்கள் மக்களில் சிறந்த பரம்பரையை உடையவர்கள். அவர்கள் அரபியர்களில் குறைஷி குலத்தில் ஹாஷிம் வம்சத்தைச் சார்ந்தவர்களாகும். மூலாசிரியர் குறிப்பிட்டது போல அவர்களது பெயர் முஹம்மது. தந்தை அப்துல்லாஹ். பாட்டனார் அப்துல் முத்தலிப். முப்பாட்டனார் ஹாஷிம்.

அவர்களது வயது, பிறந்த இடம், ஹிஜ்ரத் சென்ற இடம் ஆகியவை பற்றி அறிதல்:

இது குறித்தும் மூலாசிரியர் மேலே கூறியுள்ளார்.நபி(ஸல்) அவர்கள் மக்காவில் பிறந்தார்கள். அங்கே 53 வருடங்கள் வாழ்ந்தார்கள். பிறகு மதீனாவுக்கு ஹிஜ்ரத் எனும் தியாகப் பயணம் மேற்கொண்டார்கள். பத்து வருடங்கள் வரை அங்கேயே தங்கி வாழ்ந்தார்கள். பின்னர் (ஹிஜ்ரி) 11 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதம் மதீனாவிலேயே காலமானார்கள்.

❁ அவர்களின் நபித்துவ வாழ்வை அறிதல்: அது 23 வருடங்களாகும். அவர்களுக்கு 40 ஆம் வயதில் வஹீ எனும் இறைச்செய்தி (வேத வெளிப்பாடு) அருளப்பட்டது.

❁ அவர்கள் நபியாகவும் ரஸூலாகவும் ஆனதை அறிதல்.

அவர்களுக்கு ஸூரத்துல் அலக் என்ற திருக்குர்ஆனின் 96 வது அத்தியாயத்தின் முதல் 5 வசனங்கள் இறக்கப்பட்ட போது நபியாக ஆனார்கள். அந்த வசனங்கள் வருமாறு:

"(நபியே! யாவற்றையும்) படைத்த உம்முடைய இறை வனின் திருப்பெயர் கொண்டு ஓதுவீராக! அவன் கருவுற்ற சினை முட்டையிலிருந்து மனிதனைப் படைத்தான். ஓது வீராக! உம் இறைவன் மாபெரும் அருட்கொடையாளன். அவனே எழுதுகோல் மூலமாக கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்."(96:1-5)
பின்பு அவர்களுக்கு ஸூரத்துல் முத்தஸ்ஸிர் என்ற திருக்குர்ஆனின் 74 வது அத்தியாயத்தின் சில வசனங்கள் இறங்கிய போது ரஸூலாக ஆனார்கள். அவையாவன:

"போர்த்திக் கொண்டு படுத்திருப்பவரே! எழுந்து (மக்களுக்கு)எச்சரிக்கை செய்வீராக! மேலும், உம் இறைவனைப் பெருமைப்படுத்துவீராக. உம் ஆடைகளைத் தூய்மையாக்குவீராக. அசுத்தத்திலிருந்து விலகியிருப்பீராக. ஆதாயம் கருதி பிறருக்கு உதவி செய்யாதீர். இன்னும் உம் இறைவனுக்காகப் பொறுமையை மேற்கொள்வீராக."(74:1-7)

உடனே நபி(ஸல்)அவர்கள் எழுந்து. அச்சமூட்டி எச்சரிக்கை செய்தார்கள். அல்லாஹ்வின் கட்டளையை நிறை வேற்றினார்கள்.

நபிக்கும் ரஸுலுக்கும் மத்தியில் உள்ள வேறுபாடு: எவருக்கு ஷரீஅத் சட்டங்கள் வஹீ மூலம் அறிவிக்கப்பட்டு அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படி ஏவப்பட்டிருக்க மாட்டாரோ அவர் நபியாவார். யாருக்கு ஷரீஅத் சட்டதிட்டங்கள் வஹீ மூலம் அறிவிக்கப்பட்டு அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படியும், அவற்றை நடைமுறைப் படுத்தும்படியும் ஏவப்பட்டாரோ அவர் ரஸுல் ஆவார். எல்லா ரஸுல்மார்களும் நபிமார்களாவர்.ஆனால்எல்லா நபிமார்களும் ரஸுல்மார்களல்லர். அறிஞர்களும் இவ்வாறே கூறுகின்றனர்.

நபி(ஸல்) அவர்கள் எதைக்கொண்டு ஏன் எதற்காக அனுப்பப்பட்டார்கள் என்பதை அறிதல்:

நபி(ஸல்) அவர்கள் 'வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறுயாரும் இல்லை" எனும் ஏகத்துவத்தைக் கொண்டும், ஏவல்களை எடுத்து நடக்கு தல், விலக்கல்களைத் தவிர்த்துக்கொள்ளல் ஆகியவற்றை உள்ளடக்கிய அல்லாஹ்வினுடை ஷரீஅத் சட்டங்களைக் கொண்டும் அனுப்பப்பட்டார்கள்.

இணைவைத்தல், இறைநிராகரிப்பு, அறியாமை எனும் இருள்களிலிருந்து உலகமக்களை வெளியேற்றி அறிவு,

இறைநம்பிக்கை, ஏகத்துவம் எனும் ஒளியின் பால் கொண்டு வருவதற்காகவே அகில உலகுக்கும் அருட்கொடையாக அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இதனால் மக்கள் அனைவரும் அல்லாஹ்வின் மன்னிப்பையும் திருப்பொருத்தத்தையும் பெற்று அவனுடைய தண்டனை மற்றும் கோபத்தை விட்டும் தப்பித்துக் கொள்வார்கள்.

---

**இணைவைத்தல் குறித்து எச்சரித்து, ஏகத்துவத்தின் பக்கம்[1] மக்களை அழைப்பதற்காக அல்லாஹ் அவர்களை அனுப்பிவைத்தான். ஆதாரம் அல்லாஹ் கூறுகிறான் - "போர்த்திக் கொண்டு படுத்திருப்பவரே![2] எழுந்து எச்சரிக்கை செய்வீராக![3] மேலும் உம் இறைவனைப் பெருமைப்படுத்துவீராக. உம் ஆடைகளைத் தூய்மைபடுத்துவீராக. ஆதாயம் கருதி பிறருக்கு உதவி செய்யாதீர். இன்னும் உம் இறைவனுக்காகப் பொறுமையை மேற்கொள்வீராக". *(74:1-7)***

**"எழுந்து எச்சரிக்கை செய்வீராக!" இதன் பொருள், "இணைவைத்தல் பற்றி எச்சரித்து ஏகத்துவத்தின் பக்கம் மக்களை அழைப்பீராக!" என்பதாகும்.**

**"உம் இறைவனைப் பெருமைப்படுத்துவீராக!" என்றால் "ஏகத்துவத்தின் மூலம் பெருமைப்படுத்துவீராக!" என்று பொருள். "உம் ஆடைகளைத் தூய்மைப்படுத்துவீராக!" என்றால் இணைவைத்தலை விட்டும் உம்செயல்களைத் தூய்மையாக்குவீராக! என்று பொருள்.**

**"அசுத்தத்திலிருந்து விலகியிருப்பீராக" என்பதன் பொருள் சிலைகள் மற்றும் "சிலை வணக்கம் புரிவோரை விட்டும் விலகியிருப்பீராக" என்று பொருள்.**

---

**(1)** அதாவது படைத்துப் பரிபாலிப்பதிலும், வணக்கத்திலும், பெயர்கள்- பண்புகளிலும் அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதன் பக்கம்.

**(2)**'போர்த்திக் கொண்டு படுத்திருப்பவரே!" என இங்கு அழைக்கப்படுபவர் நபியாகும்.

**(3)**முழு முயற்சியுடனும் உற்சாகத்துடனும் எழுந்து இணைவைத்தல் குறித்து மக்களை எச்சரித்து அதை விட்டும் அவர்களை விலக்கும் படியும் அல்லாஹ் தனது தூதருக்கு கட்டளையிடுகிறான். இவ்வசனத்திற்கு மூலாசிரியரும் விளக்கமளித்துள்ளார்.

---

**இந்த அடிப்படையில் அவர்கள் பத்து வருடங்களாக ஏகத்துவத்தின் பக்கம் மக்களை அழைத்தார்கள்.[1] அதன் பிறகு விண்ணுலகப் பயணத்திற்காக வானுக்கு ஏற்றப்பட்டார்கள்.[2]**

---

**(1)** அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டுமென்ற ஏகத்துவத்தின் பக்கம் அழைத்தவர்களாக நபி(ஸல்)அவர்கள் 10 வருடங்களைக் கழித்தார்கள்.

**(2)** இது நபி(ஸல்)அவர்களுக்குரிய மகத்தான சிறப்பம்சங்களில் ஒன்றாகும். அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லுமுன் அல்லாஹ் அவர்களை இதன் மூலம் சிறப்பித்தான்.

கஃபாவில் ஹிஜர் எனும் அரை வட்டமான பகுதியில் அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த போது ஒருவர் வந்து அவர்களின் நெஞ்சிலிருந்து வயிறு வரை பிளந்தார். பின்பு அவர்களின் இதயத்தை வெளியே எடுத்து அதில் அறிவுநுட்பத்தையும் ஈமானையும் நிரப்பினார்.அவர்கள் இனி ஆற்றுகின்ற பணிக்குத்தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக. பின்னர் வெண்மையான ஒரு வாகனம் கொண்டு வரப்பட்டது. அது கோவேறு கழுதையை விட சிறியதாகவும் கழுதையைவிடப் பெரியதாகவும் இருந்தது. அதற்கு புராக் என்று சொல்லப்படும்.அதனுடைய பார்வை சென்றடையும் தூரத்திற்கு அது ஒரு அடி எடுத்து வைக்கும்.

நபி(ஸல்)அவர்கள் அதில் பயணமானார்கள். நம்பிக்கைக்குரிய ஜிப்ரீல்(அலை)உடனிருந்தார்கள். பைத்துல் முகத்தஸை

அடைந்ததும் நபியவர்கள் அங்கு இறங்கி எல்லா நபிமார்களுக்கும் இமாமாக நின்று தொழுகை நடத்தினார்கள். எல்லா நபிமார்களும் ரஸூல்மார்களும் அவர்களின் பின்னே நின்று தொழுதனர். இது ஏனெனில் அதன் மூலம் நபி(ஸல்)அவர்களின் சிறப்பும் கண்ணியமும் தெளிவாக வேண்டும் என்பதற்காக. அவர்கள் தான் பின்பற்றத் தக்க தலைவர் ஆவார்கள்.
பின்பு ஜிப்ரீல்(அலை),நபி(ஸல்)அவர்களை முதல் வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வாயிலைத் திறக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.'யார் அது?" என்று கேட்கப்பட்டது. 'ஜிப்ரீல்" என்றார்கள். 'உம்முடன் யார்?" என்று கேட்கப்பட்டது. 'முஹம்மது" என பதிலளித்தார்கள். 'அவருக்குத் தூது அனுப்பப்பட்டதா?" என்று கேட்கப்படவும், ஜிப்ரீல் (அலை)'ஆம்" என்றார்கள்.'வருக! வருக!" 'உங்கள் வருகை நல்வரவாகட்டும்! " என்று கூறப்பட்டது.

பிறகு வாசல் திறக்கப்பட்டதும் அங்கு ஆதம்(அலை)அவர்களைக் கண்டார்கள். ஜிப்ரீல்(அலை)அவர்கள், 'இவர்தாம் உமது தந்தை ஆதம்! அவருக்கு ஸலாம் சொல்லுங்கள்" எனக் கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள் ஸலாம் கூறவும் ஆதம்(அலை)அவர்கள் பதில் ஸலாம் கூறினார்கள். நல்லொ ழுக்கமுள்ள தமையனாரே! நல்லொழுக்கமுள்ள நபியே! வருக! வருக! என வரவேற்றார்கள். அங்கே ஆதம்(அலை) அவர்களின் வலப்புறம் அவர்களின் வழித்தோன்றல்களில் நற்பாக்கியம் பெற்றவர்களின் உயிர்களும், இடப்புறம் துர்ப் பாக்கியமடைந்தவர்களின் உயிர்களும் இருந்தன. நபி(ஸல்) அவர்கள் வலப்புறம் பார்க்கும் போது மகிழ்ந்து சிரித்தார்கள். இடப்புறம் பார்க்கும் போது அழுதார்கள்.

பின்பு ஜிப்ரயீல்(அலை) நபி(ஸல்)அவர்களை,இரண்டாவது வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வாயிலைத் திறக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். 'யார் அது?" என்று கேட்கப்பட்டது.'ஜிப்ரீல்" என்று சொன்னார்கள்.'உம்முடன் யார்?"

என்று கேட்கப்பட்டது. 'முஹம்மது'' என பதிலளித்தார்கள். 'அவருக்குத் தூது அனுப்பப்பட்டதா?'' என்று கேட்கப்படவும் ஜிப்ரீல்(அலை)'ஆம்'' என்றார்கள்.'வருக! வருக!'' 'உங்கள் வருகை நல்வரவாகட்டும்!'' என்று கூறப்பட்டது.
பிறகு வாசல் திறக்கப்பட்டதும் அங்கு யஹ்யா, ஈஸா (அலை) இருவரையும் கண்டார்கள். அவர்கள் இருவரும் ஒருவர் மற்றவருக்கு தாயின் சகோதரியின்(சிற்றன்னையின்) மக்களாவர். ஜிப்ரீல்(அலை) அவர்கள், 'இவர்கள் யஹ்யா வும், ஈஸாவும் ஆவர்.இவர்களுக்கு ஸலாம் சொல்லுங்கள்'' என்று கூற, நபி(ஸல்)அவர்கள் ஸலாம் சொன்னார்கள். அவர்கள் இருவரும் பதில் ஸலாம் கூறினார்கள். அவர்கள் இருவரும், 'நல்லொழுக்கமுள்ள சகோதரரே! நல்லொழுக்கமுள்ள நபியே! வருக! வருக!!'' என்றனர்.

பின்பு நபியவர்களை ஜிப்ரீல்(அலை),மூன்றாம் வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வாயிலைத் திறக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். 'யார் அது?'' என்று கேட்கப்பட்டது. 'ஜிப்ரீல்'' என்று சொன்னார்கள். 'உம்முடன் யார்? '' என்று கேட்கப்பட்டது. 'முஹம்மது'' என்று பதிலளித்தார்கள். 'அவருக்குத் தூது அனுப்பப்பட்டதா?'' என்று கேட்கப் படவும், ஜிப்ரீல்(அலை) 'ஆம்'' என்றார்கள். 'வருக! வருக! '' 'உங்கள் வருகை நல்வரவாகட்டும்!'' என்று கூறப்பட்டது.

பிறகு வாசல் திறக்கப்பட்டதும் அங்கே யூசுஃப்(அலை) அவர்களைப் பார்த்தார்கள்.'இவர் யூசுஃப்.இவருக்கு ஸலாம் சொல்லுங்கள்'' என்று ஜிப்ரீல்(அலை)கூறவும் நபி(ஸல்) அவர்கள் அவர்களுக்கு ஸலாம் கூறினார்கள். பதிலுக்கு அவர்களும் ஸலாம் உரைத்து, 'நல்லொழுக்கமுள்ள சகோதரரே! நல்லொழுக்கமுள்ள நபியே! வருக! வருக!! '' என வரவேற்றார்கள்.
பின்பு ஜிப்ரீல்(ஸல்)அவர்கள், நபியவர்களை நான்காம் வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வாயிலைத் திறக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். 'யார் அது?'' என்று கேட் கப்பட்டது.

'ஜிப்ரீல்" என்று சொன்னார்கள். 'உம்முடன் யார்?" என்று கேட்கப்பட்டது. 'முஹம்மது" என்று பதிலளித்தார்கள். 'அவருக்குத் தூது அனுப்பப்பட்டதா?" என்று கேட் கப்படவும், ஜிப்ரீல்(அலை)'ஆம்"என்றார்கள்.'வருக! வருக!" 'உங்கள் வருகை நல்வரவாகட்டும்!" என்று கூறப்பட்டது.

பிறகு வாசல் திறக்கப்பட்டதும் அங்கே இத்ரீஸ்(ஸல்) அவர்களைக் கண்டார்கள். 'இவர் தாம் இத்ரீஸ். இவருக்கு ஸலாம் சொல்லுங்கள்" எனக் கூறினார்கள். நபியவர்கள் ஸலாம் சொன்னார்கள். அவர்கள் பதிலுரைத்தார்கள். மேலும் 'நல்லொழுக்கமுள்ள சகோதரரே! நல்லொழுக்கமுள்ள நபியே! வருக! வருக!! " என வரவேற்றார்கள்.

பின்பு ஜிப்ரீல் ஐந்தாவது வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.வாயிலைத் திறக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள். 'யார் அது?" என்று கேட்கப்பட்டது. 'ஜிப்ரீல்" என்று சொன்னார்கள். 'உம்முடன் யார்?" என்று கேட்கப்பட்டது. 'முஹம்மது" என்று பதிலளித்தார்கள். 'அவருக்குத் தூது அனுப்பப்பட்டதா?" என்று கேட்கப்படவும், ஜிப்ரீல்(அலை) 'ஆம்"என்றார்கள்.'வருக! வருக! "உங்கள் வருகை நல்வரவாகட்டும்!" என்று கூறப்பட்டது.
பிறகு வாசல் திறக்கப்பட்டதும் அங்கே மூஸா(அலை) அவர்களின் சகோதரரான ஹாரூன் பின் இம்ரான் அவர்களைக் கண்டார்கள். 'இவர் ஹாரூன். இவருக்கு ஸலாம் சொல்லுங்கள்" என்று ஜிப்ரீல் கூற, நபி(ஸல்) ஸலாம் சொன்னார்கள். அவர்களும் பதில் ஸலாம் கூறினார்கள். மேலும் 'நல்லொழுக்கமுள்ள சகோதரரே! நல்லொழுக்கமுள்ள நபியே! வருக! வருக!!" என வரவேற்றார்கள்.

பின்பு ஜிப்ரயீல்(அலை)ஆறாவது வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வாயிலைத் திறக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். 'யார் அது?" என்று கேட்கப்பட்டது. 'ஜிப்ரீல்" என்று

சொன்னார்கள். 'உம்முடன் யார்? " என்று கேட்கப்பட்டது. 'முஹம்மது" என்று பதிலளித்தார்கள். 'அவருக்குத் தூது அனுப்பப்பட்டதா? " என்று கேட்கப்படவும், ஜிப்ரீல்(அலை) 'ஆம்" என்றார்கள். 'வருக! வருக! " 'உங்கள் வருகை நல்வரவாகட்டும்!" என்று கூறப்பட்டது.

பிறகு வாசல் திறக்கப்பட்டதும் அங்கே மூஸா(அலை) அவர்களைக் கண்டார்கள்.ஜிப்ரீல்(அலை)'இவர்தான் மூஸா. இவருக்கு ஸலாம் சொல்லுங்கள்" எனக் கூறினார்கள். நபி (ஸல்), அவர்களுக்கு ஸலாம் சொன்னார்கள். அவர்களும் பதில் ஸலாம் கூறி 'நல்லொழுக்கமுள்ள சகோதரரே! நல்லொழுக்கமுள்ள நபியே! வருக! வருக!!" எனக் கூறினார்கள். அவர்களைக் கடந்து சென்ற போது மூஸா(அலை) அழுதார்கள். 'எதற்காக அழுகிறீர்கள்?" எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், 'எனது சமூகத்தாரில் சுவர்க்கம் செல்வோரை விட எனக்குப் பின்பு நபியாக அனுப்பப்பட்ட இச்சிறுவரின் சமூகத்தவர்களில் அதிகமானோர் சுவர்க்கம் செல்வார்கள் என்பதால் தான் அழுகிறேன்" என்றார்கள்.

மூஸா(அலை)அவர்கள் தமது சமுதாயத்திற்கு கிடைக்காமல் போன சிறப்புகளுக்காக அழுதார்களே தவிர முஹம்மது(ஸல்) அவர்களின் சமுதாயத்தவர்களின் மீது கொண்ட பொறாமையினால் அல்ல.

பின்பு ஜிப்ரீல்(அலை)நபியவர்களை ஏழாவது வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வாயிலைத் திறக்கும்படிக் கேட்டுக்கொண்டதும் 'யார் அது?" என்று கேட்கப்பட்டது. 'ஜிப்ரீல்" என்று சொன்னார்கள். 'உம்முடன் யார்?" என்று கேட்கப்பட்டது. 'முஹம்மது" என்று பதிலளித்தார்கள். 'அவருக்குத் தூது அனுப்பப்பட்டதா?" என்று கேட்கப்படவும், ஜிப்ரீல் (அலை)'ஆம்" என்றார்கள்.'வருக! வருக!!" 'உங்கள் வருகை நல்வரவாகட்டும்!" என்று கூறப்பட்டது.

பிறகு வாசல் திறக்கப்பட்டதும் அங்கே இப்ராஹீம்(அலை) அவர்களைப் பார்த்தார்கள். 'இவர் தாம் உமது தந்தை இப்ராஹீம். இவருக்கு ஸலாம் சொல்லுங்கள்'' என ஜிப்ரீல் கூறவும் நபியவர்கள் ஸலாம் சொன்னார்கள். அவர்களும் பதில் ஸலாம் கூறி, 'நல்லொழுக்கமுள்ள மகனே! நல்லொழுக்கமுள்ள நபியே! வருக! வருக!!'' என்றார்கள். ஜிப்ரீல் (அலை), நபி(ஸல்)அவர்களை இந்த நபிமார்களிடம் அழைத்துச் சென்றது, நபியவர்களை கண்ணியப்படுத்தவும் அவர்களது சிறப்பை, கண்ணியத்தை வெளிப்படுத்தவும்தான்.

ஏழாம் வானத்திலுள்ள பைத்துல் மஃமூரில் இப்ராஹீம் (அலை)அவர்கள், தமது முதுகைச் சாய்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த பைத்துல் மஃமூரில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் புதுப்புது மலக்குகள் வந்து, இறைவனை வணங்கி, தொழுதுவிட்டுத் திரும்புவார்கள். முதல் நாள் வந்தவர்கள் அடுத்தநாள் வரமாட்டார்கள். அந்த மலக்குகளின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது.

பின்பு நபி(ஸல்)அவர்கள் 'ஸித்ரதுல் முன்தஹா'' வுக்கு உயர்த்தப்பட்டார்கள்.அங்கு அல்லாஹ்வின் கட்டளைப்படி அழகும் சௌந்தர்யமும் சூழ்ந்திருந்தன. அந்த அழகை யாராலும் வர்ணிக்க முடியாது. பின்னர் அல்லாஹ், ஒவ் வொரு நாளைக்கும் ஐம்பது நேரத் தொழுகைகளை அவர்களுக்குக் கடமையாக்கினான். அதை அவர்கள் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டார்கள்.

பின்பு இங்கிருந்து இறங்கினார்கள். மூஸா(அலை)அவர்களைக் கடந்து வரும் போது அவர்கள், 'உமது சமுதாயத்தாருக்கு அல்லாஹ் என்ன கடமையாக்கினான்? '' எனக் கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், 'ஒவ்வொரு நாளைக்கும் ஐம்பது நேரத் தொழுகைகளைக் கடமையாக்கியுள்ளான்'' என்றார்கள்.

அப்போது மூஸா(அலை), 'உமது சமுதாயத்தினர் அதற்கு சக்தி பெற மாட்டார்கள். உமக்கு முன்னர் நான் மக்களிடம் அனுபவப்பட்டிருக்கிறேன். நான் பனூ இஸ்ரவேலர்களிடம் கடுமையாக அனுபவப்பட்டிருக்கிறேன். எனவே நீங்கள் உங்கள் இறைவனிடம் திரும்பச் சென்று உம் சமூகத்தவருக்காக குறைத்துக் கொடுமாறு கேளுங்கள்'' என்று கூறினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் கூறியதாவது: நான் திரும்பச் சென்றேன். அல்லாஹ் பத்தைக் குறைத்தான். நான் திரும்பத் திரும்ப இறைவனிடம் செல்ல இறுதியில் ஐந்தாக் குறைக்கப்பட்டது. பிறகு, 'என் கடமையை நான் நிறைவேற்றி விட்டேன். எனது அடியார்களுக்கு நான் எளிதாக்கி விட்டேன்'' எனக் கூறப்பட்டது.

நபி(ஸல்)அவர்கள் அந்த இரவில் சுவனத்தில் நுழைவிக்கப்பட்டார்கள். அங்கே முத்துக்களால் ஆன மண்டபங்கள் இருந்தன. அங்குள்ள மணல் கஸ்தூரியாலானது. பின்பு நபி (ஸல்) அவர்கள் சுபுஹ் நேரத்துக்கு முன்பு மக்கா வந்து அங்கே சுபுஹ் தொழுதார்கள்.(இது பற்றிய நபிமொழி புகாரி,முஸ்லிமில் உள்ளது)

---

**அங்கு அவர்களுக்கு ஐவேளைத் தொழுகைகள் கடமையாக்கப்பட்டன. மக்காவில் மூன்று வருடங்கள் தொழுதார்கள்.[1] அதன் பிறகு மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்யக் கட்டளையிடப்பட்டார்கள்.[2]**

---

(1) அதாவது மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும் வரை நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்துகளாகவே தொழுதார்கள். அதுவே பயணத்தில் தொழும் தொழுகையாக பின்னர் ஏற்படுத்தப்பட்டது.ஊரில் தங்கியிருக்கும் போது தொழும் தொழுகை நான்கு ரக்அத்துகளாக அதிகரிக்கப்பட்டது.

(2)அதாவது அல்லாஹ் தனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும்படி கட்டளையிட்டான்.

ஏனெனில் நபி(ஸல்)அவர்கள்,தொடர்ந்து இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதை விட்டும் மக்காவாசிகள் தடுத்தனர். நபியாக அனுப்பப்பட்ட பிறகு 13 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மிகப் பிரியமான ஊரான, முதன் முதலில் வஹீ எனும் இறைச்செய்தி அருளப்பட்ட ஊரான மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தடைந்தார்கள்.

நபி(ஸல்)அவர்கள் 13 வருடங்களாக மக்காவில் தங்கி தம் இறைவனுடைய தூதுத்துவப் பணியை மக்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டும்,தெளிவான ஆதாரத்துடன் அதன் பால் மக்களை அழைத்துக் கொண்டும் இருந்த பிறகு தம் இறைவனின் உத்தரவுப்படி ஹிஜ்ரத் செய்தவர்களாக மக்காவிலிருந்து வெளியேறினார்கள்.

அக்காலகட்டத்தில் பெரும்பாலான குறைஷிகளிடமும் குறைஷித் தலைவர்களிடமும் அவர்கள் கண்டது,தமது அழைப்பை ஏற்றுக் கொள்ளாது புறக்கணிப்பதையும் இறைத் தூதருக்கும் அவரை ஏற்றுக்க கொண்ட மக்களுக்கும் சொல்லணாத் துன்பங்களைத் தருவதையும் தவிர வேறெதுவுமில்லை. முடிவாக நபி(ஸல்)அவர்களைக் கொலை செய்ய வேண்டுமென்ற சதித்திட்டத்தை நிறைவேற்றும் அளவுக்கு அவர்களின் விவகாரம் சென்றது.
நபித்தோழர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதைக் கண்ட குறைஷித் தலைவர்கள் 'தாருந் நத்வா'' என்ற வீட்டில் ஒன்று கூடி முஹம்மதை என்ன செய்வது? நிச்சய மாக அவரும் மதீனா சென்று தம் தோழர்களுடன் சேர்ந்து அன்ஸாரிகளின் ஆதரவையும் உதவியையும் பெற்று விடுவார். அந்த அன்ஸாரிகள் தங்கள் மனைவி மக்களைப் பாதுகாப்பது போல அந்த முஹம்மதைப் பாதுகாப்பதாக அவரிடம் உறுதிப் பிரமாணம் எடுத்துள்ளனர். அப்போது குறைஷிகளுக்கு எதிரான

ஒரு ஆட்சி நிச்சயம் உருவாகும். என்ன செய்யலாம்? என ஆலோசித்தனர்.

அப்போது அல்லாஹ்வின் விரோதியான அபூஜஹ்ல் ஒரு கருத்தைச் சொன்னான்.அதாவது ஒவ்வொரு கோத்திரத் திலிருந்தும் திடகாத்திரமான ஒரு இளைஞனைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் ஒவ்வொருவரிடமும் கூரிய வாளைக் கொடுத்து பின்பு அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் முஹம்மதின் மீது பாய்ந்து ஒரே வெட்டாக வெட்டி அவரைக் கொன்று விட வேண்டும். நாம் நிம்மதியடைந்து விடலாம். மட்டுமல்ல அக்குற்றத்தில் எல்லாக் கோத்திரத் தாருக்கும் பங்கு உண்டு என்றாகிவிடும். அதனால் அப்துல் முனாஃப் குடும்பத்தவர்கள்-அதாவது நபி(ஸல்)அவர்களின் குடும்பத் தினர்-(பழிக்குப் பழி வாங்க)ஒட்டு மொத்தமாக அனைத்துக் கோத்திரத்தாருடனும் போராட முடியாது போகும். ஆகையால் கொலைக்கு நஷ்டஈடு கேட்பதைப் பொருந்திக் கொள்வார்கள். அதை நாம் அவர்களுக்குக் கொடுத்து விடலாம் என்று ஆலோசனை கூறினான்.

இணைவைப்பவர்களின் திட்டத்தை அல்லாஹ் தனது நபிக்கு அறிவித்துக் கொடுத்து ஹிஜ்ரத் செய்ய அனுமதி வழங்கினான். முன்பு மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்காக அபூபக்ர்(ரலி) தயாரானபோது, 'பொறுங்கள்! நானும் ஹிஜ்ரத் செய்வதற்கு அல்லாஹ்வின் அனுமதியை எதிர்பார்த்து இருக்கிறேன்.(இருவரும் சேர்ந்து செல்வோம்)"என அவர்களிடம் நபி(ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். ஆதலால் நபி(ஸல்) அவர்களுடன் செல்வதற்காக அபூபக்ர்(ரலி) தாம் ஹிஜ்ரத் செய்வதைத் தள்ளிப் போட்டார்கள்.

ஆயிஷா(ரலி)கூறுகின்றார்கள்: ஒரு நாள் நண்பகல் நேரம் நாங்கள் அபூபக்ர்(ரலி) அவர்களுடைய வீட்டில் இருக்கும் போது நபி(ஸல்)அவர்கள் தமது முகத்தை துணியால் மூடியவாறு

வாசலில் வந்து நின்றார்கள். உடனே அபூபக்ர்(ரலி), 'எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! அல்லாஹ்வின் மீது ஆணையாக ஒரு முக்கியமான விஷயமாகத்தான் நீங்கள் இங்கு வந்திருக்கவேண்டும்'' என்று கூறினார்கள்.

நபி(ஸல்)அவர்கள் உள்ளே நுழைந்து, 'உங்களுடன் இருப்பவா;களை வெளியேற்றுங்கள்'' என அபூபக்ர்(ரலி) அவர்களிடம் கூறினார்கள்.அதற்கு அபூபக்ர்(ரலி)அவர்கள்,'எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். இவர் கள் உங்கள் குடும்பத்தினர்தானே!'' என்றார்கள்.அப்போது நபி(ஸல்)அவர்கள், எனக்கு ஹிஜ்ரத் செய்யும்படி கட்டளை யிடப்பட்டுள்ளது என்றார்கள். அபூபக்ர்(ரலி),அல்லாஹ்வின் தூதரே! நான் உடன் வருவதை விரும்புகிறீர்களா? என்று கேட்க, நபி(ஸல்)அவர்கள், ஆம் என்றனர். அபூபக்ர்(ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! இவ்விரண்டு வாகனங்களில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறவும் நபி(ஸல்) அவர்கள், 'விலை தந்து தான் எடுத்துக் கொள்வேன்'' என்றார்கள்.
பின்னர் நபி(ஸல்)அவர்களும் அபூபக்ர்(ரலி) அவர்களும் புறப்பட்டார்கள். வழியில் ஸவ்ர் எனும் மலையில் உள்ள ஒரு குகையில் மூன்று இரவுகள் தங்கினார்கள். அவ்விருவருடன் அபூபக்ர்(ரலி) அவர்களின் மகன் அப்துல்லாஹ்வும் இரவு தங்கினார். இவர் நல்ல வாலிபராகவும், புத்திசாலியாகவும், நினைவாற்றல் உள்ளவராகவும் இருந்தார். இவர் இரவின் பிற்பகுதியில் மக்கா சென்றுவிடுவார். குறைஷிகளுடன் தான் அவருக்குப் பொழுது விடியும். நபி(ஸல்)அவர்களைப் பற்றியும் அவர்களின் தோழர்(அபூபக்ர்)பற்றியும் அவர் செவியேற் கின்ற செய்தியை நினைவில் நிறுத்திக் கொண்டு நன்கு இருட்டானதும் அவ்விருவரிடமும் சென்று அச்செய்தியைச் சேர்ப்பார்.

குறைஷிகள் எல்லாப் பக்கமும் நபியைத் தேடினர். அவர்களைப் பிடிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

அவ்விருவரையோ அல்லது அவர்களில் ஒருவரையோ பிடித்துக் கொண்டு வருபவருக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசாக அறிவித்தனர். எனினும் அல்லாஹ் அவர்களுடன் இருந்து அவர்களை நன்கு பேணிப் பாதுகாத்தான். எந்த அளவுக்கெனில் அக்குகை வாசலில் குறைஷிகள் வந்து நின்றனர். எனினும் அவ்விருவரையும் அவர்கள் பார்க்க வில்லை.

அபூபக்ர்(ரலி)கூறினார்கள்: நாங்கள் குகையில் இருந்த போது நபி(ஸல்)அவர்களிடம் நான் கூறினேன்: 'அவர்களில் ஒருவர் குனிந்து கீழே பார்த்து விட்டால் நம்மைப் பார்த்து விடுவாரே!" அப்போது நபி(ஸல்)அவர்கள், 'கவலைப்படாதீர்! நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான். அபூபக்ரே! நாம் இருவர் இருக்கிறோம் என நினைத்துக்கொண்டிர்களா? மூன்றாவதாக அல்லாஹ் இருக்கின்றான்" எனக் கூறினார்கள். மூன்று இரவுகளுக்குப் பின் அவ்விருவரையும் தேடுதல் படலம் சற்று ஓய்ந்தபோது இருவரும் குகையிலிருந்து வெளியேறி கடற்கரை வழியாக மதீனா நோக்கிப் புறப்பட்டார்கள்.

மதீனாவிலுள்ள முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகள் நபி (ஸல்)அவர்கள், தங்களிடம் புறப்பட்டு வருகிறார்கள் எனக் கேள்விப்பட்டபோது ஒவ்வொரு நாளும் காலையில் (மதினா வுக்கு வெளியே) கற்பாங்கான இடத்திற்குச் சென்று நபி (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது தோழரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.இறுதியில் சூரிய வெப்பம் அவர்களைத் திருப்பி அனுப்பிவிடும்.

நபி(ஸல்) அவர்கள் வருகை தந்த நாளன்று நண்பகல் நெருங்கி வெயில் கடுமையானதும் (வழக்கம் போல்) தம் வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர். அப்போது மதீனாவிலுள்ள ஒரு உயரமான மேட்டுப் பகுதியில் நின்று ஒரு யூதன் தனது தேவைக்காக எதையோ பார்த்தபோது நபி(ஸல்)அவர்களும் அவர்களின் தோழர்களும் கானல் நீரைக் கிழித்துக் கொண்டு வருவதைப்

பார்த்து விட்டான். உடனே அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் 'அரபுக் குலத்தவர்களே! இதோ, நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உங்களின் மதிப்புக்குரியவர் வந்துவிட்டார்" என உரக்கக் கூவினான்.

உடனே நபி(ஸல்) அவர்களை வரவேற்க முஸ்லிம்கள் விரைந்தனர்.நபி(ஸல்)அவர்களைக் கண்ணியப்படுத்துவதற்காக, தாங்கள் அவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களு டன் சேர்ந்து ஜிஹாத் எனும் அறப்போர் புரிவதற்கும் தயார் என்பதை அறிவிக்கும் முகமாகவும் ஆயுதங்களையும் உடன் எடுத்துச் சென்றனர். கற்பாங்கான அந்த இடத்தில் நபி (ஸல்)அவர்களை சந்தித்தனர்.நபியவர்கள் வலது பக்கமாக வந்து (மதீனாவின் எல்லையில் உள்ள) குபா என்னுமிடத் தில் அம்ரு பின் அவ்ஃப் குலத்தவர்களிடம் இறங்கினார்கள். அவர்களிடம் சில நாட்கள் தங்கினார்கள். அங்கே ஒரு பள்ளியையும் எழுப்பினார்கள்.

பின்னர் மக்கள் புடை சூழ மதீனாவுக்குப் பயணமானார்கள். மக்களெல்லாம் வழியில் அவர்களைச் சந்தித்து வர வேற்றனர். அபூபக்ர்(ரலி)அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் மதீனாவை நெருங்கும் போது சிறுவர்கள், அடிமைகள் உட்பட மக்கள் வீதிகளிலும், வீடுகளிலும் அல்லாஹு அக்பர்! அல்லாஹ்வின் தூதர் வந்து விட்டார்! அல்லாஹு அக்பர்! முஹம்மது(ஸல்)வந்து விட்டார்! என்று (மகிழ்ச்சி ஆரவாரத்துடன்) கூறினார்கள்.

---

**ஹிஜ்ரத் - என்றால் இணைவைக்கின்ற நாட்டைத் துறந்து இஸ்லாமிய நாட்டுக்குச் செல்லுதல் என்று பொருள்.[1] இது இச்சமுதாயத்தின் மீது கட்டாயக் கடமையாகும்.[2] கியாம நாள் வரும் வரை இது எஞ்சியிருக்கும்**

**ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - தமக்குத் தாமே அநீதியிழைத்துக் கொண்டோரின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றும் போது,"நீங்கள் எந்த நிலையில் இருந்தீர்கள்?" என்று கேட்பார்கள். அதற்கவர்கள் "பூமியில் நாங்கள் பலவீனர்களாய் இருந்தோம்"என்று கூறுவார்கள்."அல்லாஹ்வின் பூமி விசாலமானதாக இருக்கவில்லையா? அதில்**

**நீங்கள் ஹிஜ்ரத் செய்திருக்க கூடாதா?" என்று வானவர்கள் கேட்பார்கள். இவர்கள் ஒதுங்குமிடம் நரகம்தான். அது மிகக் கொடிய இடம். (ஆனால்) எந்தத் தந்திரமும் செய்ய முடியாமல், எந்த வழியையும் பொறாமல் பலவீனமாக இருக்கும் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைத் தவிர. அல்லாஹ் அவர்களது பிழைகளைப் பொறுப்பான். அல்லாஹ் பிழை பொறுப்பவனும் மன்னிப்பவனுமாவான்.** *(4:97-99)*[3]

---

**(1)** அகராதியில் ஹிஜ்ரத் என்றால் துறத்தல், விடுதல் என்று பொருள். சன்மார்க்கத்தில் ஹிஜ்ரத் என்பது ஆசிரியர் குறிப்பிட்டது போல இணைவைப்பின் அடிப்படையிலான நாட்டைத் துறந்து இஸ்லாமிய நாட்டுக்குச் செல்லுதல்.

இணைவைப்பின் அடிப்படையிலான நாடு என்பது இறை நிராகரிப்புடைய போக்குகள், நெறிமுறைகள் நிலைநிறுத்தப் படக்கூடிய நாடாகும். அங்கு பாங்கு, கூட்டுத்தொழுகை, ஜும்ஆத் தொழுகை, பெருநாட்த் தொழுகைகள் போன்ற இஸ்லாமிய நெறிமுறைகள் பொதுவாகவும் வெளிப்படையா கவும் நிலைநாட்டப்பட மாட்டாது. பொதுவாகவும் வெளிப் படையாகவும் என்று நாம் குறிப்பிட்டதற்குக் காரணம், இந்த இஸ்லாமிய நெறிமுறைகள் ஒரு வரையறைக்குட்பட்ட முறையில் நிலைநாட்டப்படுகிற நாடுகளை இவ்விளக்கம் உள்ளடக்கக் கூடாது என்பதற்காகத்தான்.

எடுத்துக் காட்டாக இறைநிராகரிப்பாளர்களின் நாடுகள். அங்கு முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கிறார்கள். சிறுபான்மையினராக வாழும் முஸ்லிம்கள் அங்கு இஸ்லாமிய நெறிகளை நிலைநாட்டுவதனால் மட்டும் அவை இஸ்லாமிய நாடுகளாக ஆகிவிடாது. ஆம், இஸ்லாமிய நாடுகள் என்றால் இஸ்லாமிய நெறிமுறைகள் யாவும் பொதுவாகவும் வெளிப் படையாகவும் நிலைநாட்டப்படுகிற நாடுகளே ஆகும்.

**(2)**இறைநிராகரிப்பை நிலைநாட்டக்கூடிய நாட்டில் இருந்து கொண்டு தன்னுடைய மார்க்கத்தை வெளிப்படுத்த இயலாத ஒவ்வொரு முஃமினுக்கும் ஹிஜ்ரத் செல்வது கட்டாயக் கடமையாகும். ஆம்! தனது மார்க்கத்தை வெளிப்படுத்த முடியாமல் அவன் இருக்கும் போது ஹிஜ்ரத் செய்யாமல் அவனது இஸ்லாம் பரிபூரணமாகாது. ஒரு விஷயத்தைக்கொண்டு தான் ஒரு கடமை பரிபூரணமடையும் என்றிருந்தால் அதுவும் கடமையே.

**(3)**இந்த வசனம் பின்வரும் கருத்துக்கு ஆதாரமாக அமைந்துள்ளது: ஹிஜ்ரத் செல்ல சக்தியிருந்தும் ஹிஜ்ரத் செல்லாமல் இருந்தவர்களின் உயிர்களைக் கைப்பற்றும் வானவர்கள் அவர்களைப் பழிப்பார்கள். 'அல்லாஹ்வின் பூமி விசாலமானதாய் இருக்கவில்லையா? அதில் நீங்கள் நாட்டைத் துறந்து ஹிஜ்ரத் சென்றிருக்க வேண்டாமா?" எனவும் அவர்களிடம் கூறுவார்கள்.ஆனால் ஹிஜ்ரத் செல்லமுடியாமல் பலவீனமாக இருப்பவர்களை அவர்களின் இயலாமையின் காரணமாக அல்லாஹ் மன்னித்து விடுகிறான். எந்த மனிதனுக்கும் அவனது சக்திக்கு மீறி அல்லாஹ் கஷ்டத்தைக் கொடுப்பதில்லை.

---

**மேலும் கூறுகிறான் - நம்பிக்கை கொண்ட என்னுடைய அடியார்களே! நிச்சயமாக என்னுடைய பூமி விசாலமானது. ஆகையால் நீங்கள் என்னையே வணங்குங்கள்.*(29:56)* இமாம் பகவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் - ஹிஜ்ரத் செல்லாமல் மக்காவிலேயே தங்கியிருந்த முஸ்லிம்கள் குறித்தே இந்த வசனம் இறங்கியது. அல்லாஹ் அவர்களை ஈமான் கொண்டவர்கள் என அழைக்கிறான்.**[1]

**ஹிஜ்ரத்துக்கு நபிவழியிலிருந்து ஆதாரமாவது - நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் - தவ்பா(பாவமன்னிப்பு தேடுதல்) முடிவுக்குவராத வரை ஹிஜ்ரத் முடிவுக்குவராது. சூரியன் மறையும் இடத்திலிருந்து உதிக்காதவரை தவ்பா முடிவுறாது.**[2]

---

**(1)** இமாம் பகவி அவர்களின் கருத்தையே மூலாசிரியர் எடுத்தாழ்ந்திருக்கிறார் என்பதே வெளிப்படை. ஆனால் மூலாசியர் கூறும் வாசகம் பகவி அவர்களின் தஃப்ஸீரில் காணப்படவில்லை.

**(2)** இது, ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரிய நற்செயல்கள் முடிவுறும் போதாகும். (அதாவது இது கியாமநாள் நெருங்கும் ஒரு கட்டத்திலாகும்.) அல்லாஹ் கூறுகிறான்: உம் இறைவனின் சில சான்றுகள் வரும் நாளில் முன்னரே நம்பிக்கை கொள்ளாமலும் அல்லது நம்பிக்கையுடன் நல்லறங்களைச் செய்யாமலும் இருந்துவிட்டு அந்நாளில் அவர்கள் கொள்ளும் நம்பிக்கை எந்தப் பலனையும் அவர்களுக்கு அளிக்காது.(6:158) இந்த வசனத்தில் 'உம் இறைவனின் சான்றுகளில் சில வெளிப்படுதல்" என்பதன் கருத்து சூரியன் மேற்கிலிருந்து உதிப்பதாகும்.

இங்கு நாம் இறைநிராகரிப்பின் அடிப்படையிலான நாட் டிற்குப் பயணம் செல்வது பற்றிக் கூறுகிறோம்: மூன்று நிபந்தனைகள் இன்றி இந்நாட்டிற்குப் பயணம் செல்லக் கூடாது.

முதலாவது நிபந்தனை: சந்தேகமானவற்றை விட்டும் விலகுவது பற்றிய கல்வியை அவர் தெரிந்திருக்க வேண்டும்.

இரண்டாவது நிபந்தனை: மனோ இச்சைகளிலிருந்து தடுக்கின்ற அளவுக்கு மார்க்கம் அவரிடமிருக்க வேண்டும்.

மூன்றாவது நிபந்தனை: அந்நாட்டிற்குச் செல்வது அவருக்குக் கட்டாயத் தேவையாக இருக்க வேண்டும்.

இந்நிபந்தனைகள் பூரணமாக இல்லையெனில் இறை நிராகரிப்பாளர்களின் நாட்டிற்கு அவர் போகக்கூடாது.ஏனெனில் குழப்பம், அல்லது குழப்பத்தைப் பற்றிய பயம், அல்லது பொருள் விரயம் போன்றவை ஏற்படுகின்றன. மனிதன் இது

போன்ற பயணங்களில் அதிகமான பொருளாதாரத்தைச் செலவிடுகிறான்.

சிகிச்சைக்காகவோ தனது நாட்டில் இல்லாத கல்வியைக் கற்பதற்காகவோ அந்த நாட்டிற்கு சென்றால் அதே நேரத்தில் மேலே நாம் கூறியவாறு மார்க்கமும் மார்க்கக் கல்வியும் அவரிடம் இருந்தால் பிரச்சனை ஏதும் இல்லை.

சுற்றுலாவுக்காக இறைநிராகரிப்பாளர்களின் நாட்டிற்குப் பயணமாவது தேவையற்றதாகும். ஏனெனில் இஸ்லாமிய நெறிமுறைகள் பேணப்படுகின்ற இஸ்லாமிய நாடுகளுக்கு அவனால் செல்ல முடியும். தற்போது அல்லாஹ்வன் அருளால் நம் (சவூதிஅரேபியா) நாட்டின் சில பகுதிகளில் சுற்று லாத்தலங்கள் உருவாகியுள்ளன.அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அங்கே சென்று தமது விடுமுறைக் காலங்களைக் கழிக்க முடியும்.

இறைநிராகரிப்பாளர்களின் நாட்டில் தங்கி வாழ்வதோ ஒரு முஸ்லிமுடைய மார்க்கத்துக்கும் பண்பாடுகளுக்கும் அவனது ஒழுக்க நடைமுறைக்கும் மிகப்பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதாகும்.அங்கே தங்கி வாழ்வோரில் பெரும் பாலோர் நேர்வழியை விட்டும் தடம் புரண்டு வாழ்வதை நாமும் மற்றையோரும் கண்கூடாகக் கண்டு கொண்டு தான் இருக்கிறோம். அவர்கள் எப்படிப் போனார்களோ அப்படித் திரும்புவதில்லை. தீயவர்களாகத் திரும்புகின்றனர்.

அவர்களில் சிலர் தமது மார்க்கத்தை விட்டும் விலகியவர்களாக, தமது மார்க்கத்தையும் ஏனைய மார்க்கங்களையும் நிராகரிப்பவர்களாகத் திரும்புகின்றனர். இந்நிலையிலிருந்து அல்லாஹ் நம்மைக்காக்க வேண்டும். எந்த அளவுக்கு எனில் அவர்கள் நாத்திகாகளாகவும் மார்க்கத்தைப் பின்பற்றி வாழ்ந்த முன்னோர்களையும் பின்பற்றி வாழ்கின்ற பின்னோரையும் பரிகாசம் செய்பவர்களாகவும் மாறிவிட்டனர். இதனால்

இதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதும் இது போன்ற ஆழிவுகளில் வீழ்வதிலிருந்து தடுக்கக்கூடிய நிபந்தனைகளை விதித்துக் கொள்வதும் அவசியத்திலும் அவசிய மாகும்.

இறைநிராகரிப்பின் அடிப்படையிலான நாட்டில் தங்குவதற்கு இரு அடிப்படை நிபந்தனைகள் அவசியமாகும்.

முதலாவது நிபந்தனை: அங்கு தங்கக்கூடியவர் இறை நம்பிக்கையும் இறைமார்க்கத்தைப் பற்றிய அறிவும் அவரிடம் இருக்கும் வகையில் தமது மார்க்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இன்னும் தமது மார்க்கத்தில் உறுதி யாக இருக்கிறோம் என்று மனஅமைதி பெறும்வகையில் மனவுறுதி வேண்டும். நேர்வழியை விட்டும் தடம்புரண்டு வழிதவறி விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நிராகரிப்பாளர்களை நேசிப்பதை விட்டும் உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொள்வதை விட்டும் விலகி அவர்களைப் பற்றிய வெறுப்பதையும் விரோதிப்பதையும் மனதில் மறைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.ஏனெனில் அவர்களை நேசிப்பதும் உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொள்வதும் இறைநம்பிக்கைக்கு எதிரானதாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பும் சமூகத்தினர், அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காணமாட்டீர். அவர்கள் தங்கள் பெற்றோராராயினும் தங்கள் புதல்வர்களாயினும் தங்கள் சகோதரர்களாயினும் தங்கள் குடும்பத்தினராரயினும் சரியே.(58:22)

முஃமின்களே! யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் உங்களுடைய பாதுகாவலர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அவர்களில் ஒருவர் மற்றவருக்குப் பாதுகாவலர்களாக இருக்கின்றனர். உங்களில் எவரேனும் அவர்களைப் பொருப்பாளராக்கினால் நிச்சயமாக

அவரும் அவர்களைச் சேர்ந்தவர் தான். நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்கார மக்களுக்கு நேர்வழி காட்டமாட்டான்.

எனவே(நபியே!) உள்ளங்களில் நோய் இருப்போர் அவர்களை நோக்கி விரைவதைக்காண்கிறீர். (அவர்களைப் பகைத்துக் கொண்டால்) எங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமோ என அஞ்சுகிறோம் என்று அவர்கள் கூறுகின்றனர். அல்லாஹ் உங்களுக்கு வெற்றியளிக்கலாம். அல்லது ஏதாவது ஒரு காரியத்தை அவன் நிகழ்த்தலாம். அப்பொழுது அவர்கள் தம் உள்ளங்களில் மறைத்து வைத்திருந்ததற்காக கவலைப்பட்டோராக ஆவார்கள்.(5:51,52)

நபி(ஸல்)அவர்கள் கூறியதாக பின்வரும் ஹதீஸ் ஸஹீஹ் புகாரியில் நிரூபணமாகியுள்ளது: ஒரு கூட்டத்தாரை ஒருவன் நேசித்தால் அவன் அவர்களைச் சேர்ந்தவனாவான். ஒரு மனிதன் தான் நேசித்தவர்களுடன் இருப்பான்.

அல்லாஹ்வின் விரோதிகளை நேசிப்பது முஸ்லிமுக்கு மிகப் பெரும் ஆபத்தான விஷயமாகும். ஏனெனில் அவர் களை நேசித்தால் அவர்களுக்கு ஒப்பாக நடப்பதற்கும் அவர்களைப் பின்பற்றுவதற்கும் அவசியம் ஏற்படும். அல்லது குறைந்த பட்சம் அவர்களை(அவர்களது கொள்கையை) மறுக்க முடியாது போய் விடும். எனவே தான் "ஒரு கூட்டத் தினரை நேசிப்பவர் அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்"" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளர்கள்.

இரண்டாவது நிபந்தனை: அவனால் தன்னுடைய மார்க் கத்தை வெளிப்படுத்த முடிய வேண்டும்- இஸ்லாமிய நெறி முறைகளை எந்தத் தடையுமின்றி அவன் நிலைநாட்டும் வகையில். அந்த வகையில் அன்றாட ஜமாஅத் தொழுகைகளையும் ஜும்ஆத் தொழுகையையும் அவன் நிறைவேற்று வதற்கு அவன் தடுக்கப்படக்கூடாது- அத்தகைய தொழுகைகளை அவனுடன்

சேர்ந்து நிறைவேற்றுவதற்கு ஆட்கள் இருக்கும்போது. மேலும் ஜகாத், நோன்பு, ஹஜ் மற்றும் ஏனைய இஸ்லாமிய நெறிமுறைகளையும் கடமைகளையும் செய்வதற்கு அவனுக்குத் தடை இருக்கக்கூடாது. இதனை செய்வதற்கு அவனால் முடியவில்லையெனில் அந்த நாட்டில் அவன் தங்கக்கூடாது. இங்கிருந்து அவன் அவசியம் ஹிஜ்ரத் செய்துவிட வேண்டும். அல்-முஃக்னீ எனும் நூலில் அதன் ஆசிரியர் ஹிஜ்ரத் செய்யும் விஷயத்தில் மக்களின் நிலைகளைச் சொல்லும் போது- 8 வது பாகம் 457 வது பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

**1.** ஹிஜ்ரத் கடமையானர். இவரால் ஹிஜ்ரத் செய்ய முடியும். (அவர் வசிக்கும் நாட்டில்) தனது மார்க்கத்தை வெளிப்படுத்த முடியாது.இறைநிராகரிப்பாளர்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு மார்க்கக் கடமைகளை இவரால் நிறைவேற்ற இயலாது. இத்தகையவருக்கு ஹிஜ்ரத் செய்வது கடமையாகும். ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்:
தமக்குத் தாமே அநீதியிழைத்துக் கொண்டோரின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றும் போது, "நீங்கள் எந்த நிலையில் இருந்தீர்கள்?"" என்று கேட்பார்கள். நாங்கள் பூமியில் பலவீனர்களாக இருந்தோம் என்று அவர்கள் கூறு வார்கள். "அல்லாஹ்வின் பூமி விசாலமானதாக இல்லையா? அதில் நீங்கள் ஹிஜ்ரத் செய்திருக்கக் கூடாதா?"" என்று (வானவர்கள்) கேட்பார்கள். அவர்கள் ஒதுங்குமிடம் நரகம் தான். அது மிகக் கெட்ட தங்குமிடமாகும்.(4:97)

இது, ஹிஜ்ரத் கடமை என்பதை அறிவிக்கின்ற கடுமையான எச்சரிக்கையாகும். தனது மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு யாருக்கு முடியுமோ அவருக்கு அதனை நிறைவேற்றுவது கடமையாகும். எனவே ஹிஜ்ரத் அவசியக் கடமையும் கடமையை முழுமைப்படுத்தக்கூடியதும் ஆகும். ஒரு கடமை எதைக்கொண்டு முழுமை பெறாதோ அதுவும் கடமையாகும்.

இவ்விரண்டு அடிப்படை நிபந்தனைகள் முழுமை பெற்ற பின் இறைநிராகரிப்பாளர்களின் நாட்டில் தங்கியிருப்பது பல வகை நோக்கங்களுக்காகவாகும்.

முதல் வகை: மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதற்காகவும் இஸ்லாத்தின் மீது ஆர்வமூட்டுவதற்காகவும் தங்குதல். இதுவும் ஒரு வகை ஜிஹாத் ஆகும். யாரால் இதைச் செய்ய முடியுமோ அவருக்கு இது பர்லு கிஃபாயா ஆகும்.(பர்லு கிஃபாயா என்றால் அக்காரியத்தை அங்குள்ள ஒருவராவது செய்யவேண்டும். யாரும் செய்யாவிட்டால் எல்லோரும் குற்றவாளிகளாவர்.)ஆனால் நிபந்தனை என்ன வெனில் அழைப்புப் பணியையோ அல்லது அழைப்புப் பணியைச் செவியேற்பவர்களையோ தடுப்பவர்கள் அங்கு இல்லாத வண்ணம் அழைப்புப்பணி நடைபெற வேண்டும்.

ஏனெனில் இஸ்லாமிய அழைப்புப் பணி மார்க்கத்தின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். அதுவே இறைத்தூதர்களின் வழிமுறையுமாகும். நபி(ஸல்)அவர்கள் கூறிய செய்திகளை எக்காலமும் எந்நேரமும் எடுத்துரைக்குமாறு அவர் நமக்குக் கட்டளையிட்டுள்ளார்கள். ''என்னைப் பற்றி ஒரு செய்தியேனும் (தெரிந்திருந்தால் அதைப்) பிறருக்கு எடுத்துச் சொல்லுங்கள்'''' என்பது நபிமொழி.

இரண்டாம் வகை: நிராகரிப்பாளர்களின் நிலைமைகளை ஆய்வு செய்வதற்காகவும் அவர்களின் தவறான கடவுட் கொள்கை, போலித்தனமான வழிபாடுகள், பண்பாட்டுச் சீரழிவுகள், கட்டுப்பாடற்ற அவர்களின் நடைமுறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளவதற்காக அங்கே தங்குதல். இதன் நோக்கம் அவர்கள் விஷயத்தில் ஏமாந்து விடக்கூடாது என மக்களை எச்சரிப்பதற்காகவும். அவர்களின் உண்மை நிலையை அவர்களை மெச்சுகின்றவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காவும் தான்.

இதுவும் ஒரு வகை ஜிஹாத் தான். ஏனெனில் இதனால் இறைநிராகரிப்பு மற்றும் நிராகரிப்பாளர்கள் பற்றி எச்சரிக்க முடிகிறது. இந்த எச்சரிக்கை இஸ்லாத்தின் மீதும் இஸ்லாமிய வழிகாட்டுதல் மீதும் ஆர்வமூட்டுதலை உள்ளடக்கிய தாகும். ஏனெனில் இறை நிராகரிப்பு தவறு என்றாகும்போது இஸ்லாம் சரியானது என்பதற்கு அது ஆதாரமாகிவிடுகிறது. ''ஒரு விஷயம் அதன் எதிர்மறையைக் கொண்டே புரிந்து கொள்ளப்படும்''' என்று சொல்லப்படுவது போல.

என்றாலும் அவரது நோக்கம் நிறைவேற வேண்டும். அதைவிடப் பெரிய பிரச்சனை- தீங்கு ஏற்பட்டு விடக் கூடாது. அவர்களின் தவறான கொள்கைகளை இனங்காட்டி, அதைப் பற்றி எச்சரிக்க அவர் தடுக்கப்பட்டு அவரது நோக்கம் நிறைவேறா விட்டால் அவர் அங்கே தங்கியிருப் பதில் பயனேதுமில்லை. தீங்கு ஏற்படுவதுடன் அவரது நோக்கம் நிறைவேறுமானால் உதாரணமாக இஸ்லாத்தையும் இறைத்தூதரையும் இஸ்லாத்திலுள்ள இமாம்களையும் திட்டுவதன் மூலம் அவரது செயலை அவர்கள் எதிர் கொண்டால் அப்போது அவர் தனது பிரச்சாரத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ்வையன்றி யாரிடம் அவர்கள் பிரார்த்திக்கிறார்களோ அவர்களைத் திட்டாதீர்கள்.அவர்கள் அறிவில்லாமல் வரம்பு மீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள். இவ்வாறே ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அவர்களது செயலை அழகாகக் காட்டினோம். பின்னர் அவர்களின் மீளுதல் அவர்களின் இறைவனிடமே உள்ளது. அப்போது அவர்கள் செய்ததை அவர்களுக்கு அவன் அறிவிப்பான்.(6:108)

இந்த இரண்டாம் வகை மனிதர் முஸ்லிம்களுக்கு ஒற்றராக இருப்பதற்காக நிராகரிப்பாளர்களின் நாடுகளில் தங்குவதற்கு ஒப்பாகிறார். இதனால் முஸ்லிம்களுக்கு எதிராக அவர்கள்

செய்யும் சூழ்ச்சிகளை அறிந்து அவர்களைப் பற்றி முஸ்லிம்களை எச்சரிப்பார். இது போலவே நபி(ஸல்)அவர்கள் ஹுதைஃபா பின் யமான்(ரலி) அவர்களை அகழ்ப்போரின் போது இணைவைப்பவர்களிடம் அனுப்பினார்கள். அவர்களைப் பற்றிய செய்தியை அறிந்து வருவதற்காக.

மூன்றாம் வகை: இஸ்லாமிய நாடுகளின் தேவைக்காக, நிராகரிப்பாளர்களின் நாடுகளுடனான தொடர்புகளை முறைப்படுத்தத் தங்கியிருத்தல்- தூதரகங்களில் பணிபுரிபவர்களைப் போல. இதன் சட்டம் எந்த நோக்கத்திற்காக தங்கியிருக்கிறாரோ அதைப் பொறுத்ததாகும். உதாரணமாக கலாச்சாரத்துறைக்குரிய தூதரக அதிகாரி மாணவர்களின் விவகாரங்களைக் கவனிக்கவும் அவர்களைக் கண்காணித்து இஸ்லாமிய மார்க்கத்தையும் அதன் ஒழுக்கங்களையும் பண்பாடுகளையும் முறையாகக் கடைபிடிப்பதற்கு அவர்களைத் தூண்டுவதற்காகவும் அங்கு தங்குவதைப்போல. அவர் தங்கிருப்பதில் பெரும் நன்மையுண்டு. பெரும் தீங்கும் தவிர்க்கப்படும்.

நான்காவது வகை: மருத்துவ சிகிச்சை, வியாபாரம் போன்ற ஆகுமான சொந்தத் தேவைகளுக்காகத் தங்கியிருத்தல். இதற்காகத் தேவைப்பட்ட அளவுக்கு அங்கே தங்கியிருத்தல் ஆகுமானதாகும். சில நபித்தோழர்கள் வியாபார நோக்கத்திற்காக நிராகரிப்பாளர்களின் நாடுகளுக்குச் செல்லலாம் என அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். அதற்கு அவர்கள், நபித்தோழர்கள் அவ்வாறு சென்றுள்ளதை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

ஐந்தாவது வகை: கல்வி கற்பதற்காகத் தங்கியிருத்தல். இது முன் சென்ற தேவைக்காகத் தங்கியிருத்தலின் வகையைச் சாந்ததாகும். ஆனாலும் அதைவிடப் ஆபத்தானதும், அவரது மார்க்கத்துக்கும், பண்பாடுகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். ஏனெனில் மாணவன் தனது அந்தஸ்து தாழ்ந்ததாகவும் தன்

ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்ந்ததாகவும் இருப்பதை உணர்வான். அதனால் அவர்களைக் கண்ணியப்படுத்தவும் அவர்களின் கருத்துக்களையும் சிந்தனைகளையும் நடத்தைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களைப் பின்பற்றவும் செய்யலாம். அல்லாஹ் பாதுகாத்தவர்களைத் தவிர. அத்தகையோர் மிகக் குறைவே.

அதுமட்டுமல்ல, தன்னுடைய ஆசிரியரிடம் உள்ள தனது தேவையை மாணவன் உணரும்போது அவரை நேசிக்க வேண்டியது வரும். அவருக்காக அவருடைய வழிகேட்டையையும் வழி பிறழ்தலையும் எடுத்து நடக்க வேண்டியது வரும். மேலும் அந்த மாணவனுக்கு அவன் தங்கிப்படிக்கும் இடத்தில் கூட்டாளிகள் இருப்பார்கள். அவர்களை உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொண்டு அவர்களை நேசிப்பான் அவர்களைப் போல் நடக்க ஆரம்பிப்பான். எனவே இந்த வகையில் இத்தகைய ஆபத்து இருப்பதனால் முன் சென்ற வகையை விட கூடுதல் பாதுகாப்பும் கவனமும் தேவை. எனவே இந்த வகையில், முன்னர் நாம் குறிப்பிட்ட இரண்டு அடிப்படை நிபந்தனைகளுடன் இன்னும் பல நிபந்தனைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவையாவன:

முதலாவது நிபந்தனை: அந்த மாணவன் நன்மை தீமைகளைப் பிரித்தறிதல், தூரநோக்கு, முதிர்ந்த அறிவு ஆகியவற்றில் உயர்தரத்தைச் சார்ந்த மாணவனாக இருக்க வேண்டும். ஆனால் மாணவர்கள் புத்தி கூர்மையில்லாத இளம் வாலிபர்களாக இருந்தால் அது அவர்களின் மார்க்கத்திற்கும் குணநலன்களுக்கும் நடத்தைகளுக்கும் பெரும் ஆபத்தாக அமையும். அதுமட்டுமின்றி அவர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பி வரும்போது அது அவர்களின் சமூகத் திற்கும் ஆபத்தாகவும் முடியும். அவர்கள் அந்த நிராகரிப்பாளர்களிடமிருந்து அவர்கள் பெற்ற அந்த நஞ்சை தமது சமுதாயத்தில் வந்து உமிழ்ந்துவிடுவார்கள்.

தற்போதும் சரி, முன்பும் சரி எதார்த்தம் இதற்கு சான்றாக அமைகிறது.

அந்நாடுகளிலிருந்து திரும்பிய பெரும்பாலோர் எப்படிப் போனார்களோ அதற்கு மாற்றமாக-தம் மார்க்கம் குணநலன்கள், நடத்தைகள் ஆகியவற்றில் வழிபிறழ்ந்தவர்களாகவே - திரும்பியிருக்கிறார்கள். இதனால் இந்த விஷங்களில் அவர் களுக்கும் அவர்களின் சமூகத்திற்கும் தீங்கு ஏற்பட்டிருக்கிறது. அது தெரிந்த கண்கூடாக் காண்கின்ற தீங்கே. இத்தகையவர்களை அந்நாடுகளுக்கு அனுப்புவது, ஓநாய்களுக்கு ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போன்றதாகும்.

இரண்டாவது நிபந்தனை: சத்தியம் அசத்தியத்தியம் ஒன்றுடன் ஒன்றுன்று கலந்து விடாமல் அவற்றைப் பிரித்தறியும் அளவுக்கு அந்த மாணவனிடம் மார்க்கக் கல்வி இருப்பது அவசியமாகும். காரணம் அந்நாட்டவர்களிடம் காணப்படும் அசத்தியம் குறித்து அவன் எமாந்து விடக்கூடாது. அதனை சத்தியம் என நம்பி விடக்கூடாது. அல்லது அது சத்தியமா அசத்தியமா என்ற குழப்பம் ஏற்பட்டு அதைத் தடுக்க முடியாமல் திகைத்து விடக்கூடாது.அல்லது அந்த அசத்தியத்தை அவன் பின்பற்றி விடக்கூடாது. நபிவழிப் பிரார்த்தனையில் பின்வருமாறு உள்ளது: இறைவா! எனக்கு உண்மையை உண்மை எனக்காட்டி, அதைப் பின்பற்றுவதற்கு அருள் செய்வாயாக.அசத்தியத்தை அசத்தியம் எனக்காட்டி அதிலிருந்து விலகியிருப்பதற்கு உதவுவாயாக. அதில் எனக்கு குழப்பத்தை ஏற்படுத்தி என்னை வழிகெடச் செய்துவிடாதே.

மூன்றாவது நிபந்தனை: இறைநிராகரிப்பு மற்றும் பாவங்களிலிருந்து பாதுகாக்கக்கூடிய தீன்- மார்க்கம் மாணவனிடம் இருப்பது அவசியம். ஏனெனில் மார்க்கத்தில் பலவீனமாக இருப்பவன் அங்கு தங்கியிருப்பதுடன் பாதுகாப்பாக இருக்கமாட்டான்.அல்லாஹ் நாடியோரைத் தவிர.காரணம் தாக்கும்

சக்தி பலமாகவும் எதிர்ப்பு சக்தி பலவீனமாக இருப்பதனால். இறைநிராகரிப்பு மற்றும் பாவங்களுக்கான காரணிகள் அங்கு பலமாகவும் அதிகமாகவும் பலவகைகளிலும் உள்ளன. அவை எதிர்ப்பு சக்தி பலவீனமாக இருப்பவனை திடீரென எதிர்கொள்ளும்போது அதன் வேலையை அது காட்டி விடும்.

நான்காவது நிபந்தனை: எந்தக் கல்விக்காக அங்கே தங்கியிருக்கிறானோ அது அவசியமானதாக இருக்க வேண் டும். எவ்வாறெனில் அதைத் கற்பதனால் முஸ்லிம்களுக்கு நன்மை இருக்க வேண்டும். தமது நாட்டில் உள்ள கல்லூரி களில் அதற்கு நிகரான படிப்பு இல்லாமல் இருக்க வேண்டும். அவனது மேற்படிப்பினால் முஸ்லிம்களுக்கு எந்த நன்மையும் இல்லையெனில் அல்லது இஸ்லாமிய நாடுகளில் அது போன்ற படிப்புக்கு வழி இருக்கிறது எனில் நிராகரிப்பாளர்களின் நாடுகளில் அவன் தங்கியிருப்பது கூடாது. காரணம், அங்கு தங்கியிருப்பதால் அவனது மார்க்கத்திற்கும் குண நலன்களுக்கும் பெரும் ஆபத்து இருப்பதோடு எவ்வித நன்மையும் இன்றி ஏராளமான பொருள் வீணாகிவிடும்.

ஆறாவது வகை: அங்கு குடியிருப்பதற்காகத் தங்குதல். இது முன்னதைவிடப் பெரும் ஆபத்தானது. காரணம் நிராகரிப்பாளர்களுடன் அவன் இரண்டறக் கலந்து விடுவதாலும், தான் இந்நாட்டுக் குடிமகன்-குடிமக்களை நேசித்தல், அவர்களை உற்ற நண்பர்களாக ஆக்கிக்கொள்ளல் ஆகிய குடியுரிமையின் தேட்டத்தைப் பேணக்கூடியவன் எனும் உணர்வு அவனுக்கு இருப்பதனாலும் நிராகரிப்பாளர்களின் கூட்டம் அங்கு பெருகிக் கொண்டே இருப்பதனாலும் அவனுக்குத் தீமைகள் விளையும் என்பதால்.

மட்டுமல்ல நிராகரிப்பாளர்களின் குடும்பத்தினருக்கு மத் தியில் அவனுடைய குடும்பத்தினர் வளர வேண்டியதிருக்கும். அதனால் அவர்களது குணநலன்களையும் பழக்க வழக்கங்களையும்

அவர்கள் கடைபிடிக்க வேண்டியது வரும். சிலபோது கொள்கை கோட்பாடுகளிலும் வணக்க வழிபாடுகளிலும் கூட அவர்களைப் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்படும். இதனால் தான், நபி(ஸல்)அவர்கள் பின் வருமாறு கூறினார்கள். ''யார் இணைவைப்போருடன் சேர்ந்து அவர்களுடன் வசிக்கிறானோ அவன் அவர்களைப் போன்றவனே''(அபூதாவூத்)

இந்த ஹதீஸ் பலவீனமான அறிவிப்பாளர் தொடரைக் கொண்டிருந்தாலும் இதில் கவனிக்கத்தக்க அம்சம் உள்ளது. ஏனெனில் அவர்களுடன் சேர்ந்து வாழ்வது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். கைஸ் பின் ஹாஸிம் எனும் தாபிஃ ஜரீர் பின் அப்துல்லாஹ்(ரலி) மூலமாக அறிவிக்கிறார்: இணைவைப்பவர்களுக்கு மத்தியில் வசிக்கும் ஒவ்வொரு முஸ்லிமை விட்டும் நான் நீங்கிக் கொள்கிறேன் என்று நபி (ஸல்)அவர்கள் கூறியதும், அல்லாஹ்வின் தூதரே! ஏன்? எனத் தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள், இருவரின் நெருப்புக்களும் ஒன்றையொன்று பார்க்கலாகாது என்றார்கள்.(அபூதாவூது,திர்மிதி)

(இணைவைப்பவனும் முஸ்லிமும் ஒருவரின் வீட்டை ஒருவர் பார்க்கும் வகையில் அருகருகே தங்கி வாழ்வது கூடாது. அல்லது இதன் கருத்து இப்படியும் இருக்கலாம். அதாவது ஒரு நெருப்பு அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறது. மற்றொன்று ஷைத்தானின் பக்கம் அழைக்கிறது. எனவே இரண்டும் ஓரிடத்தில் ஒன்று சேர முடியாது.)

இந்த ஹதீஸை பெரும்பாலான அறிவிப்பாளர்கள் முர்ஸலாகவே அதாவது கைஸ் பின் ஹாஸிம் எனும் தாபிஃ நபி (ஸல்)அவர்களிடமிருந்து நேரடியாக அறிவிப்பதாகவே அறிவித்துள்ளனர். இமாம் திர்மிதி அவர்கள் கூறுவதாவது: கைஸ் அவர்கள் நபி(ஸல்)அவர்களிடமிருந்து அறிவிக்கக் கூடிய ஹதீஸ்

முர்ஸலாகும் என்பதே சரியான கருத்தாகும் என இமாம்(புகாரி) முஹம்மது(ரஹ்)அவர்கள் கூற நான் செவியேற்றுள்ளேன்.

இறைநிராகரிப்பின் நடைமுறைகள் பிரகடனப்படுத்தப்படுகின்ற அல்லாஹ்வும் அவன் தூதரும் அல்லாதவர்களின் சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற நிராகரிப்பாளர்களின் நாடுகளில் வசிப்பதற்கு ஒரு முஃமினின் மனம் எப்படி சமாதானம் அடைய முடியும்? இதையெல்லாம் அவன் கண்கூடாக் கண்டும் காதுகளால் கேட்டும் வருகின்றான், அதைப்பொருந்திக் கொள்ளவும் செய்கின்கிறான். அது மட்டுமின்றி தன்னை அந்நாட்டுக்காரன் என்று சொல்லிக் கொண்டு மன நிம்மதியோடு வசிப்பதைப் போல அங்கே தனது மனைவி மக்களுடன் வசிக்கிறான். இத்தனைக்கும் இதில் அவனுக்கும் அவனது மனைவி மக்களுக்கும் அவர்களின் மார்க்கம் மற்றும் குண நலன்களுக்கும் பெரும் ஆபத்து இருக்கிறது.
இதுவே நிராகரிப்பாளர்களின் நாட்டில் வசிப்பது குறித்து நாம் அறிந்ததாகும். இது சத்தியத்திற்கும் சரியானதற்கும் இணக்கமாக அமையவேண்டுமென அல்லாஹ்விடம் நாம் பிரார்த்திக்கிறோம்.

---

**நபியவர்கள் மதீனாவில் நிலை கொண்டபோது ஸகாத்,நோன்பு, ஹஜ், ஜிஹாத் பாங்கு, ஏனைய இஸ்லாமியக் கடமைகள் ஏவப்பட்டன.**[1]

---

**(1)** ஆசிரியர் கூறுகிறார்: நபி(ஸல்)அவர்கள் மதீனாவில் நிலைகொண்டபோது இஸ்லாத்தின் ஏனைய சட்டங்கள் கடமையாக்கப்பட்டன.அதாவது மக்காவில் ஏறத்தாழ பத்து வருடங்கள் மக்களை ஏகத்துவத்தின் பக்கம் அழைத்தார்கள். பின்னர் ஐவேளை தொழுகைகள் அங்கு கடமையாக் கப்பட்டன.பின்னர் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். அது வரை ஜகாத், நோன்பு, ஹஜ் போன்ற கடமைகளும் மற்றும் ஏனைய ஷரீஅத் சட்டங்களும் கடமையாக்கப்படவில்லை. ஆசிரியரின் கருத்திலிருந்து நமக்கு வெளிப்படையாகத் தெரிவது

என்னவெனில் ஜகாத்தும் அதன் சட்டதிட்டங்களும் மதீனாவில்தான் கடமையாக்கப்பட்டது என்பதாகும்.

அனால் சில அறிஞர்களின் கருத்தாவது: ஜகாத் முதன் முதலில் மக்காவில் கடமையாக்கப்பட்டது.எனினும் ஸகாத் கடமையாவதற்குரிய நிஸாப் எனும் உச்சவரம்பும் கொடுக்க வேண்டிய அளவும் நிர்ணயிக்கப்படவில்லை. மதீனாவில் தான் இவையாவும் நிர்ணயிக்கப்பட்டன. இதற்கு இவர்கள் எடுத்துவைக்கும் ஆதாரம் என்னவெனில், ஸகாத்தைக் கடமையாக்கக்கூடிய வசனங்கள் மக்காவில் இறக்கியரு ளப்பட்ட அத்தியாயங்களில் உள்ளன.

உதாரணமாக அல்-அன்ஆம் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: அதை அறுவடை செய்யும் நாளில் அதற்குரிய (ஸகாத் எனும்) கடமையை வழங்கிவிடுங்கள்.(6:141) மற்றொரு அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்: அவர்களுடைய செல்வங்களில் யாசிப்போருக்கும் இல்லாதோருக்கும் நிர்ணயிக்கப்பட்ட பங்கு இருக்கிறது.(70:24,25)

எவ்வாறாயினும் ஜகாத் எனும் கடமை உறுதியானதும், நிஸாப் எனும் உச்சவரம்பு, கொடுக்க வேண்டிய அளவு ஆகியவை நிர்ணயிக்கப்பட்டதும், ஸகாத்தைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் விவரிக்கப்பட்டதும் எல்லாமே மதீனாவில் தான். அதுபோல பாங்கு, ஜும்ஆத் தொழுகையும் மதீனாவிலேயே கடமையாக்கப்பட்டன. கூட்டுத்தொழுகையும் கூட மதீனாவில் தான் கடமையாக்கப்பட்டது.ஏனெனில் கூட்டுத் தொழுகைக்கான அழைப்பாகிய பாங்கு ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டிலேயே கடமையாக்கப்பட்டது. ஜகாத், நோன்பு இவையும் ஹிஜ்ரி 2- ல் தான் கடமையாக்கப்பட்டன. அறிஞர்களின் சரியான கூற்றின் பிரகாரம் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் தான் ஹஜ் கடமையாக்கப்பட்டது. அதாவது ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு மக்கா

வெற்றி கொள்ளப்பட்டு அது இஸ்லாமிய நாடாக ஆன பின்பு தான் ஹஜ் கடமையாக்கப்பட்டது.

அதுபோலவே நபி(ஸல்) அவர்கள் மதீனாவில் நிலை கொண்டு அங்கு இஸ்லாமிய ஆட்சியை நிலைநாட்டிய பின்னரே நன்மையை ஏவி தீமையைத் தடுத்தலும் ஏனைய இஸ்லாமியக் கடமைகளும் கடமையாக்கப்பட்டன.

---

**இதற்காக நபி(ஸல்) அவர்கள் பத்து வருடங்களை எடுத்துக் கொண்டார்கள். அதன் பிறகு நபி(ஸல்) அவர்கள் மரணமடைந்தார்கள்.[1]**

---

**(1)** அதாவது நபி(ஸல்)அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத்செய்து வந்த பிறகு 10 வருடங்களாக இறைமார்க்கத்தை மக்களுக்கு போதித்து வந்தார்கள். பிறகு அல்லாஹ் இறை மார்க்கத்தை முழுமைப்படுத்தி, தனது அருட்கொடைகளையும் முஃமின்களுக்கு நிறைவு செய்து விட்டபோது நபி(ஸல்) அவர்களைத் தன் பக்கமும் நபிமார்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள், நல்லோர்கள் ஆகிய உன்னதத் தோழர்கள் பக்கமும் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

நபி(ஸல்)அவர்களுக்கு ஸஃபர் மாதக்கடைசியில் ரபீவுல் அவ்வல் துவக்கத்தில் நோய் ஆரம்பமானது.தலையில் துணியைச் சுற்றியவர்களாக மக்கள் முன் வந்து மின்பரில் ஏறினார்கள். லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறினார்கள். அதன் பிறகு அவர்கள் முதன் முதலில் செய்தது, உஹதுப் போரில் கொல்லப்பட்ட தியாகிகளுக்காக பாவமன்னிப்புத் தேடியதாகும். பின்பு, 'அல்லாஹ்வின் அடியார்களில் ஒருவருக்கு அல்லாஹ், இந்த உலகம் மற்றும் தன்னிடமுள்ளவை ஆகிய இரண்டில் ஒன்றை தேர்வு செய்யும் உரிமையை வழங்கிவிட்டான். அந்த அடியார், அல்லாஹ்விடம் உள்ளதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்" என்று கூறினார்கள்.

உடனே அபூபக்ர்(ரலி) அவர்கள் அதன் அர்த்தத்தைப் (நபி(ஸல்)அவர்களின் மரணம் நெருங்கிவிட்டதைப்) புரிந்து கொண்டு அழுதார்கள். மேலும் எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்.எங்கள் தந்தைமார்கள், எங்கள் தாய்மார்கள், எங்களுடைய மக்கள், எங்களுடைய செல்வங்கள், எங்களுடைய உயிர்கள் யாவற்றையும் உங்களுக்கு அர்ப்பணிக்கிறோம் என்று கூறினார்கள்.அப்போது நபி(ஸல்)அவர்கள், 'அபூபக்ரே! பொறுங்கள்!" என்று கூறி விட்டு, 'நட்பின் மூலமும் செல்வத்தின் மூலமும் மக்களிலிலேயே எனக்குப் பேருதவியாக இருந்தவர் அபூபக்ர் தான். என் இறைவனைத் தவிர வேறொருவரை உற்ற நண்பராக நான் ஏற்றுக் கொள்வதென்றால் அபூபக்ரையே ஏற்றிருப்பேன். என்றாலும் இஸ்லாம் என்ற அடிப்படையிலான சகோ தரத்துவமும் நேசமும் தான் (இஸ்லாத்தில்)உண்டு" என்று கூறினார்கள்:

மக்களுக்குத் தொழுகை நடத்தும்படி அபூபக்ருக்கு கட்டளையிட்டார்கள். ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதம் 12 அல்லது 13 ஆம் நாள் திங்கட்கிழமை அல்லாஹ் அவர்களைத் தன் பக்கம் அழைத்துக் கொண்டான். அவர் களுக்கு மரணவேளை நெருங்கிய போது அங்கிருந்த தண்ணீரில் கையை விட்டு முகத்தைத் தடவிக் கொண்டார்கள். பின்பு 'வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை, மரணத்தில் நிச்சயம் வேதனைகள் உண்டு" என்றார்கள்.பின்பு தமது பார்வையை வானத்தின் பக்கம் திருப்பி, 'அல்லாஹும்ம ஃபிர் ரஃபீக்கில் அஃலா" (இறைவா! உன்னதத் தோழனிடம் வருகிறேன்) என்று கூறினார்கள். பின்னர் மரணமாகி விட்டார்கள். இதனால் (நபி (ஸல்)இறந்து விட்டார்களா?! இருக்க முடியாது என)மக்கள் குழம்பிவிட்டனர். ஏன் மாட்டார்கள்?

இறுதியாக அபூபக்ர்(ரலி) அவர்கள் வந்து மின்பரில் ஏறி அல்லாஹ்வைப் புகழ்ந்து பாராட்டி விட்டு கூறினார்கள்.

முஹம்மதை யார் வணங்குகிறார்களோ (அவர்கள் அறிந்து கொள்ளட்டும்) திண்ணமாக முஹம்மது இறந்து விட்டார். அல்லாஹ்வை யார் வணங்குகிறார்களோ(அவர்கள் அறிந்து கொள்ளட்டும்) திண்ணமாக அல்லாஹ் உயிருடன் இருக் கிறான். அவன் என்றும் மரணமடைய மாட்டான். பின்னர் பின்வரும் வசனங்களை ஓதிக்காட்டினார்கள்.

"முஹம்மத் ஒரு தூதரே அன்றி வேறல்லர். திண்ணமாக அவருக்கு முன்னரும் தூதர்கள் பலர்(வாழ்ந்து)சென்றுள் ளனர்.அவர் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டு விட் டால் நீங்கள் வந்த வழி திரும்பிச் சென்று விடுவீர்களா?"(3:144)
"(நபியே!)நீரும் மரணமாகத்தான் போகிறீர். அவர்களும் மரணமாகக்கூடியவர்கள்தாம்."(39:30)

மக்கள் கடுமையாக அழுதனர். நபியவர்கள் இறந்து விட்டார்கள் என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர். அவர் களது கண்ணியம் கருதி அவர்கள் உடுத்திருந்த ஆடை யுடனேயே குளிப்பாட்டப்பட்டார்கள். பின்பு யமன் நாட்டில் ஸுஹூலிய்யா என்ற இடத்தைச் சார்ந்த வெண்மையான மூன்று துணிகளால்- சட்டை, தலைப்பாகை இல்லாமல்- கஃபன் செய்யப்பட்டார்கள். பின்னர் மக்கள் எல்லோரும் தனித்தனியாக இமாமில்லாமல் ஜனாஸா தொழுகை தொழுதனர். அவர்களுக்குப் பின்னர் ஒரு கலீஃபாவை (அபூபக்ர் (ரலி)யை) தேர்ந்தெடுத்த பிறகு புதன்கிழமை இரவு நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது அவர்கள் இறைவனின் உயர் கருணையும் பரிபூரண சாந்தியும் நிலவட்டுமாக.

---

**அவர்களின் மார்க்கம் என்றும் நிலைத்திருக்கும். அவர்களது மார்க்கம் எப்படிப்பட்டதெனில் அந்த மார்க்கத்தில் அவர்கள் எந்த நன்மையையும் சமுதாயத்திற்குச் சொல்லாமல் இல்லை. எந்தத் தீமையையும் சமுதாயத்திற்கு எச்சரிக்காமல் இல்லை. அவர்கள் கூறிய நன்மைகள் ஏகத்துவமும், அல்லாஹ் விரும்பி பொருந்திக் கொள்ளக்கூடிய அனைத்து நற்செயல்களும்**

**ஆகும். அவர்கள் எச்சரித்த தீமைகளோ இணைவைத்தலும் அல்லாஹ் வெறுக்கக்கூடிய மறுக்கக்கூடிய எல்லா தீயசெயல்களுமாகும்.**

**அவர்களை அல்லாஹ் இவ்வுலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக அனுப்பி வைத்தான். அவர்களுக்குக் கீழ்பழுவதை ஜின், மனிதன் ஆகிய இரு இனங்களுக்கும் அல்லாஹ் கடமையாக்கினான். ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - (நபியே!) நீர் கூறுவீராக! மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அனுப்பபட்டுள்ள அல்லாஹ்வின் தூதராவேன்.*(71:58)*[1]**

---

(1)இவ்வசனத்தில் பின்வரும் விஷயங்களுக்கு ஆதாரம் உள்ளது. அதாவது முஹம்மது நபியவர்கள் அனைத்து மக்களுக்கும் தூதராவார்கள். அவர்களைத் தூதராக அனுப்பிய அந்த இறைவனுக்கே வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் உரியதாகும். மரணிக்கச் செய்வதும், உயிர்ப்பிப்பதும் அவன் கைவசமே உள்ளது. படைத்துப் பரிபாலிக்கும் ஆற்றல் அவனுக்கு மட்டுமே இருப்பதைப்போல வணங்கப்படுவதற்குரிய தகுதியும் அவனுக்கே இருக்கிறது.

பின்பு வல்ல நாயன் இவ்வசனத்தின் இறுதியில் எழுதப் படிக்காத இந்த நபியை நாம் விசுவாசிக்கும்படியும் பின்பற்றும்படியும் ஏவியுள்ளான். அதுதான் அறிவு மற்றும் செயல் ரீதியான நேர்வழிக்குக் காரணமாகும். அந்த நேர்வழி இவ்வுலகில் சரியான பாதையைக் காட்டுவதுடன் மறுமையில் நற்பாக்கியத்தையும் ஈடேற்றத்தையும் ஈட்டித் தரும். அந்த நபி(ஸல்)அவர்கள் தான் மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் அனுப்பப்பட்ட தூதராவார்கள்.

---

**அல்லாஹ் அவர்களைக் கொண்டு இம்மார்க்கத்தை முழுமைப்படுத்தினான். அவன் கூறுகிறான் - இன்றைய தினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்காக முழுமையாக்கிவிட்டேன். எனது அருட்கொடையையும் உங்கள் மீது நான் நிறைவு செய்து விட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்றுக்கொண்டுவிட்டேன்.*(5:3)*[1]**

---

**(1)** நபி(ஸல்)அவர்களுடைய மார்க்கம் தான் இறுதி நாள் வரை நிலைத்திருக்கக் கூடியதாகும். நபி(ஸல்)அவர்கள் தமது சமுதாயத்துக்குத் தேவையான அனைத்து விஷயங்களையும் தெளிவுபடுத்தாமல் மரணிக்கவில்லை. எந்த அளவுக்கெனில் அபூதர்(ரலி)அவர்கள் கூறுகிறார்கள்:

நபி(ஸல்)அவர்கள் வானில் சிறகடித்துப் பறக்கும் பறவையிடமிருந்து கூட ஒரு கல்வியை எங்களுக்குக் கற்றுத்தராமல் விட்டதில்லை.(அஹ்மத்)

ஸல்மான் ஃபார்ஸீ(ரலி) அவர்களிடம் ஒரு இணைவைப்பாளன் கூறினான்: உங்களுடைய நபி மலஜலம் கழிக்கும் ஒழுங்குகளையும் கூட உங்களுக்குக் கற்றுத்தருகிறார். அதற்கு ஸல்மான் ஃபார்ஸீ(ரலி) அவர்கள் 'ஆம், மலஜலம் கழிக்கும்போது நாங்கள் கிப்லாவை முன்னோக்குவதையும் மூன்றுக்கும் குறைவான கற்களைக் கொண்டு சுத்தம் செய்வதையும், வலது கையால் சுத்தம் செய்வதையும், விட்டை அல்லது எலும்பைக் கொண்டு சுத்தம் செய்வதையும் தடுத்துள்ளனர்" என்று கூறினார்கள்: (முஸ்லிம்)

நபி(ஸல்)அவர்கள் மார்க்கம் முழுவதையும் தமது சொல், செயல் அல்லது அங்கீகாரம் மூலம் தாமாகவோ அல்லது கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் முகமாகவோ தெளிவு படுத்திச் சென்றுள்ளனர். அவர்கள் தெளிவுபடுத்தியதில் மிக்க மேலானது ஏகத்துவமாகும். அவர்கள் கட்டளையிட்ட ஒவ்வொன்றும் சமுதாயத்துக்கு இம்மை, மறுமை வாழ்வுக்கு நன்மை பயக்கக்கூடியதாகும். அவர்கள் தடைசெய்த ஒவ்வொன்றும் சமுதாயத்துக்கு இம்மையிலும் மறுமையிலும் தீமை தரக்கூடியதாகும்.

இஸ்லாம் கூறுகின்ற ஏவல் விலக்கல்கள் சிரமமானவை என சில அறியாதவர்கள் வாதிடுகின்றனர். அதற்குக் கார ணம்

இஸ்லாத்தைப் பற்றிய ஆழ்ந்த பார்வையின்மையும் பொறுமையின்மையும் தான்.மட்டுமல்ல இஸ்லாமிய மார்க்க அறிவு பலவீனமாக இருப்பதனாலும்தான். இல்லையெனில் அப்படிக் கூறமாட்டார்கள். ஏனெனில் அல்லாஹ் மார்க்கத் தில் நமக்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை. மேலும் மார்க்கம் முழுவதும் எளிதானதும் இலகுவானதும் ஆகும் என்பது ஒரு பொதுவான அடிப்படையாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் உங்களுக்கு இலகு வானதையே விரும்புகிறான். அவன் உங்களுக்கு கஷ்டத்தைத் தர விரும்பவில்லை.(2:185)

இந்த மார்க்கத்தில் அவன் உங்களுக்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்த வில்லை.(22:78)

அல்லாஹ் உங்களுக்கு எந்தச் சிரமத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை.(5:6)
அல்லாஹ் தனது அருட்கொடைகளை நிறைவு செய்து தனது மார்க்கத்தை முழுமைப்படுத்தியதற்காக அவனுக்கே எல்லாப் புகழும்!

---

**நபி(ஸல்) அவர்கள் மரணித்துவிட்டார்கள் என்பதற்கு ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான் - (நபியே!) நிச்சயமாக நீரும் இறப்பவரே! திண்ணமாக அவர்களும் இறப்போரே! பிறகு மறுமைநாளில் உங்கள் இறைவன் முன்னிலையில் நிச்சயம் நீங்கள் எல்லோரும் தத்தமாது வாதங்களை எடுத்துவைக்கப்போகிறீர்கள்.*(39:30,31)*[1]**

**மனிதர்கள் அனைவரும் மரணித்துவிட்ட பின்பு மீண்டும் உயிர்பித்து எழுப்படுவார்கள்.[2] இதற்கு ஆதாரம் - இப்பூமியிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம்.[3] இதிலேயே நாம் உங்களை திருப்பிச் சேர்த்துவிடுவோம்.[4] மேலும் இதிலிருந்தே உங்களை நாம் மறுதடவையும் வெளிக்கொணர்வோம்.[5]*(20:55)***

**அல்லாஹ்வே உங்களை பூமியிலிருந்து சிறந்த முறையில் உருவாக்கினான். பின்னர் அந்த பூமியிலேயே உங்களை மீண்டும் சேர்த்து, மற்றொருமுறை உங்களை(அதிலிருந்து) வெளிக்கொணர்வான்.*(71:17,18)*[6]**

---

**(1)** நபி(ஸல்) அவர்களும், அவர்கள் எந்த மக்களிடம் தூதராக அனுப்பப்பட்டார்களோ அவர்களும் இறந்து போகக்கூடியவர்களே. கியாம நாளில் அவர்கள் அல்லாஹ்விடம் தத்தமது வாதங்களை எடுத்து வைப்பார்கள். அப்போது அல்லாஹ் அவர்களுக்கிடையில் நியாயமான தீர்ப்பை வழங்குவான். அப்போது காஃபிர்களுக்கு முஃமின்களை ஆட்சேபிக்க எந்த வழியையும் அல்லாஹ் ஏற்படுத்த மாட்டான் என்பதை இந்த வசனத்திலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

**(2)** இந்த சொற்றொடர் மூலம் ஆசிரியர் விளக்குவதா வது: மனிதர்கள் அனைவரும் மரணித்துவிட்ட பின் மீண்டும் அவர்களை அல்லாஹ் உயிர்ப்பித்து எழுப்பப்புவான்- அவர்களது செயல்களை விசாரித்து அவர்களுக்கு நற்கூலி அல்லது தண்டனை வழங்குவதற்காக. இறைத்தூதர்களை அனுப்பியதன் நோக்கம் இதுதான். அதாவது மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்பட்டு அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வரப்படக்கூடிய அந்த நாளுக்காக மனிதன் செயல்பட வேண்டும்.

அந்த நாள்- எந்த நாளின் நிலைகளையும் பயங்கரங்களையும் பற்றி அல்லாஹ் கூறியிருக்கிறானோ- உள்ளத்தை அல்லாஹ்வின் பக்கம் திருப்பக்கூடியதும் அந்த நாளைப் பற்றிய அச்சத்தை அதற்கு ஏற்படுத்தக்கூடியதும் ஆகும்.

அல்லாஹ் கூறுகிறான்: எனவே நீங்கள் நிராகரித்தீர்களானால், அந்த நாளில் எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்? அதுவோ குழந்தைகளை நரைக்கச் செய்து விடும்! அதன் கடினத்தால் வானம் வெடித்துத் தகர்ந்து போய்விடும்! அவனுடைய வாக்குறுதி நிறைவேறியே தீரும்.(73:17,18)

இந்தச் சொற்றொடரில் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுதல் பற்றி ஈமான் கொள்ள வேண்டும் என்பதற்கான சமிஞ்ஞை உள்ளது.அதற்காக இரு வசனங்களை ஆசிரியர் ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

**(3)** அதாவது மனிதர்களின் தந்தையான ஆதம்(அலை) அவர்களை மண்ணிலிருந்து படைத்ததை அல்லாஹ் இங்கு சுட்டிக்காட்டுகிறான்.

**(4)** மரணித்த பின்பு மண்ணறையில் அடக்கம் செய்வதை அல்லாஹ் சுட்டிக்காட்டுகிறான்.

**(5)** இறுதி நாளில் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்புவதை அல்லாஹ் இங்கு சுட்டிக்காட்டுகிறான்.

**(6)** இந்த வசனம் முழுக்க முழுக்க(20:55)வது வசனத்திற்குப் பொருத்தமாக உள்ளது. மனிதனை அல்லாஹ் முதன் முதலில் படைத்தான். மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பு தலை நிரூபிப்பதற்காக (அவன் மரணித்த பின்)அவனை மீண்டும் உயிர்ப்பித்து எழுப்புவான். இந்தக் கருத்தில் ஏராளமான வசனங்கள் உள்ளன. இதனை மக்கள் நம்பி அவர்களது நம்பிக்கை மென்மேலும் அதிகரித்து மாபெரும் அந்த நாளுக்காக அமல் செய்ய வேண்டும் என்பதற்காக.எல்லாம் வல்ல அல்லாஹ் அந்நாளுக்காக அமல் செய்யக் கூடியவர் களாகவும், அந்நாளில் நற்பாக்கியம் பெற்றவர்களாகவும் நம்மை ஆக்கியருள்வானாக!

---

**அதன் பிறகு கேள்வி, கணக்குக்கேட்கப்பட்டு அவர்களது செயல்களுக்கு ஏற்பக்கூலி வழங்கப்படுவார்கள். ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - தீமை செய்தோருக்கு அவர்களின் செயல்களுக்குரிய பிரதிபலனை அல்லாஹ் கொடுப்பதற்காகவும் நன்மை செய்தோருக்கு நற்கூலியை வழங்குவதற்காகவும்தான்.*(53:31)*[1]**

---

**(1)** அதாவது மனிதர்கள் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்பட்ட பிறகு அவர்களின் செயல்களுக்குக் கேள்வி கணக்குக் கேட்கப்பட்டு அதன்பேரில் கூலி கொடுக்கப்படுவார்கள். அவர்களின் செயல்கள் நல்லவையாக இருந்தால் நற்கூலியும் அவை தீயவையாக இருந்தால் தண்டனையும் கிடைக்கும். அல்லாஹ் கூறுகிறான்: பிறகு எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அத(ற்குரிய பல)னை அவன் கண்டு கொள்வான். எவன் அணுவளவு தீமை செய்திருந்தானோ அத(ற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்.(99:7,8)

நாம் மறுமை நாளில் துல்லியமாக எடை போடும் தராசுகளை நிறுவுவோம். பின் எவருக்கும் இம்மியளவும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. மனிதன் செய்யும் கடுகளவு செயலாயினும் அதனை நாம்(மறுமையில்) அவன் முன் கொண்டு வருவோம். கணக்கு வாங்குவதற்கு நாமே போதுமானவர்களாக இருக்கிறோம்.(21:47)

எவர்(இறைவனின் திருமுன்)நன்மையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அதைப்போல் பத்துப் மடங்கு நற்கூலி உண்டு. எவர் தீமையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அவர் செய்த தீமை அளவுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும். மேலும் அவர்கள் யாருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது.(6:160)

அல்லாஹ்வின் அருளாலும் அவனது கருணையாலும் ஒரு நன்மைக்குக் கூலி பத்திலிருந்து எழுநூறு மடங்கு வரையாகும். இன்னும் அதை விடப்பன்மடங்கு கூலியும் கிடைக்கும். நற்செயல்களுக்கு ஒரு முறை கூலி வழங்கிய அல்லாஹ் மீண்டும் கூலி வழங்குகின்றான். இந்தக்கூலி விசாலமான அளப்பரிய கூலியாகும். தீமைக்கோ அவர் செய்ததீமை அளவுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும். அதைவிடக் கூடுதலாகத் தண்டிக்கப் படமாட்டார். அல்லாஹ் கூறுகிறான்: எவர் தீமையைக் கொண்டு

வருவாரோ அவருக்கு அவர் செய்த தீமை அளவுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும். மேலும் அவர்கள் யாருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது. (6:160) இது அல்லாஹ்வின் பரிபூரணமான கிருபையினாலும் அருளினாலும் ஆகும்.

பிறகு மூலாசிரியர் அதற்கு இந்த வசனத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள்: அல்லாஹ் கூறுகிறான்: தீமை செய்தவர்களுக்கு அவர்களின் செயல்களுக்குரிய பிரதிபலனை அல்லாஹ் கொடுப்பதற்காக...(53:31)

இங்கு தீமை செய்தவர்களுக்கு தீமையைக் கொண்டு கூலி கொடுப்பதற்காக என்று அல்லாஹ் சொல்லவில்லை. அதே வசனத்தின் தொடரில் 'நன்மை செய்தவா;களுக்கு நன்மையைக் கொண்டு கூலி கொடுப்பதற்காக" என்று சொன்னதைப்போன்று.

---

**மரணித்த பின் மீண்டும் எழுப்பப்படுவதை எவன் பொய் என்று கூறினானோ அவன் காஃபிராகிவிட்டான். ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான் - (இறந்தபின்) மீண்டும் அவர்கள் எழுப்பப்படவே மாட்டார்கள் என்று நிராகரிப்பாளர்கள் எண்ணிக் கொண்டனர். (அவர்களிடம்) நீர் கூறும் - அப்படியல்ல! என் இறைவன் மீது சத்தியமாக! நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள். பின்பு(உலகில்) நீங்கள் என்னவெல்லாம் செய்தீர்கள் என்று உங்களுக்கு நிச்சயம் அறிவித்துத்தரப்படும் இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிகவும் எளிதானதாகும்.*(64:7)*[1]**

---

(1) மரணித்த பின் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுவதை எவன் பொய்யென்று கூறினானோ அவன் கஃபிராவான். எனெனில் அல்லாஹ் கூறுகிறான்: அவர்கள்(மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு) தம் இறைவனின் திருமுன் நிறுத்தப்படும் காட்சியை நீர் காணவேண்டுமே! அப்போது அவன் அவர் களிடம் வினவுவான்: 'இது உண்மையல்லவா?" அதற்கவர்கள் 'ஆம்! எங்கள் இறைவனே! இது உண்மையே தான்" என பதில் கூறுவார்கள். அதற்கு அவன் கூறுவான்: 'சரி நீங்கள் இந்த

உண்மையை நிராகரித்துக் கொண்டிருந்ததற்காக வேதனையை அனுபவியுங்கள்"(6:30)

பொய்யெனக் கருதியோருக்கு அந்நாளில் கேடுதான். அவர்கள் தீர்ப்பு நாளை பொய்யெனக் கருதினர். வரம்பு மீறும் ஒவ்வொரு பாவியையும் தவிர வேறெவரும் அதைப் பொய்யெனக் கருதமாட்டார்கள். நமது வசனங்கள் அவனிடம் கூறப்பட்டால், 'இவை முன்னோர்களின் கட்டுக்கதைகள்" எனக் கூறுகிறான்.

அவ்வாறில்லை. மாறாக அவர்கள் செய்தது அவர்களின் உள்ளங்களில் துருவாகப் படிந்துவிட்டது. அவ்வாறில்லை! அந்நாளில் அவர்கள் தம் இறைவனை விட்டும் தடுக்கப்படுவார்கள். பின்னர் அவர்கள் நரகில் கருகுவார்கள். 'நீங்கள் பொய்யெனக் கருதியது இதுவே" என்று பின்னர் கூறப்படும். (83:10-17)

எனினும் அவர்கள் அந்த நேரத்தைப் பொய்யெனக் கருதுகின்றனர். அந்த நேரத்தைப் பொய்யெனக் கருதுபவர் களுக்கு நரகத்தைத் தயாரித்துள்ளோம்.(25:11)

எவர்கள் அல்லாஹ்வின் வசனங்களையும் அவனைச் சந்திப்பதையும் நிராகரிக்கின்றார்களோ அவர்கள் என்னுடைய அருளிலிருந்து நிராசை அடைந்து விட்டிருக்கின்றார்கள். மேலும் துன்புறுத்தும் வேதனை அவர்களுக்கு இருக்கிறது.(29:23)

மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுவதை பொய்ப்படுத்து பவன் காஃபிராவான் என்பதற்கு மூலாசிரியர்(64:7) வது வசனத்தை ஆதாரமாகக் காட்டியுள்ளார். மீண்டும் உயிர்ப் பித்து எழுப்பப்படுவதை மறுப்போருக்குப் பின்வருமாறு பதிலளிக்கலாம்.

**1.** மரணித்த பின் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுதல் பற்றிய விஷயம் நபிமார்கள், ரசூல் மார்கள் மூலமாக திரும் பத்திரும்ப அறிவிக்கப்பட்டு இறைவேதங்களிலும் இறை மார்க்கங்களிலும் உள்ளது. அவர்களின் சமூகத்தினர் அதனை மனமுவந்து ஏற்றுக்கொண்டனர். தத்துவவாதிகள், கொள்கைவாதிகள், சிந்தனையாளர்கள் கூறக்கூடியவற்றை, அவை மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுதல் பற்றிய விஷயம் பலரின் மூலமாகவும் திரும்பத்திரும்ப அறிவிக்கப்பட்டது போல யதார்த்த நிலையும் அதற்கு சான்றாக இருப்பதுபோல இல்லாதிருந்தும் நம்புகின்ற நீங்கள் இதை எப்படி மறுக்கின்றீர்கள்?

**2.** மரணித்த பின் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுதல் சாத்தியமானதே என பகுத்தறிவு சான்று பகர்கின்றது. அது பல கோணங்களிலாகும்.

அ. ஒவ்வொரு மனிதனும் முன்பு எப்பொருளாயும் இல்லாமலிருந்து படைக்கப்பட்டான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மனிதன் 'இல்லாமை" என்பதிலிருந்து தோன்றினான். அவனைப் படைத்தவன், 'இல்லாமை" என்பதிலிருந்து அவனை உருவாக்கியவன் மீண்டும் 'இல்லாமை"யிலிருந்து படைக்க ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான் -அல்லாஹ் கூறுவதுபோல. 'அவனே முதன் முறையாகப் படைக்கின்றான். பிறகு அவனே அதை மறுமுறையும் படைப்பான். இது அவனுக்கு மிகவும் எளிதானது."(30:27)

'நாம் முதலில் எவ்வாறு படைக்கத் தொடங்கினோமோ அவ்வாறே நாம் மீண்டும் படைப்பபோம். இது நம்முடைய பொறுப்பிலுள்ள ஒரு வாக்குறுதியாகும். திண்ணமாக அதனை நாம் நிறைவேற்றியே தீருவோம்."(21:104)

ஆ. வானங்களும் பூமியும் பிரம்மாண்டமாகவும் அதிநூதனமாகவும் படைக்கப்பட்டிருப்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அவற்றைப் படைத்தவன் மனிதர்களை படைக்கவும் அவர்கள் மரணித்த பின் முதலில் படைத்ததுபோல் மீண்டும் படைக்கவும் ஆற்றல் பெற்றவனே!

அல்லாஹ் கூறுகிறான்: வானங்களையும் பூமியையும் படைப்பது, மனிதர்களைப் படைப்பதைவிட நிச்சயம் மாபெரும் சாதனையாகும். எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் இதை அறிவதில்லை.(40:57)

வானங்களையும் ப+மியையும் படைத்து அவற்றைப் படைப்பதில் சோர்வு ஏதும் அடையாத அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பித்திட ஆற்றலுடையவன் என்பதை அவர்கள் சிந்திக்கவில்லையா? ஆம்! திண்ணமாக அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றலுடையவன் (46:33)

வானங்களையும் பூமியையும் படைத்தவன் அவர்களைப் போன்றவர்களைப் படைக்க சக்தி பெற்றவன் இல்லையா? ஆம்! அவன் மிகப்பெரிய படைப்பாளன்! மிகவும் அறிந்தவன்! அவன் ஏதேனும் ஒரு பொருளை நாடும்போது 'ஆகுக!"என்று கூறுவதே அவனது நிலை.உடனே அது ஆகிவிடும்.(36:81,82)

இ. இந்த பூமி புற்பூண்டுகள் எதுவும் இல்லாமல் வறண்டு தரிசாய்க் கிடக்கிறது. அதன் மீது மழை பொழிந்தவுடன் செத்துப்போன புற்பூண்டுகள் உயிர் பெற்று பசுமையாய்ச் சிலிர்த்தெழுகின்றன. பார்வையுடைய ஒவ்வொருவனும் இதனைக் கண்கூடாகக் காண்கின்றான்.இறந்துபோன பூமியை உயிர்ப்பிப்பதற்கு ஆற்றல் பெற்றவன் மரணித்த மனிதர்களை மீண்டும் உயிர்ப்பித்து எழுப்புவதற்கும் ஆற்றல் பெற்றவனே!

அல்லாஹ் கூறுகிறான்: அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும்: பூமி வறண்டு காய்ந்து கிடப்பதை நீர் காண்கிறீர். அதில் நாம் மழையைப் பொழிந்தவுடன் அது சட்டென்று தளிர்த்து தழைத்தோங்குகின்றது. திண்ணமாக இறந்துபோன இப்பூமிக்கு எ(ந்த இறை)வன் உயிர் கொடுத்தானோ அவனே இறந்தவர்களையும் உயிர்ப்பிப்பவன்! திண்ணமாக அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் உடையவன். (41:39)

3. புலனுணர்வும் யதார்த்த நிலையும் இதன் சாத்தியத்தைச் சான்று பகர்கின்றன- அல்லாஹ் நமக்கு அறிவித்த இறந்தவர்களை உயிர்ப்பித்தெழுப்பும் சில நிகழ்ச்சிகளில். அது குறித்து பகரா அத்தியாயத்தில் அல்லாஹ் ஐந்து நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளான். அவற்றில் ஒன்று வருமாறு:
அல்லது ஒரு கிராமத்தைக் கடந்து சென்றவரைப் பற்றி (நீர் அறிவீரா?) அந்த ஊர் அடியோடு வீழ்ந்து கிடந்நது. 'இவ்வூர் அழிந்த பிறகு அல்லாஹ் எவ்வாறு இதை உயிராக் குவான்?'' என்று அவர் நினைத்தார். உடனே அவரை நூறு ஆண்டுகள் அல்லாஹ் மரணிக்கச் செய்தான். பின்பு அவரை உயிர்ப்பித்தான். 'எவ்வளவு நாளைக் கழித்திருப்பீர்'' என்று கேட்டான். 'ஒரு நாள் அல்லது ஒரு நாளில் சிறிதளவு கழித் திருப்பேன்'' என்று அவர் கூறினார்.

'அவ்வாறில்லை! நூறு ஆண்டுகளைக் கழித்து விட்டீர்! உமது உணவும் பானமும் கெட்டுப் போகாமல் இருப்பதைக் காண்பீராக! (செத்து விட்ட) உமது கழுதையையும் கவனிப் பீராக! மக்களுக்கு உம்மை எடுத்துக்காட்டாக ஆக்குவதற்காக (இவ்வாறு செய்தோம். கழுதையின்) எலும்புகளை எவ்வாறு திரட்டுகிறோம் என்பதையும் அதற்கு எவ்வாறு மாமிசத்தை அணிவிக்கிறோம் என்பதையும் கவனிப்பீராக!'' என்று அவன் கூறினான். அவருக்குத் தெளிவு பிறந்த போது 'அல்லாஹ் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன் என்பதை அறிகிறேன் எனக் கூறினார்.(2:259)

**4.** ஒவ்வொரு மனிதனும் அவனவன் செய்தவற்றுக்கு ஏற்பக் கூலி பெற வேண்டுமென்பதற்காக மரணித்த பின் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்பட வேண்டுமென்பதே விவே கத்தின் தேட்டமாகும். இல்லையெனில் மனிதர்கள் படைக் கப்பட்டது வீணானதாகவும் பயனற்றதாகவும் ஆகிவிடும். அதில் எவ்வித நுட்பமும் விவேகமும் இல்லாது போய்விடும். மட்டுமல்ல இவ்வாழ்வில் மனிதனுக்கும் கால்நடைகளுக் கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் போய்விடும்.

அல்லாஹ் கூறுகிறான்: நாம் உங்களை வீணாகவே படைத்துள்ளோம் என்றும் நம்மிடம் நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படவே மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா, என்ன? உண்மையான அரசனான அல்லாஹ் மிக உயர்ந்தவன். வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர வேறுயாருமில்லை. சங்கைமிகு அர்ஷின் உரிமையாளன் அவனே! (23:115,116)

மறுமை நாள் வருவது திண்ணம்.அது வரும் நேரத்தை நான் மறைத்து வைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு மனித னும் அவனவனின் முயற்சிகளுக்கேற்ற கூலி பெறவேண்டும் என்பதற்காக.(20:15)

இறந்துவிடுகின்ற எவரையும் அல்லாஹ் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்ப மாட்டான் என்று இவர்கள் அல்லாஹ்வின் பெயரில் அழுத்தமான சத்தியங்கள் செய்து கூறுகின்றார்கள். ஏன் எழுப்பமாட்டான்? இது ஒரு வாக்குறுதியாயிற்றே! இதனை நிறைவேற்றுவது அவன் மீது கடமையாக இருக் கிறது. ஆயினும் மக்களில் பெரும்பாலோர் (இதனை) அறிவ தில்லை.(இறந்தவர்களை மீண்டும் உயிர்பெற்றெழச் செய்வது) இவர்கள் எதனைப் பற்றி கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றார்களோ அதனை அல்லாஹ் அவர்களுக்குத் தெளிவுபடுத்தி விட வேண்டும் என்பதற்காகவும் மேலும்

சத்தியத்தை மறுப்பவர்கள்(காஃபிர்கள்) தாங்கள் பொய்யர்களாக இருந்ததை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவுமேயாகும். (இவ்வாறு எழுப்புவது சாத்தியமே. ஏனெனில்) நாம் ஒரு பொருளை உருவாக்க நாடினால் 'ஆகுக!" என்று மட்டும் தான் ஆணையிடுகின்றோம். உடனே அது ஆகிவிடுகின்றது.(16:38-40)

இறந்த பின் மீண்டும் ஒருபோதும் அவர்கள் எழுப்பப்பட மாட்டார்கள் என்று நிராகரிப்பாளர்கள் வாதிடுகின்றனர். (நபியே! அவர்களிடம்) நீர் கூறும்: இல்லை. என் இறைவன் மீது சத்தியமாக! நீங்கள் நிச்சயமாக எழுப்பப்படுவீர்கள். பிறகு(உலகில்)நீங்கள் என்னவெல்லாம் செய்தீர்கள் என்று எங்களுக்கு அறிவித்துத் தரப்படும். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிகவும் எளிதாகும்.(64:7)

மீண்டும் எழுப்பப்படுதலை மறுப்போருக்கு இத்தகைய ஆதாரங்கள் தெளிவாக விளக்கப்பட்ட பின்னரும் அதனை மறுப்பதில் அவர்கள் பிடிவாதமாக இருந்தால் அவர்களே பெருமையடிப்பவர்கள், ஆணவம் கொண்டவர்கள். இத்தகைய அக்கிரமக்காரர்கள் எந்த கதியை அடையப்போகின்றார்கள் என்பதை அதிவிரைவில் அறிந்து கொள்வார்கள்.

---

**அல்லாஹ் எல்லா இறைத்தூதர்களையும் நற்செய்தி கூறுபவர்களாகவும் அச்சமூட்டி எச்சரிப்பவர்களாகவுமே அனுப்பினான். ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான் - இறைத்தூதர்கள் அனைவரும் நற்செய்தி அறிவிப்பவர்களாகவும் எச்சரிப்பவர்களாகவும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஏனெனில் அத்தூதர்கள் அனுப்பப்பட்ட பிறகு அல்லாஹ்விடம் முறையிட மக்களுக்கு ஆதாரம் ஏதும் இருக்கக்கூடாது என்பதற்காக. *(4:165)*[1]**

---

(1)இந்த வசனத்தில் அல்லாஹ் கூறுவதுபோல இறைத் தூதர்கள் அனைவரையும் நற்செய்தி கூறுபவர்களாகவும் எச்சரிப்பவர்களாகவுமே அல்லாஹ் அனுப்பினான்.அதாவது அவர்கள் தங்களுக்கு கீழ்ப்படிந்து நடப்போருக்கு சுவனம்

குறித்து நற்செய்தி கூறுவார்கள். தங்களுக்கு மாறு செய்வோருக்கு நரகம் குறித்து எச்சரிப்பார்கள்.

இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டதற்கு பெரும் காரணங்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானது மக்களுக்குச் சாதகமான ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருப்பதாகும். அதாவது அத்தூதர்கள் அனுப்பப்பட்ட பிறகு அல்லாஹ்விடம் முறையிட மக்களுக்கு எந்த ஆதாரமும் கிடைத்து விடக்கூடாது. இதுதான் பிரதான நோக்கமும் ஆகும். இதைத்தான் அல்லாஹ் இப்படிக் கூறுகிறான்: அத்தூதர் கள் அனுப்பப்பட்ட பிறகு அல்லாஹ்விடம் முறையிட மக்க ளுக்கு ஆதாரம் ஏதும் இருக்கக் கூடாது என்பதற்காக. (4:165)
இதுவும் ஒரு காரணமாகும்: அதாவது இறைத்தூதர்களை அனுப்பி தனது அடியார்களுக்கு அல்லாஹ் பரிபூரண அருளைப் புரிந்திருக்கின்றான். மனிதனுடைய அறிவு என்னதான் பெரியதாக இருந்தாலும்(அவன் அவசியம் நிறைவேற்ற வேண்டிய) அல்லாஹ்வுக்குரிய தனிப்பட்ட உரிமைகள் கடமைகள் பற்றி விரிவாக விளக்கமாக அறிந்து கொள்ள முடியாது. அல்லாஹ்வுக்குரிய பரிப+ரணமான பண்புகள், அழகிய பெயர்கள் ஆகியவற்றைப் பற்றியும் விபரமாகத் தெரிந்து கொள்ள முடியாது. அதனால் தான் இறைத்தூதர்களை நற்செய்தி சொல்பவர்களாகவும் எச்சரிக்கை செய்ப வர்களாகவும் அல்லாஹ் அனுப்பினான். மனிதர்களிடையே- அவர்கள் எதில் மாறுபட்ட கருத்துக் கொண்டார்களோ அதில்- சரியான தீர்ப்பைச் செய்வதற்காக சத்தியத்துடன் வேதங்களையும் அத்தூதர்களுடன் இறக்கி அருளினான்.

முதல் தூதர் நூஹ்(அலை) முதல் இறுதித் தூதர் முஹம் மது(ஸல்) வரை எல்லா இறைத் தூதர்களும் சொன்ன மிகப்பெரும் விஷயம் ஏகத்துவம் ஆகும். அல்லாஹ் கூறுகிறான்: 'அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனல்லாதவர்களை வணங்குவதைத் தவிர்ந்து

கொள்ளுங்கள்" என்று போதிக்கு மாறு) திண்ணமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பினோம். (16:36)
(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எந்தத் தூதரிடத்திலும், 'நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் என்னைத் தவிர வேறு யாருமில்லை. எனவே என்னையே நீங்கள் வணங்க வேண்டும்" என்றே நாம் வஹியின் மூலம் அறிவித்திருந்தோம்.(21:25)

---

**இறைத்தூதர்களில் முதலாமவர் நூஹ்(அலை) அவர்கள. இறுதியானவர் முஹம்மது(ஸல்) அவர்கள். முதல் தூதர் நூஹ்(அலை) என்பதற்கு ஆதாரம் - அல்லாஹ் கூறுகிறான் - (நபியே!) நூஹுக்கும் அவருக்குப்பின் வந்த நபிமார்களுக்கும் வஹீ அறிவித்ததுபோலவே உமக்கும் நாம் வஹீ அறிவித்துள்ளோம். *(4:163)*[1]**

---

**(1)** மூலாசிரியர் ஷைகுல் இஸ்லாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப்(ரஹ்) அவர்கள் முதல் இறைத்தூதர் நுரஹ்(அலை)எனக் கூறி தமது கூற்றுக்குச் சான்றாக 4:163 வது வசனத்தை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.ஸஹீஹுல் புகாரியில் பரிந்துரை பற்றிய நபிமொழியில் நிரூபணமான தாவது: ...(மறுமையில்)மக்கள் அனைவரும் நூஹ்(அலை) அவர்களிடம் வந்து, 'உலகில் வாழ்ந்த மக்களுக்கு அல்லாஹ் அனுப்பிய இறைத்தூதர்களில் நீங்கள்தாம் முதல் தூதர்...என்று கூறுவார்கள்."

நூஹுக்கு முன் எந்த தூதரும் வரவில்லை.இதன் மூலம் சில வரலாற்று ஆசிரியர்களின் தவறு தெரிய வருகிறது. அவர்கள் நூஹ்(அலை) அவர்களுக்கு முன்பு இத்ரீஸ்(அலை) அவர்கள் தூதராக இருந்தார்கள் எனக் கூறுகின்றனர். ஆனால் இத்ரீஸ்(அலை) அவர்களோ இஸ்ரவேலர்களுக்கு அனுப்பப்பட்ட தூதராவார்கள் என்பதே வெளிப்படை.

நபிமார்களில் இறுதியானவரும் முத்திரையானவரும் முஹம்மது(ஸல்) அவர்களாவர். அல்லாஹ் கூறுகிறான்: முஹம்மது உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர். ஆயினும் அவர் அல்லாஹ்வின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கின்றார். அல்லாஹ் யாவற்றையும் அறியக்கூடியவனாக இருக்கின்றான்.(33:40)

அவர்களுக்குப் பின்னர் எந்த நபியும் வரமாட்டார். அவர் களுக்குப் பின்பு தன்னை நபி என எவன் வாதிடுகிறானோ அவன் பெரும் பொய்யன், காஃபிர், இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவன் ஆவான்.

---

**ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அல்லாஹ் - நூஹ்(அலை) முதல் முஹம்மது(ஸல்) அவர்கள் வரை-ஒரு தூதரை அனுப்பியுள்ளான்.[1] அவர்கள் அனைவரும் அல்லாஹ்வை வணங்குவதையும் தாகூத்துகளை வணங்கக் கூடாதென தடுத்தனர் ஆதாரமாக அல்லாஹ் கூறுகிறான்-"அல்லாஹ்வையே வணங்குங்கள் தாகூத்தை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்" என்று (போதிக்குமாறு) திண்ணமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பினோம்*(16:36)*[2]**

---

**(1)** ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு தூதரை அல்லாஹ் அனுப்பினான்.அத்தூதர் அல்லாஹ்வை மட்டுமே வணங்கவேண்டுமென மக்களை அழைத்தார். அல்லாஹ் வுக்கு இணைவைப்பதிலிருந்து அவர்களைத் தடுத்தார். ஆதாரம்: அல்லாஹ் கூறுகிறான்: அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் எவரும் வருகைதராமல் எந்தச் சமுதாயமும் இருந்ததில்லை.(35:24) இத்துடன் மூலாசிரியர் குறிப்பிட்ட 16:36 வசனமும் ஆதாரமாகும்.

**(2)** லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவின் கருத்தும் இதுவேயாகும்.

---

**எல்லா மனிதர்களுக்கும் அல்லாஹ் தாகூத்துகளை நிராகரிக்கும்மாறும் அல்லாஹ்வை விசுவாசிக்குமாறும் கடமையாக்கியிருக்கிறான். தாகூத் பற்றி இப்னுல் கைய்யிம்(ரஹ்) அவர்கள் கூறியதாவது - வணங்குவதில், பின்பற்றுவதில், கட்டுப்படுவதில் மனிதன் வரம்பு மீறுவதற்கு தாகூத் என்று சொல்லப்படும்.**[1]

---

**(1)** மூலாசிரியர் ஷைகுல் இஸ்லாம்...(ரஹ்) அவர்களின் கருத்து இதுதான்: அதாவது அல்லாஹ்வை மட்டுமே வணங்கி தாகூத்துகளை விட்டும் விலகியிருப்பதால் மட்டுமே ஏகத்துவம் முழுமைபெறும். இதையே அல்லாஹ் மனிதர் களுக்கு கடமையாக்கியுள்ளான்.

'தாகூத்' எனும் அரபிச் சொல் 'துக்யான்' என்ற மூலச் சொல்லிலிருந்து வந்தது. 'துக்யான்' என்றால் வரம்பு மீறுதல் என்று பொருள். அல்லாஹ் கூறுகிறான்: வெள்ளப்பிரளயம் எல்லை கடந்து போன போது நாம் உங்களைக் கப்பலில் ஏற்றினோம்.(69:11) இவ்வசனத்தில் அல்லாஹ் 'எல்லை கடந்து போதல்" என்பதற்கு 'துக்யான்' என்ற மூலப்சொல்லிலிருந்து வந்த 'தகா' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளான். அகராதிப்படி தாகூத்துக்கு வரம்பு மீறுதல் என்பதுதான் பொருள்.

சொல் வழக்குப்படி தாகூத்துக்கு இப்னுல் கைய்யிம் (ரஹ்) தரும் விளக்கம் மிகச் சரியானதாகும். 'அதாவது தாகூத் என்றால் வணக்கத்தில், பின்பற்றுவதில், கட்டுப்படுவதில் மனிதன் வரம்பு மீறுவதாகும்" (அதாவது அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவதும் நபி(ஸல்)அவர்களை விடுத்து மற்றவர்களைப் பின்பற்றுவதும் வரம்புமீறுதல் ஆகும்.) இங்கே அல்லாஹ்வையும் நபியவர்களையும் விடுத்து மற்றவர்கள் என்பதன் கருத்து நல்லடியார்கள் அல்லாதவர்கள் என்பதாகும். நல்லடியார்கள் வணங்கப்பட்டாலும், பின்பற்றப்பட்டாலும், கீழ்ப்படியப்பட்டாலும் அவர்கள் தாகூத்துகள் அல்லர்.

அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படும் சிலைகள் தாகூத்துகளாகும். வழிகேடு, ஷிர்க், பித்அத் ஆகியவற்றின் பால் மக்களை அழைக்கக்கூடிய, அல்லாஹ் ஹராமாக்கியவற்றை ஹலால் என்றும் அல்லாஹ் ஹலாலாக்கியவற்றை ஹராம் என்றும் ஆக்கக்கூடிய, மேலும் இஸ்லாத்துக்கு மாற்றமாக வேறு சட்டதிட்டங்களை இறக்குமதி செய்வதன் மூலம் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டும் வெளியேறுவதை ஆட்சியாளர்களுக்கு அழகாக்கிக் காட்டக்கூடிய தீய அறிஞர்கள் தாகூத்துகள் ஆவர். ஏனெனில் இவர்கள் தமது வரம்பைக் கடந்து விட்டனர்.
நபி(ஸல்)அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தைப்பின் பற்றுவதுதான் ஒரு அறிஞனின் வரம்பாகும். அறிஞர்கள் உண்மையில் நபிமார்களின் வாரிசுகளாவர். அவர்கள் நபி மார்களின் சமுதாயத்துக்கு கல்வி, நற்செயல்கள், நற்குணங்கள், மார்க்கப் பிரச்சாரம், கற்றுக்கொடுத்தல் போன்றவற்றைத் தரவேண்டும். இந்த வரம்பை அவர்கள் கடந்து சென்று விட்டால் அவர்கள் தாகூத்களாவர். ஏனெனில் அவர்கள் ஷரீஅத்தைப் பின்பற்றும் கடமையில் எல்லை கடந்து விட்டனர்.

'கட்டுப்படுவதில்" என்று ஆசிரியர் கூறுவது ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படுதலாகும்.ஆட்சியாளர்கள் மார்க்க ரீதியாக அல்லது மரியாதை நிமித்தமாகக் கீழப்படியப்படுகிறார்கள். அல்லாஹ்வினுடைய மற்றும் அவன் தூதருடைய கட்டளைக்கு மாற்றமில்லாததை அவர்கள் ஏவும் போது மார்க்கரீதியாகக் கீழப்படியப்படுகிறார்கள். இந்த நிலையில் அவர்களை தாகூத்துகள் என்று சொல்லப்பட மாட்டாது. குடிமக்களின் மீது இத்தகைய ஆட்சியாளர்களுக்குரிய கடமை அவர்கள் சொல்லைக் கேட்டு அதற்குக் கட்டுப்படுவதாகும்.

இந்நிலையில் மேற்கூறிய நிபந்தனையுடன்(அதாவது அல்லாஹ் மற்றும் அவன் தூதருடைய கட்டளைக்கு மாற்ற மில்லாதவகையில்) ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படுவது அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவது போன்றாகும்.

எந்த விஷயங்களில் ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படுவது கடமையாகுமோ அந்த விஷயங்களில் ஆட்சியாளர்கள் இடக்கூடிய கட்டளைகளை நாம் செயல்படுத்தும் போது நாம் இறைவழிபாட்டைச் செய்கிறோம், ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படுவதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேடுகிறோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள். அவன் தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். இன்னும் உங்களில் அதிகாரம் வகிப்பவர்களுக்கும் (கீழ்ப்படியுங்கள்).(4:59)

ஆட்சியாளர்களுக்கு மரியாதை நிமித்தமாக கட்டுப்படுவதென்பது அவர்கள் தமது அதிகாரத்தில் பலமிக்கவர்களாக இருக்கும்போது அந்த அதிகார பலத்திற்கு(ப்பயந்து)மக்கள் அவர்களுக்கு கட்டுப்படுவதாகும். ஈமானின் உந்துதலால் அல்ல.ஏனெனில் அதிகாரத்தில் உள்ளவர்களுக்குக் கட்டுப்படுதல் என்பது ஈமானின் உந்துதலால் ஏற்பட வேண்டும். அதுவே ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். சிலவேளை கட்டுப்படுதல் அதிகார பலத்திற்காக இருக்கும். அதாவது அதிகாரிகள் அதிகார பலமுடையவர்களாக இருக்கும்போது அவர்களின் கட்டளைக்கு மாறுசெய்தால் தண்டிப்பார்களே எனப்பயந்து மக்கள் அவர்களுக்குக் கட்டுப்படுவார்கள்.

எனவேதான் நாம் கூறுகிறோம்: மக்கள் மற்றும் ஆட்சியாளர்கள் இவ்விருவரைப் பொருத்தும் இவ்விஷயத்தில் பல நிலைகள் உள்ளன:

**1.** மக்களுடைய ஈமானின் உந்துதலும் ஆட்சியாளர்களுடைய அதிகார பலமும் பலமாக இருப்பது.இதுவே பரிபூரணமான மற்றும் உயர்வான நிலையாகும்.

**2.** அவ்விரண்டும் பலவீனமாக இருப்பது. இந்தநிலை மிகத் தாழ்ந்ததும் சமுதாயத்துக்குப் பேராபத்தானதும் ஆகும். ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் ஆபத்தானதாகும். ஏனெனில் அவ்விரண்டும் வலுவிழந்து விட்டால் சிந்தனையிலும் செயல்பாட்டிலும் குணஒழுக்கத்திலும் ஒழுங்கீனம் ஏற்பட்டுவிடும்.

**3.** ஈமானின் உந்துதல் பலவீனமடைந்து அதிகாரபலம் பலமாக இருப்பது. இது நடுத்தரமான நிலையாகும். ஏனெனில் அதிகார பலம் பலமாக இருந்தால் வெளிப்படையில் அது சமுதாயத்துக்கு நன்மை பயப்பதாகவே அமையும். அதே சமயம் அதிகார பலம் பலவீனமடைந்துவிட்டால் அப்போது சமுதாயத்தின் நிலையையும் அதன் தீய செயல்பாட்டையும் கேட்கவே வேண்டாம்.

**4.** ஈமானின் உந்துதல் பலமாக இருந்து அதிகாரபலம் பலவீனமடைதல். வெளிப்படையில் இது மூன்றாவது நிலையைவிடத் தாழ்ந்தது. ஆயினும் மனிதனுக்கும் இறைவனுக்கும் மத்தியிலுள்ள தொடர்புகள் பரிபூரனமானதாகவும் உயர்வானதாகவும் இருக்கும்.

---

**தாகூத்துகள் அதிகம் உள்ளனர். அவற்றின் தலைவர்கள் ஐவர். இப்லீஸ்,அல்லாஹ்வின் சாபம் அவன் மீது உண்காட்டுமாக.[1] தான் வணங்கப்படுவதை விரும்புகிறவன்,[2] தன்னை வணங்குமாறு மக்களை அழைப்பவன்,[3] மறைவான ஞானம் தனக்கிருப்பதாக வாதிடுபவன்,[4] அல்லாஹ் இறக்கியருளாத சட்டத்தின் படித்தீர்பளிப்பவன்.[5]**

---

**(1)** இப்லீஸ் விரட்டப்பட்ட மற்றும் சாபத்திற்குரிய ஷைத்தான் ஆவான். அவனைப் பற்றிக் அல்லாஹ் கூறுகிறான்: நீ இங்கிருந்து வெளியேறிவிடு. நீ விரட்டப்பட வேண்டியவன். மேலும் திண்ணமாக நியாயத் தீர்ப்பு நாள்வரை உன் மீது என்னுடைய சாபம் உண்டாகும். (38:77,78)

இப்லீஸ் வானவர்களுடன் இருந்தான். அவர்கள் செய்யக் கூடிய அமலையே(வழிபாட்டை)அவனும் செய்துவந்தான். ஆதமுக்கு சிரம்பணியுமாறு அல்லாஹ் கட்டளையிட்டபோது அவனிடமிருந்த தீய குணமும், மறுக்கும் தன்மையும் பெருமையும் வெளிப்படலானது. அவன் சிரம்பணிய மறுத்துப் பெருமையடித்தான். எனவே காஃபிர்களில்- இறை நிராகரிப்பாளர்களில் ஒருவனாக ஆகிவிட்டான். அல்லாஹ்வின் அருளிலிருந்து விரட்டப்பட்டான்.

அல்லாஹ் கூறுகிறான்: 'நீங்கள் ஆதமுக்குப் பணியுங்கள்" என்று நாம் வானவர்களுக்குக் கூறியபோது இப்லீஸை தவிர அனைவரும் பணிந்தனர். அவனோ மறுத்துப் பெருமை யடித்தான்.(நம்மை) மறுப்பவனாக ஆகி விட்டான்.(2:34)

**(2)** அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படும் ஒருவன். அவ்வாறுதான் வணங்கப்பட வேண்டும் என அவன் விரும்பினால் அவனும் தாகூத்துகளின் தலைவர்களில் ஒருவனாவான்.(அந்த நிலையிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாக்க வேண்டும்) அவன் வாழும் காலத்தில் வணங்கப்பட்டாலும் சரியே. அல்லது தான் வணங்கப்பட வேண்டும் என்று பிரியப்பட்ட நிலையில் அவன் மரணித்துவிட்ட பிறகு அவன் வணங்கப்பட்டாலும் சரியே.

**(3)** தன்னையே வணங்க வேண்டுமென மக்களை அழைப்பவன்.மக்கள் அவனை வணங்காவிட்டாலும் சரியே. அவனது அழைப்பை மக்கள் ஏற்றாலும் சரி அல்லது நிராகரித்தாலும் சரி. அவனும் தாகூத்துகளின் தலைவர்களில் ஒருவனே.

**(4)** மறைவான ஞானம் என்பது மனிதன் அறிந்து கொள்ள முடியாததாகும். அது இரு வகைப்படும்.

**1.**தற்போது நிகழக் கூடியது பற்றிய ஞானம்.

**2.**எதிர் காலத்தில் நிகழக் கூடியது பற்றிய ஞானம்.

முதல் வகை ஞானம் ஆளைப் பொருத்தது. ஒருவருக்குத் தெரியும். இன்னொருவருக்குத் தெரியாது.

இரண்டாம் வகை ஞானம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாதது. ஆயினும் அல்லாஹ் இறைத்தூதர்களில் சிலருக்கு அதை அறிவித்துக் கொடுத்துள்ளான். இத்தகைய ஞானம் தனக்குத் தெரிவதாக யார் வாதிடுகிறானோ அவன் காஃபிராவான்.ஏனெனில் அவன் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பொய்ப்படுத்தியவனாவான்.

அல்லாஹ் கூறுகிறான்:(நபியே!) நீர் கூறும்: அல்லாஹ்வைத்தவிர வானங்களிலும் பூமியிலும் உள்ள எவரும் மறைவான விஷயங்களை அறியமாட்டார். மேலும்(உங்களுடைய கடவுளர்களான) அவர்கள் எப்பொழுது எழுப்பப்படுவார்கள் என்பதைக்கூட அறிவதில்லையே.(27:65)

'அல்லாஹ்வைத் தவிர வானங்கள் மற்றும் பூமியில் உள்ள எவரும் மறைவான விஷயங்களை அறியமாட்டார்" என்பதை சமுதாயத்துக்கு அறிவிக்குமாறு அல்லாஹ் தனது தூதர் முஹம்மது(ஸல்)அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்க மறைவான ஞானம் தனக்குத் தெரியும் என ஒருவன் வாதிட்டால் இது விஷயத்தில் அவன் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் பொய்ப்படுத்தியவனாவான். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் கூறுவோம்:

"நபி(ஸல்)அவர்களுக்கே மறைவான விஷயங்களைப் பற்றி தெரியாது எனும்போது நீங்கள் எப்படி அறிந்து கொள்ள முடியும்?! நீங்கள் உயர்ந்தவர்களா? அல்லது இறைத்தூதர் உயர்ந்தவர்களா?"இறைத்தூதரைவிட நாங்கள் தான் உயர்ந்தவர்கள் என அவர்கள் கூறுவார்களானால் அதன் மூலம்

அவர்கள் காஃபிர்களாகி விடுவார்கள். இறைத்தூதர் தான் உயர்ந்தவர்கள் என அவர்கள் கூறினால், 'நீங்கள் அதைத் தெரிந்திருக்கும்போது மறைவான விஷயம் அவர்களுக்கு ஏன் மறைக்கப்பட்டது?" என நாம் கேட்போம்.

அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறுகிறான்: அவன் மறை வானவற்றை அறிந்தவன். தனது மறைவான விஷயங்களை அவன் பொருந்திக் கொண்ட தூதரைத்தவிர யாருக்கும் வெளிப்படுத்தமாட்டான். அவருக்கு முன்னும் பின்னும் கண்காணிப்பாளரை நியமிக்கின்றான்.(72:26,27)

இவ்வசனம், மறைவான ஞானம் தனக்கு இருப்பதாக வாதிடுபவன் காஃபிராவான் என்பதை அறிவிக்கக்கூடிய இரண்டாவது வசனமாகும்.மேலும் நபி(ஸல்)அவர்கள் தமது கூட்டத்தினருக்கு இவ்வாறு பிரகடனம் செய்யவேண்டும் என அல்லாஹ் கட்டளையிடுகிறான்:

(நபியே!) இவர்களிடம் கூறும்: அல்லாஹ்வின் கரூவூலங்கள் என்னிடம் உள்ளன என்றும், மறைவானவற்றை நான் அறிகிறேன் என்றும் உங்களிடம் நான் கூறவில்லை.மேலும் நான் ஒரு மலக்கு என்றும் கூறவில்லை. எனக்கு அருளப்படுகின்ற வஹீயை மட்டுமே நான் பின்பற்றுகின்றேன்.(6:50)

(5)அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பளிப்பது தவ்ஹீதுர் ருபூபிய்யா- 'படைத்துப் பரிபாலிப்பதில் இறைவனை ஒருமைப்படுத்துதல்" எனும் வகையைச் சார்ந்ததாகும். ஏனெனில் அல்லாஹ்வின் சட்டங்களைச் செயல்படுத்துவது தான் 'தவ்ஹீதுர் ருபூபிய்யா" வின் தேட்டமும் அவனுடைய ஆட்சி மற்றும் நிர்வகித்தலின் நிறைநிலையின் தேட்டமும் ஆகும். அதனால்தான் அல்லாஹ்வால் இறக்கியருளப்படாத விஷயங்களில் பின்பற்றப்படுகின்ற மார்க்க அறிஞர்களை, அவர்களைப்

பின்பற்றுகின்றவர்களுக்கு அவர்கள் கடவுள்கள் (ரப்புகள்)என்று குறிப்பிட்டுள்ளான்:

"அவர்கள் அல்லாஹ்வையன்றி தமது மத போதகர்களையும் பாதிரிகளையும் இன்னும் மர்யமின் மகன் மஸீஹையும் கடவுள்களாக்கிக் (ரப்புகளாக்கிக்) கொண்டனர். ஒரே கடவுளை வணங்குமாறு தான் அவர்கள் கட்டளையிடப்பட்டார்கள். அவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை. அவர்கள் இணைகற்பிப்பவற்றை விட்டும் அவன் தூய்மையானவன்."(9:31)

(இந்த வசனம் யூத, கிறிஸ்தவர்கள் குறித்து அருளப்பட்டதாகும். அவர்கள் தமது மத போதகர்களையும் பாதிரிகளையும் கடவுள்களாக ஆக்கிக் கொண்டார்கள்.)

ஆம், மார்க்க அறிஞர்களை அல்லாஹ்வுக்குப் போட்டியாக சட்டங்களை வகுப்பவர்களாக அவர்களைப் பின்பற்றுகின்றவர்கள் ஆக்கிக் கொண்டதனால் அவர்களை ரப் -கடவுள்கள் எனவும், அவர்களைப் பின்பற்றுபவர்களோ அல்லாஹ்வின் சட்டங்களுக்கு மாறுசெய்யும் விதத்தில் அவர்களுக்குக் கட்டுப்பட்டு பணிந்து நடப்பதால் அவர்களை அடியார்கள் எனவும் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அந்த மக்கள் தமது மத போதகர்களையும் பாதிரிகளையும் வணங்கவில்லையே!(அவ்வாறிருக்க, அம்மக்கள் அவர்களைக் கடவுள்களாக எடுத்துக் கொண்டதாக அல்லாஹ் குற்றம் சாட்டுகிறானே!)என அதியிப்னு ஹாதிம்(ரலி)அவர்கள்(இவர் முன்பு கிறிஸ்தவராக இருந்து இஸ்லாத்தை தழுவியவர்) நபி(ஸல்)அவர்களிடம் கூறியபோது, 'அந்தப் பாதிரி களும் மத போதகர்களும் எதனை ஹராம்(தடை செய்யப்பட்டது)என்று கூறினார்களோ அதனை ஹராம் என்றும், எதனை ஹலால்(அனுமதிக்கப்பட்டது)என்று கூறினார்களோ அதனை

ஹலால் என்றும் அம்மக்கள் ஏற்றுக்கொண்டு அவர்களைப் பின்பற்றினார்கள் இல்லையா அதுதான் அவர்களை வணங்கியது" என நபி(ஸல்)விளக்கமளித்தார்கள்.(திர்மிதி)

எனவே மேற்கூறப்பட்டதை நீ விளங்கிக் கொண்டால் இதனையும் நீ அறிந்து கொள்ள வேண்டும். அதாவது திருக்குர்ஆனில் பல்வேறு வசனங்கள் பின்வரும் விஷயமாக வந்துள்ளன: எவர்கள் அல்லாஹ் இறைக்கியருளியதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கவில்லையோ, அல்லாஹ்வையும் அவன் தூதரையும்விடுத்து மற்றவர்களிடம் தீர்ப்பு கோருகிறார்களோ அவர்கள் இறைநம்பிக்கை இல்லாதவர்கள், இறைநிராகரிப்பாளர்கள், அநீதியிழைப்பவர்கள், பாவிகள் என்றெல்லாம் திருக்குர்ஆன் வசனங்கள் வந்துள்ளன.

முதல் வகையினர்: அதாவது இறைநம்பிக்கை இல்லாதவர்கள் என்பதற்கு ஆதாரம்.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) உமக்கு அருளப்பட்டதையும் உமக்கு முன் அருளப்பட்டதையும் நம்புவதாகக் கூறிக் கொள்வோரை நீர் அறியவில்லையா? அவர்கள் தாகூத்திடம் தீர்ப்புக்கோர விரும்புகின்றனர். அதை (தாகூத்தை) நிராகரிக்குமாறே அவர்கள் கட்டளையிடப்பட்டிருந்தார்கள். ஷைத்தான் (உண்மைக்கு) மிகவும் தூரமாக உள்ள வழிகேட்டில் அவர்களைத் தள்ள விரும்புகிறான்.

மேலும் அல்லாஹ் அருளியதை நேக்கியும் இத்தூதரை நோக்கியும் வாருங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டால் நயவஞ்சகர்கள் உம்மை ஒரேயடியாகப் புறக்கணிப்பதை நீர் காண்கிறீர்.அவர்கள் செய்த வினை காரணமாக அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால் என்னவாகும்? பிறகு அவர்கள் உம்மிடம் வந்து,'நன்மையையும் ஒற்றுமையையுமே நாடுகிறோம்" என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகிள்றனர்.

அவர்களின் உள்ளங்களில் உள்ளதை அல்லாஹ் அறிவான். எனவே, அவர்களை அலட்சியம் செய்வீராக. அவர்களுக்கு அறிவுரை கூறுவீராக. அவர்களுக்காக கருத்தாளமிக்க சொல்லை அவர்களின் உள்ளங்களில் பதியுமாறு கூறுவீராக. அல்லாஹ்வின் விருப்பப்படி மக்கள் கட்டுப்பட வேண்டுமென்பதற்காகவே தவிர எந்தத் தூதரையும் நாம் அனுப்புவதில்லை.அவர்கள் தமக்குத் தாமே தீங்கிழைத்து விட்டு உம்மிடம் வந்து, அல்லாஹ்விடம் மன்னிப்பும் தேடி, அவர்களுக்காக தூத(ராகிய நீ)ரும் பாவமன்னிப்புக் கோரினால் மன்னிப்பை ஏற்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் அல்லாஹ்வைக் காண்பார்கள்.

(நபியே!)உம் இறைவன் மீது சத்தியமாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்று பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் எந்த அதிருப்தியும் கொள்ளாமல் முழுமையாகக் கட்டுப்படும்வரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்.(4:60-65)

நயவஞ்சகர்களாக இருந்து கொண்டு நம்பிக்கையாளர்கள் என தம்மைப் பீற்றிக் கொள்ளக்கூடிய இத்தகையவர்களை அல்லாஹ் பல்வேறு தன்மைகளைக் கொண்டு வர்ணிக்கின்றான். அவையாவன:

1. அவர்கள் தாகூத்திடம் தீர்ப்புக் கோரவே விரும்புகின்றனர். அல்லாஹ் மற்றும் அவன் தூதருடைய சட்டத்திற்கு மாற்றமான அனைத்தும் தாகூத்துடைய தீர்ப்புதான். ஏனெனில் அல்லாஹ் மற்றும் அவன் தூதருடைய சட்டத்திற்கு மாற்றமானது அந்த இறைவனின் சட்டத்தின் மீது வரம்பு மீறுதலாகும். சட்டமியற்றும் அதிகாரம் அவனுக்கே உரித்தானது. இன்னும் அனைத்து அதிகாரங்களும் அவன் பக்கமே திரும்புகின்றன. அவன்தான் அல்லாஹ்.

"அறிந்து கொள்ளுங்கள்! படைத்தலும் ஆட்சி அதிகாரமும் அவனுக்குரியவையே. அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ் அருள்வளமிக்கவன்."(7:54)

**2.** அல்லாஹ் அருளியதன் பக்கமும், தூதரின் பக்கமும் வாருங்கள் என்று அவர்களை அழைத்தால் அவர்கள் புறக்கணித்து விடுவார்கள்.

**3.** அவர்களின் செய்த வினையின் காரணமாக அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால் 'நன்மையையும் ஒற்றுமையையுமே நாடுகிறோம்" என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கொண்டு வருவார்கள். இன்றைக்கு இஸ்லாமியச் சட்டங்களை உதறித்தள்ளிவிட்டு அதற்கு மாற்றமான சட்டங்களைக் கொண்டு தீர்ப்பளிப்பவர்கள் இதுதான் சரியானதும் தற்காலத்திற்குப் பொருத்தமானதும் ஆகும் என்று கூறுவதைப்போல.

பின்னர், மேற்கூறப்பட்ட இந்த தன்மைகளைத் தன்னகத்தே கொண்டு தாங்கள் இறைநம்பிக்கையாளர்களென வாதிடுபவர்களை அல்லாஹ் எச்சரிக்கிறான். அதாவது அவர்களின் உள்ளங்களில் உள்ளவற்றையும் அவர்கள் மறைக்கின்ற-அவர்களின் சொல்லுக்கு மாற்றமான-விஷயங்களையும் அவன் அறிவதாக எச்சரிக்கிறான். மேலும் அவர்களுக்கு அறிவுரை கூறும்படியும் கருத்தாளமிக்க சொல்லை அவர்களின் உள்ளங்களில் பதியுமாறு கூறும்படியும் தனது நபிக்கு அவன் கட்டளையிடுகின்றான்.

அதன் பிறகு இறைத்தூதரை அனுப்பியதன் நோக்கத்தையும் அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான். அதாவது அவரைத்தான் மக்கள் பின்பற்ற வேண்டும் அவருக்குத்தான் கீழ்ப்படிய வேண்டும். அவரை விடுத்து வேறு எந்த மனிதரையும் பின்பற்றக்கூடாது. அவர் என்னதான் பெரும் மேதையாகவும் சிந்தனையாளராகவும் இருந்தாலும் சரி. பின்பு அல்லாஹ் தன் தூதருக்கு, தன்னுடைய பரிபாலிக்கும் ஆற்றலின் மீது-

பரிபாலித்தலின் வகைகளில் அதுதான் பிரத்தியேகமானதும், நபி(ஸல்)அவர்களுடைய தூதுத்து வம் உண்மையானது என்பதை உணர்த்தக்கூடியதும் ஆகும்- உறுதியான சத்தியம் செய்து கூறுகின்றான்: இறைநம்பிக்கை என்பது மூன்று விஷயங்களைக் கொண்டல்லாமல் சரியானதாகவும் பரிபூரணமானதாகவும் ஆகமுடியாது.

1. அனைத்துப் பிரச்சனைகளிலும் தீர்வு காண்பதற்காக அல்லாஹ்வின் தூதரிடம் தான் செல்லவேண்டும்.

2. இறைத்தூதரின் தீர்ப்பை உளமார ஏற்றுக்கொள்ள வேண்டும். அது குறித்து மனதில் எந்த வெறுப்பையும் அதிருப்தியையும் கொள்ளக் கூடாது.

3. இறைத்தூதரின் தீர்ப்புக்கு அப்படியே கட்டுப்பட வேண்டும். எவ்விதத் தயக்கமின்றி அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அதில் வழி தவறி விடக்கூடாது.

இரண்டாம் வகையினர்: அதாவது இறைநிராகரிப்பாளர்கள் என்பதற்கு ஆதாரம்.

அல்லாஹ் கூறுகிறான்: எவர்கள் அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள் தாம் இறைநிராகரிப்பாளர்கள்.(5:44)

எவர்கள் அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள் தாம் அநீதியிழைப்பவர்கள். (5:45)

எவர்கள் அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள் தாம் பாவிகளாவர்.(5:47)

இந்த வசனங்களில் கூறப்பட்ட இம்மூன்று தன்மைகளும் ஒருவனுக்கே (பொருந்தக்கூடியதாய்) அதாவது 'அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் யார் தீர்ப்பு வழங்கவில்லையோ அவர் நிராகரிப்பவர், அநீதியிழைப்பவர் மற்றும் பாவியாவார்" என்ற கருத்தில் இறங்கியதா?-

ஏனெனில் அல்லாஹ் நிராகரிப்பாளர்களை அநியாயக்காரர்கள் எனவும் பாவிகள் எனவுமே குறிப்பிட்டுள்ளான்.ஆதாரமாக, 'இன்னும் நிராகரிப்பவர்கள் தாம் அநியாயக்காரர்களாவர். "(2:254) 'ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் நிராகரித்து விட்டார்கள். மேலும் பாவிகளாகவே அவர்கள் இறந்து போனார்கள்."(9:84)
ஆக ஒவ்வொரு நிராகரிப்பாளரும் அநியாயக்காரனும் பாவியும் ஆவான். -

அல்லது இந்த மூன்று தன்மைகளும், அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்காதிருக்க அவர்களை எது தூண்டுகிறதோ அதைப் பொருத்து பலருக்கும் பொருந்துவதாக இறங்கியதா? இதுவே நமக்கு நெருக்கமான கருத்துதாகும்.

நாம் என்ன கூறுகிறோம் எனில், அல்லாஹ் அருளியதை முக்கியமில்லாத ஒன்றாக அல்லது அற்பமானதாகக் கருதி அல்லது அதைவிட வேறு சட்டங்கள் பொருத்தமானவையாகவும் மக்களுக்குப் பயனுள்ளவையாகவும் இருக்கின்றன என்பது போலக்கருதி அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் எவன் தீர்ப்பு வழங்கவில்லையோ அவன் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டும் வெளியேறிய காஃபிர் -நிராகரிப்பவன் ஆவான்.

இத்தகையவர்களில் சிலர் மக்களுக்கு இஸ்லாமியச் சட்டத்திற்கு மாற்றமான சட்டத்தை உருவாக்குகின்றனர்- மக்கள் அதைத் தங்கள் வழிமுறையாகக் கொண்டு செயல் படுவதற்காக. இதற்குக் காரணம் அதுவே மக்களுக்குப் பொருத்தமானதும் பயனுள்ளதும்

ஆகும் என்று அவர்கள் கருதுவதுதான். அப்படியாயின் மனிதன் ஒரு வழிமுறை யிலிருந்து வேறொரு வழிமுறைக்கு மாறிச்செல்கிறான் என்றால் அந்த வழிமுறையை சிறந்ததாகவும் அவன் எந்த வழி முறையிலிருந்து மாறி வந்தானோ அதைக் குறைபாடுள்ளதாகவும் நம்புகிறான் என்பதே வெளிப்படை. சிந்தித்துப் பார்க்கும்போதும் அதுதான் தெரியவருகிறது.
அல்லாஹ் அருளியதை முக்கியமில்லாத ஒன்றாகவோ அல்லது அற்பமானதாகவோ அல்லது அதைவிட வேறு சட்டங்கள் பொருத்தமாகவும் மக்களுக்குப் பயனுள்ளதாகவும் இருக்கின்றன என்பது போன்றோ கருதாமல் அல்லாஹ் அருளியதன் அடிப்படையில் எவன் தீர்ப்பு வழங்கவில்லையோ அவன் அநியாயக்காரனே தவிர காஃபிர் அல்ல. அவன் எந்த விஷயத்தில், எந்த அடிப்படையில் தீர்ப்பு வழங்கினானோ அதைப் பொருத்து (அநியாயம் அல்லது மாபெரும் அநியாயம் என)அவனது அநீதத்தின் நிலை வித்தியாசப் படும்.

அல்லாஹ்வின் சட்டத்தை விடுத்து மற்றவற்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குபவன்- இறைச்சட்டத்தை அற்பமானதாக, முக்கியமில்லாததாக அல்லது ஏனைய சட்டங்கள் அதை விடவும் பொருத்தமானவை, மக்களுக்குப் பயனுள் ளவை என்பது போலக் கருதியதற்காக அல்லாமல்- யாருக் காகத் தீர்ப்பு வழங்குகிறானோ அவனுடைய நேசத்திற்காக அல்லது லஞ்சம் வாங்கியதற்காக அல்லது வேறு பல உலக நோக்கங்களுக்காக தீர்ப்பு வழங்கினால் அவன் பாவியா வான்.காஃபிராக மாட்டான்.ஆனாலும் அவன் எந்த விஷயத் தில், எந்த அடிப்படையில் தீர்ப்பு வழங்கினானோ அதைப் பொருத்து அவனுடைய பாவத்தின் நிலை (பாவம், பெரும் பாவம் என) வேறுபடும்.

எந்த மக்கள் அல்லாஹ்வை விடுத்து தம் மத போதகர் களையும் பாதிரிகளையும் கடவுள்களாக ஆக்கிக் கொண்டார்களோ அந்த மக்களைக் குறித்து ஷைகுல் இஸ்லாம் இப்னுதைமிய்யா(ரஹ்) கூறுகிறார்கள்: அவர்கள் இரு வகையில் உள்ளனர்.

ஒரு வகையினர்: அவர்களுடைய போதகர்கள், பாதிரிகள் அல்லாஹ்வின் மார்க்கத்தை மாற்றி விட்டார்கள் என்று அறிவார்கள். அவ்வாறு அறிந்து கொண்டே மாற்றப்பட்ட அந்த மார்க்கத்தில் அவர்களைப் பின்பற்றுவார்கள். தங்கள் தலைவர்கள் இறைத்தூதர்களின் மார்க்கத்திற்கு மாறு செய்துவிட்டார்கள் என்று தெரிந்தும் அவர்களைப் பின்பற்றி அல்லாஹ் ஆகுமாக்கியவற்றை ஹராமாக்கலாம் அல்லாஹ் தடை செய்தவற்றை ஹலாலாக்கலாம் என்றும் நம்புவார்கள். இது இறைநிராகரிப்பாகும்.அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் இதனை இணைவைப்பாக ஆக்கியுள்ளார்கள்.

இரண்டாவது வகையினர்: ஹலாலை ஹராமாக ஆக்குவது ஹராமை ஹலாலாக ஆக்குவது விஷயத்தில் அவர்களது நம்பிக்கையும் கொள்கையும் உறுதியாக இருக்கும்- இப்னு தைமிய்யா அவர்கள் சொல்லியுள்ளதாக வந்துள்ள வாசகம் இதுதான். ஆனாலும் அல்லாஹ்வுக்கு பாவம் செய்வதில் அவர்களுடைய மத போதகர்களுக்கும் பாதிரிகளுக்கும் கீழ்படிவார்கள். இவர்களின் நிலை பாவங்கள் செய்கின்ற ஒரு முஸ்லிமைப் போன்றதாகும்.அவையாவும் பாவங்கள் என்று நம்பிக் கொண்டே அந்த முஸ்லிம் அவற்றைச் செய்கிறான். எனவே இவர்களைப் போன்று பாவங்கள் புரிபவர்களின் சட்டநிலைதான் இவர்களுக்கும். (முதலாவது விபரமறிந்தவர்களின் நிலை. இரண்டாவது பாமரர்களின் நிலை)

இங்கு இரண்டு விதமான விஷயங்கள் உள்ளன. ஒன்று பொதுவான விதிமுறைகளாகக் கருதப்படுகிற விஷயங்கள். மற்றொன்று அல்லாஹ் அருளியது அல்லாததின் அடிப்படையில் நீதிபதி தீர்ப்பளிக்கின்ற ஒரு குறிப்பிட்ட விஷயம். இவ்விரண்டுக்கும் வித்தயாசம் உள்ளது. ஏனெனில் பொதுவான சட்டவிதிகளாகக் கருதப்பபடுகிற விஷயங்களில் முன்னர் சென்ற பங்கீடு எளிதாகவராது. அப்பிரச்சனைகள் முதல் வகையை மட்டும் சேர்ந்ததாக இருக்கும். ஏனெனில் இஸ்லாத்திற்குப்

புறம்பான முறையில் சட்ட விதியை ஏற்படுத்துபவன் அப்படிச் செய்தது இந்த நம்பிக்கையில்தான். அதாவது அந்த சட்டவிதி மக்களுக்கு இஸ்லாத்தை விடவும் ஏற்றமானது- மிகவும் பயனளிக்கக்கூடியது என்று நம்பித்தான் அந்த விதியை ஏற்படுத்தியுள்ளான், முன்னர் இதனை நாம் சுட்டிக் காட்டியது போன்று.

மேலும் இந்தப் பிரச்சனை அதாவது அல்லாஹ் இறக்கி யருளியது அல்லாததன் அடிப்படையில் தீர்ப்பளித்தல் என்கிற பிரச்சனை இருக்கிறதே இது இன்றைய கால நீதிபதிகள் என்னென்ன பிரச்சனைகளைக் கொண்டு சோதனைக்குள்ளாக்கப் பட்டுள்ளார்களோ அத்தகைய பெரும் பிரச்சனைகளுள் ஒன்றாக உள்ளது. எனவே எந்த மனிதனும் அவசரப்பட்டு இந்த நீதிபதிகளுக்கு எதிராக அவர்கள் செய்யாத ஒன்றைக் கொண்டு குற்றம் சுமத்திவிடக் கூடாது. அது விஷயத்தில் சத்தியம் அவருக்குத் தெளிவாகும் வரையில் (அவர் பொறுத்திருக்க வேண்டும்).

முஸ்லிம்களுக்காக அவர்களின் அதிகாரிகளையும் அவர் களுக்கு ஆலோசனை வழங்கக் கூடியவர்களையும் சீர் படுத்த வேண்டி அல்லாஹ்விடம் இறைஞ்சுவோமாக! ஆனால் அல்லாஹ் யாருக்குக் கல்வியறிவை வழங்கியிருக்கின்றானோ அவர்கள், இதுபோன்ற நீதிபதிகளுக்கு சத்தியத்தைத் தெளிவுபடுத்துவது கடமையாகும். ஏனெனில் அறிஞர்களை ஆட்சேபிக்க அவர்களுக்கு எந்த வழியும் இருக்கக்கூடாது, மேலும் ஆதாரம் அவர்களுக்கு நன்கு தெளிவாகி விட வேண்டும், மட்டுமல்ல அழிய வேண்டியவர்கள் தக்க காரணத்துடன் அழிய வேண்டும், வாழ வேண்டியவர்கள் தக்க காரணத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக.

அறிஞர்கள் சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதற்காகத் தம்மைத் தாழ்வாகக் கருத வேண்டாம். அதற்காக யாருக்கும் அஞ்ச

வேண்டாம். ஏனெனில் கண்ணியம் என்பது அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் முஸ்லிம்களுக்குமே உரியதாகும்.

--------------------------------------------------------------------------------

**ஆதாரம் - [1]அல்லாஹ் கூறுகிறான் - இம்மார்க்கத்தில் எவ்வித நிர்ப்பந்தமுமில்லை.[2] வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது. எவர் தாகூத்தை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ[3] அவர் அறுந்துபோகாத பலமான கயிற்றைப்[4] பற்றிப் பிடித்துக் கொண்டவராவார்.(2:256) இதுவே லாயிலாஹா இல்லல்லாஹ் என்பதன் கருத்தாகும்.**

--------------------------------------------------------------------------------

**(1)** அதாவது தாகூத்துகளை நிராகரித்து, அல்லாஹ்அருளியதன் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவது கடமை என்பதற்கு ஆதாரம்.

**(2)** காரணம் இறைமார்க்கத்தின் ஆதாரங்களும் விளக்கங்களும் தெள;ளத் தெளிவாக இருக்கின்றன. அதனால் தான் அடுத்து அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: 'வழி கேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது." இவ்வாறு வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டால் தெளிவான ஒவ்வொரு உள்ளமும் வழிகேட்டை விட்டு நேர்வழியை தேர்ந்தெடுத்துக் கொள்வது அவசியமாகும்.

**(3)** அல்லாஹ்வின் மீது ஈமான்- நம்பிக்கை கொள்வதற்கு முன்னால் முதலில் தாகூத்துகளை நிராகரிக்க வேண்டுமென்று அல்லாஹ் இங்கு கூறியிருக்கிறான். இதன் காரணம் என்னவெனில்,ஒரு விஷயம் முழுமை பெறுவதென்பது உறுதியான விஷயங்கள் ஏற்படுவதற்கு முன்னால் அதற்குத் தடையாக உள்ளவற்றை அகற்றும்போது தான். இதனால் தான் அழகுபடுத்தும் முன் சுத்தப்படுத்த வேண்டும் என்று பழமொழி கூறுகிறது.

**(4)** பலமான கயிறு என்பது இஸ்லாம் ஆகும். அல்லாஹ் எப்படிக் கூறியுள்ளான் என்பதை சிந்தித்துப்பார்.வெறுமனே பிடித்துக் கொண்டார் எனக் கூறாமல் பற்றிப் பிடித்துக் கொண்டார்

என்று கூறியுள்ளான். ஏனெனில் பிடித்தல் என்பதை விட பற்றிப் பிடித்தல் என்பது பலம்வாய்ந்தது. ஏனெனில் மனிதன் சிலவேளை பிடித்துக் கொள்வான். ஆனால் பற்றிப்பிடித்துக்கொள்ளமாட்டான்.

---

**நபிமொழியில் வந்துள்ளது - காரியங்களில் தலைசிறந்தது இஸ்லாம்.[1] அதன் தூண் தொழுகை.[2] அதில் மிக உயர்ந்தது அல்லாஹ்வின் வழியில் அறப்போர் செய்வது.[3] அல்லாஹ் மிக அறிந்தவன். முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் அல்லாஹ் அருளையும் சாந்தியையும் பொழிவானாக![4]**

---

**(1)** ஒவ்வொரு பொருளுக்கும் தலையாய பகுதி உண்டு. முஹம்மது(ஸல்)அவர்கள் கொண்டு வந்த காரியங்களில் தலையாயது இஸ்லாமிய மார்க்கமாகும் என்பதற்கு ஆசிரியர் இந்த ஹதீஸை ஆதாரமாக்காட்ட விரும்புகிறார்.

**(2)** ஏனெனில் தொழுகையின்றி இஸ்லாம் இல்லை. எனவே தான் தொழுகையை விட்டவன் காஃபிர் ஆவான் என்ற கருத்து அறிஞர்களிடம் சிறந்த கருத்தாக இருக்கிறது. ஏனெனில் அத்தகையவனிடம் இஸ்லாம் இருக்க முடியாது.

**(3)** அதாவது அதில் மிக உயர்ந்ததும் பரிபூரணமான தும் இறைவழியில் அறப்போர் புரிவதாகும். இது எப்படியென் றால் ஒரு மனிதன் தன்னைச் சீர்திருத்திக் கொண்டால், இறைவழியில் போராடுவதன் மூலம் பிறரையும் சீர்திருத்த முயற்சிப்பான்- இஸ்லாம் நிலைபெற்று அல்லாஹ்வின் வார்த்தை மேலோங்குவதற்காக. அல்லாஹ்வின் வார்த் தையை மேலோங்கச் செய்வதற்காக யார் போராடுகிறாரோ அவர் தான் இறைவழியில் இருக்கிறார். இத்தகைய இறைவழிப் போராட்டம் தான் மிக உயர்ந்ததாக ஆகிவிடுகிறது. ஏனெனில் அதன் மூலம்தான் இஸ்லாம் ஏனைய மார்க்கங்களை விட உயர்ந்து நிற்கிறது.

**(4)** முழுமையான ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது என்றும் அல்லாஹ்வின் அருளும் சாந்தியும், சமாதானமும் முஹம்மது(ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டுமாக! என்று கூறி தமது இந்த நூலை ஷைகுல் இஸ்லாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப்(ரஹ்)அவர்கள் முடித்துள்ளார்கள். இத்துடன் இஸ்லாத்தின் மூன்று அடிப்படைக் கடமைகள் மற்றும் அவை தொடர்பான விஷயங்கள் முற்றுப் பெறுகின்றன. எல்லாம் வல்ல அல்லாஹ் இந்நூலாசிரியருக்கு நற்கூலியை வழங்குவானாக. இந்நூலின் நன்மையையும் நற்கூலியின் ஒரு பகுதியையும் நமக்கும் தந்தருள்வானாக! நம்மையும் அவரையும் அவனது கண்ணியத்திற்குரிய வீட்டில் (சுவனத்தில்)ஒன்று சேர்ப்பானாக! என பிரார்த்திப்போமாக. நிச்சயமாக அவன் மாபெரும் கொடையாளியாக இருக்கின்றான். அகிலங்களைப் படைத்த இறைவனுக்கே அனைத்துப் புகழும். நல்லருளும் சாந்தியும் நமது நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டுமாக!